समित्कूर्चं चरुं दर्वीं दर्भांश्चैव कमण्डलुम् ॥ २१ ॥

ஸ்ருக் ஸ்ருவௌ க்ருதஸ்தாளீம் ப்ரணீதாம் ப்ரோக்ஷணீம் ததா !
ஸமித்கூர்ச சரும் தர்வீம் தர்பாம்ச்சைவ கமண்டுலும் !!

ஸ்ருக், ஸ்ருவம், நெய் பாத்திரம், ப்ரணீதா (வருண) பாத்ரம் ப்ரோக்ஷணீ பாத்திரம், சமித்து, கூர்ச்சம் (பிரம்மா) சரு, (ஹவிஸ்), கரண்டி, தர்பை, கமண்டலம் ஆகிய,

द्रव्यपात्राणि सर्वाणि वामे कुशोपरि न्यसेद् ।
अधोमुखानि पात्राणि द्वन्द्वरूपाणि साधयेत् ॥ २२ ॥

த்ரவ்ய பாத்ராணி ஸர்வாணி வாமே குசோபரி ந்ய ஸேத் !
அதோமுகானி பாத்ராணி த்வந்த்வ ரூபாணி ஸாதயேத் !!

திரவ்யபொருள் பாத்திரங்கள், அனைத்தும் இடது பாகத்தில் (வடக்கில்) தர்பையின் மேல் வைக்கவும். அனைத்து பாத்திரங்களையும் கவிழ்த்த வைகளாகவும் இரண்டிரண்டாகவும் சேகரிக்கவும் ஸ்ருக்ஸ்ருவம் ஆஜ்யபாத்ரம், ப்ரணீதாபாத்ரம், ப்ரோக்ஷணீய பாத்ரம், ஸமித், கூர்ச்சம், சரு, தர்வி, தர்பை, கமண்டலு இவ்வாறு வைக்கவும்.

प्रोक्षणीपात्रमादाय जलेनैव प्रपूरयेत् ।
वितस्तिमात्रदर्भाग्रं मध्यग्रन्थिपवित्रकम् ॥ २३ ॥

ப்ரோக்ஷணீ பாத்ர மாதாய ஜலேனைவ ப்ரபூரயேத் !
விதஸ்தி மாத்ர தர்பாக்ரம் மத்யக்ரந்திபவித்ரகம் !!

ப்ரோக்ஷனீ பாத்திரத்தை எடுத்து அதில் நீர் நிரப்பவும் ஓர் ஓட்டை (9 அங்குலம்) அளவு உள்ள நுனி தர்பையால் நடுவில் முடிச்சு உள்ள பவித்திரம் செய்து

अङ्गुष्ठानामिकाभ्यां च उदकोत्प्लवनं चरेत् ।
पात्रप्रोक्षणकं कृत्वा पात्रसाधनमाचरेत् ॥ २४ ॥

அங்குஷ்டானாமிகாப்யாம்ச உதகோத்ப்லவனம் சரேத் !
பாத்ர ப்ரோக்ஷணகம் க்ருத்வா பாத்ரசாதனமாசரேத் !!

2 கை கட்டை விரல், மோதிர விரலால் (ப்ரோக்ஷனீபாத்திரம்) நீரில் தன் எதிர் புறமாக தள்ளுவது போல் இறைக்கவும் பின் அந்த நீரால் அனைத்து பாத்திரங்களையும் தெளித்து உபயோகப் படுத்தவும்.

स्रुक्स्रुवौ च हृदाचार्यः घृतसंस्कारमाचरेत् ।
नाडीसंधानकं कृत्वा चाज्यभागाहुतिं हुनेत् ॥ २५ ॥

ஸ்ருக்ஸ்ருவௌ ச ஹ்ருதா(ஆ) சார்ய : க்ருதஸம்ஸ்காரமாசரேத் !
நாபீசந்தானகம் க்ருத்வா சாஜ்ய பாகா ஹுதிம் ஹுனேத் !!

ச்ருக்ச்ருவம் இவைகளை ஹிருதய மந்திரத்தால் சுத்தம் செய்தும் நெய்க்கு (செய்ய வேண்டியது) ஸம்ஸ் காரங்களை செய்யவும் (பன்படுத்தல்) பின் நாடித்தொடர்பு செய்துக் கொண்டு (பவித்ரம் செய்து) நெய்யில் தெற்கு, வடக்கு நடு பாகங்களில் நெய் எடுத்து ஹோமம் செய்யவும்.

परिषिच्य ततो वह्निं मूलेनेध्मान् सकृद्धुनेत् ।
सद्यात्मकैकमन्त्रेण होमयेत् वक्त्रदीपनम् ॥ २६ ॥

பரிஷிச்ய ததோ வஹ்னிம் மூலேனேத்மான் சக்ருத்துனேத் !
ஸத்யாத்மகைகமந்த்ரேண ஹோமயேத் வக்த்ர தீபனம் !!

பிறகு அக்னியை நீரால் சுற்றி (பரிஷேசனம் செய்து) மூலமந்திரத்தால் இத்ம (புனித சமித்) ஹோமம் செய்யவும் சத்யோஜாத மந்திரம் முதலியவைகளால் தனித் தனி ஐந்தா ஹுதியால் வக்த்ர தீபனம் என்ற ஹோமத்தை செய்யவும்.

वक्त्रसंधानकं कृत्वा वक्त्रैकीकरणं हुनेत् ।
नामकर्म ततोऽस्त्रेण घृतं पञ्चाहुतिं हुनेत् ॥ २७ ॥

வக்த்ர சந்தானகம் க்ருத்வா வக்த்ரைகீ கரணம் ஹுனேத் !
நாமகர்ம ததோ ஸ்த்ரேண க்ருதம் பஞ்சாஹுதிம் ஹுனேத் !!

பின் வக்த்ர சந்தாநம் செய்து வக்த்ரைகீ கரணமும் செய்யவும் (இரண்டு மந்திரங்களாக சேர்த்து செய்வது - வக்த்ர சந்தானம். ஐந்து மந்திரங்களையும் ஒன்று சேர்த்து செய்யும் ஹோமம், வக்த்ரைகீகரணம்) பின் நாமகரணம் செய்வதற்காக நெய்யை அஸ்திர மந்திரத்தால் ஹோமம் செய்யவும்.

शिवाग्ने त्वं हुताशेति नाम दद्यात् विचक्षणः ।
उपनिष्क्रामणं पश्चाच्छिरसा कारयेद्बुधः ॥ २८ ॥

சிவாக்னேத்வம் ஹுதாசேதி நாம தத்யாத் விசக்ஷண : !
உபநிஷ்க்ராமணம் பச்சாத் சிரஸா காரயேத் புத : !!

"ஹே அக்னியே! நீ சிவாக்னி" என்று பெயர் சூட்ட வேண்டும். உபநிஷ்க்ராமணம் என்ற கிரியைக்காக (கர்மாவுக்காக) சிரஸினால் ஆகுதி செய்யவும்.

प्राशनं हृदयेनैव चौलकर्म शिवाणुना ।
हृदोपनयनं कृत्वा पश्चाद्देशिकसत्तमः ॥ २९ ॥

ப்ராசனம் ஹ்ருதயேநைவ சௌலகர்ம சிவானுனா !
ஹ்ருதோப நயனம் க்ருத்வா பச்சாத் தேசிகஸத்தம: !!

அன்னப்ராசனம் என்ற கிரியையை ஹ்ருதய மந்திரத்தாலும், சௌளகர்மாவை, சிவ மந்திரத்தாலும் ஹோமமும் உபநயனம் ஹ்ருதய மந்திரத்தாலும் உயர்வான ஆசார்யர் செய்ய வேண்டும்.

प्राधान्य होमकर्माणि मूलमन्त्रेण होमयेत् ।
तत् कुण्डाग्निं विभज्याथ सर्वकुण्डेषु निक्षिपेत् ॥ ३० ॥

ப்ராதான்ய ஹோம கர்மாணி மூலமந்த்ரேண ஹோமயேத் !
தத்குண்டாக்னிம் விபஜ்யாத சர்வகுண்டேஷு நிக்ஷிபேத் !!

முக்கியமான ஹோமங்களை மூல மந்திரத்தினால் பிரதான ஹோமமும் செய்யவும், ப்ரதான குண்டத்தில் அந்த குண்டத்தில் உள்ள அக்னியை பிரித்து பின் அனைத்து குண்டங்களிலும் சேர்த்து போடவும்.

शिवाग्नयेति जुहुयात् प्रत्येकं शतसंख्यया ।
आसनावरणैर्धीमान् सेनान्यं पूजयेत्ततः ॥ ३१ ॥

சிவாக்னயேதி ஜுஹுயாத் ப்ரத்யேகம் சதஸங்க்யயா !
ஆஸனாவரணைர்தீமான் ஸேனான்யம் பூஜயேத் தத: !!

பிறகு சிவாக்னயேஸ்வாஹா என்று தனித் தனியாக (திரவியங்களை) 100 ஆவர்த்தி ஹோமம் செய்து பின் பஞ்சாஸந ஆவரண பூஜையுடன் சேனானியை பூஜிக்கவேண்டும்.

यद्रूपं तु प्रतिष्ठाप्य तत्त ध्यानेन बुद्धिमान् ।
कार्तिकेयो विशाखश्च गुहश्चैव सुरान्तक: ॥ ३२ ॥

सेनानि: षण्मुखश्चैव मयूरवाहनस्तथा ।
शक्तिपाणिरिति ख्याता एते वै चाष्टमूर्तय: ॥ ३३

யத்ரூபம் துப்ரதிஷ்டாப்ய தத் த்யானேன புத்திமான் !
கார்திகேயோ விசாகஸ்ச குஹஸ் சைவ ஸுராந்தக : !!

ஸேனானீ ஷண் முகஸ்சைவ மயூரவா ஹனஸ் ததா !
ஶக்தி பாணிரிதி க்யாதா ஏதே வை சாஷ்டமூர்த்தய: !!

எந்த உருவத்தை பிரதிஷ்டை செய்கிறோமோ ? அந்த உருவத்தை தியானித்து (அக்னியில் ஆவாஹனம் செய்து) பூஜிக்கவும், கார்த்திகேயன், விசாகன், குஹன், அசுராந்தகன், சேனானீ, ஷண்முகன், மயூர வாகனன், சக்திபாணி ஆகியவர்கள் எட்டு மூர்த்தீஸ்வரர்கள் ஆவார்கள்.

समिदाज्यचरून् लाजान् सक्तुं चैव तिलं तथा ।
माषमुद्गगुलांश्चैव सर्षपं यवमेव च ॥ ३४ ॥

ஸமிதாஜ்ய சருன் லாஜான் சக்தும் சைவ திலம் ததா !
மாஷமுத்க குளாம்ச்சைவ ஸர்ஷபம் யவமேவ ச !!

சமித்து, நெய், சரு, நெல்பொறி, சத்துமாவு, எள், உளுந்து, பயிறு, வெல்லம், கடுகு, யவை ஆகியவைகளை

द्रव्यमेकादशं प्रोक्तं सर्वेष्वेवं विशेषत: ।
समिधं त्वीशमन्त्रेण घृतं वै पुरुषेण तु ॥ ३५ ॥

த்ரவ்ய மேகாதசம் ப்ரோக்தம் சர்வேஷ்வேவம் விசேஷத : !
ஸமிதம் த்வீசமந்த்ரேண க்ருதம்வை புருஷேண து !!

இந்த பதினோரு திரவ்வியத்தையும் ஒவ்வொரு குண்டத்திலும் ஈசான மந்திரத்தால் சமித்தையும், தத்புருஷ மந்திரத்தால் நெய்யையும்,

अघोरेण चरुं हुत्वा लाजं वामेन होमयेत् ।
सक्तुं सद्येन जुहुयात् तिलं हृदयमन्त्रत: ॥ ३६ ॥

அகோரேண சரும் ஹுத்வா லாஜம் வாமேன ஹோமயேத் !
சக்தும் சத்யேன ஜுஹுயாத் திலம் ஹ்ருதய மந்த்ரத: !!

அகோர மந்திரத்தால் சருவையும், வாமதேவ மந்திரத்தால் நெல்பொறியும், ஸத்யோஜாத மந்திரத்தால் சத்துமாவையும் ஹ்ருதய மந்திரத்தால் எள்ளையும்,

माषं च शिरसा हुद्वा मुद्गं च शिखया हुनेत् ।
गुळं कवचमन्त्रेण सर्षपं नेत्रमन्त्रत: ॥ ३७ ॥

மாஷம் ச சிரஸா ஹுத்வா முத்கம் ச யிகயா
ஹுனேத் !
குளம் கவசமந்த்ரேண சர்ஷபம் நேத்ரமந்த்ரத : !!

சிரோமந்திரத்தால் உளுந்தையும், சிகாமந்திரத்தால் பயிறையும், கவசமந்திரத்தால் வெல்லத்தையும் நேத்ர மந்திரத்தால் கடுகையும்,

यवमस्त्रेण जुहुयात् आचार्यो मूर्तिपै: सह ।
शतमर्धं तदर्धं वा प्रत्येकं जुहुयात्क्रमात् ॥ ३८ ॥

யவ மஸ்த்ரேண ஜுஹுயாத் ஆசார்யோ
மூர்த்திபைஸ் ஸஹ !
ஶதமர்தம் ததர்தம் வா ப்ரத்யேகம்
ஜுஹுயாத்க்ரமாத் !!

அஸ்த்ர மந்திரத்தால் யவையையும், ஆசார்யர் எட்டுமூர்த்தி குருக்களுடன் சேர்ந்து ஒவ்வொன்றையும் நூறு அல்லது ஐம்பது அல்லது இருப்ததைந்து ஆகுதியாவது ஹோமம் செய்யவும்

द्रव्यान्ते व्याहृतिं हुत्वा स्विष्टमग्नौ तु होमयेत् ।
जयादिरभ्याधानं च राष्ट्रभृच्च हुनेत् क्रमात् ॥ ३९ ॥

த்ரவ்யாந்தே வ்யாஹ்ருதிம் ஹுத்வா ஸ்விஷ்ட
மக்நௌது ஹோமயேத் !
ஜயாதிரப்யா தானம் ச ராஷ்ட்ரப்ருச்ச ஹுனேத்
க்ரமாத் !!

திரவ்ய ஆகுதியின் முடிவில் வ்யாஹ்ருதியை ஹோமம் செய்யவும் (பூ :, புவ :, சுவ : பூர்புவஸ்ஸுவ:) இவைகள் வியாஹ்ருதியாகும். ஜயாதி, அப்யா தானம், ராஷ்ட்ரப்ருத் ஆகிய மந்திரங்களை முறையாக ஹோமம் செய்யவும்.

पूर्णाहुतिं ततो हुत्वा वह्निं संप्रार्थयेद्गुरु: ।
ब्रह्मोद्वासनकं कुर्यात् प्रणीतामोक्षणं तथा ॥ ४० ॥

பூர்ணாஹுதிம் ததோ ஹுத்வா வஹ்னிம் ஸம்ப்ரார்
த்தயேத்குரு : !
ப்ரம்மோத்வா ஸநகம் குர்யாத் ப்ரணீதா
மோக்ஷணம்ததா !!

பின்பு பூர்ணாஹுதியை செய்து அக்னியை வேண்டிக்கொள்ளவும், பின்பு பிரம்மாவை யதாஸ்தானம் பின் ப்ரணீதா என்ற (வருண) பாத்திரத்தை எடுத்து வைத்து (உரியன) செய்யவும்.

नैमित्तिकमिदं प्रोक्तं नित्यकर्म तत: श्रृणु ।
अग्नौ वा दक्षिणे वापि तथैशान्येऽपि मण्डपे ॥ ४१ ॥

நைமித்திகமிதம் ப்ரோக்தம் நித்யகர்ம ததர்ச்ருணு !
அக்னௌ வா தக்ஷிணே வாபி ததைசான்யே
பிமண்டபே !!

இவ்வாறு செய்வது நைமித்திகம் ஆகும். பிறகு நித்ய அக்னி கார்ய விதி என்ற கர்மாவை கேளும்! மண்டபத்தில் அக்னிதிக்கிலோ தெற்கு அல்லது வடகிழக்கிலோ,

कुण्डे वा स्थण्डिले वापि नित्यहोमं समाचरेत् ।
अश्रं वाथ षडश्रं वा मेखलात्रयसंयुतम् ॥ ४२ ॥

குண்டே வா ஸ்தண்டிலே வாபி நித்யஹோமம்
ஸமாசரேத் !
அஶ் ரம் வாத ஷடஶ் ரம் வா மேகலா த்ரய
ஸம்யுதம் !!

குண்டத்தில் அல்லது சுத்த பூமியிலோ நித்ய ஹோமத்தை செய்ய வேண்டும். சதுரமாகவோ அறுகோணமாகவோ மூன்று மேகலைகள் உள்ளதாக குண்டத்தை நியமிக்கவும்

नाभियोनिसमायुक्तं कुण्डं कृत्वा महामुने ॥
गर्भाधानादिकं सर्वं पूर्वोक्तविधिना हुनेत् ॥ ४३ ॥

நாபியோணி ஸமாயுக்தம் குண்டம் க்ருத்வா
மஹாமுனே !
கர்பாதானாதிகம் ஸர்வம் பூர்வோக்த விதினா
ஹுனேத் !!

நாபி, யோனியுடன் குண்டம் அமைத்து, அக்னிக்கு கர்பாதானாதி ஸம்ஸ்காரங்கள், செய்து முன்பு கூறிய முறைப்படி ஹோமம் செய்யவும்.

अविच्छिन्ने सदारक्ष्यं नित्याग्निं षण्मुखाय वै ।
प्रणीताघारसमिधं ब्रह्मकूर्चं विनाचरेत् ॥ ४४ ॥

அவச்சின்னம் ஸதாரக்ஷ்யம் நித்யாக்னிம் ஷண்முகாய வை !
ப்ரணீதாகாரஸமிதம் ப்ரம்மகூர்ச்சம் வினா சரேத் !!

நித்யாக்னியை முருகனுக்காக இடைவிடாமல் அணையாமல் பாதுகாக்க வேண்டும். ப்ரணீதா பாத்ரம், ஆகார சமித்து ப்ரமம்கூர்ச்சமின்றி செய்ய வேண்டும்.

आज्येन चरुणा मन्त्री नित्यहोमं तु कारयेत् ।
आज्यं हृदयमन्त्रेण मूलेनैव चरुं हुनेत् ॥ ४५ ॥

ஆஜ்யேன் சருணா மந்த்ரீ நித்யஹோமம் து காரயேத் !
ஆஜ்யம் ஹ்ருதய மந்த்ரேண மூலேனைவ சரும் ஹுனேத் !!

நெய்யினாலும், ஹவிஸாலும், நித்ய ஹோமம் செய்யவேண்டும், நெய்யை ஹ்ருதய மந்திரத்தி னாலும், முலமந்திரத்தினால் ஹவிஸையும் ஹோமம் செய்ய வேணடும்.

प्रत्येकं षोडशं हुत्वा ब्रह्माङ्गानि ततो हुनेत् ।
महावल्लीं देवसेनां पृथक् पञ्चाहुतिं हुनेत् ॥ ४६ ॥

ப்ரத்யேகம் ஷோடசம் ஹுத்வா ப்ரம்மாங்காநி ததோ ஹுனேத் !
மஹாவல்லீம் தேவஸேநாம் ப்ருதக் பஞ்சா ஹுதிம் ஹுனேத் !!

ஒவ்வொன்று (மூர்த்திக்கும்) க்கும் பதினாறு ஆகுதிகளை செய்து பஞ்சபிரம்ம ஷடங்க மந்திரங்களையும் ஹோமம் செய்யவும். பின் வள்ளிக்கும், தெய்வானைக்கும் தனித்தனியாக ஐந்து ஆகுதி கொடுக்கவும்.

परिवारान् ततो हुत्वा स्विषृमग्नेति होमयेत् ।
धूपदीपादिभिः स्तोत्रैर्नित्याग्नौ पूजयेद्गुहम् ॥ ४७ ॥

பரிவாரான் ததோ ஹுத்வா ஸ்விஷ்ட மக்னேதி ஹோமயேத் !
தூப தீ பாதிபி : ஸ்தோத்ரை: நித்யாக்னௌ பூஜயேத்குஹம் !!

பின்பு பரிவார (ஆவரண) ங்களுக்கு ஹோமம் செய்து ஸ்விஷ்டமக்னே என்ற மந்திரத்தாலும் ஹோமம் செய்யவும் பின் முருகனை தூபம், தீபம், ஸ்தோத்திரம் முதலியவைகளால் அக்னியில் பூஜிக்கவும்.

॥ इति श्रीकुमारतन्त्रे अग्निकार्यविधिर्नाम सतपमः पटलः ॥

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே அக்னிகார்ய விதி : நாம ஸப்தம : படல :

இவ்வாறு ஸ்ரீ குமார தந்திரத்தில் அக்னிகார்ய விதி என்ற பெயருடைய 7 - வது படலம் !!

॥ अष्टम: पटल: ॥

எட்டாவது படலம்

॥ नित्योत्सवविधि: ॥

நித்யோத்சவ விதி :

நித்யோத்ஸவ முறை

अत: परं प्रवक्ष्यामि नित्योत्सवविधिक्रमम् ।
सर्वलोकहितार्थाय भूपतेर्विजयाय च ॥ १ ॥

அத : பரம் ப்ரவக்ஷ்யாமி நித்யோத்சவ விதிக்ரமம் !
ஸர்வலோக ஹிதார்த்தாய பூபதேர் விஜயாய ச !!

ஆகையால் (பிறகு) அனைத்து உலகங்களுக்கும் நன்மை வேண்டியும் அரசனுக்கு வெற்றியின் பொருட்டும் நித்யோத்சவ விதி முறையை கூறுகிறேன்.

स्वर्णेन रजतेनैव कारयेत् ताम्रकेण वा ।
उत्तमं षोडशाङ्गुल्यं मध्यमं द्वादशाङ्गुलम् ॥ २ ॥

ஸ்வர்ணேன ரஜதேநைவ காரயேத் தாம்ரகேன வா !
உத்தமம் ஷோடசாங்குல்யம் மத்யமம் த்வாத சாங்குலம் !!

தங்கத்தால், வெள்ளி அல்லது செப்பால் பதினாறு அங்குலம் அகலம் உள்ளது உத்தமானதும், 12 அங்குலம் உள்ளது மத்தியமாகவும்.

अधमं दशाङ्गुलं ज्ञेयं बलिपात्रस्य विस्तरम् ।
ओष्टमेकाङ्गुलं प्रोक्तं निम्नोन्नतविवर्जितम् ॥ ३ ॥

அதமம் தசாங்குலம் க்ஞேயம் பலிபாத்ரஸ்ய விஸ்தரம் !
ஒஷ்டமேகாங்குலம் ப்ரோக்தம் நிம்னோன்னத விவர்ஜிதம் !!

பத்து அங்குலம் அகலம் உள்ளது அதமமாகி பலிபாத்திரத்தின் அகலம் அறியப்படவேண்டும். ஒரு அங்குல அளவு உதடு உள்ளதும். தாழ்வு உயர்வு (மேடுபள்ளம்) இல்லாதததும் (பலிபாத்ரம் இருக்கவேண்டும்)

विस्तारं हि त्रिभागैकं पद्ममष्टदलं लिखेत् ।
कर्णिकान्तं त्रिभागैकं कारयेत्तु मनोहरम् ॥ ४ ॥

விஸ்தாரம்ஹி த்ரிபாகைகம் பத்மம் அஷ்டதளம் லிகேத் !
கர்ணிகாந்தம் த்ரிபாகைகம் காரயேத்து மநோஹரம் !!

(இப்படி அகல முள்ள பாத்திரத்தில்) மூன்றில் ஒரு பங்கு (சுற்றத்தில்) எட்டு இதழ் உள்ள தாமரையும், மூன்றில் ஒரு பங்கில் கர்ணிகையும் அழகாக செய்ய வேண்டும்.

एवं पात्रं तु संग्राह्य विन्यसेत् मण्डपोत्तरे ।
प्रोक्षयेत् हृदयेनैव बलिपात्रं सलक्षणम् ॥ ५ ॥

ஏவம் பாத்தரம் ஸங்க்ராஹ்ய வின்யஸேத் மண்டபோத்தரே !
ப்ரோக்ஷயேத் த்ருதயேநைவ பலிபாத்ரம் ஸலக்ஷணம் !!

இப்படி லக்ஷனத்துடன் உள்ள பலி உள்ள பாத்திரத்தை எடுத்து (வடக்கு) மண்டபத்தில் (வடக்கில்) (ஸ்தாபித்து) வைத்து ஹ்ருதய மந்திரத்தால் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும்.

प्रातर्मध्याह्नसायाह्ने पुष्पार्घ्यं तु कनीयसम् ।
प्रातर्मध्याह्नयोरन्नं सायेत्वर्घ्यं तु मध्यमम् ॥ ६ ॥

ப்ராதர்மத்யா ஹ்னஸாயாஹ்னே புஷ்பார்க்யம் து கனீயஸம் !
ப்ராதர்மத்யாஹ்னயோரன்னம் ஸாயேத்வர்க்யம் து மத்யமம் !!

காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் புஷ்பார்கியம் கொடுத்தல் அதமமாகும், காலையிலும் நடுப்பகலிலும் சாதம் (பலி) கொடுத்து சாயங்காலத்தில் அர்க்யம் (கொடுப்பது) மத்யமம் ஆகும்.

त्रिकालेष्वन्नलिङ्गं चेत् उत्तमञ्चेति कीर्तितम् ।
उत्सेधं द्वादशाङ्गुल्यं नाहं द्वयङ्गुलमुच्यते ॥ ७ ॥

த்ரிகாலேஷ்வன்னலிங்கம் சேத் உத்தமம் சேதி கீர்த்திதம் !
உத்ஸேதம் த்வா தசாங்குல்யம் நாஹம் த்வ்யங்குல முச்யதே !!

மூன்று காலங்களிலும் அன்னலிங்கம் (சாத உருண்டை) உத்தமம் என்றும் சொல்லப் படுகிறது. உயரம் 12 அங்குல முடையதும் கட்டு (கழுத்து) இரண்டு அங்குலம் உடையதும்

अग्रं पक्षाङ्गुलं द्वारं गन्धमाल्यैरलंकृतम् ।
तस्मिन् संपूजयेच्छक्तिं गुहास्त्रममितोज्वलम् ॥ ८ ॥

அக்ரம் பக்ஷாங்குலம் த்வாரம் கந்த மால்யை ரலங்க்ருதம் !
தஸ்மின் ஸம்பூஜ்யேச்சக்திம் குஹாஸ்த்ர ட்மமிதோஜ்வலம் !!

மேல் பாகம் பதினைந்து அங்குலம் உள்ளதும் சந்தனம், மாலைகளால் அலங்கரிக்கப் பட்டதும்மான சாதனத்தில் (த்வாரம்-சாதனம்) அளவில்லாத ஜ்வாலையை உடையதும். குஹனின் ஆயுதமானதுமான சக்தி ஆயுதத்தை பூஜை செய்ய வேண்டும்.

इन्द्रादीशानपर्यन्तं शकुन्याद्याः प्रपूजयेत् ।
मूलबेरं त्रिभागैकमुत्तमं बलिबेरकम् ॥ ९ ॥

இந்த்ராதீசான பர்யந்தம் ஶகுன்யாத்யா: ப்ரபூஜயேத் !
மூலபேரம் த்ரிபாகைகம் உத்தமம் பலிபேரகம் !!

கிழக்கு முதல் வடகிழக்கு வரை சகுனீ முதலானவர் (பீடசக்தி) களை பூஜிக்கவும். மூலஸ்தான மூர்த்தியின் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவு உள்ளது உத்தமமான பலி தேவதா வடிவமாகும்.

द्वित्वाङ्गुलविहीनेन मध्यमाधममुच्यते ।
सुब्रह्मण्यस्वरुपं वा स्कन्दरूपमथापि वा ॥ २० ॥

த்வித்வாங்குல விஹீநேன மத்யமாதமமுச்யதே !
ஸுப்ரம்மண்ய ஸ்வரூபம் வா ஸ்கந்த ரூபமதாபி வா !!

இரண்டு இரண்டு குறைவினால் மத்யமம் அதமம், (என்று) கூறப்பட்டுள்ளது. சுப்ரமண்ய வடிவோ அல்லது ஸ்கந்த ருபமாகவோ அமைக்கவும்.

एकववत्रं चतुर्बाहं कमण्डल्वक्षधारिणम् ।
कटिबन्धाभययुतं अथवा वरदाभयम् ॥ ११ ॥

ஏகவக்த்ரம் சதுர்பாஹும் கமண்டல்வக்ஷ தாரிணம் !
கடிபந்தாபயயுதம் அத்வா வரதாபயம் !!

ஒரு முகம், நான்கு கைகள், கமண்டலம், அக்ஷமாலை, இவைகளுடன் இடுப்பில் வைத்த கை அபயத்துடனோ, வரதம், அபயம் ஆகிய கைகளுடனோ,

सर्वलक्षण संयुक्तं सर्वाभरणभूषितम् ।
शक्त्येकया युतं वापि शक्तिद्वययुतं तु वा ॥ १२ ॥

ஸர்வ லக்ஷண ஸம்யுக்தம் ஸர்வாபரண பூஷிதம் !
சக்த்யேகயா யுதம் வாபி சக்தி த்வய யுதம் து வா !!

அனைத்து லக்ஷணங்களுடன் கூடியதும். அனைத்து ஆபரணங்களையும், அணிந்ததாயும் ஒரு அம்மன் அல்லது இரண்டு சக்திகளுடன் கூடியதும்.

इत्थं रूपं मुनिश्रेष्ट कारयेत् बलिबेरकम् ।
वस्त्राभरणगन्धाद्यैरलं कृत्य च पुष्पकैः ॥ १३ ॥

இத்தம் ரூபம் முனிச்ரேஷ்ட காரயேத் பலிபேரகம் !
வஸ்த்ராபரணகந்தாத்யை: அலங்க்ருத்ய ச
புஷ்பகை : !!

இப்படியாக உள்ள வடிவத்தை பலிதேவதா வடிவாகச் செய்து (வஸ்த்ரம்) உடை (ஆபரணம்) சந்தனம் முதலியவைகளாலும் பூக்களாலும் அலங்காரம் செய்து,

नागाश्वरथरङ्गे वा शिबिकायां प्ररोपयेत् ।
सोष्णीषैः सोत्तरीयैश्च सोपवीतैः सुवस्त्रकैः ॥ १४ ॥

நாகாஸ் வரத ரங்கேவா சிபிகாயாம் ப்ரரோபயேத் !
ஸோஷ்ணீஷை : ஸோத்தரீயைச்ச ஸோப வீதை :
ஸஸுவஸ்த்ரகை : !!

யானை, குதிரை, தேர் சப்பரத்திலே, பல்லக்கிலோ ஏற்றி தலைப்பாகை, மேலாடை, பூணூல் நல்ல வஸ்த்திரம் இவைகளை உடையவர்களும்

मौनव्रतधरैर्विप्रैर्धारयेत् बलिबेरकम् ।
पादुकां लक्षणोपेतां वस्त्राद्यैरुपशोभिताम् ॥ १५ ॥

மௌனவ்ரத தரைர்விப்ரை : தாரயேத்பலி பேரகம் !
பாதுகாம் லக்ஷணோபேதாம் வஸ்த்ராத்யை
ருபசோபிதாம் !!

பேசாமை என்ற உறுதி உள்ளவர்களுமான அந்தணர்களைக் கொண்டு பலி மூர்த்தியை தாங்கிக் கொள்ள வேண்டும். அனைத்து லக்ஷணங்களுடன் உள்ளதும், ஆடை முதலியவைகளால் அழகு செய்யப்பட்டதுமான பாதுகையை

अस्त्रेण प्रोक्ष्य तस्यां तु मयूरं संप्रपूजयेत् ।
सुस्नातया गणिकया धारयेच्च सुवाससा ॥ १६ ॥

அஸ்த்ரேண ப்ரோக்ஷ்ய தஸ்யாம் து மயூரம் ஸம்ப்ர
பூஜயேத் !
சுஸ்னாதயா கணிகயா தாரயேச்ச சுவாசசா !

அஸ்த்ரமந்திரத்தால் ப்ரோக்ஷணம் (நீர்தெளித்து) செய்து அதில் மயிலை (மூர்த்தியை) பூஜை செய்து ஸ்னாநம் செய்த தாசிப் பெண்ணால் நல்ல வஸ்திரத்துடன் தூக்கிவரச் செய்யவும்.

छत्रं ध्वजसमायुक्तं पिंछचामरसंयुतम् ।
नानावाद्यसमायुक्तं नानागेयसमन्वितम् ॥ १७ ॥

சத்ரம் த்வஜஸமாயுக்தம் பிஞ்ச்ச சாமரஸம்யுதம் !
நாநாவாத்ய ஸமாயுக்தம் நாநாகேய ஸமன்விதம் !!

குடை, கொடி, சாமரம் (மயில் தோகையுடன்) பல வகைவாத்யங்கள் பலவகைப்பாடல்கள் இவை களுடன் கூடியதாயும்

नानादीपसमायुक्तं नानाभक्तजनैर्युतम् ।
पूर्वाह्णे दूिजवृद्धिः स्यान्मध्याह्ने राजवृद्धिदम् ॥ १८ ॥

நாநாதீப ஸமாயுக்தம் நாநாபக்தஜனைர்யுதம் !
பூர்வாஹ்னே த்விஜவ்ருத்தி : ஸ்யாத் மத்யாஹ்னே
ராஜ விருத்திதம் !!

பல வித தீபங்களும் பலவகை அடியார்கள் இவர்களுடன் கூடியதுமான (பலி மூர்த்தியை திருவுலா செய்ய வேண்டும்) காலையில் பிராம்மண வளர்ச்சியும் நடுப்பகலில் அரசர் வளர்ச்சியும்

रात्रौ विच्छूद्रवृद्धिः स्यात् बलिबेरस्य यानतः ।
भेरी मुरज संयुक्तं प्रथमं वै प्रदक्षिणम् ॥ १९ ॥

ராத்ரௌ விட்சூத்ர விருத்தி : ஸ்யாத் பலிபேரஸ்ய
யானத : !
பேரீ முரஜ ஸம்யுக்தம் ப்ரதம் வை ப்ரதக்ஷிணம் !!

இரவில் வைஶ்ய, சூத்ர விருத்தியும் பலிமூர்த்தி திருவுலாவால் உண்டாகிறது (பேரீ, மேளம், முரசு (தம்பட்டம்) இவைகளோடு முதல் ப்ரதக்ஷிணமும்.

वरनृतं द्वितीयस्य गीतेन त्रि:प्रदक्षिणम् ।
ब्रह्मस्थाने मुनिश्रेष्ठ ब्रह्मणस्ताळसंयुतम् ॥ २० ॥

கரந்ருத்தம் த்விதீயஸ்ய கீதேன த்ரி: ப்ரதக்ஷிணம் !
ப்ரம்மஸ்தானே முனிச்ரேஷ்ட ப்ரம்மனஸ்தாள ஸம்யுதம் !!

மேலான (நல்ல) நர்த்தனத்துடன் இரண்டாவது பிரதக்ஷிணமும் மூன்றாவது பண்ணிசையோடு பிரதக்ஷிணம் (செய்ய வேண்டும்) மேலான முனிவரே ! பிரம்ம ஸ்தானத்தில் (மண்டப நடுவில்) பிரம்ம தாளமும்

ऐन्द्रे तु समताळं स्यात् अग्नौ सावरणं भवेत् ।
याम्यायां भृङ्गिणीताळं नैर्ऋत्यां मल्लताळकम् ॥ २१ ॥

वारुण्यां नवताळं स्यात् वायव्यां बलिताळकम् ।
सोमे कौशिकताळं स्यात् ऐशान्यां ढक्करी भवेत् ॥ २२ ॥

ஐந்த்ரேது சம தாளம் ஸ்யாத் அக்னௌ ஸாவரணம் பவேத் !
யாம்யாயாம் ப்ருங்கினீதாளம் நைர்ருத்யாம் மல்ல தாளகம் !!

வாருண்யாம் நவதாளம்ஸ்யாத் வாயவ்யாம் பலி தாளகம் !
ஸோமே கௌசிக தாளம் ஸ்யாத் ஐசான்யாம் டக்கரீபவேத் !!

கிழக்கில் ஸமதாளமும் தென் கிழக்கில் ஸாவரணதாளமும், தெற்கில் பிருங்கினீதாளமும், தென் மேற்கில் மல்லதாளமும், மேற்கில் நவதாளமும், வடமேற்கில் பலிதாளமும், வடக்கில் கௌசிக தாளமும், வடகிழக்கில் டக்கரீதாளமும் (செய்யப்பட வேண்டும்)

प्रदक्षिणत्रयस्यैवं भूर्भुव:स्व: क्रमादिह ।
सर्वेषां प्राणिनां सम्यक् वलदा बलिरुच्यते ॥ २३ ॥

ப்ரதக்ஷிணத்ரயஸ்யைவம் பூர்புவஸ்வ : க்ரமாதிஹ !
சர்வேஷாம் ப்ராணினாம் சம்யக் பலதா பலிருச்யதே !!

இவ்வாறு செய்யப்படும் பூ : புவ :,ஸுவ : என்பதான முறைக்கு பூலோகம் புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய பிரதக்ஷிணத்தின் (எல்லா பிராணிகளின் பலனை தரக்கூடியதாகும்) பலி கூறப்படுகிறது.

गोपुरद्वारमागत्य शङ्खघोषसमन्वितम् ।
तत:पुरस्थिते पद्मे त्रि:प्रदक्षिणमाचरेत् ॥ २४ ॥

கோபுர த்வார மாகத்ய சங்க கோஷ ஸமன் விதம் !
ததா: புரஸ்திதே பத்மே த்ரி : ப்ரதக்ஷிணமாசரேத் !!

பின்பு கோபுர வாயிலுக்கு சங்கநாதத்துடன் வந்தடைந்து அங்கு முன்புறமுள்ள தாமரை (பீடம்) அதில் மூன்று பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

शनै:प्रदक्षिणं कुर्यान्महापातकनाशनम् ।
उत्सवे बलिकाले च य: करोति प्रदक्षिणम् ॥ २५ ॥

ஶனை: ப்ரதக்ஷிணம் குர்யாத் மஹாபாதக நாஶநம் !
உத்ஸவே பலிகாலே ச ய : கரோதி ப்ரதக்ஷிணம் !!

மெதுவாக பிரதக்ஷிணம் செய்யவும் மிகப்பெரிய பாபங்கள் போக்கவல்ல யார் ஒருவர் திருவிழா மற்றும் பலிகாலங்களில் (இவ்வாறு) பிரதக்ஷிணம் செய்கிறானோ)

पदे पदेऽश्वमेधस्य फलं प्राप्नोतिमानव: ।
द्वारिनीराजनं कृत्वा प्रविशेदालयं तत: ॥ २६ ॥

பதே பதேஶ் வமேதஸ்ய பலம் ப்ராப்னோதி மானவ : !
த்வாரி நீராஜனம் க்ருத்வா ப்ரவிசே தாலயம் தத : !!

அந்த மனிதன் மீண்டும் மீண்டும் அச்வமேதம் என்ற (மிகப்பெரிய) யாகத்தின் பயனை அடைகிறான் பிறகு கோபுர வாயிலில் நீராஜனம் செய்து ஆலயத்துள் நுழையவும்.

पादौ प्रक्षाल्य मतिमान् पादुकां शिखिदेवताम् ।
पाद्यादिभि: समभ्यर्च्य बर्हिगायत्रिमन्त्रत: ॥

பாதௌப்ரக்ஷால்ய மதிமான் பாதுகாம்
சிகிதேவதாம் !
பாத்யாதிபி : ஸமப்யர்ச்ய பர்ஹி காயத்ரி மந்த்ரத : !!

அறிவார்த்த ஆசார்யர் கால்களை அலம்பிக்கொண்டு மயிலை தேவதையாக உடைய பாதுகையை, பாத்யம் முதலியவை களால் வெளியே மயூர காயத்ரி மந்திரத்தால் பூஜித்து.

विन्यसेत्पूर्वदेशे तु धूपदीपं प्रदापयेत् ॥ २७ ॥

வின்யஸேத்பூர்வதேசே து தூப தீபம் ப்ரதாபயேத் !!

முன்பிருந்த கிழக்கு பக்கம் (இடத்தில்) வைத்து தூபதீபம் கொடுக்கவும்.

बलिबेराकृतिं देवं विन्यसेन्मूलाबेरके ।
एवं य: कुरुते नित्यं कौमारं लोकमाप्नुयात् ॥ २८ ॥

பலிபேராக்ருதிம் தேவம் வின்யஸேந் மூலபேரகே !
ஏவம்ய : குருதே நித்யம் கௌமாரம்
லோகமாப்னுயாத் !!

பலி பேரவடிவத்தில் உள்ள மூர்த்தியை (ஸ்கந்தனை) மூலாய முர்த்தியில் சேர்க்கவும இவ்வாறு (நித்யப்படி) தினமும் யார் செய்கிறானோ ? அவன் (கௌமாரலோகத்தை) குமரன் உலகை அடைகிறான்.

इति श्रीकुमारतन्त्रे नित्योत्सवविधिर्नाम अष्टम: पटल:

இதி ஏவம் ஸ்ரீ குமாரதந்த்ரே நித்யோத்சவ விதிர்நாம
அஷ்டம : படல் :

இவ்வாறு ஸ்ரீ குமாரதந்திரத்தில் நித்யோத்ஸவ
விதி என்ற 8 வது படலம் ஆகும்.

॥ नवमः पटलः ॥

ஒன்பதாவது படலம்

कुण्डलक्षणविधिः

குண்டலக்ஷண விதி :
குண்டம் அமைக்கும் முறை

अतः परं प्रवक्ष्यामि कुण्डानां लक्षणं श्रुणु ।
शतार्धं शतहोमं तु मुष्टियारत्नीयुतं भवेत् ॥ १ ॥

அத : பரம் ப்ரவக்ஷ்யாமி குண்டாணாம் லக்ஷணம் ச்ருணு !
சதார்த்தம் சதஹோமம்து முஷ்ட்யாரத்னியுதம் பவேத் !!

இதன் பிறகு குண்டங்களின் லக்ஷணங்களை சொல்கிறேன் கேளும் ! ஐம்பது அல்லது நூறு (ஆவர்த்தி) ஹோமம் செய்யும் போது ஒருபிடியுடன் கூடிய முழம் அளவு உள்ள (குண்டம்) வேண்டும்,

सहस्त्रायुतहोमं तु हस्तं हस्तद्वयं क्रमात् ।
कोट्याहुतावष्टहस्तं तदूर्ध्वं नैव कारयेत् ॥ २ ॥

ஸஹஸ்ராயுத ஹோமம் து ஹஸ்தம் ஹஸ்தத்வயம் க்ரமாத் !
கோட்யாஹுதா வஷ்டஹஸ்தம் ததூர்த்வம் நைவ காரயேத் !

ஆயிரம், பத்தாயிரம் ஆவ்ருத்தி ஹோமம் (செய்கையில்) ஒரு முழம் இரண்டு முழம் குண்டமும், கோடி ஆகுதி செய்யும் போது எட்டுமுழம் குண்டமும் முறையாகும். அதற்குமேல் பெரிய குண்டம் செய்யக் கூடாது.

मात्राङ्गुलेन कर्तव्यं विस्तारस्य पदं समम् ।
कुण्डं त्रिमेखलोपेतमेकमेखलमेव च ॥ ३ ॥

மாத்ராங்குலேன கார்தவ்யம் விஸ்தாரஸ்ய பதம் ஸமம் !
குண்டம் த்ரிமேகலோபேதம் ஏகம் மேகல மேவ ச !!

மாத்ராங்குல அளவினாலே குணடங்கள் கட்டப்பட வேண்டும். பரப்பளவின் சமமான பத அளவு கைகொள்ளவேண்டும். குண்டமானது. மூன்று மேகலை (படி) அல்லது ஒரு மேகலையோடும் உடையதாக குண்டம் அமைக்கப்பட வேண்டும்.

वेदाद्युगाङ्गुलं प्रोक्तं मेखलानां तथोन्नतम् ।
योनिं कुर्यात्तदूर्ध्वे तु गजोष्टाकृतिवत् बुधः ॥ ४ ॥

வேதாத்யுகாங்குலம் ப்ரோக்தம் மேகலானாம் ததோன்னதம் !
யோனிம் குர்யாத் ததூர்த்வே து கஜோஷ்டாக்ருதிவத்புத : !!

நான்கு அங்குலம் முதல் இரண்டு அங்குலம் முடிய அளவில் மேகலைகளின் உயர்வு (மேலிருந்து கீழாக) சொல்லப்படுகிறது. அதன் மேகலை மேல் யானையின் உதடு போன்ற யோனியை அமைக்க வேண்டும்.

वेदाङ्गुलं तु विस्तारमायामं तु षडङ्गुलम् ।
क्रमेण कृशतां याति तारत्रयांशमुन्नतम् ॥ ५ ॥

வேதாங்குலம் து விஸ்தாரம் ஆயாமம் து ஷடங்குலம் !
க்ரமேண க்ருசதாம் யாதி தார த்ர(யி)யாம் சமுன்னதம் !!

(அது) நான்கு அங்குல அகலமும் ஆறு அங்குல நீளமும் உள்ளதாகவும். முறையாக இளைத்தாகவும். சுற்றளவில் முன்றில் ஒரு பங்கு உயர்வானதாகவும் இருக்கவேண்டும்.

नाभिं पद्माकृतिं कुर्यात्कुण्डमध्ये विचक्षणः ।
षडङ्गुलं तु विस्तारं तृतीयांशं समुन्नतम् ॥ ६ ॥

நாபிம் பத்மாக்ருதிம் குர்யாத் குண்டமத்யே விசக்ஷண :!
ஷடங்குலம் து விஸ்தாரம் த்ருதீயாம்சம் ஸமுன்னதம் !!

அறிவளந்தவர் குண்டத்தின் நடுவில் தாமரையைப் போன்ற நாபியை ஆறு அங்குலம் அகலமாகவும். மூன்றில் ஒரு பங்கு உயரமாகவும் செய்யவேண்டும்.

योनौ योनिर्न कर्तव्यं पद्मे नाभि न कारयेत् ।
कोणेषु च न कुर्यात्तु नाभिं तस्याग्निसंमुखम् ॥ ७ ॥

யோனௌ யோனிர் நகர்தவ்யம் பத்மே நாபிம் நகாரயேத் !
கோணேஷு ச ந குர்யாத்து நாபிம் தஸ்யாக்னி சம்முகம் !!

யோனிகுண்டத்தின் மேல் யோனியையும் பத்மகுண்டத்தில் நாபியையும் அதே போல் கோண குண்டங்களிலும் அக்னிக்கு அபிமுகமாகவுள்ள நாபியையும் செய்யக்கூடாது அக்னிஸம் முகமாக நாபியை அமைக்க வேண்டும்.

यदाकाराणि कुण्डानि तदाकारास्तु मेखला ।
वेदाश्रं योनिचापाश्रं त्र्यश्रं वृत्तं षडश्रकम् ॥ ८ ॥

யதாகாரணி குண்டாணி ததாகாராது மேகலா !
வேதாரம் யோணி சாபாச்ரம் த்ர்யச்ரம் வ்ருத்தம் ஷடச்ரகம் !!

குண்டங்கள் எந்த அமைப்பில் உள்ளனவோ. அந்த அளவுகளிலேயே மேகலைகளும் இருக்க வேண்டும். சதுரம் யோனி வில் அமைப்பு முக்கோணம், வட்டம் அறுகோணம்,

पद्ममष्टाश्रकं दिक्षु षडश्रं तु प्रधानकम् ।
पूर्वाग्रं गणसूत्रं च दक्षिणोत्तरमेव हि ॥ ९ ॥

பத்மம் அஷ்டா(ச்) ரகம் திக்ஷு ஷடஸ் ரம் து ப்ரதானகம் !
பூர்வாக்ரம் கணஸுத்ரம் ச தக்ஷிணோத்தர மேவ ஹி !!

தாமரை எண் கோணம் இவைகளை எட்டு திக்குகளிலும் அறுகோணத்தை பிரதான மாகவும் (அமைக்க வேண்டும்) கிழக்கு நுனியாக தெற்கு வடக்கிலும் முறையாக கண சூத்ரம் என்ற பதினெட்டு கோடுகளைக்கொண்டு (குண்டங்கள்) அமைக்க வேண்டும்.

चतुष्पदमिदं सम्यक तत्कुण्डं चतुरश्रकम् ।
क्षेत्रांशं दशधा कृत्वा दिग्भागं पूर्वतो न्यसेत् ॥ १० ॥

சதுஷ்பதமிதம் ஸம்யக் தத்குண்டம் சதுரச்ரகம் !
க்ஷேத்ராம்சம் தசதா க்ருத்வா திக்பாகம் பூர்வதோந்யஸேத் !!

நான்கு கட்டங்களை உடையதாக இந்த குண்டம் இருந்தால் அது சதுரச்ரம் ஆகும். இருக்கும் இடத்தை பத்து பாகங்களாகச் செய்து அதில் பத்தில் ஒரு பகுதியை முன் (கிழக்காக) புறத்தில் சேர்த்தும்,

पुनःकोणेषु वेदांशद्भ्रामयेत्कोणकावधि ।
सूत्रद्वयं प्रयोगाच्च योन्याकारं भवेदिदम् ॥ ११ ॥

புன : கோனோஷு வேதாம்ஸாத் ப்ராமயேத் கோணகாவதி !
ஸுத்ரத்வயம் ப்ரயோகாச்ச யோன்யாகாரம் பவேதிதம் !!

மீண்டும் மூலைகளில் நான்கில் ஒரு பகுதியில் (மேல்புறத்தில்) மூலைகளில் வட்டமிட்டு இருபுறமும் இருகோடுகள் இணையப்பட்டதிலிருந்து யோனி வடிவம் ஆகும்.

व्यासेऽष्टांशाद्व्यंशमग्रं पार्श्वयोर्न्यस्य मध्यमात् ।
भ्रामयेत् पर्श्वपर्यन्तं तत्कुण्डं चार्धचन्द्रकम् ॥ १२ ॥

வ்யாஸேஷ்டாம்ஸாத் த்வ்யம்ஸமக்ரம் பார்ஸ் வயோர் ந்யஸ்ய மத்யமாத் !
ப்ராமயேத்பார்ஸ் வ பர்யந்தம்தத்குண்டம் சார்த்த சந்த்ரகம் !!

இடத்தில் உள்ளதில் எட்டில் இரு பங்கு நடுவிலிருந்து இரு பக்கங்களிலும் அளவிட்டு நடுவிலிருந்து இருபக்கங்களிலும் வட்டம் வரைய அர்த்த சந்திர வடிவானது ஆகும். அந்த குண்டம்

क्षेत्रषडभागके न्यस्य भागैकं त्वथ पार्श्वयो: ।
तन्मानेन त्रिसूत्रेण त्रिकोणं कुण्डमीरितम् ॥ १३ ॥

க்ஷேத்ர ஷட்பாககே ந்யஸ்ய பாகைகம் த்வத பார்ஸ் வயோர் !
தன்மானேன த்ரிஸூத்ரேண த்ரிகோணம் குண்டமீரிதம் !!

இடத்தை ஆறுபாகம் செய்து அதில் ஒரு பாகத்தை மூன்று பக்கங்களிலும் வெளியே அளவிட்டு அந்த மூன்று அளவுகளால் கோடு வரைய (முக்கோண) த்ரிகோண குண்டமாகும்.

न्यासेऽष्टादशभागांशात् बहिर्विन्यस्य बुद्धिमान् ।
तदश्रं भ्रामयेद्धीमान् वृत्तकुण्डं भवेदिदम् ॥ १४ ॥

ந்யாஸேஷ்டாதஸ பாகாம்சாத்பஹிர் வின்யஸ்ய புத்திமான் !
ததஸ்.ரம் ப்ராமயேத் தீமான் வ்ருத்த குண்டம் பவேதிதம் !!

இடத்தில் பதினெட்டில் ஒருபங்கு வெளியே (நான்கு புறங்களிலும்) அளவிட்டு வட்டம் வரைய வ்ருத்த குண்டம் ஆகும்.

कृत्वा तेनैव षट्सूत्रं न्यसेत् षट्कोणकुक्षिकम् ।
कर्णिकादळ संयुक्तं पद्मकुण्डं तु वृत्तवत् ॥ १६ ॥

க்ருத்வா தேனைவ ஷட்சூத்ரம் ந்யசேத்ஷட்கோண குக்ஷிகம் !
கர்ணிகா தளசம்யுக்தம் பத்மகுண்டம் துவ்ருத்தவத் !!

அவ்வாறே சுற்றளவில் 6 கோடில் அறு கோண குண்டமாகும். கர்ணிகை தளத்துடன் சேர்த்து போடுவது வ்ருத்தகுண்டம் போல் உள்ளது பத்மகுண்டமாகும்.

மேலே கர்ணிகையும் மேகலைகளில் தளமும் கூடியது அளவில் விருத்த குண்டம் போல் உள்ளதும் பத்மகுண்டமாகும்.

व्यासे वेदरसांशांशं बहून्यस्त्वा समन्त्रत: ।
कोणार्धं कोणके लिरव्य वस्वश्रं वसुसूनता ॥ १७ ॥

வ்யாசேவேத ரஸாம்சம் பஹூன்ந்ய்ஸ்ய ஸமம்த்ர(கு)த:!
கோணார்தம் கோணகேலிக்ய வஸ்வஸ்ரம் வஸூஸூனதா!!

இடத்தை நான்காக பங்கிட்டு அதில் ஆறில் ஒரு பகுதி வெளியே செலுத்தி வட்டமிட்டு எட்டு கோணங்களாக கோடு இழுக்க எண்கோண குண்டமாகும்.

मानहीने महाव्याधिरधिके शत्रुवर्धनम् ।
भेदे महद्भयं प्रोक्तं स्फुटिते सस्यनाशनम् ॥
तस्मात्सर्वप्रयत्नेन कुण्डं कुर्यात् सलक्षणम् ॥ १८ ॥

மாநஹீநே மஹாவ்யாதி: அதிகே சத்ரு வார்த்தனம்!
பேதேமஹத்பயம் ப்ரோக்தம் ச்புடிதே ஸஸ்யநாசநம்!!
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந குண்டம் குர்யாத் ஸலக்ஷணம்!!!

குண்டங்களில் அளவுகுறைவதால் பெரிய நோயும் அளவு கூடினால் எதிரி வளர்ச்சியும் வேறுபட்டால் மிகுந்த பீதியும் வெடிப்பு ஏற்பட்டால் பயிர் அழிவும் கூறப்படுகிறது.

ஆதலால் அனைத்து முயற்சியாலும் இலக்கண முறைப்படி அழகுள்ள குண்டம் கட்டப்பட வேண்டும்.

इति श्रीकुमारतन्त्रे कुण्डलक्षणविधिर्नाम नवमः पटलः

இதி ஸ்ரீ குமார தந்த்ரேகுண்ட லக்ஷண விதிர்நாம
நவம : படல

இவ்வாறு ஸ்ரீகுமார தந்த்ரத்தில் குண்டலக்ஷணவிதி
என்ற 9 வது படலம் ஆகும்.









।। दशमः पटलः ।।

!! பத்தாவது படலம் !!

।। मण्डलविधिः ।।

மண்டல விதி :மண்டலமமைக்கும் முறை !

अतः परं प्रवक्ष्यामि मण्डलस्य विधिं श्रृणु ।
दीक्षायां तु प्रतिष्ठायां पवित्रारोपणेऽपि च ॥ १ ॥

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி மண்டலஸ்ய விதிம் ஸ்ருணு!
தீக்ஷாயாம் து ப்ரதிஷ்டாயாம் பவித்ராரோபணே பிச !!

இதன் பிறகு மண்டலத்தினுடைய விதியை சொல்கிறேன் கேளும்!. தீக்ஷையிலும், பிரதிஷ்டையிலும் பவித்ராரோபண விழாவிலும்

उत्सवेऽपि च तत्वज्ञः पूजयेन्मण्डले गुहम् ।
चतुरश्रं ततो मध्ये षडदळं पद्ममालिखेत् ॥ २ ॥

உத்ஸவேபிச தத்வக்ஞ: பூஜயேன்மண்டலே குஹம்!
சதுரச்ரம் ததோ மத்யே ஷட்தளம் பத்மமாலிகேத் !!

திருவிழாவிலும் மண்டலத்தில் உண்மை நிலை யறிந்தவர் குஹனை பூஜிக்க வேண்டும். சதுரம் வரைந்து அதன் நடுவில் ஆறு இதழ் உள்ள தாமரையை வரைய வேண்டும்.

कर्णिकां च त्रिभागैकं पीतवर्णेन कारयेत् ।
श्वेतं पीतं च रक्तं च स्फटिकं श्यामवर्णकम् ॥ ३ ॥

கர்ணிகாம்ச த்ரிபாகைகம் பீதவர்ணேந காரயேதி!
ச்வேதம் பீதம்சரக்தம்ச ஸ்படிகம் ச்யாமவர்ணகம் !!

மூன்றில் ஒரு பங்கு கர்ணிகை வட்டமும் மஞ்சள் வண்ணத்தில் செய்து வெள்ளை, மஞ்சள், சிகப்பு, படிகம் (வெள்ளை) கருப்பு ஆகிய

एतैर्वर्णैश्च मतिमान् षड्दळानि च पूरयेत् ।
रजोभिर्विविधैर्वर्णैर्यथाशोभं विभूषयेत् ॥ ४ ॥

ஏதைர்வர்ணைச்ச மதிமான் ஷட்தளானி ச பூரயேத்!
ரஜோபிர் விவிதைர் வர்ணை: யதாசோபம் விபூஷயேத் !!

இந்த வண்ணங்களால் ஆறு இதழ்களை அறிஞன் அலங்கரிக்கவும் பலவித வண்ணப் பொடிகளால் அழகாக அலங்கரிக்கவும்.

मूलेनावाहयेन्मध्ये देवीभ्यां सह षण्मुखम् ।
आसनावरणाद्यैश्च मण्डले पूजयेत् ततः ॥ ५ ॥

மூலேனாவாஹயேன் மத்யே தேவீப்யாம் சஹ ஷண்முகம்!
ஆசநாவரணாத்யைச்ச மண்டலே பூஜயேத் தத: !!

நடுவில் இரண்டு தேவிகளுடன் கூடிய ஷண்முகனை ஆவாஹணம் செய்யவும். ஆஸன ஆவரணம் முதலியவைகளோடும் மண்டலத்தில் பூஜிக்கவும்.

श्रीभद्रमण्डलमिदं सुब्रह्मण्यात्मकं शुभम् ।
विप्रादीनां तु सर्वेषां वर्णानां तु प्रशस्तकम् ॥ ६ ॥

ஸ்ரீபத்ர மண்டலமிதம் சுப்ரம்மண்யாத்மகம் சுபம்!
விப்ராதீனாம் து சர்வேஷாம் வர்ணாநாம் துப்ரசஸ்தகம் !!

இது ஸ்ரீபத்ர மண்டலம் என்ற பெயருள்ள முருகனுக்கு உரிய மங்களகரமானதாகும். அந்தணர் முதலான அனைத்து வகுப்பினர்களுக்கும் உயர்வானதும் மகிழ்ச்சியைத் தர வல்லதும் ஆகும்.

गुहदीक्षां ततः कुर्यादेतन्मण्डलसन्निधौ ।
मण्डलेन विधानेन स्कन्दकर्म करोति यत् ॥ ७ ॥

குஹதீக்ஷாம் தத: குர்யாத் ஏதன்மண்டல சன்னிதௌ!
மண்டலேன விதானேன ஸ்கந்த கர்ம கரோதியர் !!

இந்த மண்டலத்தின் முன்னிலையில் பிறகு குஹ தீக்ஷை செய்ய வேண்டும். இந்த மண்டல விதியுடன் ஸ்கந்தனுடைய வழியுடையார் செய்கிறானோ

नैतत्फलमवाप्नोति साधकेमन्त्रवानपि ।
तस्मात्तत्कर्मसिद्ध्यर्थं मण्डलं कारयेद्बुधः ॥ ८ ॥

நைதத் பலமவாப்நோதி ஸாதகே மந்த்ரவானபி!
தஸ்மாத் தத்கா்ம ஸித்யா்த்தம் மண்டலம்
காரயேத்புத்:!!

அவனுடைய நிற்பயனை மந்த்ர சித்தியுடையவனாலும் தன் சாதகத்தில் (செயல்பாட்டில்) அடைய மாட்டான் ஆகையால் அந்த கார்யம் பயனை அடைய வேண்டி மண்டலம் செய்து கொள்ள வேண்டும்.

॥ इति श्रीकुमारतन्त्रे मण्डलविधिर्नाम दशमः पटलः॥

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே மண்டல விதிர்நாம தசம: படல:

இவ்வாறு ஸ்ரீ குமாரதந்திரத்தில் மண்டல விதி என்னும் 10 - வது படலம்.

॥ एकादशः पटलः ॥

ஏகாதச: படல:

'!! பதினோறாவது படலம் !!

गुहदीक्षाविधिः

குஹதீக்ஷாவிதி :

(குஹதீக்ஷை முறை)

अतः परं प्रवक्ष्यामि गुहदीक्षाविधिं परम् ।
सर्वपापहरम्पुण्यं सर्वकामफलप्रदम् ॥ १ ॥

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி குஹதீக்ஷா விதிம் பரம் !
ஸர்வ பாபஹரம் புண்யம் ஸர்வகாம பலப்ரதம் !!

இதன் பிறகு உத்தமமான குஹ தீக்ஷா முறையை கூறுகின்றேன். எல்லாவித பாபங்களை போக் குவதும் புண்யமானதும் எல்லாவிதமான விரும்பிய பலன்களை கொடுக்கக் கூடியதுமான.

शिवदीक्षाविधेः पश्चात् गुहदीक्षाञ्च कारयेत् ।
सर्वालङ्कार संयुक्तं स्नानं कौशेयकोज्ज्वलम् ॥ २ ॥

சிவதீக்ஷாவிதே: பச்சாது குஹதீக்ஷாம்ச காரயேத் !
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் ஸ்நாநம்
கௌசேயகோஜ்வலம் !!

சிவதீக்ஷைக்குப் பிறகு குஹதீக்ஷையைச் செய்யவும் ஸ்நாநம் செய்து எல்லா அலங்காரத்துடன் வெண்பட்டாடை அணிந்து

त्रिपुण्ड्रधारणं शिष्यं हृदा प्रोक्ष्यार्घ्यवारिणा ।
नेत्रं नेत्रेण मतिमान् बन्धयेच्छ्वेतवस्त्रतः ॥ ३ ॥

த்ரிபுண்ட்ர தாரணம் சிஷ்யம் ஹ்ருதா
ப்ரோக்ஷ்யார்க்ய வாரிணா !
நேத்ரம் நேத்ரேண மதிமாநு பந்தயேத் ச்வேத
வஸ்த்ரத:!!

விபூதியணிந்த சிஷ்யனை ஹ்ருதய மந்திரத்தினால் அர்க்ய ஜலத்தினால் ப்ரோக்ஷித்து வெள்ளை துணியால் நேத்ர மந்திரத்தினால் கண்ணை கட்டிவிட்டு

हृदयेन तु मन्त्रेण दश जप्त्वा सलक्षणम् ।
पूर्वद्वारन्तु विप्राणां क्षत्रियाणां तु दक्षिणम् ॥ ४ ॥

ஹ்ருதயேநது மந்த்ரேண தசஜப்த்வா ஸலக்ஷணம் !
பூர்வ த்வாரந்து விப்ராணாம் க்ஷத்ரியாணாந்து
தக்ஷிணம் !!

ஹ்ருதய மந்திரத்தினால் 10 தடவை ஜபிக்கவும். பிராமணர்களுக்கு கிழக்கு (த்வாரம்) வழியாக தீக்ஷையும், சத்ரியர்களுக்கு தெற்கு த்வாரமாகவும்.

वैश्यानां पश्चिमद्वारं शूद्राणां द्वारमुत्तरम् ।
अन्येषामपि वर्णानां पश्चिमद्वारमुत्तमम् ॥ ५ ॥

வைச்யாநாம் பச்சிமத்வாரம் சூத்ராணாம் த்வாரம்
உத்தரம் !
அன்யேஷாமபி வர்ணாநாம் பச்சிம த்வார
முத்தமம் !!

வைச்யர்களுக்கு மேற்கு த்வாரம் வழியாகவும், நான்காம் வர்ணத்தவர்களுக்கு வடக்கு த்வாரம் வழியாகவும் மற்ற எல்லா வர்ணத்தவர்களுக்கும் மேற்கு த்வாரம் வழியாக தீக்ஷை செய்விக்கவும்.

शिष्यमन्तः प्रविश्याथ प्रणवेन तु मन्त्रतः ।
दर्भासनम्प्रकुर्याच्च देशिकस्य तु दक्षिणे ॥ ६ ॥

சிஷ்யமந்த: ப்ரவிச்யாத ப்ரணவேநது மந்த்ரத: !
தர்பாஸநம் ப்ரகுர்யாச்ச தேசிகஸ்யது தக்ஷிணே !!

சிஷ்யனை யாகசாலையில் உள்ளே நுழையச் செய்து ப்ரணவத்தினால் ஆசார்யரின் தென்பாகத்தில் தர்பாஸனம் அமைத்து

मुमुक्षोरुत्तरं ववत्रं वुभुक्षो: पूर्वतोमुखम् ।
शिष्यं स्थित्वा च मतिमान् कुर्याद्दीक्षां गुरूत्तम: ॥ ७ ॥

முமுக்ஷோ: உத்தரம் வக்த்ரம் புபுக்ஷோ: பூர்வதோமுகம்!
சிஷ்யம் ஸ்தித்வாச மதிமாநு குர்யாத்தீக்ஷாம் குருத்தம:!!

முமுக்ஷுவோவெனில் வடக்கு முகமாகவும், போகியோனில் கிழக்கு முகமாகவும் சிஷ்யனை அமர்த்து தீக்ஷை செய்யவும்.

स्कन्दस्य मूलमन्त्रञ्च षडक्षरमत: परम् ।
स्कन्दबीजेन संयुक्तं पञ्चब्रह्मषडङ्गकम् ॥ ८ ॥

ஸ்கந்தஸ்ய மூலமந்த்ரஞ்ச ஷடக்ஷரமத: பரம்!
ஸ்கந்த பூஜேந ஸம்யுக்தம் பஞ்சப்ரம்ம ஷடங்ககம்!!

ஸ்கந்த மூலமந்த்ரம், ஷடக்ஷரம் ஸ்கந்தபீஜத்துடன் (ஸகாரத்துடன்) பஞ்சப்ரும்ம ஷடங்க மந்த்ரமும்

ईशानम्मूर्ध्नि विन्यस्य मुखे तत्पुरुषं यजेत् ।
अघोरं हृदि विन्यस्य गुह्ये वामं न्यसेत् बुध: ॥ ९ ॥

ஈசாநம் மூர்த்நிவின்யஸ்ய முகேதத்புருஷம் யஜேத்!
அகோரம் ஹ்ருதி வின்யஸ்ய குஹ்யே வாமம் ந்யஸேத் புத:!!

தலையில் ஈசானத்தையும் முகத்தில் தத்புருஷத்தையும், ஹ்ருதயத்தில் அகோரத்தையும் சிரஸில் சிரோ மந்திரத்தையும்

सद्योजातं न्यसेत् पादे शिष्यदेहे विचक्षण: ।
हृदयं हृदि विन्यस्य शिर: शिरसि विन्यसेत् ॥ १० ॥

ஸத்யோஜாதம் ந்யஸேத் பாதே சிஷ்யதேஹே விசக்ஷண:!
ஹ்ருதயம் ஹ்ருதி வின்யஸ்ய சிரச்சிரஸி வின்யஸேத்!!

ஸத்யோஜாத மந்திரத்தை பாதத்திலுமாக சிஷ்ய சரீரத்தில் நியாஸம் செய்யும் ஹ்ருதயமந்திரத்தை ஹ்ருதயத்திலும், சிரோ மந்திரத்தை பெரிதும் நியாஸிக்கவும்.

शिखायां तु शिखां न्यस्य कवचं स्तनमध्यत: ।
अस्त्रं हस्तप्रदेशे तु नेत्रं नेत्रद्वये न्यसेत् ॥ ११ ॥

சிகாயாந்து சிகான்யஸ்ய கவசம் ஸ்தந மத்யத:!
அஸ்த்ரம் ஹஸ்த ப்ரதேசேது நேத்ரன் நேத்ர த்வயேந் யஸேத்!!

சிகையில் சிகா மந்திரத்தையும், இரு தோள்பட்டைகளில் கவச மந்திரத்தையும் இருகண்களில் நேத்ர மந்திரத்தையும், கையில் அஸ்திர மந்திரத்தையும் ந்யாஸம் செய்யவும்.

सर्वेषामेव वर्णानामेवं कुर्यात् गुरूत्तम: ।
द्विजादीनां विशेषोऽस्ति वचद्भूरादिमन्त्रत: ॥ १२ ॥

ஸர்வேஷா மேவ வர்ணாநாம் ஏவம் குர்யாது குருத்தம:!
த்விஜாதீநாம் விசேஷோஸ்தி வசத்பூராதி மந்த்ரத:!!

எல்லா வர்ணத்தாருக்கும் இவ்வாறே செய்ய வேண்டும். பிராமணர் முதலானோர்க்கு விசேஷமாக வசத்பூ முதலிய மந்திரங்களால்

शिरोवदनहृन्नाभिगुह्यपादेषु विन्यसेत् ।
अयं कुमारमन्त्रञ्च पुनर्मूर्ध्नि च विन्यसेत् ॥ १३ ॥

சிரோவதந ஹ்ருன்நாபி குஹ்ய பாதேஷு வின்யஸேத்!
அயம்குமார மந்த்ரஞ்ச புநர்மூர்திநி ச வின்யஸேத்!!

சிரஸ், முகம், ஹ்ருதயம், நாபி, குஹ்ய பாதங்களில் நியாஸம் செய்யவும். திரும்பவும் அயம் குமார மந்திரத்தை சிரஸில் நியாஸம் செய்யவும்.

मालामन्त्रञ्च सर्वाङ्गे विन्यसेन्मन्त्रवित्तमः ।
माते कुमारमन्त्रञ्च हृदये विन्यसेद्बुधः ॥ १४ ॥

மாலாமந்த்ரம் ச ஸர்வாங்கே விந்யஸேந் மந்த்ர வித்தம:!
மாதே குமார மந்த்ரம்ச ஹ்ருதயே வின்யஸேத் புத:!!

எல்லா அங்கத்திலும் மாலா மந்திரத்தை நியாஸம் செய்யவும். மாதே குமார மந்திரத்தை ஹ்ருதயத்தில் அபிமந்திரிக்கவும்.

पुनश्च तोयसंयुत्कं मण्डले तु विपास्य च ।
यस्मिन् मन्त्रे पठेत्पुष्पं नामगोत्रं तथात्मकम् ॥ १५ ॥

புநச்ச தோய ஸம்யுக்தம் மண்டலேது விபாஸ்யச!
யஸ்மின் மந்த்ரே படேத் புஷ்பம் நாமகோத்ரம் ததாத்மகம்!!

பிறகு அர்க்ய ஜலத்தோடு மண்டலத்தின் அருகில் அமைத்து எந்த மந்திரத்தில் புஷ்பத்தை போடுகிறானோ அந்த நாம கோத்ரத்தை சூட்டவும்.

दक्षिणां तु गुरोर्दद्यात् शिष्यो वित्तानुसारतः ।
गुहदीक्षां च यः कुर्यात् गुहप्रीतिकरां गुहम् ।
भुवत्वा भोगांश्च देहान्ते कौमारं लोकमाप्नुयात् ॥ १६ ॥

தக்ஷிணாம்து குரோர் தத்யாது சிஷ்யோ வித்தாநு ஸாரத:!
குஹதீக்ஷாம்ச ய: குர்யாது குஹப்ரீதி தராங்குஹம்!!
புக்த்வா போகாம்ச்ச தேஹாந்தே கௌமாரம் லோக மாப்னுயாது!!

வசதிக்கேற்றவாறு ஆசார்யனுக்கு தக்ஷிணை கொடுக்கவும். குஹதீக்ஷை யார் செய்து கொள்கிறானோ அவன் முருகனுக்கு விருப்பப்பட்டவராகிறான். நன்கு அனுபவித்து, முடிவில் கௌமாரலோகத்தையடைகிறான்.

इति श्री कुमारतन्त्रे दीक्षाविधिर्नाम एकादशः पटलः

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே குஹதீக்ஷா விதிர் நாம ஏகாதச : படல :

இவ்வாறு குமாரதந்திரத்தில் குஹதீக்ஷை முறையாகிற 11 - வது படலமாகும்.

॥ द्वादशः पटलः ॥

த்வாதச : படல :

பன்னிரண்டாவது படலம்

स्नपनविधिः

ஸ்நபனவிதி :

(ஸ்நபனம் செய்யும் முறை)

अथ स्नपनविधिः

अतः परं प्रवक्ष्यामि स्नपनं षण्मुखस्य तु ।
अङ्गारवारे षष्ट्यां वा विषुवायनसङ्क्रमे ॥ १ ॥

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி ஸ்நபனம் ஷண்முகஸ்யது !
அங்காரவாரே ஷஷ்டியாம்வா விஷுவாயன ஸங்ரக்மே !!

ஷண்முகருடைய ஸ்நபன முறையைக் கூறுகிறேன். செவ்வாய்க்கிழமையிலோ, ஷஷ்டியிலோ விஷுவ, அயன மாத பிறப்பு காலங்களிலும்

मासर्क्षे ग्रहणे वापि कृत्तिकायां द्विपर्वणि ।
उत्सवान्ते प्रतिष्टान्ते प्रोक्षणान्ते सुयोगके ॥ २ ॥

மாஸர்க்ஷேக்ரஹணே வாபி க்ருத்திகாயாம் த்விபர்வணி !
உத்ஸவாந்தே ப்ரதிஷ்டாந்தே ப்ரோக்ஷணாந்தே ஸுயோககே !!

மாத நக்ஷத்திரத்திலும், க்ரஹண காலங்களிலும் க்ருத்திகா நக்ஷத்ரத்திலும், அமாவாசை பௌர்ணமியிலும், உத்ஸவ முடிவிலும், பிரதிஷ்டை முடிவிலும் ப்ரோக்ஷண முடிவிலும், நல்ல யோகமுள்ள காலத்தில்

कर्तुश्च जन्मदिवसे तद्वियोगदिनेऽपि वा ।
नित्ये नैमितिके काम्ये शान्तिकर्मणि वा पुनः ॥ ३ ॥

கர்துஸ்ச ஜன்ம திவஸே தத்வியோகதிநேபிவா !
நித்யே நைமித்திகே காம்யே சாந்திகர்மணி வாபுன: !!

கர்தாவின் ஜன்ம தினத்திலும் அவரிறந்த நாளிலும் நித்யபூஜை, நைமித்திக பூஜை, காம்ய பூஜை, சாந்தி கர்மாக்களிலும்

एतेषु स्नपनं कुर्यात् तच्चानेकविधि श्रृणु ।
अङ.कुरार्पणामादौ स्यान्महास्नपनकर्मणि ॥ ४ ॥

ஏதேஷு ஸ்நபனங்குர்யாத் தச்சாநேக விதிம் ஸ்ருணு !
அங்குரார்பண மாதள ஸ்யாத் மஹாஸ்நபன கர்மணி !!

ஸ்நபனம் செய்ய வேண்டும். அதன் பலவித முறையைக் கேளும். மஹாஸ்நபன காலத்தில் முதலில் அங்குரார்ப்பணம் செய்யவும்.

प्रासादस्याग्रतः कुर्यात् मण्डपं वेदिहीनकम् ।
अथवा पूर्वक्लुप्ते तु दारुणा शिलया तथा ॥ ५ ॥

ப்ரஸாதஸ்யாக்ரத: குர்யாத் மண்டபம் வேதிஹீனகம் !
அதவாபூர்வ கலுசப்தேது தாருணாசிலயா ததா !!

ஆலயத்தின் முன்பாக வேதிகையின்றி மண்டபம் அமைக்கவும். அல்லது முன்னதாகவே அமைக்கப்பட்ட மரத்தாலோ சிலா திரவியத்தாலோ அமைக்கப்பட்ட மண்டபத்திலோ,

पञ्चगव्यादिके पञ्चत्रिंशद्वस्ताङ्गुलेऽपि वा ।
चतुर्ग्रामादिकेषां च गात्रपर्यङ्कमण्डपे ॥ ६ ॥

பஞ்சகவ்யாதிகே பஞ்ச த்ரிம்சத்தஸ்தாங்குலே பிவா !
சதுர்க்ராமாதி கேஷாஞ்ச காத்ரபர்யங்க மண்டபே !!

பஞ்சகவ்யம் முதலான மண்டபத்திலோ, 35 முழ அளவுள்ள மண்டபத்திலோ, நான்கு பிரகார மண்டபங்களில் நீண்ட விஸ்தார மண்டபத்திலோ,

तोरणादिसमायुक्ते सर्वालङ्कारसंयुते ।
अस्त्रेण शोधिते भूमौ वामदेवेन लेपयेत् ॥ ७ ॥

தோரணாதி ஸமாயுக்தே ஸர்வாலங்கார ஸம்யுதே !
அஸ்த்ரேண சோதிதே பூமள வாமதேவேந லேபயேத் !!

தோரணங்களுடன் கூடி, எல்லா அலங்காரத்துடன் கூடியதும் அஸ்த்திர மந்திரத்தினால் சுத்தம் செய்து வாமதேவ மந்திரத்தினால் மெழுகி

सूत्रन्यासं गुणास्त्रेण तालमात्राङ्गुलं यथा ।
द्वितालं स्कन्दकुम्भस्य वर्धन्योस्तालमात्रकम् ॥ ८ ॥

ஸூத்ரந்யாஸங்குணாஸ்த்ரேண தாலமாத்ராங்குலம் யதா !
த்விதாலம் ஸ்கந்த கும்பஸ்ய வார்த்தந்யோஸ்தால மாத்ரகம் !!

அஸ்திர மந்திரத்தினால் தாளமாத்ரம் அளவால் 2 தாள அளவு தள்ளி, ஸ்கந்தகும்பத்திற்கும் வர்தனியில் ஓர் தாள அளவும்

त्रितालं मूर्तिकामानं सर्वं सामान्यमीरितम् ।
अथवा द्वयताळेन कर्णिकामानमीरितम् ॥ ९ ॥

த்ரிதாலம் மூர்த்தி காமாநம் ஸர்வஸாமான்ய மீரிதம் !
அதவா த்வயதாலேந கர்ணிகாமாநமீரிதம் !!

3 தாளம் அஷ்டமூர்த்தி கும்பங்களுக்கும் ஸமான்யமாக கூறப்பட்டுள்ளது அல்லது 2 தாள மாத்ர அளவினால் கர்ணிகையின் அளவு கூறப்பட்டுள்ளது.

पश्चात् द्रव्यप्रमाणानि वक्ष्येऽहं श्रृणु कौशिक ।
गुञ्जादिनिष्कपर्यन्तं पादाद्यङ्गप्रमाणकम् ॥ १० ॥

பஸ்சாத் த்ரவ்ய ப்ரமாணானி வக்ச்யேஹம் ச்ருணுகௌசிக !
குஞ்சாதி நிஷ்க பர்யந்தம் பாதாத்யங்க ப்ரமாணகம் !!

பிறகு திரவ்யங்களின் அளவு கூறப்படுகிறது. குந்துமணி அளவு முதல் நிஷ்க அளவு வரை பாதாத்யங்கமான பாத்யாதி திரவ்ய பிரமாணமாகும்.

एकद्वित्रिचतुः प्रस्थं पञ्चगव्यादिनामकम् ।
मध्यादीनां च संप्रोक्तं पादमर्धमथापि वा ॥ ११ ॥

ஏகத்வித்ரி சது: ப்ரஸ்தம் பஞ்சகவ்யாதி நாமகம் !
மத்யாதீனாஞ்ச ஸம்ப்ரோக்த்தம் பாதமர்த்த மதாபிவா !!

பஞ்சகவ்யம் முதலானவற்றின் அளவு, ஒன்றிரண்டு, மூன்று நான்கு படி அளவாகும். முன்கூறிய அளவின் பாதி, கால் பாக அளவு தேன் முதலானவற்றின் அளவாகும்.

आज्यतैलप्रमाणेन तथैव परिकल्पयेत् ।
कर्पूरंकुङ्कुमादीनां मानमित्थं प्रगृह्यताम् ॥ १२ ॥

ஆஜ்ய தைல ப்ரமாணேந ததைவ பரிகல்பயேத் !
கர்பூரம் குங்குமாதீநாம் மாநமித்தம் ப்ரக்ருஹ்யதாம் !!

நெய், எண்ணைகளின் அளவு முன் கூறிய அளவேயாம். கற்பூரம், குங்குமப்பூ, இவைகள் குறிப்பிட்ட அளவேயாகும்.

उत्तमं नवकाशैस्तु मध्यमं सप्तदर्भकैः ।
अधमं पञ्चकाशैस्तु रुद्रधर्मग्रहायुतम् ॥ १३ ॥

உத்தமம் நவகாசைஸ்து மத்யமம் ஸப்த தர்பகை: !
அதமம் பஞ்சகாசைஸ்து ருத்ர தர்மக்ரஹாயுதம் !!

9 தர்பைகளால் செய்யும் கூர்ச்ச கார்யம் உத்தமமாகும். 7 தர்பைகளால் செய்வது மத்யமமாகும். ஐந்து தர்பைகளால் செய்வது அதமமாகும். 11, 4, 9 தர்பைகளால் செய்யலாம்.

ग्रन्थिरेकाङ्गुलं प्रोक्तमग्रं तु चतुरङ्गुलम् ।
तत् ग्रन्थिचतुरावर्ति कूर्चलक्षणमीरितम् ॥ १४ ॥

க்ரந்திரேகாங்குலம் ப்ரோக்த்தம் அக்ரந்து சதுரங்குலம் /
தத்க்ரந்தி தக்ஷிணா வர்தம் கூர்ச்ச லக்ஷண மீரிதம் //

முடிச்சு ஓர் அங்குலமும், நுனி நான்கு அங்குலமும், அந்த கிரந்தி அளவின் 4 மடங்கு அளவு கூர்ச்ச லக்ஷணமாகும்.

ऊर्ध्वाग्रं पुष्टिदं प्रोक्तं अधोऽग्रं शान्तिदं भवेत् ।
कूर्चानां लक्षणं प्रोक्तं कुम्भानां लक्षणं श्रृणु ॥ १५ ॥

ஊர்த்வாக்ரம் புஷ்டிதம் ப்ரோக்தம் அதோக்ரம் சாந்திதம் பவேத் /
கூர்ச்சாநாம் லக்ஷணம் ப்ரோக்தம் கும்பாநாம் லக்ஷணம் ச்ருணு //

மேல்நோக்கிய கூர்ச்சம் புஷ்டியைத் தருவதாகவும், கீழ்நோக்கிய கூர்ச்சம் அமைதியையும் கொடுக்கும். கூர்ச்சங்களின் லக்ஷணம் கூறி கும்பலக்ஷணம் கூறுகிறார்.

कालं भिन्नं च सुषिरं भेदं छेदं च लीनकम् ।
दुर्गन्धं च पुराणञ्च कलशं च विवर्जयेत् ॥ १६ ॥

காளம் பிந்நஞ்ச ஸுஷிரம் பேதம் சேதஞ்சி லீநகம் /
துர்க்கந்தஞ்ச புராணஞ்ச கலசஞ்ச விவர்ஜயேத் //

கருப்பு, உடைந்தது, ஓட்டையானது, விரிசலானது, குறைவான அளவுள்ளது, துர்நாற்றமுடையது, பழமையானதுமான கலசங்களை தவிர்க்கவும்.

कालं च कलहं विद्याद्भिन्नं चैव कुलक्षणम् ।
महामारी प्रकोपस्स्यात्सुषिरं च महामुने ॥ १७ ॥

காலஞ்ச கலஹம் வித்யாது பிந்நஞ்சைவ குலக்ஷணம் /
மஹாமாரீ ப்ரகோபஸ்யாது சுஷிரஞ்ச மஹாமுனே //

கருப்பு வர்ணபாண்டம் சண்டையையும், உடைந்தது குலக்குறைவையும், ஓட்டையானது மஹாமாரீ கோபமும் உண்டாகும்.

भेदं विभेदनं कुर्यात् छेदं छेदकरं भवेत् ।
लीनं व्याधिकरं चैव दुर्गन्धं बालनाशनम् ॥ १८ ॥

பேதம் விபேதநங்குர்யாத் சேதஞ்சேத கரம் பவேத் /
லீநம் வ்யாதி கரஞ்சைவ் துர்க்கந்தம் பாலநாசநம் //

உடைந்தது பிளவையும், குறைவானது குறைவையும், வ்யாதியையும் விரிசலையும், துர்நாற்றம் குழந்தையையழிப்பதாயும்,

स्त्रीनाशं स्यात्पुराणश्चेत्संग्रहे बिम्बसन्निभम् ।
तस्मात्सर्वप्रयत्नेन दोषाण्येतानि वर्जयेत् ॥ १९ ॥

ஸ்திரீ நாசம் ஸ்யாத் புராணஸ்சேத் ஸங்க்ரஹேபிம்ப ஸந்நிபம் /
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந தோஷாண்யேதாநி வர்ஜயேத் //

பழைய மண்பாண்டம் ஸ்த்ரீ அழிவையும் தரும், கோவைபழம் போல் அழகான மண்பாண்டத்தை ஏற்கவும் ஆகையால் குறைபாடுள்ள மண் பாண்டங்களை ஏற்கக்கூடாது.

कलशान् वेष्टयेद्विद्वानेकद्वित्रिकतन्तुभिः ।
एकद्वित्रियवान्ताढ्यं स्कन्दकुम्भं च वर्धनीम् ॥ २० ॥

கலசாந்வேஷ்டயே த்வித்வாந் ஏகத்வித்ரிக தந்துபி: /
ஏக த்வித்ரிய வாந்தாட்யம் ஸ்கந்த கும்பஞ்ச வார்த்தநீம் //

ஓர் பிரி இரண்டு, மூன்று நூல்களால் கலசங்களை சுத்த வேண்டும். ஓர்யவை, இரண்டுயவை, 3யவை இடைவெளியுள்ளதாக ஸ்கந்த கும்பத்தையும் வர்த்தனியையும் சுற்றவும்.

अन्यांश्च कलशान् सर्वान् गवाक्षसदृशान्तरान् ।
मण्डपस्योत्तरे भागे दर्भैः शुद्धैः परिस्तरेत् ॥ २१ ॥

அன்யாம்ஸ்ச கலசாந் ஸர்வாந் கவாக்ஷ ஸதுரு ஶாந்தராந் !
மண்டபஸ்யோத்தரே பாகே தர்பைச்சுத்தை: பரிஸ்தரேத் !!

மற்ற கலசங்களை எல்லாம் பசுக்கண் இடைவெளி யுள்ளதாக சுற்றவும். மண்டபத்தின் வடக்கு பாகத்தில் சுத்த தர்பைகளால் பரிஸ்தரணம் போட்டு

क्षालयेत् कलशानस्त्रान् प्रोक्षयेत् पुरुषेण तु ।
अधोमुखांश्च कलशान् स्थापयेत्तु कुशोपरि ॥ २२ ॥

க்ஷாளயேத் கலசாநஸ்த்ராந் ப்ரோக்ஷயேத் புருஷேணது !
அதோமுகாம்ஸ்ச கலசாந் ஸ்தாபயேத்து குசோபரி !!

கலசங்களை அஸ்திர மந்திரத்தினால் அலம்பி(கழுவி) தத்புருஷ மந்திரத்தினால் ப்ரோக்ஷிக்கவும், தர்பையின் மேல் கலசங்களை கவிழ்த்து வைக்கவும்.

प्रोक्षयेत् हृदयेनैव कलशोन्मीलनं तथा ।
वस्त्रपूतैर्गन्धयुक्तैर्जलैः संपूरयेत् धृदा ॥ २३ ॥

ப்ரோக்ஷயேத்ருதயேநைவ கலசோந்மீலநந்ததா !
வஸ்த்ர பூதைர் கந்தயுக்தைர் ஜலைஸ்ஸம்பூரயேத்ருதா !!

ஹ்ருதய மந்திரத்தினால் கலசங்களை ப்ரோக்ஷணம் செய்துநிமிர்ந்ததாக வைக்கவும், துணியால் வடிகட்டியதும், வாசனை திரவ்யத்துடன் கூடிய ஜலத்தினால் ஹ்ருதய மந்திரத்தினால் கலசங்களை நிரப்பவும்.

स्थण्डिलस्य विधिं वक्ष्ये श्रृणु कौशिक सुव्रत ।
शालीनामाढकं श्रेष्ठं त्रिःप्रस्थं मध्यमं स्मृतम् ॥ २४ ॥

ஸ்தண்டிலஸ்ய விதிம்வக்ஷ்யே ச்ருணுகௌசிக சுவ்ருத !
சாலீநாமாடகம் ச்ரேஷ்டம் த்ரிப்ரஸ்தம் மத்யமம் ஸ்ம்ருதம் !!

ஹே ! கௌசிகரே ஸ்தண்டில அமைப்பை கூறுகிறேன் கேளும், ஓர் மரக்கால் நெல் உத்தமம், 3 படி மத்யமம்.

द्विःप्रस्थं तण्डुलं प्रोक्तं तदर्धं तिलमीरितम् ।
भूशोधनं तु प्रथमं अनुलेपं द्वितीयकम् ॥ २५ ॥

த்விப்ரஸ்தந்தண்டுலம் ப்ரோக்தம் தத்ர்த்ந்தில மீரிதம் !
பூசோதந்து ப்ரதமம் அநுலேபம் த்விதீயகம் !!

2 படி அரிசியும், ஓர் படி எள்ளும் ஸ்தண்டில அளவு ஆகும். பூமி சோதனம் முதலாவதாகவும், மெழுகுதல் 2 வதும் ஆகும்.

सूत्रन्यासं तृतीयं स्यात्स्थण्डिलं वै चतुर्थकम् ।
कलशस्थापनं पञ्च षष्ठं कूर्चाधिसाधनम् ॥ २६ ॥

ஸூத்ரநியாஸம் த்ருதீயம் ஸ்யாத் ஸ்தண்டிலம் வை சதுர்த்தகம் !
கலசஸ்தாபனம் பஞ்ச ஷஷ்டம் கூர்ச்சாதி ஸாதநம் !!

கோடிடுவது 3 வது ஆகும். ஸ்தண்டிலமமைப்பது நான்காவதாகும். 5 வது கலச ஸ்தாபனம், 6 வது கூர்ச ஸ்தாபனமுமாகும்.

सप्तमं द्रव्यविन्यासं अष्टमं देवतार्चनम् ।
विधानं नवमं प्रोक्तं दशमं वस्त्रवेष्टनम् ॥ २७ ॥

ஸப்தமம் திரவ்ய வின்யாஸம் அஷ்டமம் தேவதார்ச்சநம் !
விதாநந் நவமம் ப்ரோக்தம் தசமம் வஸ்த்ர வேஷ்டநம் !!

7 வது திரவ்ய ஸமர்பணமும் தேவதார்ச்சனை 8 வதும் ஆகும். மாவிலை தேங்காய் வைப்பது 9 வதும் 10 வது வஸ்திர மணிவித்தல் ஆகும்.

एकादशं गन्धपुष्पं द्वादशं धूपदीपकम् ।
मुद्रा त्रयोदशं प्रोक्तं प्रोक्षणं च चतुर्दशम् ॥ २८ ॥

ஏகாதசம் கந்தபுஷ்பம் த்வாதசம் தூபதீபகம்!
முத்ராம் த்ரயோ தச ப்ரோக்தம் ப்ரோக்ஷணஞ்ச சதுர்தசம்!!

சந்தனம், புஷ்பம் சாத்துவது 11 வதும், தூப தீப ஸமர்பணம் 12 வதும் ஆகும். முத்ரை காண்பிப்பது 13 வதும், ப்ரோக்ஷணம் செய்வது 14 வதுமாகும்.

दशपञ्च घटोद्धारं स्नानकर्म च षोडश ।
अस्त्रेण शोधयेद्भूमि वामदेवेन लेपनम् ॥ २९ ॥

தசபஞ்ச கடோத்தாரம் ஸ்நாந கர்மச ஷோடச!
அஸ்த்ரேணசோதயேத் பூமிம் வாமதேவேந லேபனம்!!

கடத்தை எடுத்து வலம் வருவது 15 வதும், அபிஷேகம் செய்வது 16 வது கிரியையுமாகும். அஸ்த்ரமந்திரத்தினால் பூமியை சுத்தி செய்து, வாமதேவ மந்திரத்தினால் மெழுகி,

सूत्रन्यासमघोरेणस्थण्डिलं पुरुषेण तु ।
प्रणवेन घटोद्धारं स्कन्दसूक्तेन मन्त्रतः ॥ ३० ॥

சூத்ரந்யாஸம் அகோரேண ஸ்தண்டிலம் புருஷேணது!
ப்ரணவேந கடோத்தாரம் ஸ்கந்த சூக்தேந மந்த்ரத:!!

அகோர மந்திரத்தினால் கோடிட்டு தத்புருஷ மந்திரத்தினால் ஸ்தண்டிலம் அமைத்து ஸ்கந்த சூக்த மந்திரத்தினால்

पञ्चब्रह्मषडङ्गैश्च स्नापयेत् षण्मुखं सुधीः ।
लाजपुष्पतिलैर्दर्भैर्विकरान् प्रक्षिपेत्ततः ॥ ३१ ॥

பஞ்சப்ரம்ம ஷடங்கைஸ்ச ஸ்நாபயேத் ஷண்முகம் சுதீ:!
லாஜபுஷ்பதிலைர் தர்பை: விகிராந் ப்ரக்ஷிபேத்தத:!!

பஞ்சப்ரும்ம ஷடங்க மந்திரங்களால் முருகனை அபிஷேகம் செய்ய வேண்டும். பொறி, புஷ்பம், எள், தர்பைகளில் விகிரம் என்பதான இறைத்தலை செய்ய வேண்டும்.

पुण्याहं वाचयित्वाथ पश्चात् स्नपनमारभेत् ।
प्रवक्ष्यामि समासेन स्नपनं नवसंख्यकम् ॥ ३२ ॥

புண்யாஹம் வாசயித்வாத பச்சாத் ஸ்நபன மாரபேத்!
ப்ரவக்ஷ்யாமி ஸமாஸேந ஸ்நபனம் நவ ஸங்கயகம்!!

புண்யாஹ வாசனம் செய்து விட்டு ஸ்நபனம் செய்ய வேண்டும். சுருக்கமாக நவகலச ஸ்நபனம் என்பதான 9 கலச ஸ்நபனத்தை கூறுகிறேன்.

प्राक्सूत्रं देवसूत्रं स्यात् उदक्सूत्रं तथैव च ।
तन्मध्ये स्कन्दकुम्भं तु वर्धनीं तस्य पार्श्वके ॥ ३३ ॥

ப்ராக் சூத்ரம் தேவ சூத்ரம் ஸ்யாது தக்சூத்ரந்ததைவச!
தந்மத்யே ஸ்கந்த கும்பந்து வார்த்தநீந்தஸ்யளெ பார்ஸ்வகே!!

கிழக்கு நுனியாக தேவசூத்ரம் (4) கோடும் வடக்கு நுனி 4 கோடுமிடவும். நடுவில் ஸ்கந்த கும்பமும், வர்த்தனியை அதனிரு பக்கத்திலும் ஸ்தாபிக்கவும்.

पाद्यमाचमनं चार्घ्यं पञ्चगव्यं महादिशि ।
क्षीरं दधि घृतं चैव मध्वन्यासु विदिक्षु च ॥ ३४ ॥

பாத்யமாசமநம் ச அர்க்யம் பஞ்சகவ்யம் மஹாதிசி!
க்ஷீரந்ததி க்ருதஞ்சைவ மத்வன்யாசு விதிக்ஷு ச!!

கிழக்கு முதலான திசைகளில் பாத்யம், ஆசமனம், அர்க்யம், பஞ்சகவ்யமிவைகளை ஸ்தாபித்து, பால், தயிர், நெய், தேனிவைகளை தென்கிழக்கு முதலான திசைகளில் ஸ்தாபிக்கவும்.

ससूत्रान् सापिधानांश्च सवस्त्रान् वारिपूरितान् ।
स्थापयेत् कलशान् वा स्यात् पूजयेत्तु यथाविधि ॥ ३५

ஸதூத்ராந் ஸாபிதாநாம்ஸ்ச ஸவஸ்த்ராந்வாரி
பூரிதாந்!
ஸ்தாபயேத் கலசாந் வாஸ்யாது பூஜயேத்து
யதாவிதி!!

நூல் சுற்றப்பட்டு தேங்காய் மாவிலை வைத்து, நீர் நிரப்பப்பட்டு வஸ்திரமணிவித்து கலசங்களை ஸ்தாபித்து முறைப்படி பூஜிக்கவும்.

दक्षिणस्थितवर्धन्यां महावल्ली यजेत्ततः ।
तन्मध्ये उत्तरस्थां च देवसेनां प्रपूजयेत् ॥ ३६ ॥

தக்ஷிணஸ்தித வர்த்தன்யாம் மஹாவள்ளீம்
யஜேத்தத:!
தன்மத்யே உத்தரஸ்தாஞ்ச தேவஸேநாம்
ப்ரபூஜயேத்!!

தெற்கு பாகமுள்ள கலசத்தில் மஹாவள்ளியையும், வடக்கு பாகமுள்ள கலசத்தில் தேவசேனாவையும் பூஜிக்கவும்.

शकुन्याद्यष्टशक्तीश्च पूर्वादिकलशेषु च ।
अर्चयेत्तु यथान्यायं स्नापयेत् असुरान्तकम् ॥ ३७ ॥

சகுன்யாத்யஷ்ட சக்தீஸ்ச பூர்வாதி கலசேஷு ச!
அர்ச்சயேத்து யதான்யாயம் ஸ்நாபயேதசுராந்தகம்!!

மீதி 8 கலசங்களில் சகுனீ முதலான 8 சக்திகளை பூஜித்து, முறைப்படி முருகனை அபிஷிக்கவும்.

नवारव्यं कलशं प्रोक्तं पञ्चविंशतिकं श्रृणु ।
प्राकसूत्रं वसुसूत्रं स्यादुदगग्रं तथैव च ॥ ३८ ॥

நவாக்யம் கலசம் ப்ரோக்தம் பஞ்சவிம்சதிகம்
ஸ்ருணு!
ப்ராக்ஸூத்ரம் வசுசூத்ரம் ஸ்யாது தகக்ரந்ததை வ
ச!!

9 கலச பூஜை கூறப்பட்டு 25 கலச பூஜை கூறப்படுகிறது. கிழக்குநுனியாக 8 கோடும் வடக்கு நுனியாக 8 கோடிட்டு பதமிடவும்.

मध्ये नवपदं ग्राह्यं तत्पार्श्वेकं पदं त्यजेत् ।
वसुद्वारसमायुक्तं शालिभिः स्थण्डिलं नयेत् ॥ ३९ ॥

மத்யே நவபதம் க்ராஹ்யம் தத் பார்ஸ்வைகம்
பதந்த்யேஜேத்!
வசுத்வாரஸமாயுக்த்தம் சாலிபிஸ்தண்டிலம் நயேத்!!

நடுவில் 9 பதம் எடுத்து அதன் பக்கத்தில் ஓர் பதம் (சுற்றி) விட்டு விட்டு 8 வாயில் உள்ளதாக அமைத்து நெல்லால் ஸ்தண்டிலம் அமைக்கவும்.

तदर्धैस्तण्डुलैश्चैव तदर्धैश्च तिलैरपि ।
तन्मध्ये नळिनं लिरव्य साष्टपत्रं सकर्णिकम् ॥ ४० ॥

ததர்தைஸ்தண்டுலைச்சைவ ததர்தைச்சதிலைரபி!
தந்மத்யே நளிநம்லிக்ய ஸாஷ்டபத்ரம் ஸகர்ணிகம்!!

நெல் அளவின் பாதி அரிசியும், அரிசியின் பாதி எள்ளாலும் ஸ்தண்டிலம் அமைத்து ஸ்தண்டில மத்தியில் கர்ணிகை 8 இதழுடன் கூடியதாக பத்மம் வரையவும்.

मध्यकुम्भं कुमाराख्यं तत्पार्श्वे वर्धनीद्वयम् ।
पाद्यमाचमनञ्चार्घ्यं पञ्चगव्यं चतुर्दिशि ॥ ४१ ॥

மத்யகும்பம் குமாராக்யம் தத் பார்ஸ்வே வர்த்தனீ
த்வயம்!
பாத்யமாச மநஞ்சார்க்யம் பஞ்சகவ்யஞ்சதுர்திசி!!

நடுவில் முருகனையும் 2 பக்கமும் 2 வர்த்தனியை ஸ்தாபிக்கவும். பாத்யம், ஆசமனம், அர்க்யம், பஞ்சகவ்ய மிவைகளை 4 கிழக்கு முதலான திசைகளிலும்

क्षीरं दधिघृतञ्चैव मध्वन्यासु विदिक्षु च ।
मधु कुष्टङ्गुलञ्चैव क्षीरंश्च सर्षपं तथा ॥ ४२ ॥

க்ஷீரந்ததி க்ருதஞ்சைவ மத்வன்யாசு விதிக்ஷு ச !
மதுகுஷ்ட குளஞ்சைவ க்ஷீரஞ்சஸர்ஷபந்ததா !!

பால், தயிர், நெய், தேன் இவைகளை தென்கிழக்கு முதலான திசைகளிலும் ஸ்தாபிக்கவும். தேன் கோரைகிழக்கு, வெல்லம், பால், கடுகு

लवङ्गं चैव तक्कोलं दधिमेकं तिलं तथा ।
उशीरञ्च घृतं चैव शङ्खचूर्णं च सक्तुकम् ॥ ४३ ॥

லவங்கஞ்சைவ தக்கோலம் ததிமேகந்திலந்ததா !
உசீரஞ்ச க்ருதஞ்சைவ சங்கசூர்ணஞ்ச ஸக்துகம் !!

கிராம்பு, லவங்கபட்டை, தக்கோலம், ததிமேகம், எள், இவைகளையும் விளாமிச்சவேர், நெய் சங்குப்பொடி, ஸத்துமாவு

नालिकेरञ्च हारिद्रं द्रव्याण्येतानि षोडश ।
पूर्वादिकलशेष्वत्र द्वितीयावरणं न्यसेत् ॥ ४४ ॥

நாளிகேரஞ்ச ஹாரித்ரம் திரவ்யாண்யேதாநி ஷோடச
பூர்வாதி கலசேஷ்வத்ர த்விதீயாவரணன் ந்யஸேத் !!

தேங்காய், மஞ்சள்பொடி, ஆகிய 16 திரவியங்களை கிழக்கு முதலான 2 வது ஆவரணமாக ஸ்தாபிக்கவும்.

मध्यकुम्भे यजेत्स्कन्दं पार्श्वे शाक्तिद्वयं यजेत् ।
शकुन्याद्यष्टशक्तीश्च प्रथमावरणे यजेत् ॥ ४५ ॥

மத்யகும்பே யஜேத் ஸ்கந்தம் பார்ஸ்வே சக்தி
த்வயம் யஜேத் !
சகுன்யாத்யஷ்ட சக்தீஸ்ச ப்ரதமாவரணே யஜேது !!

நடுவில் உள்ள கும்பத்தில் முருகனையும் 2 பக்கங்களில் 2 சக்தியான வள்ளி, தேவசேனாவையும் பூஜித்து, முதல் ஆவரணத்தில் சுகுநீ முதலான 8 சக்திகளை பூஜிக்கவும்.

लोकपालामराम् दिक्षु जयन्ताद्यान् विदिक्षु च ।
पूजयित्वा यथान्यायं सेनान्यमभिषेचयेत् ॥ ४६ ॥

லோக பாலா மராந்திக்ஷு ஜயந்தாத்யாந் விதிக்ஷு ச !
பூஜயித்வாயதாந்யாயம் ஸேநான்யம்
அபிஷேசயேத் !!

கிழக்கு முதலான 8 திசைகளில் இந்திரன் முதலான 8 திக்பாலர்களையும் ஜயந்தன் முதலியோர்களை 8 தேவர்களை கோணங்களிலும் பூஜித்து முறைப்படி முருகனை அபிஷேகம் செய்யவும்.

स्नपनं प्रोक्तमेवं हि पञ्चविंशतिसङ्ख्यकम् ।
पश्चादेकोनपञ्चाशत्स्नपनं प्रोच्यतेऽधुना ॥ ४७ ॥

ஸ்நபநம் ப்ரோக்தமேவம்ஹி பஞ்சவிம்சதி ஸங்யகம் !
பச்சாதேகோந பஞ்சாசத் ஸ்நபனம் ப்ரோச்யதே
துநா !!

இவ்வாறு 25 கலச ஸ்நபன பூஜை கூறப்பட்டு 49 கலச பூஜை கூறப்படுகிறது.

प्रागग्रन्दं दशसूत्रं स्यादुदकसूत्रं तथैव च ।
मध्ये नवपदं ग्रह्यं लेपयेत्परित: पदम् ॥ ४८ ॥

ப்ராகக்ரந்தச ஸூத்ரம் ஸ்யாது தக்ஸூத்ரந்தைவ ச !
மத்யேநவ பதம் க்ராஹ்யம் லேபயேத் பரித: பதம் !!

கிழக்கு நுனியாக 10 கோடும் வடக்கு நுனியாக 10 கோடுமிட்டு நடுவில் 9 பதம் கிரஹித்து சுற்றியும் பதத்தை நிரப்பி

द्वाराष्टक समायुक्तं तालमात्रान्तरं पदम् ।
स्थण्डिलं पूर्ववत्कृत्वा तन्मध्ये नळिनं लिखेत् ॥ ४९ ॥

த்வாராஷ்டக ஸமாயுக்தம் தாலமாத்ராந்தரம் பதம் !
ஸ்தண்டிலம் பூர்வவத் க்ருத்வா தந்மத்யே நளிநம்
லிகேத் !!

தாளமாத்ர இடைவெளியாகி 8 வாசல்கள் காண்பித்து முன்புபோல் ஸ்தண்டிலம் அமைத்து நடுவில் பத்மம் வரையும் (1, 8, 16, 24)

कलशान् लक्षणोपेतान् चतुःप्रस्थेन पूरितान् ।
ससूत्रान् सापिधानाञ्च सवस्त्रान् हेमसंयुतान् ॥ ५० ॥

கலசாந் லக்ஷணோ பேதாந் சது: ப்ரஸ்தேந பூரிதாந் !
ஸஸூத்ராந் ஸாபிதாநாஞ்ச ஸவஸ்த்ராந் ஹேம ஸம் யுதாந் !!

அழகிய லக்ஷணமுள்ள 4 படி கொள்ளளவு அளவுள்ளதும் நூல் சுற்றப்பட்டதும் தேங்காய் மாவிலை வைத்து வஸ்திரமணிவித்து ஸ்வர்ணபத்மம் போடப்பட்டதுமான

वामे कुशोपरि न्यस्त्वा विन्यसेत्तु यथाक्रमम् ।
गन्धाम्बुरत्नसहितं कुम्भमधये गुहारव्यकम् ॥ ५१ ॥

வாமே குமசோபரி ந்யஸ்த்வா விந்யஸேத்து யதாக்ரமம் !
க்ந்தாம் புரத்ந ஸஹிதம் கும்பமத்யே குஹாக்யகம் !!

கலசங்களை இடது பக்கம் தர்பையின் மேல் (வைத்து) வாசனை திரவ்யத்தின் கும்பரத்னத்துடன் ஸ்தாபித்து, மத்தியில் உள்ள கலசத்தில் முருகனையும்.

दक्षिणोत्तरभागे तु वर्धन्यौ हेमसंयुतौ ।
पाद्यमाचमनं चार्घ्यं गव्यं पूर्वादिदिक्षु च ॥ ५२ ॥

தக்ஷிணோத்தர பாகே து வர்த்தந்யௌ ஹேமஸம்யுதௌ !
பாத்யமாச மநஞ்சார்க்யம் கவ்யம் பூர்வாதி திக்ஷு ச !!

ஈசானமந்திரத்தினால் எள்ளையும், பதினாறு ஆகுதியும் செய்யவும். ஷடக்ஷரமந்திரத்தினால் (சரவணபவ) நெய்யினால் நூறாகுதியும்.

पञ्चब्रह्मषडङ्गैश्च दशांशं जुहयात्ततः ।
जगद्भुवादिषण्मन्त्रैर्हुत्वा षण्मूर्तिमन्त्रतः ॥ ५ ॥

பஞ்சப்ரும்ம ஷடங்கைஸ்ச தசாம்சம் ஜுஹுயாத்தத:!
ஜகத்புவாதி ஷண்மந்த்ரை: ஹுத்வா ஷண்மூர்த்தி மந்த்ரத:!!

பஞ்சப்ரும்ம ஷடங்கமந்திரங்களால் பத்தில் ஓர்பங்கான பத்து ஆஹுதியும், ஜகத்புவம் முதலான ஆறு மந்திரங்களாலும், ஷண்மூர்த்தி மந்திரத்தாலும் ஹோமம் செய்து

तिलैश्च घृतसंयुक्तैस्त्र्यम्बकात् षोडशाहुतिः ।
पूर्णाहुतिं च शिरसा स्विष्टकृद्धव्यमन्त्रतः ॥ ६ ॥

திலைச்ச க்ருதஸம்யுக்தை: த்ரயம்பகாத் ஷோடசாஹுதி:!
பூர்ணாஹுதிம் சசிரஸா ஸ்விஷ்டக்ருத்தவ்ய மந்த்ரத:!!

த்ரயம்பக மந்திரங்களாகிய ஒவ்வொன்றாக எள் கலந்த நெய்யால் பதினாறு ஆஹுதியும், சிரோமந்திரத்தால் பூர்ணாஹுதியும், ஸ்விஷ்டக்ருத் ஹோமமும்.

जयादिरभ्याधानञ्च राष्ट्रभृच्च क्रमाद्धुनेत् ।
होतारं पूजयेत् पश्चात् यथावित्तानुसारतः ॥ ७ ॥

ஜயாதி ரப்யாதாநஞ்ச ராஷ்ட்ரப்ருச்ச
ஹ“நேத்க்ரமாத் !
ஹோதாரம் பூஜயேது பச்சாத் யதா வித்தாநு ஸாரத:!!

ஜயாதி, ராஷ்ட்ரப்ருத் ஹோமமும் செய்யவேண்டும், சக்திக்கேற்றவாறு ஹோமம் செய்ய ஆசார்யனை பூஜிக்க வேண்டும்.

इति श्रीकुमारतन्त्रे दिशाहोमविधिर्नाम अष्टादश: पटल:

இதி குமாரதந்த்ரே திசாஹோமவிதி: நாம
அஷ்டாதச: படல:

இவ்வாறாக குமாரதந்திரத்தில் திசாஹோம
முறையாகிற பதினெட்டாவது படலமாகும்.

।। एकोनविंशः पटलः ।।

ஏகோந விம்ச : படல :

பத்தொன்பதாவது படலம்.

अथ मूर्तिहोमविधिः

மூர்த்தி ஹோம விதி :
மூர்த்தி ஹோம முறை

मूर्तिहोमं ततो वक्ष्ये तच्छृणुष्व महामुने ।
हर्म्याग्रे स्थण्डिलं कृत्वा शालिभिर्विमलैस्तथा ॥ १ ॥

மூர்த்தி ஹோமம் ததோ வக்ஷ்யே தச்ச்ருணுஷ்வ
மஹாமுநே !
ஹர்ம்யாக்ரே ஸ்தண்டிலம் க்ருத்வா
சாலிபிர்விமலைஸ்ததா!!

ஹேமுநிவரே! மூர்த்தி ஹோம முறையைக் கூறுகிறேன். கேளும்! ஆலயத்தின் முன்பாக சுத்தமான நெல்லால் ஸ்தண்டிலம் அமைத்து

स्कन्दकुम्भञ्च तन्मध्ये द्विपार्श्वे वर्धनीद्वयम् ।
अष्टकुम्भान्यसेन्मन्त्री पूर्वाद्यष्टदिशासु च ॥ २ ॥

ஸ்கந்த கும்பஞ்ச தந்மத்யே த்விபார்ச்வே
வர்த்நீத்வயம் !
அஷ்டகும்பாநுந் ந்யஸேந்மந்த்ரீ பூர்வாத்யஷ்ட
திசாஸு“ச!!

ஸ்தண்டில மத்தியில் ஸ்கந்தகும்பமும், அதனிருபுறமும் ஒவ்வொன்றாக வர்தநீகலசமும் கிழக்கு முதலான திசைகளில் எட்டு கும்பங்களை வைத்து

मध्ये कुम्भं समावाह्य पूजयेत् यथाविधि ।
महावल्ली देवसेनां वर्धन्योः संप्रपूजयेत् ॥ ३ ॥

மத்யே கும்பம் ஸ்மாவாஹ்ய பூஜயேத்து யதாவிதி!
மஹாவல்லீம் தேவஸேநாம் வர்தந்யோ:
ஸம்ப்ரபூஜயேத் !!

நடுவிலுள்ள கலசத்தில் முறைப்படி ஸ்கந்தரை ஆவாஹித்து, வர்தனீகலசம் இரண்டிலும் வள்ளியையும், தேவஸேநாவையும் பூஜித்து

जयन्ताद्यष्टदेवांश्च पूर्वादिषु घटेषु च ।
तस्याग्रे स्थण्डिलं कृत्वा निर्दोषैः सिकतैः सितैः ॥ ४ ॥

ஜயந்தாத்யஷ்ட தேவாம்ச்ச பூர்வாதிஷு
கடேஷுச!
தஸ்யாக்ரே ஸ்தண்டிலம் க்ருத்வா நிர்தோஷை:
ஸிகதை: ஹிதை:!!

கிழக்கு முதலான எட்டு கலசங்களில் ஜயந்தன் முதலான எண்மரை பூஜித்து, கலசஸ் தண்டிலத்திற்கு முன்பாக சுத்தமான மணலால் ஸ்தண்டிலம் அமைத்து

अग्न्याधानादिकं सर्वमग्निकार्योक्तमाचरेत् ।
पलाशीं च गुलूचीं च सद्येनैव शतं शतम् ॥ ५ ॥

அக்ன்யாதாநாதிகம். ஸர்வமக்னி கார்யோக்த
மாசரேத்!
பலாசீம்ச கலூசீம்ச ஸத்யேநைவ சதம் சதம்!!

முறைப்படி அக்னிகார்யம் செய்து, புரசு, சீந்திக்கொடி ஸமித்துகளை ஸத்யோஜாத மந்திரத்தினால் நூறாகுதியும்

अघोरेण घृतं दत्वा चरुमीशानमन्त्रतः ।
स्कन्दमूलेन मन्त्रेण घृतेनैव शतं हुनेत् ॥ ६ ॥

அகோரேண க்ருதம் தத்வத் சருமீஸாநமந்த்ரத:!
ஸ்கந்த மூலேண மந்த்ரேண க்ருதேநைவ ஸதம்
ஹுநேத் !!

அகோர மந்திரத்தினால் நெய்யால் நூறாகுதியும், ஸ்கந்த மூலமந்திரத்தால் நெய்யால் நூறாகுதியும் செய்யவும்.

पञ्चब्रह्मषडङ्गैश्च दशांशं जुहुयात्ततः ।
मूलमन्त्रेण मतिमान् शतमष्टोत्तरं हुनेत् ॥ ७ ॥

பஞ்சப்ரும்ம ஷடங்கைச்ச தசாம்சம்
ஜுஹுயாத்தத:!
மூல மந்த்ரேண மதிமாந் ஷதமஷ்டோத்தரம்
ஹுநேத்!!

பஞ்சப்ரும்ம, ஷடங்க மந்திரங்களால் பத்தில் ஓர் பங்கான பத்தாஹுதியும், மூலமந்திரத்தினால் நூறாஹுதியும் செய்யவும்

जगद्भुवादिषण्मन्त्रैर्हुत्वा षण्मूर्तिमन्त्रतः ।
घृतसिक्ततिलेनैव त्र्यम्बकेन शताहुति : ॥ ८ ॥

ஜதத்புவாதி ஷண்மந்த்ரை: ஹுத்வா ஷண்மூர்த்தி
மந்த்ரத:!
க்ருத ஸிக்த திலேநைவ த்ரயம்பகேந சதாஹுதி:!!

ஜகத்புவம் முதலிய ஆறு மந்திரங்களாலும், ஷண்மூர்த்தி மந்திரங்களாலும், த்ரயம்பக மந்திரத்தாலும், நெய்யில் எள்ளோடு சேர்த்து ஹோமம் செய்யவும்.

पूर्णाहुतिञ्च शिरसा स्विष्टकृद्धव्यमन्त्रतः ।
जयादिरभ्याधानञ्च राष्ट्रभृच्च हुनेत्क्रमात् ॥ ९ ॥

பூர்ணஹுதிஞ்ச சிரஸா
ஸ்விஷ்டக்ருத்தவ்யமந்த்ரத:!
ஜயாதிரப்யாதாநஞ்ச ராஷ்ட்ரப்ருச்ச
ஹுநேத்க்ரமாத்!!

சிரோமந்திரத்தினால் பூர்ணாஹுதியும், ஸ்விஷ்டக்ருத் ஹோமம், ஹவ்யவாஹ நமந்திரத்தாலும், ஜயாதி ஹோமமும் செய்ய வேண்டும்

कुम्भाद्भिर्देवदेवींश्च क्रमेणैवाभिषेचयेत् ।
यथाविभवविस्तारं होतारमपि पूजयेत् ॥ १० ॥

கும்பாத்பிர்தேவ தேவீம்ச
க்ரமேணைவாபிஷேசயேத் !
யதா விபவ விஸ்தாரம் ஹோதாரமபி பூஜயேத் !!

கும்பதீர்-தங்களால் முறைப்படி ஸ்கந்தரையும், வள்ளீ, தேவஸேனாவையும் அபிஷேகம் செய்து, சக்திக்குத்தக்க ஹோமம் செய்ய ஆசார்யனை பூஜிக்கவும்

इति श्रीकुमारतन्त्रे मूर्तिहोमविधिर्नाम एकोनविंश: पटल:

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே மூர்த்தி ஹோம விதிர்நாம ஏகோநவிம்ச: படல:

இவ்வாறாக குமாரதந்திரத்தில் மூர்த்தி ஹோம முறையாகிற பத்தொன்பதாவது படலமாகும்.

॥ विशः पटलः ॥

விம்ச : படல:

இருபதாவது படலம்

अथ पञ्चगव्यविधिः

பஞ்ச கவ்யவிதி:

பஞ்ச கவ்யம் செய்யும் முறை

पञ्चगव्यविधिं वक्ष्ये श्रृणुष्व कुशिकात्मज ।
सर्वपापक्षयकरं सर्वव्याधिविनाशनम् ॥ १ ॥

பஞ்ச கவ்ய விதிம் வக்ஷ்யே ச்ருணுஷ்வ குசிகாத்மஜ!
ஸர்வ பாப க்ஷயகரம் ஸர்வ வியாதி விநாசநம்!!

ஹே கௌ சிகரே! எல்லா பாபத்தையும் போக்கக் கூடியதும், எல்லா நோய்களை தீர்க்க வல்லதுமான பஞ்ச கவ்யம் செய்யும் முறையை கூறுகிறேன், கேளும்!

हर्म्याग्रे मण्डपे रम्ये गोमयेनानुलेपिते ।
हस्तमात्रप्रविस्तारं पञ्चाङ्गुलसमन्वितम् ॥ २ ॥

ஹர்ம்யாக்ரே மண்டபே ரம்யே கோமயேநாநுலேபிதே!
ஹஸ்தமாத்ர ப்ரவிஸ்தாரம் பஞ்சாங்குல ஸமந்விதம்!!

ஆலயத்திற்கு முன்பாக கோசாணத்தால் மெழுகப்பட்ட மண்டபத்தில் ஓர்முழ பரப்பளவும், ஐந்தங்குல உயரமுமாய்

स्थण्डिलं शालिभिः कृत्वा रक्तवर्णैः मनोरमैः ।
ततो नवपदं कल्प्य तन्मध्ये नलिनं लिखेत् ॥ ३ ॥

ஸ்தண்டிலம் சாலிபி: க்ருத்வா ரக்தவர்ணை: மநோரமை:!
ததோ நவபதம் கல்ப்ய தந்மத்யே நளிநம். லிகேத்!!

அழகான செந்நெல்லால் ஸ்தண்டிலம் அமைத்து, அதில் ஒன்பது கட்டம்போட்டு, நடுவில் தாமரையை வரைய வேண்டும்

सकलीकृत्य संप्रोक्ष्य दर्भैश्चैव परिस्तरेत् ।
शिवादिविद्यातत्त्वान्तं नवकोष्टेषु पूजयेत् ॥ ४ ॥

ஸகளீக்ருத்ய ஸம்ப்ரோக்ஷ்ய தர்பைச்சைவ பரிஸ்தரேத்!
சிவாதி வித்யா தத்வாந்தம் நவகோஷ்டேஷு பூஜயேத்!!

ஸகளீகரணம் செய்து கொண்டு ஸம்புரோக்ஷித்து தர்பைகளால் பரிஸ்தரணம் போட்டு ஒன்பது கட்டங்களில் சிவதத்வம் முதல் வித்யாதத்வம் வரை பூஜித்து

सौवर्णं रजतं ताम्रं मृण्मयं वाऽथ कृह्म च ।
अस्त्रेण क्षाल्य विन्यस्यमद्यादिक्रमयोगतः ॥ ५ ॥

ஸௌவர்ணம் ராஜதம் தாம்ரம் (பாத்ரம்) ம்ருண்மயம் வாத க்ருஹ்யச!
அஸ்த்ரேண க்ஷாள்ய விந்யஸ்ய மத்யாதி க்ரம யோகத:!!

தங்கம், வெள்ளி (தாமிரம்), மண்பாத்ரம் இவைகளில் ஏதாவது ஓர் ரக பாத்ரங்களை சுத்தம் செய்து நடுமுதலாக ஒன்பது பாத்ரங்களில்

शुप्रतिष्टं सुशान्तं च तेजोरूपमथामृतम् ।
रत्नोदकं ततो व्यक्तं पात्राणि प्रणिपात्यजेत् ॥ ६ ॥

ஸுப்ரதிஷ்டம் ஸுசாந்தம் ச தேஜோருபமதாம்ருதம்!
ரத்ணோதகம் ததோவ்யக்தம் பாத்ராணி ப்ரணிபாத்யஜேத்!!

ஸுப்ரதிஷ்டம், ஸுசாந்தம், தேஜோருப பாத்ரம், அம்ருதபாத்ரம், ரத்னோதக பாத்ரம், அவ்யக்த பாத்ரம் என்பதாக பூஜித்து

तेषु क्षीरं दधिघृतं गोमूत्रं गोमयं क्रमात् ।
कुशोदकं ततोऽग्नेयादि पिष्टामलकरात्रिकम् ॥ ७ ॥

தேஷு க்ஷீ ரம் ததிக்ருதம் கோமூத்ரம் கோமயம் க்ரமாத் !
குஷோதகம். ததோ க்னேயாதி பிஷ்டாமலக ராத்ரிகம் !!

அவைகளில் நடுபாத்ரம் முதலாக பால், தயிர், நெய், கோமூத்ரம், கோசாணம் என்று முறைப்படி பாத்ரத்தில் சேர்த்து, வடகிழக்கு பாத்ரத்தில் தர்பைதீர்தமும், தென்கிழக்கு முதலான பாத்ரங்களில் முறையே அரிசி மாவு, நெல்லி முல்லி, மஞ்சட்பொடி இவைகளை

क्षिप्त्वा ब्रह्मषडङ्गैश्च पूजयित्वा यथाविधि: ।
सकूर्च [5]सहितास्त्रेण पूजितं रक्षितं तथा ॥ ८ ॥

க்ஷிப்த்வா பஞ்சஷடங்கைச்ச பூஜயித்வா யதாவிதி!
ஸகூர்சம் ஸம்ஹிதாஸ்த்ரேண பூஜிதம் ரக்ஷிதம் ததா !!

பாத்ரங்களில் சேர்த்து பஞ்சப்ரும்ம ஷடங்க மந்திரங்களால் பூஜித்து, கூர்சம் வைத்து அஸ்திர மந்திரத்தினால் ஸம்ரக்ஷணம் செய்து

अमृतीकृत्य विधिवद्विदध्यात् पञ्चगव्यकम् ।
सर्पिर्दधिघृतं चैव गोमयं गोजलं तथा ॥ ९ ॥

அம்ருதீக்ருத்ய விதிவத் விதத்யாத் பஞ்சகவ்யகம் !
ஸர்பிர் ததிக்ருதம் சைவ கோமயம் கோஜலம் ததா !!

தேனுமுத்ரையால் அம்ருதீகரணம் செய்து முறைப்படி பஞ்ச கவ்யம் செய்யவும், பால், தயிர், நெய், கோசாணம், கோமூத்ரமிவைகளை

कुशोदकं क्रमादंशमेकं द्वित्रि च वेद षट् ।
श्वेतवर्णं गवां क्षीरं पीतवर्णं गवां दधि ॥ १० ॥

குசோதகம் க்ரமாதம் சமேகம் த்வித்ரி வேதஷட் !
ச் வேத வர்ணம் கவாம் க்ஷீரம் பீதவர்ணம் கவாம் ததி !!

தர்பை நீர் என்பதாக முறையாக ஒன்று, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஆறு என்று அளவுள்ளதாக சேர்க்கவும். வெள்ளைப் பசுவின் பாலும், மஞ்சள் பசுவின் தயிரும்

कृष्णवर्णं गवां सर्पि रक्तवर्णं च गोजलम् ।
गोमयं कपिलायां वा यथालाभं ग्रहेत्सुधी: ॥ ११ ॥

க்ருஷ்ணவர்ணம் கவாம் ஸர்பிம் ரக்தவர்ணம் சகோஜலம்
கோமயம் கபிலாயாம் வா யதாலாபம் க்ரஹேத்ஸுதீ:!!

கருப்புப் பசுவின் நெய்யும், சிகப்புப் பசுவின் கோமூத்ரமும் பழுப்பு நிறப் பசுவின் சாணமும் சேகரித்து பூஜிக்க வேண்டும். மேற்சொன்ன வர்ணப்பசுவின் திரவியங்கள் கிடைக்கவில்லை. எந்த நிறப்பசுவின் திரவியப் பசுவின் திரவியங்கள் கிடைக்கிறதோ அதை ஏற்கவும்

क्षारं वै शुक्रदैवत्यं दधि वै सोमदैवतम् ।
सर्पिश्च रुद्रदैवत्यं गोमयस्य बृहस्पति : ॥ १२ ॥

க்ஷீரம்வை சுக்ரதைவத்யம் ததிவை ஸோமதைவதம்!
ஸர்பிச்ச ருத்ரதைவத்யம் கோமயஸ்ய ப்ருஹஸ்பதி:!!

பாலில் சுக்ரணையும், தயிரில் சந்திரணையும், நெய்யில் ருத்ரணையும் பசுஞ்சாணத்தில் ப்ருஹஸ்பதியையும்

गोमूत्रमग्निदैवत्यं शालिपिष्टं च शङ्करी ।
लक्ष्मीरामलकस्यैव रजन्यास्तु सरस्वती ॥ १३ ॥

கோமூத்ர மக்னிதைவத்யம் சாலிபிஷ்டஞ்ச சங்கரீ!
லக்ஷ்மீரா மலகஸ்யைவ ரஜந்யாஸ்து சரஸ்வதீ !!

கோமூத்ரத்தில் அக்னியையும், அரிசி மாவில் கௌரியையும், நெல்லிமுல்லியில் லக்ஷ்மியையும், மஞ்சட் பொடியில் ஸரஸ்வதியையும்

कुशोदकस्य गङ्गा च अधिदेवा: प्रकीर्तिता: ।
भारद्वाज: काश्यपश्च [2]शालिहोत्रोऽथ गौतम: ॥ १४ ॥

குசோத கஸ்ய கங்காச அதிதேவா: ப்ரகீர்த்திதா:!
பாரத்வாஜ: காச்யபச்ச விச்வாமித்ரோ த கௌதம:!!

தர்பைநீரில் கங்கையையும், அதிதேவதைகளாகப் பூஜிக்கவும், பாரத்வாஜர், காச்யபர், விச்வாமித்ரர், கௌதமர்

आत्रेयश्चैव पञ्चैते गव्यानामृषय: क्रमात् ।
भार्गवोऽगस्त्य आङ्गीर: शक्तिपिष्टादिकेर्षय: ॥ १५ ॥

ஆத்ரேயஷ்சைவ பஞ்சைதே கவ்யாணாம்ருஷய: க்ரமாத்!
பார்கவோ கஸ்த்ய ஆங்கீர: ஷக்தி பிஷ்டாதிகேர்ஷய:!!

ஆத்ரேயர் ஆகிய ஐந்து ரிஷிகளும் பால் முதலான கவ்யங்களின் ரிஷிகளாவார். பார்கவர், அகஸ்த்யர், ஆங்கிரஸர், சக்திரிஷி ஆகிய நான்கு ரிஷிகள் அரிசிமாவு முதலான நான்கு திரவியங்களின் ரிஷிகளாவர்.

क्षीरं मोक्षप्रदं ज्ञेयं दधिव्याधिविनाशनम् ।
घृतं कुष्टविनाशार्यं गोमूत्रं पुत्रवृद्धिदम् ॥ १६ ॥

க்ஷீரம் மோக்ஷப்ரதம் க்ஞேயம் ததிவியாதி விநாசநம்!
க்ருதிம் குஷ்ட விநாசார்த்தம் கோமூத்ரம் புத்ரவ்ருத்திதம்!!

பால் மோக்ஷத்தையும், தயிர் நோயை கற்றுவதாகவும், நெய் குஷ்ட நோயை போக்குவதும், கோமூத்திரம் பிள்ளைபேற்றை தருவதும்

गोमयं रोगनाशार्य पञ्चगव्यफलं लभेत् ।
प्रात: कालेऽभिषेकञ्च सर्वपापविनाशनम् ॥ १७ ॥

கோமயம் ரோகநாசார்த்தம் பஞ்சகவ்ய பலம் லபேத்!
ப்ராத: காலே அபிஷேகம்ச ஸர்வபாப விநாசநம்!!

கோசாணம் ரோகத்தை அழிப்பதாகவும் பஞ்சகவ்ய பலனாகும். காலை நேரம் அபிஷேகம் செய்தால் எல்லாபாபமும் அழியுமாம்

माध्यांदिनेऽभिषेकं चच सर्वशान्त्यर्थमुच्यते ।
सायंकालाभिषेकेण सर्वव्याधिविनाशानम् ॥ १८ ॥

மாத்யா ந்திநேபிஷேகஞ்ச ஸர்வ சாந்த்யர் தமுச் யதே!
ஸாயம் காலாபிஷேகேண ஸர்வவ்யாதி விநாசநம்!!

மதியவேளை அபிஷேகம் செய்தால் எல்லா விதத்திலும் அமைதியும், மாலை வேளை அபிஷேகம் செய்தால் எல்லா நோயும் அழியுமென்பதாம்

गायत्र्या चैव गोमूत्रं गन्धद्वारेति गोमयम् ।
आप्यायस्वेति च क्षीरं दधिक्राविण्णोति वै दधि ॥ १९

காயத்ரியா சைவ கோமூத்ரம் கந்தத்வாரேதி கோமயம்!
ஆப்யாயஸ்வேதி க்ஷீரம் ததிக்ராவிண்ணோதி வைததி!!

காயத்ரீ மந்திரத்தினால் கோமூத்ரமும், கந்தத்வாராம் என்ற மந்திரத்தினால் கோசாணம், ஆப்யாயஸ்வ மந்திரத்தால் பாலும், ததிக்ரா விண்ணோ என்ற மந்திரத்தினால் தயிரும்

तत: शुक्रमसीत्याज्यं देवस्यत्वा कुशोदकम् ।
एवं संहारमार्गेण संयोज्यान्ते कुशोदकम् ॥ २० ॥

தத: சுக்ரமஸீத்யாஜ்யம் தேவஸ்யத்வா குசோதம்!
ஏவம் ஸம்ஹார மார்கேண ஸம்யோஜ்யான்தே குசோதகம்!!

சுக்ரமஸீ மந்திரத்தினால் நெய்யையும், தேவஸ்யத்வா மந்திரத்தினால் தர்பை நீரையும் பாத்திரத்தில் சேர்க்கவும். இவ்வாறு பூஜித்து ஸம்ஹார மார்கமாக, கோசாணத்தை கோமூத்ரத்திலும், கோமூத்ரத்தை நெய்யிலும்,

நெய்யை தயிரிலும், தயிரை பாலிலுமாக சேர்த்து தர்பை நீரை அதனுடன் சேர்க்கவும்

जगद्भुवादिषण्मन्त्रैर्जपित्वास्त्रेण रक्ष्य च ।
धूपदीपादिकं दत्वा ततः पूजां समाचरेत् ॥

ஜகத்புவாதி ஷண்மந்த்ரை: ஜபித்வாஸ்த்ரேண ரக்ஷ்யச!
தூப தீபாதிகம் தத்வா தத: பூஜாம் ஸமாச்ரேத்!!

ஜகத்புவம் முதலான ஆறு மந்திரங்களால் ஜபித்து அஸ்திரமந்திரத்தினால் ஸம்ரக்ஷணம் செய்து தூபதீபம் கொடுத்து பூஜையைச் செய்ய வேண்டும்

पञ्चगव्याभिषेकेण महापातकनाशनम् ॥ २१ ॥

பஞ்ச கவ்யாபிஷேகேண மஹாபாதகநாசநம்!

பஞ்ச கவ்யாபிஷேகத்தினால் எல்லா பெரியபாபங்களுமழியுமென்பதாகும்

इति श्रीकुमारतन्त्रे पञ्चगव्यविधिर्नाम विशः पटलः

இதி ஸ்ரீகுமாரதந்த்ரே பஞ்ச கவ்ய விதிர் நாம
விம்ச வ! படல:!!

இவ்வாறாக குமார தந்திரத்தில் பஞ்ச கவ்யமுறை
என்பதாக இருபதாவது படலமாகும்.

॥ एकविंशः पटलः ॥

21 வது படலம்

पञ्चामृतविधिः

பஞ்சாம்ருதவிதி:

பஞ்சாம்ருதம் செய்யும் முறை

पञ्चामृतविधि वक्ष्ये श्रृणु कौशिक सुव्रत ।
पूर्ववत् स्थण्डिलं कल्य मध्येन्द्रादिचतुष्टये ॥ १ ॥

பஞ்சாம்ருத விதிம் வக்ஷ்யே
ச்ருணுகௌசிகஸுவ்ரத!
பூர்வவத் ஸ்தண்டிலங்கல்ப்ய மத்யேந்த்ராதி
சதுஷ்டயே!!

ஹே கௌசிகரே! பஞ்சாமிர்த முறையை கூறுகிறேன் கேளும்! முன்பு போல் ஸ்தண்டிலம் அமைத்து நடுவில் கிழக்கு முதலான

ईशानादीनि सद्यान्तं पञ्चकोष्टेषु पूजयेत् ।
क्षीरं दधि घृतं चैव मधु स्यादिक्षुसारकम् ॥ २ ॥

ஈசாநாதீநி ஸத்யாந்த்தம் பஞ்சகோஷ்டேஷு
பூஜயேத்!
க்ஷீரம் ததி க்ருதம் சைவ மது ஸ்யாதிக்ஷு ஸாரகம்!!

கோஷ்டங்களில் ஈசானம் முதலான மந்திரங்களை பூஜிக்கவும். பால் தயிர், நெய், தேன், கரும்புச்சாறு இவைகளை ஸ்தாபிக்கவும்

उत्तमं प्रस्थमेवोक्तं मध्यमं तु तदर्धकम् ।
तदर्धमधमं ज्ञेयं मानं पञ्चामृतं तथा ॥ ३ ॥

உத்தமம் ப்ரஸ்த்தமே வோக்த்தம் மத்யமந்து
ததர்த்தகம்!
ததர்த்தம் அதமம் ஞேயம் மாநம் பஞ்சாம்ருதம்
ததா!!

ஓர்படி உத்தமம், அதில் பாதி மத்யமம், அதில் பாதி அதமம் என பஞ்சாமிர்தத்தின் அளவாகும்.

क्षीरं वै मध्यमे स्थाप्य पूर्वकोष्ठे न्यसेद्दधि ।
शर्पिश्च दक्षिणे विद्वान् मधु वै चोतरे पुनः ॥ ४ ॥

க்ஷீரம் வை மத்யமே ஸ்தாப்ய
பூர்வகோஷ்டேந்யஸேத்ததி!
ஸர்ப்பிச்ச தக்ஷிணே வித்வாந் மதுவை சோத்தரே
புந:!!

மத்ய கோஷ்டத்தில் பால், கிழக்கில் தயிர், தெற்கில் நெய், தேன் வடக்கிலும்

वारुण्यामिक्षुसारं स्यादस्त्रेणैव तु शोधयेत् ।
ईशानाद्यनुवाकैश्च जप्त्वा ब्रह्मभिरर्पयेत् ॥ ५ ॥

வாருண்யாமிக்ஷு ஸாரம் ஸ்யாத் அஸ்த்ரேணைவது
சோதயேத்!
ஈசாநாத்யநுவாகைச்ச ஜப்த்வா ப்ரம்மபி:
அர்ப்பயேத்!!

மேற்கில் கரும்புச்சாரையும் ஸ்தாபித்து, அஸ்திர மந்திரத்தினால் சுத்தி செய்து ஈசானஸ்ஸர்வ வித்யானாம் என்ற ஐந்து மந்திரங்களை ஜபித்து பிரும்ம மந்திரங்களால் பூஜிக்கவும்

स्कन्दमूलेन तन्मध्ये गायत्र्याश्च चतुर्दिशि ।
स्कन्दसूक्तेन मन्त्रेण त्वभिषेकं पृथक् पृथक् ॥ ६ ॥

ஸ்கந்த மூலேந தன்மத்யே காயத்ரயாச்ச சதுர்த்திசி!
ஸ்கந்த ஸூக்த்தேந மந்த்ரேண அபிஷேகம் ப்ரதக்
ப்ரதக்!!

ஸ்கந்த மந்திரத்தினால் நடுவிலும், காயத்ரியால் நான்கு திசைகளிலும் பூஜிக்கவும். ஸ்கந்த ஸூக்த மந்திரத்தினால் தனித்தனியாக அபிஷேகம் செய்யவும்.

कदलीपनसं चैव नालिकेरफलं तथा ।
आम्रञ्च मातुलुङ्गं स्यादेतत् पञ्चफलं तथा ॥ ७ ॥

கதளீ பநஸஞ்சைவ நாளிகேர பலம் ததா!
ஆம்ரஞ்ச மாதுளங்கம் ஸ்யாத் தத் பஞ்சபலம் ததா!!

வாழைப்பழம், பலாப்பழம், இளநீர், மாம்பழம், மாதுளம்பழம் இவைகள் ஐந்து பழம் எனப்படும்

पञ्चामृताभिषेकेण महापातक नाशनम् ।
फलसारामिषेकेण फलमीप्सितमाप्नुयात् ॥ ८ ॥

பஞ்சாம்ருதாபிஷேகேண மஹா பாதக நாசநம் !
பலஸாரபிஷேகேண பலமீப்ஸித மாப்நுயாத் !!

பஞ்சாமிர்தாபிஷேகத்தால் ஐந்து பாதகங்களுள் நீங்கிவிடும். பழச்சாறு அபிஷேகத்தால் விரும்பிய பயனை அடைகிறான்.

इति श्रीकुमारतन्त्रे पञ्चामृतविधिर्नाम एकविंशः
पटलः॥

இதி ஶ்ரீ குமாரதந்த்ரே கௌசிக ப்ரச்நே
பஞ்சாம்ருத விதிர் நாம ஏகவிம்சதி படல:

இவ்வாறு குமாரதந்திரத்தில் கௌசிக
ப்ரச்நத்தில் பஞ்சாம்ருத முறையாகிற
21 வது படலமாகும்.

द्वाविंशः पटलः ॥

22 வது படலம்

वालस्थापनविधि :

பாலஸ்தாபன விதி:

பாலஸ்தாபனம் செய்யும் முறை

बालस्थापनकं वक्ष्ये श्रुणु कौशिक सुवत ।
जीर्णगेहसमुद्धारे चित्रजीर्णेङ्गहीनके ॥ १ ॥

பாலஸ்தாபநகம் வக்ஷ்யே ச்ருணு கௌசிக ஸுவ்ரத !
ஜீர்ணகேஹ ஸமுத்தாரே சித்ர ஜீர்ணேங்கஹீநகே !!

ஹே கௌசிகரே! பாலஸ்தாபன முறையை கூறுகிறேன் கேளும்! பழுதடைந்த கோயிலை திருப்பணி செய்யவும் வரைந்த சித்ரங்கள் பழுதடைந்தாலும், பிம்ப அவயவங்கள் குறைபாடடைந்தாலும்

स्थलजीर्णे पीठजीर्णे पुनर्बेरकृते तथा ।
आसप्तदिवसात् पूर्वं कुम्भमावाह्य कारयेत् ॥ २ ॥

ஸ்தல ஜீர்ணே பீட ஜீர்ணே புநர்பேர க்ருதே ததா !
ஆஸப்த்த திவஸாத் பூர்வம் கும்பம் ஆவாஹ்ய காரயேத் !!

தளவரிசைகள் பழுதடைந்தாலும், பீடங்கள் குறைபாடிருந்தாலும், திரும்பவும் பிம்பம் தயார் செய்யும் சமயத்திலும் பாஸ்தாபனம் செய்ய வேண்டும். பிரதிஷ்டா ஏழு தினங்களுக்கு முன்பாக கும்பத்தில் ஆவாஹித்து பூஜிக்கவும்.

तदूर्ध्वे मुनिशार्दूल बालस्थानं विधीयते ।
मूलबेरप्रतिष्ठायाः प्रागेव तरुणालयम् ॥ ३ ॥

ததூர்த்வே முநிசார்த்தூல பாலஸ்தாநம் விதீயதே !
மூலபேர ப்ரதிஷ்டாயாம் ப்ராகேவ தருணாலயம் !!

அதற்கு மேற்பட்டு பாலஸ்தாபனம் கூறப்பட்டுள்ளது. மூலஸ்தான பிம்ப பிரதிஷ்டைக்கு முன்பாகவே தருணாலயம் என்ற முதல் பாலஸ்தாபனம் கூறப்பட்டுள்ளது.

मूलालयं विनिश्चित्य कारयेत् तरुणालयम् ।
बालस्थानविहीनत्वात् बालानां नाशनं भवेत् ॥ ४ ॥

மூலாலயம் விநிச்சித்ய காரயேத் தருணாலயம் !
பாலஸ்தாந விஹீநத்வாது பாலாநாம் நாசனம் பவேத் !!

மூலஸ்தானம் நிச்சயித்த பிறகு தருணாலயம் பிரதிஷ்டை செய்ய வேண்டும். பாலஸ்தாபனம் செய்யவில்லையெனில் பாலகர்களுக்கு (குழந்தைகளுக்கு) அழிவு ஏற்படும்

तस्मात्सर्वप्रयत्नेन बालस्थानं तु कारयेत् ।
मूलस्थानस्य चाग्रे वा सौम्ये वा पावकेऽपि वा ॥ ५ ॥

தஸ்மாத்ஸர்வ ப்ரயத்நேந பாலஸ்தாநந்து காரயேத் !
மூலஸ்தாநஸ்ய சாக்ரேவா ஸௌம்யே வா பாவகே பிவா !!

ஆகையால் மிகுந்த முயற்சியுடன் பாலஸ்தாபனம் செய்ய வேண்டும். மூலஸ்தானத்திற்கு முன்னதாகவோ, வடக்கிலோ, ஆக்னேய திசையிலோ

ऐशान्ये पूर्वभागे वा बलस्थानं विधीयते ।
कूटं वा मण्डपं वाऽपि कारयेद्विधिपूर्वकम् ॥ ६ ॥

ஐசாந்யே பூர்வபாகே வா பாலஸ்தாநம் விதீயதே !
கூடம் வா,மண்டபம் வாபி காரயேத் த்விதி பூர்வகம் !!

ஈசான திக்கிலோ, கிழக்கிலோ பாலஸ்தாபனம் கூறப்பட்டுள்ளது. கொட்டகையோ, மண்டபமோ முறைப்படி அமைக்கவும்

मूलप्रासादविस्तारादधिकं नैव कारयेत् ।
मूलबेरस्य चार्धं वा तदर्धार्धमथापि वा ॥ ७ ॥

மூலப்ராஸாத விஸ்த்தாரா ததிகம் நைவ காரயேத் !
மூல பேரஸ்ய சார்த்தம் வா ததர்த்தார்த்த மதா பிவா !!

மூலஸ்தான பரப்பளவிற்கு அதிகமான ஆத்ய பாலாலயம் அமைக்க கூடாது. மூல பிம்ப உயர அளவிற்கு பாதியோ, கால்பாகமோ, 8ல் ஓர் பாகமோ பிம்ப அளவு இருக்க வேண்டும்.

रुद्राङ्गुलं समारभ्य द्विद्व्यङ्गुलविवर्धनात् ।
एकविंशत्यङ्गुलान्तं षड्विधं मानमङ्गुलैः ॥ ८ ॥

ருத்ராங்குலம் ஸமாரப்ய த்வித்யங்குல விவர்த்தநாத் !
ஏகவிம்சத்யங்குலாந்தம் ஷட்விதம் மாநம் அங்குலை:: !!

11 அங்குல முதற்கொண்டு இரண்டிரண்டு அங்குல அதிகரிப்பால் 21 அங்குல அளவு வரை அங்குலத்தால் 6 விதமாக அளவு கூறப்பட்டுள்ளது.

आयादिशुभसंयुक्तं सर्वलक्षणसंयुतम् ।
लोहजं शैलजं वाऽपि दारुजं मृण्मयं तु वा ॥ ९ ॥

ஆயாதி சுப ஸம்யுக்தம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் !
லோஹஜம் சைலஜம் வாபி தாருஜம் ம்ருந்மயந்துவா !!

ஆயாதி, சுப லக்ஷணத்துடன் எல்லா அமைப்புடனும் அமைக்க வேண்டும். உலோகத்தினாலோ, கல்லினாலோ, மரத்தினாலோ, மண்ணினாலோ

यथालाभेन कर्तव्यं तरुणालयबेरकम् ।
बन्धूकं वृक्षमादाय कारयेद्दारुबेरकम् ॥ १० ॥

யதாலாபேந கர்த்தவ்யம் தருணாலய பேரகம் !
பந்தூக வ்ருக்ஷ மாதாய காரயேத்தாருஜே புத: !!

கிடைத்த திரவியத்தினால் தருணாலய பிம்பத்தை தயாரிக்கவும். இலுப்பை மரத்தினால் மரபிம்பம் அமைக்கவும்

प्रासादस्याग्रतः कुर्यान्मण्डपं चतुरश्रकम् ।
पङ्क्तित्रयसमायुक्तं चतुर्द्वारसमायुतम् ॥ ११ ॥

ப்ராஸாதஸ்யாக்ரத: குர்யாத் மண்டபஞ்சதுரச்ரகம் !
பங்க்தி த்ரய ஸமாயுக்தம் சதுர்த்வார ஸமாயுதம் !!

ஆலயத்திற்கு முன்பாக சதுரமான மண்டபம் அமைத்து 3 வரிசையுடையதும் நான்கு த்வாரமுடையதும்

तन्मध्ये वेदिकां कुर्यान्नवभागैकभागतः ।
परितः पञ्चकुण्डानि कारयेद्विधिपूर्वकम् ॥ १२ ॥

தந்மத்யே வேதிகாம் குர்யாத் நவபாகைக பாகத: !
பரித: பஞ்ச குண்டானி காரயேத்விதி பூர்வகம் !!

மத்தியில் 9 ல் ஓர்பாகத்தில் வேதிகை அமைத்து சுற்றிலும் முறைப்படி 5 குண்டம் அமைக்கவும்.

दर्भमालासमायुक्तं चतुस्तोरणभूषितम् ।
वितानादिध्वजोपेतमष्टमङ्गलसमयुतम् ॥ १३ ॥

தர்பமாலா ஸமாயுக்தம் சதுஸ்தோரண பூஷிதம் !
விதாநாதி த்வஜோபேதம் அஷ்டமங்கள ஸம்யுதம் !!

தர்பமாலை, 4 தோரங்களால் அலங்கரிக்கப் பட்டதாயும், படர்கொடி கொடி, அஷ்டமங்களம், இவைகளுடன் கூடியதாயும்

गोमयालेपनं कृत्वा पुण्याहं कारयेत्ततः ।
अयं कुमारमन्त्रेण प्रोक्षयेत् कुशवारिणा ॥ १४ ॥

கோமயாலேபநம் க்ருத்வா புண்யாஹம் காரயேத் தத: !
அயங்குமார மந்த்ரேண ப்ரோக்ஷயேத் குச வாரிணா !!

கோசாணத்தால் மெழுகியும், புண்யாஹ வாசனம் செய்து தர்பை தீர்த்தத்தால் "அயம்குமார" என்ற மந்திரத்தால் ப்ரோக்ஷித்து

अङ्कुरानर्पयेद्धीमान् पूर्वोक्तविधिना ततः ।
वेद्यूर्ध्वे स्थण्डिलं कुर्यादष्टद्रोणैश्च शालिभिः ॥ १५ ॥

அங்குராநர்ப்பயேத் தீமாந் பூர்வோக்த விதிநா தத:!
வேத்யூர்த்வே ஸ்தண்டிலம் குர்யாத் அஷ்டத்ரோணைச்ச சாலிபி:!!

முன்புள்ள முறைப்படி அங்குரார்ப்பணம் செய்து வேதிகையின் மேல் 8 மரக்கால் நெல்லால் ஸ்தண்டிலம் அமைத்து

तदर्धैस्तण्डुलैश्चैव तदर्धैश्च तिलैरपि ।
तन्मध्ये पद्ममालिख्य साष्टपत्रं सकर्णिकम् ॥ १६ ॥

ததர்த்தைஸ் தண்டுலை சைவ ததர்த்தைச்ச திலை ரபி!
தந்மத்யே பத்மமாலிக்ய ஸாஷ்ட பத்ரம் ஸகர்ணிகம்!!

அதன்பாதி அரிசியும் ¼ பாகம் எள்ளும், அதன் நடுவில் கர்ணிகை எட்டு தளம் இவற்றுடன் தாமரை வரையவும்.

शयनं कल्पयेत् पश्चादण्डजाद्यैरनुक्रमात् ।
नयनोन्मीलनं कुर्याज्जलैश्चैवाधिवासयेत् ॥ १७ ॥

சயநம் கல்பயேத் பச்சாத் அண்டஜாத்யைரன் க்ரமாத்!
நயநோன்மீலநம் க்ருத்வா ஜலைசைவாதி வாஸயேத்!!

அண்டஜம் முதலான 5 வகை பொருட்களால் சயனம் அமைக்கவும் நயநோன் மீலனமும் ஜலாதிவாஸமும் செய்ய வேண்டும்.

पर्यग्निकरणं कृत्वा वास्तुहोमेन मण्डपे ।
जलाद्बिम्बं समुद्धृत्य शयने शाययेद्बुधः ॥ १८ ॥

பர்யக்நி கரணங்க்ருத்வா வாஸ்து ஹோமேந மண்டபே!
ஜலாத் பிம்பம் ஸமுத்ருத்ய சய நே சாயயேத் புத:!!

மண்டபத்தில் வாஸ்து சாந்தி, பர்யக்னிகரணமும் செய்ய வேண்டும். ஜலாதி வாஸத்திலிருந்து பிம்பத்தை எடுத்து சயநாதிவாஸம் செய்விக்கவும்

सर्वलक्षणसंयुक्तान् सर्वालङ्कारसंयुतान् ।
कुम्भानावाहयेद्धीमान् पूर्वोक्तविधिना पुनः ॥ १९ ॥

ஸர்வ லக்ஷண ஸம்யுக்த்தாநு ஸர்வாலங்கார ஸம்யுதாந்!
கும்பாநாவாஹயேத் தீமாநு பூர்வோக்த விதிநா புந:!!

எல்லா லக்ஷணமும் எல்லா அலங்கார முடைய கும்பங்களை முன்புபோல் ஆவாஹித்து பூஜிக்கவும்.

जयन्ताद्यष्टविद्येशान् वेद्यूर्ध्वेऽष्ठसु दिक्षु च ।
मध्ये कुमारमावाह्य पार्श्वे शाक्तिद्वयं यजेत् ॥ २० ॥

ஜயந்தாத்யஷ்ட வித்யேசாநு வேத்யூர்த்வேஷ்டஸு திக்ஷு ச!
மத்யே குமாரம் ஆவாஹ்ய பார்ச்வே சக்தி த்வயம் யஜேத்!!

நடு கும்பத்தில் குமாரரையும் இருபக்கத்தில் வள்ளீ, தேவஸேனாவையும் சுற்றி 8 கும்பத்தில் ஜயந்தாதி அஷ்டவித்யேஸ் வரர்களையும் பூஜிக்கவும்.

अर्चयेद्गन्धपुष्पाद्यैः स्वैःस्वैर्नामभिरेव च ।
परिवारघटान् सर्वान् पूर्वोक्तविधिनार्चयेत् ॥ २१ ॥

அர்ச்சயேத் கந்த புஷ்பாத்யை ஸ்வைஸ்வைர் நாம பிரேவச!
பரிவார கடாந் ஸர்வாந் பூர்வோக்த விதிநார்ச்சயேத்!!

அந்தந்த மூர்த்தி பெயர்களுடன் சந்தன புஷ்பங்களால் பூஜிக்கவும், பரிவார கட்டங்களையும் அவ்வாறே பூஜிக்கவும்.

अग्न्याधानाधिकं मग्निकार्योक्तमाचरेत् ।
समिदाज्यचरुं लाजान् सर्षपं च यवं तिलान् ॥ २२ ॥

அக்னியாதாநாதிகம் ஸர்வம் அக்னிகார்க்யோக்த மாசரேத்!
ஸமிதாஜ்ய சரும் லாஜாந் ஸர்ஷ பஞ்சயவம் திலாந்!!

அக்னிகார்ய முறைப்படி அக்னிகார்யத்தை செய்யவும், சமித்து, நெய் , சரு, பொறி, கடுகு, யவை, எள் இவைகளாவன.

होमद्रव्याणि सप्तैते जुहुयात्तु विशेषत: ।
खादिरौ वटशम्यार्कस्त्वपामार्गो महादिशि ॥ २३ ॥

ஹோம த்ரவ்யாணி ஸப்தைதே ஜுஹுயாத்து விசேஷத:!
காதிரௌ வடசம்யார்கஸ் த்வபாமார்கோ மஹாதிசி!!

ஏழு ஹோமத்திரவியங்களை ஹோமம் செய்யவும். கருங்காலி, ஆல், வன்னி, எருக்கு, நாயுருவி இவைகளை கிழக்கு முதலான திசைகளிலும்

प्रधाने तु पलाश: स्यात् समिध: परिकीर्तिता: ।
स्कन्दमूलेन मन्त्रेण तत: षण्मूर्तिमन्त्रत: ॥ २४ ॥

ப்ரதாநேது பலாசம் ஸ்யாத் ஸமித: பரிகீர்த்திதா:!
ஸ்கந்த மூலேந மந்த்ரேண தத: ஷண்மூர்த்தி மந்த்ரத:!!

பிரதான குண்டத்தில் புரசு ஸமித்தையும், ஹோமம் செய்யவும். ஸ்கந்த மூல மந்திரத்தினாலும், ஷண்மூர்த்தி மந்திரத்தினாலும்

समिधादीनि जुहुयात् प्रत्येकं तु षडाहुति: ।
सद्यादीनां शिरोऽन्तेन होमयेत्तदनन्तरम् ॥ २५ ॥

ஸமிதாதீநி ஜுஹுயாத் ப்ரத்யேகந்து ஷடாஹுதி:!
ஸத்யாதீநாம் சிரோந்தேந ஹோமயேத்ததநம் தரம்!!

ஸமித்துக்களை ஹோமம் செய்யவும். மேற்கூறிய சமித்துக்களை ஒவ்வொன்றும் ஆறு ஆகுதி செய்யவும். ஸத்யோஜாத முதல் சிரோமந்திரம் வரை ஹோமம் செய்யவும்.

शतमर्धं तदर्धं वा जुहुयाद्देशिकोत्तम: ।
सुब्रह्मण्यं कुमारं च स्कन्दं शरवणोद्भवम् ॥ २६ ॥

சதமர்த்தம் ததர்த்தம்வா ஜுஹுயாத்தேசி கோத்தம:!
ஸுப்ரமண்யம் குமாரஞ்ச ஸ்கந்தம் சரவணோத்பவம்!!

நூறு, ஐம்பது, இருபத்தி ஐந்து, ஆகுதிகளையோ செய்யவும். சுப்ரமண்யர், குமாரர், ஸ்கந்தர், சரவணோத்பவர் இவர்களையும்

देवसेनापतिं विद्वान् यथोक्तेनैव पूजयेत् ।
द्रव्यान्ते व्याहृतिं हुत्वा स्पृष्ट्वा स्पृष्टा च बेरकम् ॥ २७ ॥

தேவ ஸேநாபதிம் வித்வா ந்யதோக்தே நைவ பூஜயேத்!
த்ரவ்யாந்தே வ்யா ஹ்ருதிம் ஹுத்வா ஸ்ப்ருஷ்ட்வாஸ்ப்ருஷ்ட்வாசபேரகம்!!

தேவஸேனாபதி ஆகியோர்களை முறைப்படி பூஜிக்கவும். திரவியத்தின் முடிவில் வியாஹ்ருதி ஹோமம் செய்து பிம்பத்தை தொட்டு, தொட்டு ஹோமம் செய்யவும்.

सर्वद्रव्यसमायुक्तं हव्यवाहेन होमयेत् ।
जयादिरभ्याधानञ्च राष्ट्रभृच्च हुनेत्क्रमात् ॥ २८ ॥

ஸர்வ த்ரவ்ய ஸமாயுக்தம் ஹவ்ய வாஹேந ஹோமயேத்!
ஜயாதி ரப்யா தாநஞ்ச ராஷ்ட்ரப்ருச்ச ஹுநேத் க்ரமாத்!!

எல்லா திரவிய ஹோமம் செய்து ஹவ்யவாஹ ஹோமம் செய்து ஜயாதி ஹோமம், ராஷ்ட்ரபிருத் மந்திர ஹோமம் செய்யவும்.

प्रभाते समुहूर्ते तु सुनक्षत्रशूलग्नके ।
बिम्बं संस्थाप्य मतिमान् स्कन्दमूलेन मन्त्रत: ॥ २९ ॥

ப்ரபாதே ஸுமுஹூர்த்தேது சுநக்ஷத்ர சு லக்நகே!
பிம்பம் ஸம்ஸ்தாப்ய மதிமாநு ஸ்கந்த மூலேந மந்த்ரத:!!

காலையில் நல்ல முஹூர்த்த லக்னத்தில் நல்ல நக்ஷத்திரத்தில் ஸ்கந்த மூலமந்திரத்தினால் பிம்பத்தை ஸ்தாபனம் செய்யவும்.

पुनर्द्दढतरं कृत्वा पद्मपीठे विशेषत: ।
कुम्भञ्च वर्धनीं द्वे च कृत्वा धामप्रदक्षिणम् ॥ ३० ॥

புநர்த்ருட தரம் க்ருத்வா பத்மபீடே விசேஷத:!
கும்பம் ச வர்த்தநீம் சைவ க்ருத்வா தாம ப்ரதக்ஷிணம்!!

நன்கு கெட்டியாக பத்மபீடத்தில் ஸ்தாபனம் செய்யவும். கும்பத்தையும் வர்த்தனீயையும், ஆலயம் வலம் வந்து

देवस्य पुरतो न्यस्त्वा न्यासं सर्वं समाचरेत् ।
कुम्भाद् बीजं समादाय बेरस्य हृदये न्यसेत् ॥ ३१ ॥

தேவஸ்ய புரதோந்யஸ்த்வா ந்யாஸம் ஸர்வம் ஸமாசரேத்!
கும்பாத் பீஜம் ஸமாதாய பேரஸ்ய ஹ்ருதயே ந்யஸேத்!!

ஸ்வாமியின் முன்பாக வைத்து எல்லா நியாஸமும் செய்து கும்பத்திலிருந்து மூலமந்திரத்தை எடுத்து பிம்பத்தின் ஹ்ருதயத்தில் ஸ்தாபிக்கவும்

वर्धन्योर्बीजमादाय द्वयो: शवत्यो: स्तने न्यसेत् ।
तत्तद्घटस्थतोयेन क्रमेणैवाभिषेचयेत् ॥ ३२ ॥

வர்த்தந்யோ: பீஜமாதாய த்வயோசக்த்யோஸ்தநே ந்யஸேத்!
தத்தத் கடஸ்ததோயேந க்ரமேணைவாபி ஷேசயேத்!!

2 வர்தனியின் மூலமந்திரத்தை எடுத்து 2 தேவியின் ஸ்தனத்தில் (ஹ்ருதயத்தில்) சேர்க்கவும். அந்தந்த கடத்தின் தீர்த்தத்தால் முறைப்படி அபிஷேகம் செய்யவும்.

जयन्तादिघटान् सर्वान् क्रमात्पीठेऽभिषेचयेत् ।
वस्त्रैश्च गन्धपुष्पाद्यै: पूजयेत्तु यथा विधि ॥ ३३ ॥

ஜயந்தாதி கடாந் ஸர்வாந் க்ரமாத் பீடே பிஷேசயேத்!
வஸ்த்ரைச்ச கந்த் புஷ்பாத்யை: பூஜயேத்து யதா விதி!!

ஜயந்தாதிகளின் எல்லா கடங்களையும் முறைப்படி அபிஷேகம் செய்யவும். வஸ்திரங்களாலும், சந்தனங்களாலும் முறைப்படி பூஜிக்கவும்.

उद्वाहकर्म कर्तव्यं वेदोक्तेनैव वर्त्मना ।
चतुर्थे दिवसे प्राप्ते चतुर्थीहोममाचरेत् ॥ ३४ ॥

உத்வாஹ கர்ம கர்த்தவ்யம் வேதோக்தே நைவ வர்த்மநா!
சதுர்த்தே திவஸே ப்ராப்தே சதுர்த்தீ ஹோம மாசரேத்!!

விவாஹ உத்ஸவம் வேத முறைப்படி செய்து, 4 வது நாளில் 4ம் தின ஹோமம் செய்ய வேண்டும்.

जगद्भुवादिषण्मन्त्रैरयं कुमारमन्त्रत: ।
कुण्ड प्रति हुनेत् धीमान्मूलेनैव शतं हुनेत् ॥ ३५ ॥

ஜகத் புவாதி ஷண்மந்த்ரை: அயங்குமார மந்த்ரத:!
குண்டம் ப்ரதி ஹுநேத்தீமாநு மூலேநைவ சதம் ஹுநேத்!!

ஜகத்புவம் என்ற மந்திரத்தினால், அயம்குமார மந்திரத்தினாலும் ஒவ்வோரு குண்டத்திலும் ஹோமம் செய்து மூல மந்திரத்தினால் 100 ஆவிருத்தி செய்யவும்.

महाहविर्निवेद्याथ दीनानाथांश्च भोजयेत् ।
आचार्य पूजयेत् कर्ता वस्त्रहेमाङ्गुलीयकैः ॥ ३६ ॥

மஹாஹவீர் நிவேத்யாத தீநாநாதாம்ச்ச போஜயேத்!
ஆசார்யம் பூஜயேத் கர்த்தா
வஸ்த்ரஹேமாங்குலீயகை:!!

மஹாஹவிஸ் நிவேதனம் செய்து தீனர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கும் போஜனம் செய்விக்கவும். ஆசார்யனை யஜமானன் வஸ்திர ஸ்வர்ணமோதிரம் இவைகளை பூஜிக்கவும்.

उत्तमं पञ्चनिष्कं तु मध्यमं तु तदर्धकम् ।
तदर्धमधमं ज्ञेयं देशिकस्य तु दक्षिणा ॥ ३७ ॥

உத்தமம் பஞ்ச நிஷ்கந்து மத்யமந்து ததர்த்தகம்!
ததர்த்தம் அதமம் ஞேயம் தேசிகஸ்யது தக்ஷிணா!!

5 நிஷ்க சம்பாவனை உத்தமம் 2½ நிஷ்கம் மத்யமம் 1¼ நிஷ்கம் அதமம் என அறிந்து ஆசார்யனுக்கு சம்பாவனை செய்யவும்

मूर्तिपान् परिचारांश्च यथाशक्त्या तु दक्षिणा ।
एवं यः कुरुते मर्त्यः कोटियज्ञफलं लभेत् ॥
सर्वान् कामानवाप्नेति सोऽन्ते स्कन्दपदं व्रजेत् ॥ ३८ ॥

மூர்த்திபாந் பரிசாராம்ச்ச யதாசக்த்யாது தக்ஷிணா!
ஏவம்ய: குருதே மர்த்ய: கோடியக்ஞ பலம் லபேத்!!
ஸர்வாந் காமா நவாப்நோதி ஸோந்தே ஸ்கந்தபதம்
வ்ரஜேத்!!!

மூர்த்திபர்களுக்கு பரிசாரகர்களுக்கும் முடிந்தவரை தக்ஷிணை கொடுக்கவும். இவ்வாறு எந்த மனிதன் செய்கிறானோ, அவன் கோடி யாக பயனை அடைகிறான். எல்லா விருப்பங்களையும் அடைந்து முடிவில் முருகன் திருவடியை அடைகிறான்.

इति श्रीकुमारतन्त्रे बालस्थापनविधिर्नाम
द्वाविंशःपटलः

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிக ப்ரச்நேபாலஸ்தாபந
விதிர்நாமத்வாவிம்சதி படல:

இவ்வாறு குமார தந்திரத்தில், கௌசிக ப்ரச்னத்தில் பாலஸ்தாபன முறையாகிய 22 - வது படலமாகும்.

॥ त्रयोविंशः पटलः ॥

23 வது படலம்

अथ संप्रोक्षणविधिः

ஸம்ப்ரோக்ஷண விதி:

ஸம்ப்ரோக்ஷணம் செய்யும் முறை

अतः परं प्रवक्ष्यामि संप्रोक्षणविधिं श्रृणु ।
आवर्तं पुनरावर्तमनावर्तं तु कौशिक ॥ १ ॥

அதம்ப்பரம் ப்ரவக்ஷ்யாமி ஸம்ப்ரோக்ஷண விதிம் ச்ருணு!
ஆவர்த்தம் புநராவர்த்தம் அநாவர்த்ம்து கௌசிக!!

ஹே கௌசிகரே! ஸம்ப்ரோக்ஷண முறையைப் பற்றி கூறுகிறேன், கேளும்! ஆவர்த்தம், புநராவர்த்தம், அநாவர்தம் என்று

प्रोक्षणं त्रिविधं प्रोक्तं तत्तद्भेदमथ श्रृणु ।
आदौ च बालबेरात्तु मूलबेरं प्रतिष्टितम् ॥ २ ॥

ப்ரோக்ஷணம் த்ரிவிதம் ப்ரோக்தம் தத்தத்பேதமதச்ருணு!
ஆதௌச பால பேராத்து மூலபேரம் ப்ரதிஷ்டிதம்!!

3 விதமாக ப்ரோக்ஷணம் கூறப்பட்டுள்ளது. அதன் பிரிவுகளை கேளும்! முதலில் பாலாலய பிம்பத்திலிருந்து மூலாலய பிம்பத்தில் பிரதிஷ்டை செய்யப்படுவதும்.

तदावर्तमिति ख्यातं पुनरावर्तमुच्यते ।
प्रासादपतनाद्भिन्ने प्रमादात् भिन्नके पुनः ॥ ३ ॥

ததாவர்த்தமிதிக்யாதம் புநராவர்த்தமுச்யதே!
ப்ராஸாத பத நாத்பின்னே ப்ரமாதாது பிந்நகே புந:!!

ஆவர்தம் எனப்படும் புனராவர்தம் கூறப்படுகிறது. ஆலயம் இடிந்து விழுந்தால் பின்னமானதும் அறியாமையால் பிளவுபட்ட சமயத்திலும்

मूलबेरात् समादाय संस्थाप्य बालबेरके ।
तत्तन्मूलप्रवेशं यत्तु पुनरावर्तमीरितम् ॥ ४ ॥

மூலபேராது ஸமாதாய ஸம்ஸ்தாப்ய பாலபேரகே!
தத்தந் மூலம் ப்ரவேசம்யது புநராவர்த்த மீரிதம்!!

மூலபிம்பத்திலிருந்து ஆகர்ஷித்து பாலபிம்பத்தில் சேர்த்து பிறகு மூலபிம்பத்தில் மூர்த்தியை சேர்ப்பதற்கு புனராவர்தம் எனப்படும்.

प्रतिमापीठविश्लिष्टे सुधाकर्मविहीनके ।
प्रत्यङ्गोपाङ्गहीने च प्रमादात् पतने पुनः ॥ ५ ॥

ப்ரதிமாபீட விஸ்லிஷ்டே சுதாகர்ம விஹீநகே!
ப்ரத்யங்கோ பாங்க ஹீநேச ப்ரமாதாத் பதநே புந:!!

பிம்பபீடம் நழுவினாலும் வர்ணப் பூச்சுக்கள் அழிந்தாலும், பிரத்யங்க அவயவங்கள், உபாங்க உருப்புகள் குறைவு பட்டாலும் அறியாமையால் விழுந்தாலும்

चोरचण्डालसंस्पृष्टे सूतके प्रेतसंभवे ।
पूजाहीनेऽष्टदिवसात् ऊर्ध्वं शतसमावधि ॥ ६ ॥

சோரசண்டாலஸம்ஸ்ப்ருஷ்டே சூதகே ப்ரேத ஸம்பவே!
பூஜாஹீணேஷ்ட திவஸாது ஊர்த்வம் சதஸமாவதி!!

திருடன், சண்டாலன் இவர்களால் தொடப்பட்டாலும் பிறப்புத்தீட்டு, இறப்புத்தீட்டு ஏற்பட்டாலும் 8 நாள் முதல் 100 வருடம் வரை பூஜையின்றி இருந்தாலும்

प्रोक्षणं त्वेवमाद्येषु तदनावर्तमीरितम् ।
आवर्ते पुनरावर्ते मासपक्षर्क्षकादिभिः ॥ ७ ॥

ப்ரோக்ஷணம் த்வேமவாத்யேஷு ததநாவர்ததீரிதம்!
ஆவர்த்தே புநராவர்த்தே மாஸ பக்ஷர்க்ஷ காதிபி:!!

செய்யப்படுகிற ப்ரோக்ஷணத்திற்கு அநாவர்தமென்று பொருள் ஆவர்த பிரதிஷ்டையிலும் புநராவர்தத்திலும் மாஸம், பக்ஷம் நக்ஷத்ரம் இவைகளை

प्रतिष्ठोक्तविधानेन कारयेद्देशिकोत्तम: ।
यात्राहोमं युगावर्ते अनावर्तं गुरूत्तम ॥ ८ ॥

ப்ரதிஷ்டோக்த விதாநேந காரயேத்தேசிகோத்தம:!
யாத்ரா ஹோமம் யுகாவர்த்தே கர்த்தவ்யம்
முநிபுங்கவ!!

பிரதிஷ்டைக்கு கூறப்பட்டுள்ள முறைப்படி ஆசார்யன் செய்ய வேண்டும். ஆவர்த்த பிரதிஷ்டைக்கு யாத்ரா ஹோமம் செய்ய வேண்டும். அநாவர்தத்திற்கு முறை கூறப்படுகிறது.

नदीर्त्तेन च नक्षत्रे न कालश्च न वारकम् ।
कालापेक्षं विना कुर्यात् अनावर्तं गुरूत्तम ॥ ९ ॥

நதீர்த்தேநச நக்ஷத்ரேண ந காலஸ்ச நவாரகம்!
காலா பேக்ஷாம் விநாகுர்யாது அநாவர்த்தம்
குருத்தம:!!

திதி, நக்ஷத்ரம், காலம் (லக்னம்) கிழமை இவைகளை ஆராயாமலும் காலந்தள்ளி போடாமலும் அநாவர்த ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும்.

पूर्वस्थापितबिम्बस्य न पुन: स्थापनं स्मृतम् ।
स्थापिते तु महान् दोषस्तस्मात् संप्रोक्षणं स्मृतम् ॥ १० ॥

பூர்வஸ்தாபித பிம்பஸ்ய ந புந: ஸ்தாபநம் ஸ்ம்ருதம்!
ஸ்தாபிதே து மஹாநு தோஷஸ்தஸ்மாது
ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ம்ருதம்!!

முன்பு ஸ்தாபிக்கப்பட்ட பிம்பத்தை (பாலாலய பிரதிஷ்டை) திரும்பவும் ஸ்தாபிக்கக்கூடாது. அவ்வாறு ஸ்தாபனம் செய்தால் ஸம்ப்ரோஷணம் செய்தல் வேண்டும்.

अङ्गस्य हानिसंधाने प्रतिष्ठां नैव कारयेत् ।
जलाधिवासरहितं नेत्रोन्मीलनवर्जितम् ॥ ११ ॥

அங்கஸ்ய ஹாநிஸந்தாநே ப்ரதிஷ்டாம் நைவ
காரயேத்!
ஜலாதி வாஸரஹிதம் நேத்ரோந்மீலந வர்ஜிதம்!!

அங்கங்களின் குறைவுச் சேர்க்கையில் உடன் பிரதிஷ்டை செய்ய வேண்டும். ஜலாதி வாஸம் நயநோன் மீலனம் இன்றியும் செய்ய வேண்டும்.

संप्रोक्षणविहीने तु पूजा निष्फलदायिनी ।
जायते तु महान् दोषस्तस्मात् संप्रोक्षणं चरेत् ॥ १२ ॥

ஸம்ப்ரோக்ஷண விஹீநேது பூஜா நிஷ்கல தாயிநீ!
ஜாயதேது மஹாநு தோஷஸ்தஸ்மாது
ஸம்ப்ரோக்ஷணம் சரேத்!!

ஸம்ப்ரோக்ஷணமின்றி செய்யப்படும் பூஜை, பயனற்றதாக ஆகும். பெருங்குற்றமே ஏற்படும். ஆகையால் கட்டாயம் ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும்.

निमित्ते समनुप्राप्ते सद्य: कृत्वा समर्चयेत् ।
आसप्तदिवसात्पूर्वं कुम्भमावाह्य मन्त्रवित् ॥ १३ ॥

நிமித்தே ஸமநு ப்ராப்தே ஸத்யம் க்ருத்வா
ஸமர்ச்சயேத்!
ஆஸப்த திவாஸாத்பூர்வம் கும்பமாவாஹ்ய
மந்த்ரவித்!!

ஸம்ப்ரோக்ஷண ஸமயமேற்படும் போது உடன்ஸம்ப்ரோக்ஷணம் செய்து பூஜிக்கவும். பிரதிஷ்டைக்கு ஏழுதினம் முன்பே கும்பத்தில் மூர்த்தியை ஆவாஹிக்கவும்.

अग्रे वा दक्षिणे वामे मण्डले स्थण्डिलोपरि ।
कुम्भं न्यस्त्वा समभ्यर्च्य पुनर्बेरं समावहेत् ॥ १४ ॥

அக்ரேவா தக்ஷிணே வாமே மண்டபே
ஸ்தண்டிலோ பரி!
கும்பம் ந்யஸ்த்வா ஸமப்யர்ச்ய புநர்பேரம்
ஸமாவஹேத்!!

முன்பாகவோ, வலதுபுறமோ, இடது புறமோ மண்டலத்தில் ஸ்தண்டிலத்தின் மேல் கும்பம் வைத்து பூஜித்து பிறகு பாலபிம்பத்தில் ஆவாஹிக்கவும்.

तदूर्ध्वे बालहर्म्ये तु स्थाप्य मूले पुनर्न्यसेत् ।
प्रासादाग्रे तु कर्तव्यं दक्षिणे चोत्तरेऽपि वा ॥ १५ ॥

ததூர்த்வே பால ஹர்ம்யேது ஸ்தாப்யமூலே புநர்ந்யஸேத் !
ப்ரசாதாக்ரே து கர்த்தவ்யம் தக்ஷிணே சோத்தரே பிவா !!

அதற்கு மேல் பாலாலயத்தில் பிம்பஸ்தாபனம் செய்து பிறகு திருப்பணி முடிந்தவுடன் பாலாலயத்திலிருந்து ஆகர்ஷித்து யாகாதிவாஸம் செய்து மூலாலயத்தில் சேர்க்கவும்.

यथाविभवविस्तारं मण्डपं कारयेत् बुधः ।
चतुर्द्वारसमायुक्तं चतुस्तोरणभूषितम् ॥ १६ ॥

யதாவிபவ விஸ்தாரம் மண்டபங்காரயேத் புத:!
சதுர்த்வார ஸமாயுக்தம் சதுஸ்தோரணபூஷிதம் !!

சக்திக்கேற்றவாறு விஸ்தாரமாக மண்டபத்தை 4 வாயிலையுடையதாகவும், நான்கு தோரணமுள்ளதாயும் அமைத்து

वितानादिध्वजोपेतं अष्टमङ्गलसंयुतम् ।
दर्भमाला समायुक्तं बिल्वपल्लवशोभितम् ॥ १७ ॥

விதாதாதி த்வஜோபேதம் அஷ்டமங்கள ஸம்யுதம் !
தர்பமாலா ஸமாயுக்தம் வில்வ பல்லவ சோபிதம் !!

விதானம் கொடியிவைகளுடனும், அஷ்டமங் களத்துடனும், தர்பமாலை பழம், தளிர் இவைகளால் அலங்கரிக்கப்பட்டதும்

नक्षत्रतिथिनारे च पञ्चमे सप्तमेऽह्नि वा ।
पूर्वोक्तविधिना धीमाम् कारयेदङ्कुरार्पणम् ॥ १८ ॥

நக்ஷத்ர திதி வாரேச பஞ்சமே ஸப்தமேஹ்நிவா !
பூர்வோக்த விதிநா தீமாந் காரயேதங்குரார்ப்பணம் !!

சிறந்த நக்ஷத்திரம், திதி, கிழமைகளின் ஐந்தாம் நாள் ஏழாம் நாளோ முன்பு கூறப்பட்டுள்ள முறைப்படி அங்குரார்ப்பணம் செய்யவும்.

मण्डपं नवधा कृत्वा मध्यभागे तु वेदिकाम् ।
रत्निमात्रसमुत्सेधं दर्पणोदरसंनिभम् ॥ १९ ॥

மண்டபம் நவதாக்ருத்வா மத்ய பாகேது வேதிகாம் !
ரத்னி மாத்ரஸமுத்ஸேதம் தர்பணோ தர சந்நிபம் !!

மண்டபத்தை ஒன்பதாக பிரித்து நடுபாகத்தில் வேதிகையை ஓர்முக உயரமும் கண்ணாடி போன்று வழவழப்பாகவும் அமைக்கவும்.

वेद्या मूले तु परितश्चोपवेदिं प्रकल्पयेत् ।
युग्माङ्गुलसमुत्सेधं द्विगुणं दीर्घमुच्यते ॥ २० ॥

வேத்யா மூலேத் பரிதஸ்சோபவேதிம் ப்ரகல்பயேத் !
யுக்மாங்குல ஸமுத்ஸேதம் த்விகுணம் தீர்கமுச்யதே !!

வேதிகையைச் சுற்றிலும் அடியில் உபவேதி அமைக்கவும். 2 அங்குல உயரமும் நான்கு அங்குல அகலமுள்ளதாக அமைக்கவும்.

कुण्डानि परितः कुर्यात् नवपञ्चैकमेव च ।
दिशासु चतुरश्राणि कोणेष्वत्र कुशेशायम् ॥ २१ ॥

குண்டாணிபரித: குர்யாத் நவபஞ்சைக மேவச !
திசாசுச்துரஸ்ராணி கோணேஷ்வத்ர குசேசயம் !!

வேதிகையை சுற்றி ஒன்று, ஐந்து, ஒன்பது என்ற முறைப்படி குண்டம் அமைக்கவும். கிழக்கு முதலான திசைகளில் நான்கோண குண்டமும் தென்கிழக்கு முதலான கோணங்களில் பத்ம குண்டமும் அமைக்க வேண்டும்.

शक्रशाङ्करयोर्मध्ये प्रधानं षडश्रकम् ।
पञ्चकुण्डेषु कोणेषु वर्जयेदब्जकुण्डकम् ॥ २२ ॥

சக்ர சாங்கயோர்மத்யே ப்ரதாநம்துஷடஸ்ரகம் !
பஞ்சகுண்டேஷு கோணேஷு வர்ஜயேதப்ஜகுண்டகம் !!

கிழக்கிற்கும், ஈசானத்திற்கும் நடுவில் பிரதான குண்டம் அறுகோணமாக அமைக்கவும். பஞ்சகுண்ட பக்ஷத்தில் மூலைகளில் போடக்கூடிய பத்மகுண்டத்தை வர்ஜிக்கவும்.

एककुण्डे तथैशाने कारयेत्तु षडश्रकम् ।
आवर्ते तु मुनिश्रेष्ट बालबेरस्य चाग्रत: ॥ २३ ॥

ஏக குண்டேததைஸானே காரயேத்து ஷடஸ்ரகம்!
ஆவர்த்தேது முநிஸ்ரேஷ்ட பாலபேரஸ்ய சாக்ரத:!!

ஓர் குண்ட பக்ஷத்தில் வடகிழக்கு மூலையில் அறுகோண குண்டம் அமைக்கவும். ஆவர்த்த பிரதிஷ்டையில் பால பிம்பத்திற்கு முன்னதாக

अङ्गन्यासं करन्यास मन्तर्यागमथाचरेत् ।
विशेषार्घ्यस्थतोयेन प्रोक्षयेदस्त्रमन्त्रत: ॥ २४ ॥

அங்கந்யாஸம் கரந்யாஸம் அந்தர்யாக மதாசரேத்!
விசேஷார்கய ஸ்ததோயேந ப்ரோக்ஷயே
தஸ்த்ரமந்த்ர:!!

கரந்நியாஸம், அங்கந்நியாஸம், அந்தர்யாக இவைகளைச் செய்யவும். விசேஷார்க்யம் செய்து, அந்த தீர்த்தத்தால் அஸ்த்திர மந்திரத்தினால் ப்ரோக்ஷிக்கவும்.

स्थण्डिलं कल्प्य मतिमान् निर्दोषैर्हेमशालिभि: ।
सूत्राभिधानरत्नाढ्यं कुम्भं तस्योपरि न्यसेत् ॥ २५ ॥

ஸ்தண்டிலம் கல்ப்ய மதிமாநு நிர்தோஷை ஹேம
ஸாலிபி:!
ஸூத்ராபிதாநரத்நாட்யம்
கும்பஸ்யோபரிவிந்யஸேத்!!

சுத்தமான பொன்னி (ஹேம) நெற்களால் ஸ்தண்டிலம் அமைத்து நூல் சுற்றி, கும்பரத்னமிடப்பட்ட கும்பத்தை வேதிகை மேல் வைத்து

वर्धन्यौ हेमस्युक्ते न्यसेद् दक्षिणवामयो: ।
परित: कलशानष्टौ स्वस्थानेषु क्रमान्न्यसेत् ॥ २६ ॥

வர்தந்யோர் ஹேமஸம்யுக்தே ந்யஸேத்தக்ஷிண
வாமயோ:!
பரித: கலஸாநெஷ்டள ஸ்வஸ்தாநேஷு
க்ரமாந்யஸேத்!!

ஸ்வர்ணபட்ட மிடப்பட்ட (போடப்பட்ட) 2 வர்தனிகளை வலது, இடது புறமாக வைத்து அந்தந்த இடங்களில் முறைப்படி (கும்பத்தைச் சுற்றிலும்) அஷ்டவித்யேஸ்வர கும்பம் (எண்மரை) ஸ்தாபிக்கவும்.

मध्यकुम्भे महासेनं बालबेरात् समावहेत् ।
मूलबेरप्रवेशाय बालस्थानादिह प्रभो ॥ २७ ॥

மத்யகும்பே மஹாஸேநம் பாலபேராத்
ஸமாவஹேத்!
மூலபேர; ப்ரவேசாய பாலஸ்தாநாதிஹ ப்ரபோ!!

நடு கும்பத்தில் ஸ்கந்தரை பால பிம்பத்திலிருந்து ஆகர்ஷித்து ஆவாஹிக்கவும். மூலஸ்தானத்திற்குள் நுழையும் பொருட்டு பாலஸ்தான பிம்பத்திலிருந்து

कुम्भे विशन्तु सर्वेशा: सुब्रह्मण्यप्रियो भव ।
इदं मन्त्रं समुच्चार्य पूजयेद् गन्धपुष्पकै: ॥ २८ ॥

கும்பேசவிசந்து ஸர்வேசா: ஸுப்ரஹ்மண்ய
ப்ரியோபவ!
இதம் மந்த்ரம் ஸமுச்சார்ய பூஜயேத் கந்த
புஷ்பகை:!!

இந்த கும்பத்தில் எல்லா மூர்த்தங்களுடன் சுப்ரமணியருடன் பிரவேசிப்பீராக! இந்த மந்திரம் கூறி கலசத்தில் சேர்த்து சந்தன புஷ்பங்களால் பூஜிக்கவும்.

महावल्लीं देवसेनां वर्धन्योः पार्श्वसंस्थयोः ।
तत्तद्बेरात्समादाय क्रमेणावाह्य पूजयेत् ॥ २९ ॥

மஹாவள்ளீம் தேவஸேநாம் வா்தந்யோ: பாா்ஸ்வ ஸம்ஸ்தயோ!
தத்தத்பேராத் ஸமாதாய க்ரமேணாவாத்ய பூஜயேத்!!

இருபக்கமுள்ள வா்த்தனிகளில், மஹாவள்ளீ, தேவஸேனாவை அந்தந்த பேரத்திலிருந்து ஆகா்ஷித்து ஆவாஹித்து முறைப்படி பூஜிக்கவும்.

जयन्ताद्यष्टविद्येशान् पीठादावाह्य पूजयेत् ।
स्थापयेन्मूलमन्त्रेण षड्वर्णेनावकुण्ठयेत् ॥ ३० ॥

ஜயந்தாத்யஷ்ட வித்யேஸாநு பீடாதாவாஹ்ய பூஜயேத்!
ஸ்தாபயேந்மூல மந்த்ரேண ஷட்வா்ணே நாவகுண்டயேத்!!

ஜயந்தா் முதலான அஷ்ட வித்யேஸ்வரா்களை பீடத்திலிருந்து ஆகா்ஷித்து ஆவாஹித்து பூஜிக்கவும். மூலமந்திரத்தினால் ஸ்தாபனமும் ஷடக்ஷர மந்திரத்தினால் அவகுண்டனமும் செய்ய வேண்டும்.

सांनिध्यं हृदयेनैव यजेत्पुष्पादिभिः क्रमात् ।
दर्शयेद्बिम्बमुद्राञ्च षण्मुखीं पद्ममुद्रिकाम् ॥ ३१ ॥

ஸாந்நித்யம் ஹ்ருதயேநைவ யஜேத் புஷ்பாதி பி:க்ரமாத்!
தா்சயேத்பிம்பமுத்ராஞ்ச ஷண்முகம் பத்மமுத்ரிகாம்!!

ஹ்ருதய மந்திரத்தினால் ஸாந்நித்யமும், புஷ்பங்களால் பூஜையும் செய்யவும். பிம்ப முத்ரையும், ஷண்முகீ முத்ரையும் காண்பிக்கவும்.

नमस्काराख्यमुद्राञ्च दिक्बन्धेदस्त्रमन्त्रतः ।
यात्राहोमं प्रकर्तव्यं बालस्थानस्य चाग्रतः ॥ ३२ ॥

நமஸ்காராக்ய முத்ராஞ்ச திக்பந்தே தஸ்த்ர மந்த்ரத:!
யாத்ராஹோமம் ப்ரகா்த்வ்யம் பாலஸ்தாநஸ்ய சாக்ரத:!!

நமஸ்கார முத்ரையும், அஸ்திர மந்திரத்தினால் திக்பந்தனமும் செய்து பாலாலயத்திற்கு முன்பாக யாத்ரா ஹோமம் செய்யவும்.

निर्दोषैः सिकतैः कृत्वा स्थाण्डिलं हस्तमात्रतः ।
अग्न्याधानादिकं सर्वमाग्निकार्योक्तमाचरेत् ॥ ३३ ॥

நிா்தோஷை: ஸிகதை க்ருத்வா ஸ்தண்டிலம் ஹஸ்த மாத்ரத:!
அக்ன்யாதாநாதிகம் ஸா்வம் அக்னி காா்யோக்த மாசரேத்!!

ஓா் முழ அளவிற்கு சுத்தமான மணலால் ஹோமத்திற்கு ஸ்தண்டிலம் அமைத்து, அக்னிகாா்ய முறைப்படி அக்னிகாா்யம் செய்து

सद्योमन्त्रेण समिधमीशानेन घृतं हुनेत् ।
जगद्भवादिषण्मन्त्रैः स्पृष्टा स्पृष्टा हुनेत्ततः ॥ ३४ ॥

ஸத்யோமந்த்ரேண ஸமிதமீசாநேந க்ருதம் ஹுநேத்!
ஜகத் புவாதிஷண்மந்த்ரை: ஸ்ப்ருஷ்ட்வா ஸ்ப்ருஷ்டாவாஹுநேதத:!!

ஸத்யோஜாத மந்திரத்தினால் ஸமித்தையும், ஈசான மந்திரத்தினால் நெய்யையும் ஜகத்புவம் முதலான ஆறு மந்திரங்களால் நெய், சமித்து, ஸ்பா்சம் செய்த பயிறு ஹோமம் செய்யவும்.

गुरुस्तु मण्डपं गत्वा पुण्याहं वाचयेत्ततः ।
पर्यग्निकरणं कुर्यात् वास्तुहोमेन वर्त्मना ॥ ३५ ॥

குருஸ்து மண்டபம் க்ருத்வா புண்யாஹம் வாசயேத்தத:!
பா்யக்னி கரணம் குா்யாத் வாஸ்து ஹோமேந வா்த்மனா!!

ஆசார்யன் மண்டபமடைந்து புண்யாஹ வாசனம் செய்து வாஸ்து ஹோமமும் பர்யக்னி கரணமும் செய்ய வேண்டும்.

शिरसा वाहयित्वा तु कुम्भञ्च वर्धनीद्वयम् ।
क्रमाद्विद्येशकलशान् मूर्तिभि: परिवारकै: ॥ ३६ ॥

சிரஸா வாஹ யித்வாது கும்பஞ்ச வர்த்தனீத்வயம்!
க்ரமாத் வித்யேசகலஸாந் மூர்த்திபி: பரிவாரகை:!!

மூலாலயத்திலிருந்து கும்பம் 2 வர்த்தனிகளை தலை முன் வைத்து பரிவார மூர்த்திபர்களால் வித்யேச கலசங்களையும் எடுத்துக் கொண்டு

सर्वातोद्यसमायुक्तं वेदघोषसमान्वितम् ।
हर्म्यप्रदक्षिणं कृत्वा वेदिकोपरि विन्यसेत् ॥ ३७ ॥

ஸர்வா தோத்ய ஸமாயுக்தம்
வேத கோஷ ஸமன்விதம்!
ஹர்ம்ய ப்ரதக்ஷிணம் க்ருத்வா வேதி கோபரி
விந்யஸேத்!!

எல்லா வாத்ய கோஷம் வேத கோஷங்களுடனும் ஆலயம் வலம் வந்து வேதிகையின் மேல் வைக்கவும்.

सकलीकृत्य संप्रोक्ष्य विशोषार्घ्यजलेन च ।
देविदेवीशविद्येशान् पूजयेत्तु यथाक्रमम् ॥ ३८ ॥

ஸகளீக்ருத்ய ஸம்ப்ரோக்ஷ்ய
விசேஷார்க்யஜலேநச!
தேவிதேவீச வித்யேசாந் பூஜயேத்து யதாக்ரமம்!!

ஸகளீ கரணம் செய்து விசேஷார்க்ய ஜலத்தினால் ஸம்ப்ரோக்ஷணம் செய்து தேவன், தேவியர், வித்யேசர்களை முறைப்படி பூஜிக்கவும்.

(सर्वातोद्यसमायुक्तं वेदघोषसमन्त्रितम् ।)
परिवारघटांश्चैव स्थापयेद्विधिपूर्वकम् ॥
तत्तन्मूर्त्याकृतिं ध्यात्वा बाह्यकुम्भे समर्चयेत् ॥ ३९ ॥

ஸர்வாதோத்ய ஸமாயுக்தம் வேதகோஷ
ஸமந்விதம்!
பரிவாரகடாம்ச்சைவ ஸ்தாபயே த்விதி பூர்வகம்!!
தத்தந்மூர்த்யா க்ருதிம் த்யாத்வா பாஹ்யகும்பே
ஸமர்ச்சயேத்!

எல்லா வாத்ய கோஷங்களுடனும் வேத கோஷங்களுடனும், பரிவார கடங்களையும், முறைப்படி ஸ்தாபிக்கவும். அந்தந்த மூர்த்தி தியானம் செய்து வெளிக்கலசங்களையும் அர்ச்சிக்கவும்.

मण्डपद्वारपूजादि सर्वं पूर्ववदाचरेत् ।
तत: स्वाध्यायनं कुर्याच्छिवभक्तियुतैर्द्विजै: ॥ ४० ॥

மண்டபத்வாரபூஜாதி ஸர்வம்பூர்வ வதாசரேத்!
தத: ஸ்வாத்யாய நங்குர்யாத் சிவபக்தி
யுதைர்த்விஜை:!!

மண்டபத்வார பூஜைகளை முன்புள்ளபடி செய்யவும். சிவபக்தியுள்ள பிராமணர்களால் வேத பாராயணங்களை செய்யவும்.

शिवसङ्कल्पादिपैश्च तत: श्रीरुद्रसूक्तकै: ।
स्कन्दसूक्तञ्च चमकं पूर्वभागे यजेत्सुधी: ॥ ४१ ॥

சிவ ஸங்கல்ப தீபைஸ்சதத ஸ்ரீருத்ர ஸூக்தகை:!
ஸ்கந்த ஸூக்தஞ்ச சமகம் பூர்வபாகே ஜபேத் புத:!!

சிவசங்கல்பம் செய்து ஸ்ரீருத்ர ஸூக்தங்கள், ஸ்கந்த ஸூக்தம், சமகம், இவைகளை கிழக்கு திசையில் பாராயணம் செய்யவும்.

शिवसूक्तं पावमानं शान्तिद्वयं च दक्षिणे ।
त्र्यम्बकं विष्णुसूक्तञ्च वारुणं चैव पश्चिमे ॥ ४२ ॥

சிவஸூக்தம் பாவமாநம் சாந்தி
த்வயஞ்சதக்ஷிணே!
த்ரயம்பகம் விஷ்ணு ஸூக்தஞ்ச வாருணஞ்சைவ
பச்சிமே!!

சிவசூக்தம், பவமான சூக்தம், 2 சாந்தி மந்திரங்கள் (சாந்தி பஞ்சகம், தசசுத்தி) இவைகளை தெற்கிலும் த்ரயம்பகம், விஷ்ணுசூக்தம், வருணசூக்தம், இவைகளை மேற்கிலும்

उत्तरे तु हिरण्यञ्च बृहद्रथन्तर मन्त्रतः ।
षडक्षरेण मन्त्रेण कोणेषु च जपेत् बुधः ॥ ४३ ॥

உத்தரம் துஹிரண்யஞ்ச ப்ருத்ஸாம் மதிமந்த்ரத:!
ஷடக்ஷரேண மந்த்ரேண
கோணேஷுசஜபேத்யுத:!!

வடக்கில் ஹிரண்யம் ப்ருஹத்ஸாம மந்திரங்களை ஜபிக்கவும். ஷடக்ஷர மந்திரத்தினால் 4 கோணங்களில் ஜபிக்கவும்

आचार्यो मूर्तिपैः सार्धं ततो होमं समाचरेत् ।
समिधाज्यचरून् लाजं सर्षपं च यवं तिलम् ॥ ४४ ॥

ஆசார்யோ மூர்த்திபைஸ்ஸார்த்தம் ததா
ஹோமம்ஸமாசரேத்!!
ஸமிதாஜ்யசரும்லாஜம் ஸர்ஷபஞ்சயவந்திலம்!

ஆசார்யன் மூர்த்திபர்களுடன் ஹோமம் செய்யவும். சமித்து, நெய், சரு, பொறி, கடுகு, யவை, எள்

होमद्रव्याणि सप्तैतान्यथावज्जुहुयात्क्रमात् ।
पालाशखादिशाश्वत्थबिल्वान् पूर्वादिदिक्षु च ॥ ४५ ॥

ஹோமத்ரவ்யாணி ஸப்தைதா ந்பதாவஜ்ஜுஹுயாத்
க்ரமாத்!!
பலாச, காதிராஸ்வத்த பில்வக்த
பில்வாந்பூர்வாதிக்ஷுச!

ஆகிய 7 திரவியங்களை முறைப்படி ஹோமம் செய்யவும். புரசு, கருங்காலி, அரசு, பில்வம், இவைகளை கிழக்கு முதலான திசைகளில்

शमीखादिरमायूरा वटाश्चेति विदिक्षु च ।
प्रधानस्य पलाशः स्यात् समिधः परिकीर्तिताः ॥ ४६ ।

ஸமீகாதிர மாயூர வடாஸ்சேதிவிதிக்ஷுச!
ப்ரதாநஸ்ய பலாஸம்ஸ்யாத் ஸமித:பரிகீர்த்திதா:!!

வன்னி, கருங்காலி, மயிற்கொன்னை, ஆல் ஆகிய சமித்துகளை தென்கிழக்கு முதலான திசைகளிலும் பிரதானத்திற்கு புரசு சமித்தையும் ஹோமம் செய்யவும்.

स्कन्दस्य मूलमन्त्रेण ततः षण्मूर्तिमन्त्रतः ।
होमद्रव्याणि जुहुयात् प्रत्येकं तु षडाहुतिः ॥ ४७ ॥

ஸ்கந்தஸ்ய மூலமந்த்ரேண தத:ஷண்மூர்த்தி
மந்த்ரத:!
ஹோமத்ரவ்யாணி ஜுஹுயாத்
ப்ரத்யேகந்துஷடாஹுதி:!!

ஸ்கந்தருடைய மூலமந்திரத்தினாலும், ஷண்மூர்த்தி மந்திரத்தினாலும், ஒவ்வொன்றை 6 ஆகுதியாக ஹோமத்ரவியங்களை ஹோமம் செய்யவும்.

सद्यादिना शिरोऽन्तेन मन्त्रेण जुहुयात्ततः ।
शतमर्धं तदर्धं वा प्रत्येकं जुहुयात्क्रमात् ॥ ४८ ॥

ஸத்யாதிநாசிரோந்தேந மந்த்ரேண ஜுஹுயாத்தத:!
சதமர்த்தம் ததர்த்தம்வா
ப்ரத்யேகஞ்சுஹுயாத்க்ரமாத்!!

ஸத்யோஜாத, சிரோமந்திராதிகளால், ஹோமம் செய்யவும். 100, 50, 25 ஆகுதி ஒவ்வோரு மந்திரத்தினால் ஹோமம் செய்யவும்.

पूर्णाहुतिं च शिरसा स्विष्टमग्नेति होमयेत् ।
जयादिरभ्याधानञ्च राष्ट्रभृच्च हुनेत्क्रमात् ॥ ४९ ॥

பூர்ணாஹுதிஞ்சசிரஸா ஸ்விஷ்டமக்னேதி
ஹோமயேத்!
ஜயாதிரப்யாதாநஞ்ச ராஷ்ட்ரப்ருச்ச
ஹுநேத்க்ரமாத்!!

"சிரோமந்திரத்தினால் பூர்ணாகுதியும் ஸ்விஷ்ட மக்னே" என்று ஹோமம் செய்யவும். ஜயாதி ஹோமமும், ராஷ்ட்ரப்ருத் ஹோமமும்

नेत्रोन्मीलादिकं सर्वं नवबेरस्य कारयेत् ।
तत्प्रतिष्ठा विधानेन शेषं कर्म समाचरेत् ॥ ५० ॥

நேத்ரோந்மீலாதிகம் ஸர்வம் நவபேரஸ்யகாரயேத்।
தத் பிரதிஷ்டாவிதாநேந சேஷம்கர்ம ஸமாசரேத்॥

நயநோன்மீலனம் எல்லாம் புதிய பிம்பத்திற்கு செய்ய வேண்டும். அந்த புதிய பிம்ப பிரதிஷ்டையை முறைப்படி செய்யவும்.

पुनरावर्तने विद्वान् मूलबेरात् प्रगृह्य च ।
बालबेरं समावाह्य पुनर्मूले प्रवेशयेत् ॥ ५१ ॥

புநராவர்தகே வித்வாந் மூலபேரம் ப்ரக்ருஹ்யச।
பாலபேரம் ஸமாவாஹ்ய புநர்மூலே ப்ரவேசயேத்॥

புனராவர்தன பிரதிஷ்டையோவெனில் மூலபிம்பத்தி லிருந்து கலாகர்ஷணம் செய்து பாலாலயபிம்பத்தில் சேர்த்து பிறகு மூலாலய பிம்பத்தில் சேர்க்க வேண்டியது.

अनावर्ते तु यद्धाम चण्डालादिप्रदूषिते ।
मृण्मयानि च पात्राणि सर्वाणि परिवर्जयेत् ॥ ५२ ॥

அநாவர்தேதுயத்தாம சண்டாலாதி ப்ரதூஷிதே।
ம்ருண்யாநிச பாத்ராணி ஸர்வாணி பரிவர்ஜயேத்॥

அனாவர்த்த பிரதிஷ்டை ஆலயத்தில் சண்டாளர் முதலானவர்களால் அசுத்தம் செய்யப்பட்டால் மண்கலயம் முதலிய மண்பாத்ரங்களை தள்ளுபடி செய்யவும்.

कांस्यापात्राणि सर्वाणि शुद्धिं कृत्वा तु भस्मभिः ।
यथायोग्यं याकार्यं वस्त्रोपकरणानि च ॥ ५३ ॥

காம்ஸ்ய பாத்ராணி ஸர்வாணி சுத்திம் க்ருத்வாது
பஸ்மபி:।
யதாயோக்யம் யதாகார்யம் வஸ்த்ரோப கரணாநிச॥

வெண்கல பாத்ரம் முதலிய பாத்ரங்களை விபூதியால் சுத்தி செய்து உபயோகிக்கவும். வஸ்திரங்கள், உபகரணங்கள் இவை உபயோகப்படுத்த ஏற்றவாறு சுத்தி செய்து கொள்ளவும்.

स्कन्दस्यायतनं चैव गोमयेन विलेपयेत् ।
पुण्याहं वाचयित्वाथ शुद्धाद्भिरभिषेचयेत् ॥ ५४ ॥

ஸ்கந்தஸ்யாய தநம் சைவ கோமயேந
விலேபயேத்॥
புண்யாஹம் வாசயித்வாத சுத்தாத்பிர பிஷேசயேத்।

முருகன் ஆலயத்தை பசுஞ்சாணத்தால் மெழுகவும். புண்யாஹவாசனம் செய்து சுத்தமான தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யவும்.

पञ्चगव्यैश्च संस्नाप्य घर्षयेद्बिल्वपत्रकैः ।
दर्भमूले तु वल्मीकक्षेत्रमृद्ग्राह्य लेपयेत् ॥ ५५ ॥

பஞ்சகவ்யைச்ச ஸம்ஸ்நாப்ய கர்ஷயேத் பில்வ
பத்ரனக:।
தர்பமூலேது வல்மீக க்ஷேத்ரம்ருத் க்ராஹ்ய
லேபயேத்॥

பஞ்சகவ்யத்தினால் அபிஷேகித்து பில்ப பாத்திரத்தினால் பிம்பத்தை தேய்க்கவும். தர்பையடி மண், புற்றடி மண், புண்ய சூத்ர மண் இவைகளை எடுத்து பூசவும்.

कौतुकं बन्धयित्वा तु हेम सूत्रेण मन्त्रवित् ।
अर्कपङ्कज बिल्वैश्च मायूराऽशोकपाटलैः ॥ ५६ ॥

கௌதுகம் பந்தயித்வா து ஹேம ஸூத்ரேயன
மந்த்ரவித்।
அர்க்கபங்கஜ பில்வைச்ச
மாயூராSசோகபாட்டலை:॥

गन्धोदैः स्वर्णतोयैश्च बिल्वोदैः स्नापयेत् गुहम् ।
नन्द्यावर्तैर्मल्लिकाभिर्मधूकाशोकपाटलैः ॥ ५७ ॥

கந்தோதை ஸ்வர்ண தோயைச்ச பில்வோதை ஸ்நாபயேத் குஹம்!
நந்யா வர்த்தைர் மல்லிகாபிர் மதுூகாசோக பாடலை:!!

தங்கக் கம்பியால் ரக்ஷாபந்தனம் செய்யவும். எருக்கு, தாமரை, பில்வம், மயிற்கொன்னை, அசோக, பாதிரி முதலிய புஷ்போதகங்களாலும்,

पुन्नागैः कर्णिकारैश्च कुमुदोत्पलपुष्पकैः ।
बृहतीद्रोणपुष्पैश्च व्याघातैर्जातिचम्पकैः ॥ ५८ ॥

புந்நாகை: கர்ணிகாரைச்ச குமுதோத்பல புஷ்பகை:!
ப்ரஹதீ த்ரோண புஷ்பைச்ச வ்யாகாதைர்ஜாதி சம்பகை:!!

சந்தனம், பில்வோதகம், ஸ்வர்ணோதகம் இவைகளால் ஸ்கந்தரை அபிஷேகிக்கவும். நந்தியாவட்டை, மல்லிகை, இலுப்பை, அசோக, பாதிரி

बेरं संपूज्य विधिवत् छादयेद्वा निरन्तरम् ।
आच्छाद्य नववस्त्रैश्च प्रतिबेरं विशेषतः ॥ ५९ ॥

பேரம் ஸம் பூஜ்ய விதிவத் சாதயே த்வாநிரந்தரம்!
ஆச்சாத்ய நவவஸ்த்ரைச்ச ப்ரதிபேரம் விசேஷத:!!

புன்னை, கோங்கு, ஆம்பல், நீலோத்பலம், கொன்னை (ப்ரஹதீ), அரளீ, தும்பை பூ, (வ்யாகாத்), ஜாதிப்பூ, சம்பகம் புஷ்பம் இவைகளால்

लोहजेः शयनं कार्यमथवाच्छदनं मतम् ।
मण्डपद्वारपूजा होमकर्माणि च पूर्ववत् ॥ ६० ॥

லோஹஜைச்சயநங்கார்யம் அதவாச்சாதநம் மதம்!
மண்டபாத்வார பூஜாச ஹோம கர்மச பூர்வவத்!!

பிம்பத்தை பூஜித்து, ஒவ்வொரு பிம்பத்தையும் புதிய வஸ்திரங்களால் இடைவெளியின்றி போர்த்தி

प्रभाते देशिकः स्नात्वा मूर्तिपैः सह मन्त्रवित् ।
कुम्भञ्च कर्धनीद्वे च वाहयित्वा समूर्तिपैः ॥ ६१ ॥

ப்ரபாதே தேசிகஸ்நாத்வா மூர்த்திபைஸ்ஸஹ மந்த்ர வித்!!
கும்பஞ்ச வர்த்தநீத்வேச வாஹயித்வாத மூர்த்திபை:!

உலோக பிம்பமாயிருந்து சயநாதிவாஸம் செய்யவும். அவ்வாறு இல்லையெனில் வஸ்திரத்தினால் போர்த்தி, மண்டப பூஜை, த்வார பூஜை, அக்னி கார்யம் வரை முன்பு போல் செய்யவும்.

हर्म्यं प्रदक्षिणं कृत्वा गुहाग्रे स्थण्डिलं न्यसेत् ।
पुत्रभ्रातृकलत्रैश्च यजमानो व्रजेदनु ॥ ६२ ॥

ஹர்ம்யம் ப்ரதிக்ஷிணம் க்ருத்வா குஹாக்ரே ஸ்தண்டிலே ந்யஸேத்!
புத்ரப்ராத்ரு களத்ரைச்ச யஜமாநோதி பக்திமாந்!!

அதிகாலை மந்திரமறிந்த ஆசார்யன், மூர்த்திபர்களுடன் ஸ்நானம் செய்து பூஜைகளை முடித்து மூர்த்திபர்களுடன் கும்பத்தை 2 வர்த்தனிகளையும் எடுத்து

शुक्लवासा गुरुः प्रीतो हैमपञ्चाङ्गभूषणैः ।
बिम्बशुद्धिकृतस्तोयं स्कन्दबेरं विशेषतः ॥ ६३ ॥

சுக்லவாஸா குரு ப்ரீதோ ஹைம பஞ்சாங்க பூஷண:!
பிம்ம சுத்திம் க்ருதோதோயை ஸ்கந்தபேரம் விசேஷத:!!

ஆலயம் வலம் வந்து முருகனுக்கு முன்னதாக ஸ்தண்டிலம் அமைக்கவும். பையன் ஸஹோதர், மனைவிகளுடன், மிகவும் பக்திமானான ஆசார்யன்

विन्यसेदक्षरन्यासं ब्रह्माङ्गन्यासमुत्तमम् ।
कुम्भान्मन्त्रं समादाय वेरस्य हृदि विन्यसेत् ॥ ६४ ॥

விந்யஸேதக்ஷரந்யாஸம் ப்ரம்மாங்கந்யாஸ முத்தமம்!
கும்பாந் மந்த்ரம் ஸமாதாய பேரஸ்ய ஹ்ருதி விந்யஸேத்!!

வெண்மையான வஸ்திரம் ஸ்வர்ணத்தால் என பஞ்சாங்களை அணிந்து மகிழ்ச்சியாய் விசேஷமாக ஸ்கந்த பிம்பத்திற்கு பிம்பசுத்தி செய்ய வேண்டும்.

शक्त्योर्बीजं समादाय शक्त्योरुपरि विन्यसेत् ।
कुम्भोदकैश्च संस्नाप्य देवदेवीर्यथाक्रमम् ॥ ६५ ॥

சக்த்யோர்பீஜம் ஸமாதாய சக்த்யோருபரி விந்யஸேத்!
கும்போதகைச்ச ஸம்ஸ்நாப்ய தேவதேவீர் யதாக்ரமம்!!

ப்ரும்மாங்க நியாஸமும், அக்ஷரந்யாஸமும் செய்து கும்பத்திலிருந்து மந்திரங்களை எடுத்து பிம்ப ஹ்ருதயத்தில் சேர்க்கவும்.

जयन्ताद्यष्टविद्येशान् क्रमात्पीठे तु विन्यसेत् ।
तत्कुम्भस्थोदकैः स्कन्दं स्नापयेत्तु दशाक्षरैः ॥ ६६ ॥

ஜயந்தாத்யஷ்ட வித்யேசாந் க்ரமாத் பீடே து விந்யஸேத்!
தத் கும்பஸ்தோதைக ஸ்கந்தம் ஸ்நாபயேத்து தசைக்ஷரை:!!

சக்தி பீஜத்தை எடுத்து 2 தேவியரின் மேல் சேர்க்கவும். கும்பதீர்த்தங்களால், தேவன், தேவியரை முறைப்படி அபிஷேகம் செய்யவும்.

परिवारघटाद्भिस्तु स्वस्वस्थाने क्रमाद्बुधः ।
बीजानि विधिवन्न्यस्त्वा गन्धपुष्पादिभिर्यजेत् ॥ ६७ ॥

பரிவார கடாத்பிஸ்து ஸ்வஸ்வஸ்தாநே க்ரமாத் புத:!
பீஜாநி விதிவந்யஸ்த்வா கந்தபுஷ்பாதிபிர் யஜேத்!!

ஜயந்தர், முதலான அஷ்ட வித்யேசர்களை முறைப்படி பீடத்தில் சேர்க்கவும். ஸ்கந்த கும்ப தீர்த்தங்களால் தசாக்ஷர மந்திரங்களால் ஸ்கந்தரை அபிஷேகம் செய்யவும்.

रक्तपुष्पेण मतिमान् ईशानेनैव पूजयेत् ।
स्नपनं कारयेदन्ते यथावित्तानुसारतः ॥ ६८ ॥

ரக்த புஷ்பேண மதிமாந் ஈசாநேநைவ பூஜயேத்!
ஸ்நபநங்காரயேதந்தே யதாவிபவவிஸ்தரம்!!

பரிவார கலசங்களால் அந்தந்த ஸ்தானங்களில் முறைப்படி அபிஷேகம் செய்யவும். பீஜமந்திரங்களை முறைப்படி நியாஸம் செய்து சந்தன புஷ்பங்களால் பூஜை செய்யவும்.

प्रभूतहविषं दद्यात् ब्राह्मणान् भोजयत्ततः ।
उत्सवं कारयेदन्ते यथा वित्तानुसारतः ॥ ३९ ॥

ப்ரபூதஹவிஷம் தத்யாத் ப்ராம்மணான் போஜயேத்தத:!
உத்ஸவம் காரயேதந்தே யதாவித்தாநு ஸாரத:!!

அறிவாளி ஈசான மந்திரம் கூறி சிகப்பு புஷ்பங்களால் பூஜிக்கவும். வசதிக்கு ஏற்றவாறு முடிவில் ஸ்நபனாபிஷேகம் செய்யவும்.

आचार्यं पूजयेत्कर्ता वस्त्रहेमाङ्गुलीयकैः ।
अधमं दशनिष्कन्तु मध्यमं द्विगुणं स्मृतम् ॥ ७० ॥

ஆசார்யம் பூஜயேத் கர்த்தா வஸ்த்ர ஹேமாங்குலீயகை:!
அதமம் தசநிஷ்கந்து மத்யமம் த்விகுணம் ஸ்ம்ருதம்!!

அதிகமான நிவேதனம் செய்து, அந்தணர்களுக்கு உணவளிக்கவும். வசதிக்கு ஏற்றவாறு திருவிழா நடத்தவும்.

उत्तमं त्रिगुणं प्रोक्तंमाचार्यस्य तु दक्षिणा ।
मूर्तिपानां दशांशैश्च दीनानाथांश्च पूजयेत् ॥ ७१ ॥

உத்தமம் த்ரிகுணம் ப்ரோக்தம் ஆசார்யஸ்து தக்ஷிணா!
மூர்த்திபாநாம் தசாம்சைச்ச தீநாநாதாம்ச்ச பூஜயேத்!!

வஸ்த்திரம், ஸ்வர்ணம் மோதிரங்களால் ஆசார்யனை பூஜிக்கவும். தக்ஷிணைக்கு 10 நிஷ்க ஸ்வர்ணம் கடைநிலை, 20 நிஷ்க ஸ்வர்ணம் மத்தியமம் என்றும்

एवं यः कुरुते मर्त्यः स पुण्यां गतिमाप्नुयात् ।
पुत्रार्थी लभते पुत्रान् धनार्थी च धनं लभेत् ॥
जयार्थी जयमाप्नोति मोक्षार्थी मोक्षमाप्नुयात् ॥ ७२ ॥

ஏவம் ய: குருதே மர்த்யஸ் ஸபுண்யாங்கதி மாப்நுயாத்!
புத்ரார்த்தீ லபதே புத்ராந் தநார்த்தீச தநம் லபேத்!!
ஜயார்த்தீ ஜயமாப்நோதி மோக்ஷார்த்தீ மோக்ஷமாப்னுயாத்!!!

3 மடங்கான 30 நிஷ்க ஸ்வர்ணம் உத்தமமான ஆசார்ய தக்ஷிணை கூறப்பட்டுள்ளது. ஆசார்ய தக்ஷிணையில் 10 ல் ஓர் மூர்த்தங்களில் தக்ஷிணை. ஏழை அநாதைகளை திருப்தி படுத்தவும்.

இவ்வாறு ஸம்ப்ரோக்ஷண முறையை யார் செய்கிறார்களோ அவர்கள் நல்ல கதியை அடைகிறார்கள். குழந்தை வேண்டுபவர் குழந்தைகளை அடைவார். (தனம் வேண்டுபவர்) செல்வத்தை வேண்டுபவர் செல்வத்தை அடைவார். வெற்றியை வேண்டுவோர் வெற்றியையும், மோக்ஷத்தை விரும்புபவன் மோக்ஷத்தையும் அடைவான்.

इति श्रीकुमारतन्त्रे संप्रोक्षणविधिर्नाम त्रयोविशः पटलः

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிக ப்ரச்னே ஸம்ப்ரோக்ஷணவிதி: த்ரயோவிம்சதி படல:

இவ்வாறு ஸ்ரீ குமார தந்திரத்தில் கௌசிக ப்ரச்னத்தில் ஸம்ப்ரோக்ஷண முறையாகிற 23 - வது படலமாகும்.

॥ चतुर्विंशः पटलः ॥

24 வது படலம்

प्रतिमालक्षणविधिः

ப்ரதிமா லக்ஷண விதி படல:

ப்ரதிமா லக்ஷண விதி செய்யும் முறை

प्रतिमालक्षणं वक्ष्ये श्रृणुष्व कुशिकात्मज ।
चलं चलाचलं बेरमचल त्रिविधं भवेत् ॥ १ ॥

ப்ரதிமா லக்ஷணம் வக்ஷ்யே ச்ருணுஷ்வ குசிகாத்மஜ !
சலம் சலாசலம் பேரம் அசலம் த்ரிவிதிம் பவேத் !!

சலம், சலாசலம், அசலம் என மூவகைப்படும். சலமென்பது தானே உற்பத்தியாகி ஸ்திரமான சலாசலமென்பது சூலஸ்தாபனம் செய்வது ரஜ்ஜுக்களால் நரம்புகளை உண்டுபண்ணி கல்கத்தால் அவயவங்களை பூர்த்தி செய்வது சலாசலம் அசலம் எடுத்து வைத்து வேறு இடத்தில் மாற்றக்கூடியது சலாசலமாகும்.

शार्करं मृण्मयं बेरमचलं बेर मुच्यते ।
शैलजं दारुजं बेरं चलाचलमिति स्मृतम् ॥ २ ॥

சார்க்கரம் ம்ருண்மயம் பேரம் அசலம் பேர முச்யதே !
சைல்ஜம் தாருஜம் பேரம் சலாசலமிதிஸ் ம்ருதம் !!

கர்ணிகை சுற்றிலும் 2 யவை அகலமாக சுற்றிலும் பட்டிகை அமைக்கவும். பட்டிகையின் உயரம் அதே அளவாகும். அதற்கு வெளியில் 8 தளம் வரையவும்.

ओष्ठन्तु परितः कुर्यात् कर्णिकोच्छ्रयमानतः ।
एवं कृत्वा मुनिश्रेष्ठ पूर्णचन्द्रसमप्रभम् ॥ २७४ ॥

ஓஷ்டந்து பரித: குர்யாத் கர்ணிகோச்ரய மாநத:!
ஏவம் க்ருத்வா முநிச்ரேஷ்ட பூர்ண சந்த்ர ஸமப்ரபம்!!

கர்ணிகையின் உயர அளவால் சுற்றிலும் விளிம்பி போன்ற பகுதி அமைக்கவும். இவ்வாறு பூர்ண சந்த்ர காந்தியாக அமைத்து

युगाङ्गुलसमुत्सेधं दीपाधारं घटोपमम् ।
अश्विन्यङ्गुलमायामं घटवत्तस्य कीर्तितम् ॥ २७५ ॥

யுகாங்குல ஸமுத்ஸேதம் தீபாதாரம் கடோபமம்!
அச்வந்யங்குல மாயாமம் கடவத்தஸ்ய கீர்த்திகம்!!

4 அங்குல உயரமாக குடம் போன்ற அமைப்புடன் தீபாதாரத்தை கல்பிக்கவும். கும்பம் போன்ற அமைப்புடைய தீபாதாரத்தின் அகலம் 2 அங்குலமாகும்

प्रोक्तं पक्षाङ्गुलं रन्ध्रं कर्णिकामध्यमं युतम् ।
दीपाधारमथाष्टाश्रं योजयेत्तु दलं प्रति ॥ २७६ ॥

ப்ரோக்தம் பக்ஷாங்குலம் ரந்த்ரம் கர்ணிகா மத்யமே யுதம்!
தீபாதார மதாஷ்டாச்ரம் யோஜயேத்து தளம் ப்ரதி!!

2 அங்குல அளவான கர்ணிகா மத்தியில் த்வாரம் கல்பிக்கவும். கர்ணிகை சுற்றியுள்ள 8 தளத்திலும் எண்கோண வடிவமாக தீபாதாரத்தை கல்பிக்கவும்

रन्ध्राधारशताधारमेकाधारमथापि वा ।
मध्ये चैव महेशास्युर्दीपाधाराणि कल्पयेत् ॥ २७७ ॥

ரந்த்ராதார சதாதார மேகாதார மதாபிவா!
மத்யே சைவ மஹேசாஸ்யுர் தீபாதாராணி கல்பயேத்!!

9 தீபாதாரம், 100 - தீபாதாரம், 1 - தீபாதாரத்துடனோ, கல்பித்து நடுவிலும், சுற்றிலும், மஹேசனை பூஜிக்கவும்

अग्न्यङ्गुलोच्चमानेन पृष्ठे पादं प्रकल्पयेत् ।
पात्रं नीरजनायेदं महाघण्टाविधिं श्रृणु ॥ २७८ ॥

அக்ந்யங்குலோச்ச மாநேந ப்ருஷ்டே பாதம் ப்ரகல்பயேத்!
பாத்ரம் நீராஜநாயேதம் மஹா கண்டா விதிம் ச்ருணு!!

3 அங்குல உயரமான நீராஜந பாதத்திற்கு பாத்ரம் அமைக்கவும். இவ்வாறு நீராஜந பாத்ரம் லக்ஷணம் கூறப்பட்டு பெரிய மணியின் லக்ஷணம் கூறப்படுகிறது.

शुद्धकांस्येन कर्तव्यं विस्तारं पर्वताङ्गुलम् ।
सुषिरेण समायुक्तं चतुर्वर्णसमायुतम् ॥ २७९ ॥

சுத்த காம்ஸ்யேந கர்த்தவ்யம் விஸ்தாரம் பர்வதாங்குலம்!
ஸுஷிரேண ஸமாயுக்தம் சதுர்வர்ண ஸமாயுதம்!!

சுத்தமான வெண்கலத்தினால் 7 அங்குல விஸ்தாரமும், ஓட்டையுடன் கூடியதாயும், நான்கு வர்ணத்துடன் கூடியதாயும்

तारार्धवर्धनं ताहं मिह्वारन्ध्राङ्गुलायतम् ।
शिखरं वलयोपेतं शेषं युक्त्या प्रकल्पयेत् ॥ २८० ॥

தாரார்த்தம் வார்த்ததந்நாஹம் ஜிஹ்வாரந்த்ராங்குலாயதம்!
சிகரம் வலயோ பேதம் சேஷம் யுக்த்யா ப்ரகல்பயேத்!!

10½ அங்குலம் நீளமானதும், நாக்கு 9 அங்குல நீளமும், மணியின் மேல் பாகம் வலயத்தினுடன் கூடியதாயும் அமைத்து மீதத்தை புத்தியால் அமைக்கவும்

महाघण्टाविधि: प्रोक्ता दर्पणस्य विधिं श्रृणु ।
त्रिद्व्याङ्गुलप्रविस्तारं पूर्णचन्द्राकृतिर्भवेत् ॥ २८१ ॥

மஹா கண்டா விதி ப்ரோக்தம் தர்பணஸ்ய விதிம் ச்ருணு!
த்ரி த்வயங்குலம் ப்ரவிஸ்தாரம் பூர்ண சந்த்ரா க்ருதிர் பவேத்!!

இவ்வாறு மஹா கண்டா விதி கூறப்பட்டு கண்ணாடியின் லக்ஷணம் கூறப்படுகிறது. 3, 2 அங்குல விஸ்தாரமாகவும் முழுச்சந்த்ரன் போல் அழகானதும் அதன் தண்டு பாகம்

नालं वस्वङ्गुलं ज्ञेयं पादं देदाङ्गुलं भवेत् ।
नानापट्टिकसंयुक्तं शुद्धकांस्येन कारयेत् ॥ २८२ ॥

நாளம் வஸ்வங்குலம் ஞேயம் பாதம் வேதாங்குலம் பவேத்!
நாநா பட்டிக ஸம்யுக்தம் சுத்தகாம் ஸ்யேநகாரயேத்!!

7 அங்குலமாயும், பாதம் 4 அங்குலமும் ஆகும். பலவிதமாக பட்டி அமைப்புடன் சுத்தமான வெண்கலத்தில் செய்ய வேண்டும்.

एतद् विस्तारमुदितं विस्तारार्धेन वर्धयेत् ।
उत्तमं दर्पणस्यैवंमर्धपञ्चाङ्गुलान्तकम् ॥ २८३ ॥

ஏத த்விஸ்தார முதிதம் விஸ்தாரார்த்தேந வார்த்தயேத்!
உத்தமம் தர்பணஸ்யைவ மத: பஞ்சாங்குலாந்தகம்!!

இவ்வாறு விஸ்தாரம் கூறப்பட்டு விஸ்தாரத்தின் ½ பாகத்தால் கூட்டி செய்வது உத்தம தர்பணத்தின் அளவாகும். 5½ அங்குலம் வரை

नवमानं प्रकर्तव्यमुत्तमादित्रयं त्रयम् ।
दर्पणस्य विधिः प्रोक्ता विश्वामित्र महामुने ॥ २८४ ॥

நவமாநம் ப்ரகர்த்தவ்யம் உத்தமாதி த்ரயம் த்ரயம் !
தர்பணஸ்ய விதி ப்ரோக்தம் விச்வாமித்ர மஹாமுநே !!

9 வித அளவாக உத்தமத்ரயம், மத்யமத்ரயம், அதமத்ரயமாக தர்பணத்தின் அளவறிந்து கல்பிக்கவும். இவ்வாறு தர்பணத்தின் முறை கூறப்பட்டுள்ளது

इति श्रीकुमारतन्त्रे करणलक्षणविधिर्नाम पञ्चत्रिंशः पटलः

இதி ஸ்ரீ குமார தந்த்ரே கௌசிக ப்ரச்னே கரணலக்ஷண விதி: பஞ்ச த்ரிம்சத் படல:-

இவ்வாறு ஸ்ரீ குமார தந்த்ரத்தில் கௌசிக ப்ரச்னத்தில் கரண லக்ஷண விதி என்னும் 35-வது படலமாகும்.

அஷ்ட மங்களம்



1. கண்ணாடி

2. பூர்ண கும்பம்



3. மயூரம்



4. இரட்டை சாமரம்



5. ஸ்ரீ வத்ஸம்



6. ஸ்வஸ்திகம்



7. சங்கம்



8. தீபம்

1. வஜ்ரம்



2. சக்தி



3. தண்டம்



4. கட்கம்



5. பாசம்



6. அங்குசம்



7. கதை



8. த்ரிசூலம்



9. பத்மம்



10. சக்ரம்

।। षट्त्रिंशः पटलः ।।

ஷட் த்ரிம்ச: படல:

36 வது படலம்

पादुकाप्रोक्षणविधिः

பாதுகாப்ரோக்ஷண விதி:

திருவடிப்புனித நீராட்டு முறை சுருக்கம்

पादुकाप्रोक्षणं वक्ष्ये श्रृणु कौशिक सुव्रत ।
अनुग्रहाय मर्त्यानां पापनाशार्थमेव च ॥ १ ॥

பாதுகா ப்ரோக்ஷணம் வக்ஷ்யே ஸ்ருணு கௌசிக ஸுவ்ருத!
அநுக்ரஹாய மர்த்யானாம் பாப நாசார்த்த மேவச!!

சீலம் மிகு கௌசிக முனிவரே கேளுங்கள்! திருவடிப்புணித நன்னீராட்டு முறையை கூறுகிறேன். மனிதர்களுக்கு அருளுவதற்காகவும் அவர்களின் பாபங்களான தீ வினைகள் நீங்குவதற்காகவும்

भजनोत्सवयात्रायां पूनार्थं प्रवक्ष्यते ।
ध्रुवं च स्नपनं चैव बलिबेरञ्च कौतुकम् ॥ २ ॥

பஜனோத்ஸேத யாத்ராயாம் பூஜநார்த்தம் ப்ரவக்ஷ்யதே!
த்ருவஞ்ச ஸ்நபனஞ்சைவ பலிபேரஞ்ச கௌதுகம்!!

முருகனின் நாமங்களை மனமுருகிச் சொல்லும் பஜனை யாத்திரை சமயத்தில் பூஜிக்கவும். பாதுகை வடிவில் (திருவடிச்சேவை) அசையாதது - அசைவது அபிஷேகம் செய்ய ஏற்றது என்ற வடிவத்தில் சொல்லப்பட்டது.

उत्सवं यानबेरञ्च चलबेरञ्च पञ्चधा ।
एतेषां पादमानेषु यदिष्टं तत्प्रगृह्यताम् ॥ ३ ॥

உத்ஸவம்யாந பேரஞ்ச சல பேரஞ்ச பஞ்சதா!
யேதேஷாம் பாதமாநேஷு யதிஷ்டம் தத்ப்ரக்ருஹ்யதாம்!!

உற்சவமூர்த்தி இடம்விட்டு இடம் மாற்றத்தக்க மூர்த்தி என ஐந்து வடிவங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவைகளுள் ஏதேனும் ஒன்றின் பாத அளவில் எது விருப்பமோ அது எடுத்துக் கொள்ளப்படலாம்.

त्रिमात्राद्यर्धवृद्ध्या तु सप्तांगुलसमावधि ।
नवमानमिदं प्रोक्तं कन्यसादित्रयं त्रयम् ॥ ४ ॥

த்ரிமாத்ராத்யார்த்த வ்ருத்யாது சப்தாங்குல ஸமாவதி!
நவமாநமிதம் ப்ரோக்தம் கன்யசாதித்ரயம் த்ரயம்!!

மூன்றரை அங்குலம் முதல் ஏழு அங்குலம் வரை சிறப்பு இதற்கு நவமானம் என்று பெயர் மூன்று அங்குலம் அதமக் கூறாகும்.

आयामस्यार्धमुदितं पातुकाग्रस्य विस्तरम् ।
षडष्टांशेन मध्यान्तमायामं युगभागकैः ॥ ५ ॥

ஆயாமஸ்யார்த்த முதிதம் பாதுகாக்ரஸ்ய விஸ்த்ரம்!
ஷடஷ்டாம்சே நமத்யாந்த மாயாமம் யுக பாககை!!

திருப்பாதத்தின் நுனி வரை வியாபித்துள்ள நீளமானது மொத்த நீளத்தில் பாதியாக அமையலாம். நீளமானது நான்கு பாகங்களாக்கப்பட்டு 6 அல்லது 8 நடுப்பகுதி வரை ஒரே சம அளவாக அமைய வேண்டும்.

एकभागं भवेदष्टगुणांशे द्व्यंशकं घनम् ।
शेषमूर्ध्वदलं प्रोक्तं युक्त्यैव परिकल्पयेत् ॥ ६ ॥

ஏகபாகம் பவேதஷ்ட குணாம்சே த்வ்யம்சகங்கநம்!
சேஷமூர்த்வ தளம் ப்ரோக்தம் யுக்த்யைவ பரிகல்ப்பயேத்!!

ஒரு பகுதி எட்டு பாகம் இருப்பின் அது போல் 2 பகுதி தடிப்பு இருக்க வேண்டும். (கனம்)

மீதம் மேல் பகுதியாகவும் கவனமாக யுக்தியோடு தீர்மானித்து செய்ய வேண்டும்.

अंगुष्ठोच्चतलोत्यस्य चतुर्भागं त्रिभागकम् ।
चतुरंशे युगांशं तु नालशेषं तु पूर्ववत् ॥ ७ ॥

அங்குஷ்டோச்சத லோச்சஸ்ய சதுர்பாகம் த்ரிபாககம்!
சதுரம்சே யுகாம்ஸந்து நாள சேஷந்து பூர்வவத்!!

பாத கட்டை விரலு (பெருவிரல்) டையதில் நாலில் மூன்று பாகம் அமைய வேண்டும். அப்படியே காலின் மேற்பகுதி அமைப்பும் முன்போல் 4 க்கு 4 ஆக அமைக்க வேண்டும்.

अंगुष्ठेच्चसमं पुष्पं विस्तारं मुकुलान्वितम् ।
पुष्पोन्नते त्रिभागैकं मुकुलङ्कारयेद् द्विज ॥ ८ ॥

அங்குஷ்டோச்சமம் புஷ்பம் விஸ்தாரம் முகுளாந்விதம்!
புஷ்போன்னதே த்ரிபாகைகம் முகுளம் கார்யேத்விஜ!!

பெருவிரலின் அமைப்பு (திருவடிக்கு சமமாகவும்) அகலம் அரும்பு போலும் அமைய வேண்டும். திருவடி மேட்டின் மூன்றில் ஒன்றாக முகுளமெனும் விரல்கள் அரும்பு போல அமைய வேண்டும்.

उत्तमं काञ्चनेनैव मध्यमं रजतेन तु ।
ताम्रेणैवाधमं प्रोक्तं कांसाद्येनाधमाधमम् ॥ ९ ॥

உத்தமம் காஞ்சநே நைவ மத்யமம் ரஜதே நது!
தாம்ரேனணவாதமம் ப்ரோக்தம் காம்சாத்யே நாதமாதமம்!!

தங்கம் உயர்தரமாகவும் வெள்ளி நடுத்தரமாகவும் அதற்கடுத்ததாக (செம்பு) தாமிரமும் வெண்கலம் கலந்து பித்தளை (த்ரா) கீழ்த்தரமாகவும் கருதப்படுகிறது.

पादुकाश्च यथाशोभं तथा युक्त्या प्रकल्पयेत् ।
एवं लक्षणमाख्यातं प्रोक्षणञ्च ततः शृणु ॥ १० ॥

பாதுகாச்ச யதாசோபம் ததாயுக்த்யா ப்ரகல்பயேத்!
ஏவம் லக்ஷண மாக்யாதம் ப்ரோக்ஷணஞ்ச ததச்ருணு!!

பாதுகைகள் எதில் செய்தால் சிறப்பாக அம்சமாக அழகாக அமையுமோ அப்படி (பஞ்சலோகத்தினாலும்) செய்யலாம். இவ்வாறு பாதுகையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மேல் அதற்கு கும்பாபிஷேகம் பற்றிக் கேள் கூறுகிறேன்.

पुण्यर्क्षतिथिवारे च मण्डपस्यैव मध्यमे ।
पुण्याहं वाचयेत्तत्र प्रोक्षयित्वास्त्रमन्त्रतः ॥ ११ ॥

புண்யார்க்ஷ திதிவாரேச மண்டப ஸ்யைவ மத்யமே!
புண்யாஹம் வாசயேது தத்ர ப்ரோக்க்ஷயித்வாஸ்த்ர மந்த்ரத:!!

நல்ல நக்ஷத்திரம் திதி கிழமையில் மண்டபத்தின் நடுவே நல்ல நாளை சொல்லுவித்தல் எனும் புவியை புனிதமாக்கும் மேற்திசை அதிபன் வருணனை பூசித்து அந்நீரால் அஸ்திரமந்திரத்தால் நீர் மேலெழுந்து வரும்படி செய்து புனிதமாக்குக.

स्थण्डिलं कल्पयेद्विद्वान् तिलतण्डुलशालिभिः ।
नववस्त्रमथास्तीर्य पादुकां पञ्चगव्यकैः ॥ १२ ॥

ஸ்தண்டிலம் கல்பயேத்வித்வாநு தில தண்டுல சாலிபி:!
நவ வஸ்த்ர மதாஸ்தீர்ய பாதுகாம் பஞ்ச கவ்யகை:!!

சிறுமேடையை நிறுவி அறிவு மிகு ஆசான் நெல் அரிசி எள்ளை பரப்பி புதிய துணியை விரித்து பஞ்சகவ்யம் முதலியவைகளால் தூய்மை படுத்திய திருமுருகனின் திருப்பாதுகையை வைக்க வேண்டும்.

क्षालयित्वाष्टमृद्भिस्तु शुद्धोदैः स्कन्दमन्त्रतः ।
परिस्तीर्य तया दर्भैर्हृदयेन तु मन्त्रतः ॥ १३ ॥

க்ஷாளயித்வாஷ்ட ம்ருத்பிஸ்து சுத்தோதைஸ்கந்த
மந்த்ரத:।
பரிஸ்தீ ர்ய ததா தர்பைர் ஹ்ருதயேநது மந்த்ரத:।।

எண்வகை மண்ணிட்ட புனித தூய நீரால் முருக மந்திரத்தால் புனிதப்பட்டு விட்ட பின் இருதய மந்திரத்தால் தர்பைகளை விரித்து (பரப்பி)

वस्त्रोपरिन्यसेद्धीमान् पादुकां वर्ममन्त्रतः ।
नववस्त्रेण संछाद्य पादुकाग्रे यथाविधि ॥ १४ ॥

வஸ்த்ரோ பரிந்யஸேத்தீமாந் பாதுகாம் வர்ம
மந்த்ரத:।
நவ வஸ்த்ரேண ஸந்ச்சாத்ய பாதுகாக்ரே யதா விதி।।

அதன் மேல் புது துணி விரித்து கவச மந்திரத்தால் புது வஸ்திரத்தை (துணியை) பாதுகைக்கு மூடி திருப்பாதங்கள் மட்டும் தெரியும்படி முறைப்படி செய்க.

मयूरकुम्भं संस्थाप्य परितोऽष्टघटान्नयसेत् ।
ससूत्रान् सापिधानांश्च सवस्त्रान् वारिपूरितान् ॥ १५ ॥

மயூர கும்பம் ஸம்ஸ்தாப்ய பரிதோஷ்ட
கடாந்நயஸேத்।
ஸதூத்ராநு ஸாபிதானாம்ச்ச ஸவஸ்த்ராந்வாரி
பூரிதாநு।।

மயிலுக்காக ஒரு கும்பம் நிறுத்தி அதைச் சுற்றி எட்டு நிறை கும்பங்களை அதற்குரிய இலக்கணங்களான நூல் சுற்றல் மாவிலைக் கொத்துக்களால் மூடி (தேங்காய் கூர்ச்சம்)

सकूर्चान् सहिरण्यांश्च कल्पयेत्कल्पवित्तमः ।
मयूरबीजमावाह्य मध्यकुम्भे समर्पयेत् ॥ १६ ॥

ஸகூர்ச்சான் ஸஹிரண்யாம்ச்ச கல்பயேத்
கல்பவித்தம:।
மயூரபீஜமாவாஹ்ய மத்ய கும்பே ஸமர்ச்சயேத்।।

கூர்ச்சத்தோடும் பொற்காசுகளோடும் அறிந்தவர்கள் அறிந்த வண்ணம் செயல்பட்டு மயில் மஹாமந்திரத்தால் ஆவாஹனம் (நிலை பெறுதலைச் செய்து) மத்தியில் குடும்பத்தில் அர்ச்சிக்க வேண்டும்.

इन्द्रादिलोकपालांश्च पूर्वाद्यष्टघटं यजेत् ।
धेनुमुद्रां प्रदर्श्याथ तत्पृष्ठे सिकतैः कृतैः ॥ १७ ॥

இந்த்ராதி லோக பாலாம்ச்ச பூர்வாத்யஷ்ட
கடேயஜேத்।
தேனுமுத்ராம் ப்ரத்ருச்யாத தத்ப்ருஷ்டே ஸிகதை:
க்ருதை:।।

இந்திரன் முதலான எண்திசைத் தேவர்களையும் எட்டு கும்பத்திலும் பூஜித்து பசுமடிபோல் கையினால் விரித்து காட்டிப் பின்புறம் மணல்களால் செய்த தரையில்

स्थण्डिलं विधिवत्कृत्वा होमद्रव्याणि गृह्य च ।
अग्न्याधानादिकं सर्वमग्निकार्योक्तमाचरेत् ॥ १८ ॥

ஸ்தண்டிலம் விதிவத் க்ருத்வா ஹோமத்ரவ்யாணி
க்ருஹ்யச।
அக்ந்யாதாநாதிகம் சர்வமக்னி கார்யோக்த
மாசரேத்।।

முறைப்படி (ஹோம) வேள்விப் பொருள்களைச் சேகரித்து முத்தீ ஓம்பும் முறைப்படி வேள்வி வேட்டுவித்து (ஹோமம்) செய்ய வேண்டும்.

समिदाज्यचरून् लाजान् तिलान्सद्यादिमन्त्रतः ।
होमयेत्तु विशेषेण प्रत्येकं पञ्चविंशतिः ॥ १९ ॥

ஸமிதாஜ்ய சருந்லாஜாந் திலாந் சத்யாதி மந்த்ரத:।।
ஹோமயேத்து விசேஷேண ப்ரத்யேகம்
பஞ்சவிம்சதி:।।

சமித்து வகைகள் நெய் ஹவிஸ் (வடிக்காமல் பக்குவம் செய்த கஞ்சியோடு கூடிய புதுத்தனிச் சோறு) நெய் தேன் மட்டும் கலந்தது)

நெற்பொறி, எள், ஸத்யோ ஜாதம் முதல் ஈசானம் வரைதனித்தனியே இருபத்தைந்து ஆஹுதிகள் செய்க.

मयूरमूलमन्त्रेण घृतेनाष्टोत्तरं शतम् ।
सर्वद्रव्यसमायुक्तं हव्यवाहे च होमयेत् ॥ २० ॥

மயூர மூல மந்த்ரேண க்ருதே நாஷ்டோத்தரம் சதம்!
சர்வத்ரவ்ய ஸமாயுக்தம் ஹவ்யவாஹேச
ஹோமயேத்!!

மயிலின் மந்திரத்தால் நெய்யினால் நூற்றெட்டு ஆவர்த்தி செய்து எல்லா வித திரவ்யங்களையும் முறைப்படி ஹோமம் செய்துவிட்டு அக்னிபகவானுக்கும் இறுதியில் முறைப்படி ஹோமம் செய்க.

प्रभाते सुमुहूर्ते तु कुम्भान्यभ्यर्च्य मन्त्रवित् ।
जयादिरभ्याधानञ्च राष्ट्रभृच्च क्रमाद्धुनेत् ॥ २१ ॥

ப்ரபாதே சுமுஹூர்தேது கும்பாநப்யார்ச்ய
மந்த்ரவிது!
ஜயாதிரப்யாதாநாஞ்ச ராஷ்ட்ரப்ருச்ச
க்ரமாத்துநேத்!!!

மறுநாள் காலை இரண்டாம் காலம் பூஜைகளை மந்திரங்களோடு செய்துவிட்டு ஹோம முடிவில் ஜயாதி ஹோமம் ராஷ்ட்ரப்ருது என்ற மந்திரங்களால் முறைப்படி ஹோமம் செய்க.

आचार्यं पूजयेत्कर्ता वस्त्रभूषणकाञ्चनैः ।
मयूरबीजमन्त्रेण कुम्भान्तात् पादुकाद्वये ॥ २२ ॥

ஆசார்யம் பூஜயேத் கர்த்தா வஸ்த்ர பூஷண
காஞ்சநை:!
மயூரபீஜ மந்த்ரேண கும்பாந்தாது பாதுகாத்வயே!!

ஆசாரியரை யஜமானரானவர் உயர்ந்த (வஸ்த்ரங்கள்) ஆடை அணிகலன்களால் சந்தோஷப்படும்படி பூசித்து மயில் மூல மந்திரத்தால் பாதுகையில் கும்பத்தில் உள்ள நீரால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

न्यसेदिन्द्रादिबीजानि तयोः पूर्वादिषु न्यसेत् ।
तत्तत्कुम्भस्थतोयेन तत्तद्देशेऽभिषेचयेत् ॥ २३ ॥

ந்யஸேதிந்த்ராதி பீஜாநி தயோ: பூர்வாதிஷு
ந்யஸேத்!
தத்தத்கும்பஸ்த தோயேந
தத்தத்தேசேபிஷேசயேத்!!

அத்திருப்பாதங்களின் சுற்றிலும் இந்திரன் முதலான திசை மன்னர்களின் மூலமந்திர எழுத்துக்களோடு நினைத்து துதித்து அந்தந்த கலச நீரால் அந்தந்த இடங்களில் அபிஷேகம் செய்ய வேண்டும்.

मयूरमन्त्रादभ्यर्च्य मुद्गान्तं दापयेत्सुधीः ।
एवं यः कुरुते मर्त्यः सर्वान्कामानवाप्नुयात् ॥ २४ ॥

மயூர மந்த்ராதப்யார்ச்ய முத்கான்னம்தாபயேது சுதீ:!!
ஏவம் ய: குருதே மார்த்ய ஸ்ஸர்வாந்
காமாநவாப்நுயாத்!!

ஆகமக்ஞன் மயில் மூலமந்த்ரம் வேதமந்த்ரம் இவைகளால் அர்ச்சித்து பாசிப்பயிறு கலந்த வெண்பொங்கல் நிவேதனம் செய்ய வேண்டும். இவ்வாறு எவர் செய்கிறாரோ அவர் எல்லா விருப்பங்களும் இனியே எய்துவர்

इति श्रीकुमारतन्त्रे पादुकाप्रोक्षणविधिर्नाम षट्त्रिंशः पटलः ॥

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிக ப்ரச்னே பாதுகா ப்ரோக்ஷண விதி : நாம ஷட்த்ரிம் சத் படல:

இவ்வாறு ஸ்ரீ குமாரதந்த்ரத்தில் கௌசிக ப்ரசனத்தில் பாதுகா ப்ரோக்ஷண விதி (திருவடிப்புனித நீராட்டு முறை சுருக்கம்) என்னும் 36 வது படலமாகும்.

॥सप्तत्रिंशः पटलः ॥

ஸப்தத்ரிம்சः படலः

37 வது படலம்

आत्मार्थयजनविधिः

ஆத்மார்த்த யஜந விதி படலः

ஆத்மார்த்த வழிபாட்டு முறை

आत्मार्थयजनं वक्ष्ये श्रुणुष्व मुनिपुङ्गव ।
ये ये ग्रहाः समुच्चानि तेषामिष्टप्रदं शुभम् ॥ १ ॥

ஆத்மார்த்த யஜநம் வக்ஷ்யே ஸ்ருணுஷ்வ முநி புங்கவ!
யேயே க்ரஹா: ஸமுச்சாணி தேஷாமிஷ்ட ப்ரதம் சுபம் !!

ஆன்மார்த்த வழி பாட்டு முறையை கூறுகிறேன் முனிவரே கேட்பீராக! எந்தெந்த கிரகங்கள் ஜாதகத்தில் உச்ச பலம் பெற்றிருக்கின்றனவோ அவர்களின் விருப்பப்படி அவர்கள் ஜாதகருக்கு நலம் பயக்கும் சுபம் மிகு பலன்களையே அளிப்பார்கள்

धर्मार्थकाममोक्षार्थमात्मार्थयजनं स्मृतम् ।
स्कन्दपूजां विना पूंसां पुत्रवृद्धिः कथं भवेत् ॥ २ ॥

தர்மார்த்த காம மோக்ஷார்த்த மாத்மார்த்த ஜயநம் ஸ்ம்ருதம்!
ஸ்கந்த பூஜாம் விநா பும்ஸாம் புத்ர வ்ருத்தி: கதம் பவேத் !!

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை மனிதர்கள் அடைய வேண்டிய நற்பயன்களையும் தரக் கூடியது ஆன்மார்த்த வழிபாடு என்று கருதப்படுகிறது (கூறப்படுகிறது). முருகப் பெருமான் வழிபாடு செய்யாத மனிதர்கள் (வம்ச விருத்தி புத்ர) சந்தான பாக்யத்தை எவ்வாற்றானும் அடைய முடியாது. (புத்ர விருத்தி) பிறந்த குழந்தை அறிவு, ஆற்றல், உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, மெய்ஞான விஞ்ஞான வளர்ச்சி அடைய முடியாது.

प्रतिमां तु पटे वाऽपि मण्डलं स्थण्डिलेऽपि वा ।
जले वा हृदये वाऽपि नित्यं संपूजयेद्गुहम् ॥ ३ ॥

ப்ரதி மாந்து படே வாபி மண்டலே ஸ்தண்டிலே பிவா!
ஜலே வா ஹ்ருதயே வாபி நித்யம் ஸம்பூஜயேத் குஹம் !!

முருகப் பெருமானின் விக்ரஹம், படம், யந்திரம், வேள்வி வழிபாட்டிற்குரிய இடமாகிய ஸ்தண்டிலம் அல்லது குடும்பத்திலோ இதயத் தாமரையிலோ தினந்தோறும் பூஜிக்க வேண்டும்.

एकांगुलादिभूतान्तमात्मार्थमिति कीर्तितम् ।
मात्रांगुलेन कर्तव्यं यजमानं चरस्य तु ॥ ४ ॥

ஏகாங்குலாதி பூதாந்த மாத்மார்த்த மிதி கீர்த்திதம்!
மாத்ராங்குலேந கர்த்தவ்யம் யஜமாநம் சரஸ்யது!

ஒரு அங்குலம் முதல் ஐந்து அங்குலம் வரை தேவாங்குல விகிதத்தில் ஆன்மார்த்த பூஜைக்கு ஸ்ரீ முருகன் விக்ரகம் செய்யத் தகுந்தது. பூசிப்பவர் விருப்பப்படி சல மூர்த்தியாக (ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யாமல்) எங்கும் மாற்றியமைக்கும் படி இருப்பது நலம்.

आयादिशुभवर्गाणि यवैर्वाथ परीक्षयेत्।
उत्तमं काञ्चनेनैव मध्यमं रजतेन तु ॥ ५ ॥

ஆயாதி சுப வர்காணி யவைர்வாத பரீக்ஷயேத்!
உத்தமம் காஞ்சனே நைவ மத்யமம் ரஜதேநத் !!

ஸ்ரீ முருகப் பெருமானின் விக்ரஹ அளவானது அதன் வரிசைகளாவது யவை நெல் அளவு கூட மிஞ்சாமலும், குறைவு படாமலும் இருக்கிறதா என்று சோதிக்க வேண்டும்.

தங்கத்தால் முருகப் பெருமான் உருவம் அமைப்பது உயர்தரம் என்றும் வெள்ளியால் அமைப்பது நடுத்தரம் என்றும்

शिलाया वाऽथ ताम्रेण कन्यसं परिकीतितम् ।
मृन्मयं दारुजं चैव न ग्राह्यन्तु गृहार्चने ॥ ६ ॥

சிலயாவாத தாம்ரேண கன்ய ஸம்பரி கீர்த்திதம்!
ம்ருண்மயந்தாருஜம் சைவ நக்ராஹ்யந்து
க்ருஹார்ச்சநே!!

பச்சைக் கருங்கல் (ஆண்கல்) அல்லது தாமிர உலோகத்தால் அமைப்பது 3ம் தரமாகவும் கருதப்படுகிறது (கூறப்படுகிறது) மண்ணாலும், மரத்தாலும் அமைக்கப்பட்ட ஸ்ரீ முருகப் பெருமானின் உருவ வழிபாடானது வீட்டுப் பூஜைக்கு ஆத்மார்த்த பூஜைக்கு ஏற்றதல்ல

आसनं स्थानकं वाऽपि वाहनादिकमेव च ।
प्रतिमालक्षणोक्तेन मार्गेणैव प्रकल्पयेत् ॥ ७ ॥

ஆசநம் ஸ்தாநகம் வாபி வாஹநாதிக மேவச!
ப்ரதிமா லக்ஷணோக்தேந மார்கேனைவ
ப்ரகல்பயேத்!!

ஸ்ரீ முருகப் பெருமான் உருவ இருப்பிடம் அவரது வாகனமான மயில் வெள்ளையானை போன்றவைகளும் உருவ அமைப்பு இலக்கணத்துக்கு சற்று கூட மிகாமலும் குறையாமலும் செய்ய வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்படுகிறது

शिल्पिहस्तात्समादाय सम्यग्बिम्बं परीक्षयेत् ।
समदृष्टिप्रसन्नास्यं स्वस्वरूपं शुभावहम् ॥ ८ ॥

சில்பி ஹஸ்தாத் ஸமாதாய சம்யக் பிம்பம்
பரீக்ஷயேத்!
சமத்ருஷ்டி ப்ரசந்நாஸ்யம் ஸ்வஸ்வ ரூபம்
சுபாவஹம்!!

சிற்பியின் கையிலிருந்து சிலை வடிவில் உள்ள ஸ்ரீ முருகப் பெருமானின் பிம்பத்தை (விக்ரகத்தை) முன்பு கூறப்பட்ட படி உலோகம் உருவ அமைப்பு அளவுகள் நன்கு பரிசோதிக்கப்பட வேண்டும். முருகனின் முகப்பார்வை மேல்கீழ் பக்கவாட்டில் இல்லாமல் சமநோக்காக இருக்கிறதா என்று பார்க்க நலம் பெருகும்

ऊर्ध्वदृष्टिमधोदृष्टिं तिर्यग्दृष्टिं विवर्जयेत् ।
ऊर्ध्वदृष्टिः प्रजानाशमधोदृष्टिर्धनक्षयम् ॥ ९ ॥

ஊர்த்வ த்ருஷ்டி மதோ த்ருஷ்டிம் திர்யக் த்ருஷ்டிம்
விவர்ஜயேத்!
ஊர்த்வ த்ருஷ்டி ப்ரஜாநாச மதோத்ருஷ்டி தன
க்ஷயம்!!

மேல் நோக்குப் பார்வை கீழ் நோக்குப் பார்வை, பக்கப் பார்வையிருப்பின் அதை நீக்கி விட வேண்டுமென்றும் மேல்நோக்கும் பார்வை குடும்ப வம்சத்தை வாரிசுகளை பாதிக்கும் என்றும் கீழ்நோக்குப் பார்வை செல்வச் சீர் குலைவை உண்டு பண்ணுமென்றும்

तिर्यग्दृष्टिर्यशोनाशां तस्मात् ग्राह्यं समेक्षणम् ।
अप्रतिष्ठितबेरस्य पूजनं सर्वदोषकृत् ॥ १० ॥

திர்யக் த்ருஷ்டி யசோ நாசம் தஸ்மாத் பாவ்யம்
சமேக்ஷணம்!
அப்ரதிஷ்டித பேரஸ்ய பூஜநம் சர்வ தோஷக்ருது!!

பக்கப் பார்வை புகழ் அழிவையும் எனவே சமநோக்கே நன்றென்றும் நன்கு பிரதிஷ்டாபனம் (கும்பாபிஷேகம்) செய்யப்படாத விக்ரஹத்தை பூஜிப்பது எல்லா தோஷங்களையும் உண்டு பண்ணும் என்றும் (கூறப்படுகிறது)

बिम्बं मन्त्रमयं कृत्वा तस्मिन्देवं प्रपूजयेत् ।
स्नपनं शान्तिके यस्य अग्रे मतम् ॥ ११ ॥

பிம்ப மந்த்ர மயம் க்ருத்வா தஸ்மின்னேவம்
ப்ரபூஜயேத்!
ஸ்தாபநம் சாந்திகேயஸ்ய அக்ரே (துவாஹ நனம்)
மதம்!!

சிற்பியால் செய்யப்பட்ட சிற்பமாக சிலையாக உருவமாக உள்ள விக்ரஹம் மந்திரங்களால் புனிதப்பட்டு மந்திரங்கள் வடிவமாக ஸ்ரீ முருகப் பெருமானின் முழு சைதன்ய ஜீவப்ரகாசத்தை ப்ரகாசிக்கச் செய்யும் ஸ்தாபன பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை முன்னே வாகனமான மயிலுடன் செய்வது நலம் எனக் கூறப்படுகிறது

उत्तरायणकाले तु शुक्लपक्षे विशेषत: ।
पुण्यर्क्षतिथिवारेषु पुण्यलग्ने सुशोभने ॥ १२ ॥

உத்தராயண காலேது க்ருஷ்ண பக்ஷே விசேஷத:!
புண்யர்க்ஷ திதி வாரேஷு புண்ய லக்னே
சுசோபனே!!

உத்திராயண காலமென கருதப்படும் (தை மாதம் 1 முதல் ஆனி 32) காலத்திலே நலம் பயக்க (விசாகம் நக்ஷத்திரத்திலோ அல்லது அதற்கு அனுகூலமான விண்மீனிலோ) ஷஷ்டி முதலான நற்திதியிலோ ரிஷபம், சிம்மம், மிதுனம், கன்னி, தனுசு, மீனமீறான சுப லக்னங்களில் செய்விப்பது நலம் மிகு நல்கும் எனக் கூறப்படுகிறது.

प्राप्तये सर्वकामानां प्रतिष्ठोत्सव४मुच्यते ।
प्रतिष्ठादिवसात्पूर्वं पञ्चमे सप्तमेऽपि वा ॥ १३ ॥

ப்ராப்தயே சர்வ காமானாம் ப்ரதிஷ்டோத்ஸவ
முச்யதே!
ப்ரதிஷ்டாதி வசாத் பூர்வம் பஞ்சமே ஸப்தமேபிவா!!

எல்லா இனிய நன்னலங்களும் ஸ்ரீ முருகப் பெருமான் ஸ்தாபனம் செய்யும் எனக் கூறப்படுவதால் அதை முன்னிட்டு பிரதிஷ்டை தினத்திற்கு 5 அல்லது ஏழு நாட்களுக்கு முன்பு

स्वसूत्रोक्तप्रकारेण कारयेदङ्कुरार्पणम् ।
प्रतिष्ठादिवसात्पूर्वे सायाह्ने नियत: शुचि: ॥ १४ ॥

ஸ்வ சூத்ரோக்த ப்ரகாரேண
காரயேதங்குராா்ப்பணம்!
ப்ரதிஷ்டாதி வசாத் பூர்வே சாயான்னே நியதஸ்
சுசி:!!

பூஜை செய்பவர்களுடைய கோத்திர சூத்திர முறைப்படி (ஆத்மார்த்த பூஜையாக வீட்டில் பிரதிஷ்டை செய்வதால்) அங்குரார்ப்பணம் என்னும் முளைப்பாலிகையிடு தலைமுறையாக முன்னதாக மாலை வேளையின் இறுதி நேரத்தில் பரிசுத்த நிலையில் நின்று செய்ய வேண்டும்.

मन्त्रेण सा प्रकर्तव्या रत्नन्यासविधानत: ।
नेयनोन्मीलनं कुर्यात् नेत्रयुग्मयुते दिने ॥ २४ ॥

மந்த்ரேண சாப்ர கர்தவ்யம் ரதன ந்யாஸ விதாநத:!
நயனோன்மீலனம் குர்யான்நேத்ர யுகம் யுதே
தினே!!

புது சிலைக்குச் செய்யப்பட வேண்டிய பதினெட்டு முன்னோடி சடங்குகளுடன் ஒன்றான கண் திறப்பு எனும் (நயனோன் மீலனம்) என்னும் கிரியையானது இரண்டு கண்களும் பிரகாசமாக இருக்கும் தினத்தில் (நேத்ரம் 2 ஜீவன் 1) (என்ற பஞ்சாங்க குறிப்பு நோக்கி) செய்வது சாலச் சிறந்தது என அறிவிக்கிறது

पञ्चगव्यैश्च मतिमान् पञ्चत्वक्सलिलैरपि ।
अष्टमृत्सलिलैश्चैव क्षालयेत् पवमानत: ॥ १६ ॥

பஞ்ச கவ்யைச்ச மதிமான் பஞ்ச த்வக் சலிலைரபி!
அஷ்ட ம்ருத் சலிலைச்சைவ க்ஷாளயேத்
பவமானத:!!

சிவாகம அனுபவ அனுபூதி அறிவுமிகு ஆதி சைவர் (ஆல், அரசுமா, அத்தி, நாவல்) ஐந்து மரப்பட்டைகள் ஊறிய (நண்டு வளை, புற்று, காளைக் கொம்பு, யானைத் தந்தம், கடல், ஆறு, நல்லவயல், வில்வ மரத்தடி) போன்ற எட்டு வகை மண்ணோடும் கலந்த நீரால் பவமான சூக்தம் -

கோஷசாந்தி - பஞ்ச சாந்தி போன்ற வேத மந்திரங்களோடும் அஸ்த்ர மந்திரங்களோடும் பிம்ப சுத்தியை செய்ய வேண்டும்.

पञ्चब्रह्मषडङ्गैश्च बिम्बशुद्धिं समाचरेत् ।
तीर्थदेशं नयेद्देवं स्वस्तिसूक्तमुदीरयन् ॥ १७ ॥

பஞ்ச ப்ரம்ம ஷடங்கைச்ச பிம்ப சுத்திம் சமாசரேத் !
தீர்த்த தேசன் நயேத்தேவம் ஸ்வஸ்தி சூக்த
முதீரயன் !!

ஸம்ஹிதா மந்திரமெனும் ஐந்து பிரும்ம மந்திரங்களாலும் ஆறு அங்க மந்திரங்களாலும் திருமுருகனின் திருவுருவச் சிலையை புனிதப்படுத்தும் பிம்ப சுத்தி எனும் கிரியை செய்து நலம் பயக்கு நன் மந்திரங்களோடு பிம்பத்தை நீர் நிலையருகே கொண்டு செல்ல வேண்டும்.

लम्बकूर्चं ततो बध्वा वस्त्रयुग्मेन वेष्टयेत् ।
जलाधिवासनं कुर्यात् प्राक्शिरश्चोर्ध्ववक्त्रकम् ॥ १८ ॥

லம்ப கூர்சம் ததோ பத்வா வஸ்த்ர
யுக்மேனவேஷ்டயேத் !
ஜலாதி வாஸநங்குர்யாத் ப்ராக் சிரச்சோர்த்வ
வக்த்ரகம் !!

பிம்பத்தின் தலைப்பகுதியில் 36 தார்ப்பங்களால் ஆன கூர்ச்சத்தை அணிவித்து நழுவாதவாறு கட்டி இரண்டு ஆடைகளை அணிவித்து கிழக்கே தலைப்பகுதியை மேல்நோக்கி இருக்குமாறு தண்ணீரில் மூழ்கியிருக்கும் படி ஜலவாசம் செய்ய வேண்டும்.

दारुपीठे जलान्तस्थे स्कन्दगायत्रिमन्त्रतः ।
रक्षायै लोकपालांश्च पूर्वादिक्रमशोऽर्चयेत् ॥ १९ ॥

தாரு பீடே ஜலாந்தஸ்தே ஸ்கந்த காயத்ரி மந்த்ரத: !
ரக்ஷாயை லோக பாலாம்ச்ச பூர்வாதி
க்ரமசோர்சயேது !!

மரத்தினால் செய்யப்பட்ட பீடத்தில் முருகன் சிலையை நிறுத்தி முருகனின் காயத்ரி மந்திரத்தை உருவேற்றி காப்பதற்காக இந்திரன் முதலான எண்திசை காப்பாளர்களை கிழக்கு முதலான திசைகளில் பூஜித்து காப்பை வேண்ட வேண்டும்.

श्रीरुद्रं चमकं चैव पञ्चशान्ति तथैव च ।
स्कन्दसूक्तं चतुर्दिक्षु कुर्यादध्ययनं तथा ॥ २० ॥

ஸ்ரீ ருத்ரம் சமகம் சைவ பஞ்ச சாந்திம் ததைவ ச !
ஸ்கந்த சூக்தம் சதுர்திக்ஷு குர்யாதத்யயநம் ததா !!

நான்கு திசைகளிலும் ஸ்ரீ ருத்ரம், சமகம், சாந்தி பஞ்சகம், ஸ்கந்த சூக்தம் ஆகிய நான்கு மந்திரங்களை அத்யயனம் மந்த்ராவர்த்தி பிறகு செய்யப்பட வேண்டுமென கூறப்படுகிறது.

जलाद्बिम्बं समुद्धृत्य प्रतिष्ठास्थानमाचरेत् ।
पुण्याहं वाचयित्वैव गव्यैः प्रोक्ष्य भुविस्थलम् ॥ २१ ॥

ஜலாத் பிம்பம் சமுத்ருத்ய
ப்ரதிஷ்டாஸ்தானமாசரேத் !
புண்யாஹம் வாசயித்வைவ கவ்யை: ப்ரோக்ஷ்ய
புவிஸ்தலம் !!

நீர்நிலை தண்ணீரிலிருந்து பிம்பத்தை நன்கு முறையாக பக்தியோடு வெளிக் கொணர்ந்து பிரதிஷ்டை செய்ய இருக்கின்ற இடத்தில் வைத்து இடப் புனிதத்திற்காக புண்யாக வாசனம் என்ற நல்ல நாளை சொல்லுவிக்கும் சடங்கையும் ஆனிடத்துண்டான ஐந்தான பால், தயிர், நெய், சாணம், நீர்களை கூட்டி ப்பூசித்துத் தெளிக்க

स्थण्डिलं तत्र सङ्कल्प्य तिलतण्डुलशालिभिः ।
पलाशोदुम्बराश्वत्थपत्रैर्दर्भैः परिस्तरेत् ॥ २२ ॥

ஸ்தண்டிலம் தத்ர சங்கல்ப்ய தில தண்டுல
ஸாலிபி: !
பலாசோ தும்பராஸ்வத்த பத்ரைர் தர்பை:
பரிஸ்தரேத்: !!

நாற்சதுர வடிவில் சிறிது உயரமான மேடையில் நெல், அரிசி, நவதான்யங்கள், எள் -

நெற்பொறி, ஒன்றன் மேல் ஒன்றிட்டு நாற்புறமும் புரசு இலை அத்தி, அரசு, ஆல் இலைகளாலும் தர்பைகளால் நாற்புறமும் மந்திர வேலி அமைக்க வேண்டும்.

बेरञ्च कौतुकं बध्वा नैवेद्यमपि दापयेत् ।
बिम्बञ्च नववस्त्रेण प्रत्येकं परिवेष्ट्य च ॥ २३ ॥

பேரஞ்ச கௌதுகம் பத்வா நைவேத்யமபி தாபயேத்!
பிம்பஞ்ச நவவஸ்த்ரேண ப்ரத்யேகம்
பரிவேஷ்ட்யச!!

பிம்பத்திற்கு மஞ்சள் மந்திர நூலால் ரக்ஷாபந்தனம் என்னும் காப்பைக்கட்டி நிவேதனம் செய்து பிம்பத்திற்கு புது ஆடையை ஒவ்வொரு சடங்குக்கும் தனித்தனியே அணிவித்துப் பூசிக்க வேண்டும்.

शयने शाययेद्देवं प्राक्शिरश्चोर्ध्ववक्त्रकम् ।
देवसेनामहावल्लीं शाययित्वा यथाविधि ॥ २४ ॥

சயனேசாய யேத்தேவம் ப்ராக் சிரஸ்சோர்த்வ
வக்த்ரகம்!
தேவசேனா மஹா வள்ளீம் சாயயித்வா யதா விதி!!

அடுத்து முறைப்படி அமைக்கப்பட்ட சயன ஸ்தானத்தில் ஸ்ரீ முருகப் பெருமான் விக்ரகத்தை கிழக்கே மேல்முகமாக தெற்கே வள்ளி நாயகியையும், வடக்கே தேவசேனா தேவியையும், முறையாக மேல் நோக்கிய முக அமைப்போடு முறையாக படுக்க வைத்து சயனாரோபண சடங்கை துவங்க வேண்டும்.

मातृकां बिन्दुसहितं मूर्धादिक्रमशो न्यसेत् ।
नैर्ऋते वास्तुनाथेभ्यो नमस्कृत्य लिखेद्बुधः ॥ २५ ॥

மாத்ருகா பிந்து ஸஹிதாம் மூர்த்தாதி
க்ரமஸோண்யஸேத்!
நைருதே வாஸ்து நாதேப்யோ நமஸ்க்ருத்ய லிகேத்
புத:!!

(அ) அகரம் முதலிய ஐம்பத்தோரு வடமொழி எழுத்து மகாமந்திர ஒலி தரும் எழுத்துக்களை தலை முதல் கால் வரை முறைப்படி நியாஸம் என்னும் கிரியை செய்து தென்மேற்கில் வாஸ்து சாந்தி வேண்டி வாஸ்து நாயகனை பரிவாரங்களோடு பூசிக்க முருகனுக்கு சொல்லப்பட்ட பரமசாயிக வாஸ்து பதம் முறைப்படி வரைக

प्रक्षिप्य विष्टरान् पश्चात्सामान्यार्घ्यं प्रकल्पयेत् ।
द्वाराणि द्वारपालांश्च लोकेशानायुधानि च ॥ २६ ॥

ப்ரக்ஷிப்ய விஷ்டரான் பஸ்சாத் சாமான்யார்க்யம்
ப்ரகல்பயேத்!
த்வாராணி த்வாரபாலாம்ச்ச லோகேஸாநாயுதானி
ச!!

யாகாலயத்துக்கு நாற்புறமும் விஷ்டரம் என்று சொல்லக் கூடிய 16 தர்ப்பங்களாலான நுனியின் முடிச்சுடனும் உடலில் தர்பையினால் முறுக்கி சுற்றப்பட்ட தர்ப்பையினாலான விஷ்டரத்தை வைத்து சாமான்யார்க்யம் தயாரித்து வைத்துக் கொண்டு துவாரங்களையும் துவார தேவதைகளையும் திசைத் தெய்வங்களையும் அவர்களின் பத்து திசையதிபர்களின் ஆயுதங்களையும் முறையே பூசித்து பிரார்த்தனை செய்ய ஆயத்தமாகுக

प्रतिष्ठोक्तविधानेन तत्तद्दिक्षु समर्चयेत् ।
वेदिका दक्षिणे भागेऽप्युत्तरामुग्वमास्थितः ॥ २७ ॥

ப்ரதிஷ்டோக்த விதானேன தத்தத்திக்ஷு
சமர்ச்சயேத்!
வேதிகா தக்ஷிணே பாகே ப்யுத்தராமுக மாஸ்த்தித:!!

கும்பாபிஷேக விதி முறைப்படி எல்லா மண்டப தேவதைகளையும் அந்தந்த திசைகளில் பூசித்து ப்ரார்த்தித்து வேதிகையின் தெற்கு பக்கத்தில் வடக்கு முகமாக அமர்ந்து கொண்டு

भूतशुद्धिं ततः कुर्यादन्तर्यजनमाचरेत् ।
विशेषार्घ्यं प्रकल्प्यात्र सम्भारान् प्रोक्षयेऽस्त्रतः ॥ २८ ॥

பூத சுத்திம் தத: குர்யா தந்தர்யஜந மாசரேத் !
விசேஷார்க்யம் ப்ரகல்ப்யாத்ர சம்பாரான்
ப்ரோக்ஷயேஸ்த்ரத:!!

பௌதீகமான மனித உடலை புனித உடலாக மாற்றி பூசிக்கும் தெய்வ இயல்பை பெற பூத சுத்தி என்னும் சடங்கை முடித்து பூசிக்க இருக்கும் தெய்வ நிலை பெற மகாமந்திர எழுத்துக்கள் அனைத்தையும் அவயவயங்களில் ஏற்றி அகப்பூசை புரிந்து அரிய பெரிய நலமளிக்கும் சிறப்பு பூசையை அதற்குரிய திரவியங்களோடு முறைப்படி செய்து பூசைக்குரிய யாகத்துக்குரிய பொருள்களின் தொகுதியைப் புனிதப்படுத்துக

आम्रपल्लवकूर्चाढ्यं द्रोणोदपरिपूरितम् ।
सापिधानं सरत्नं च सर्वलक्षणसंयुतम् ॥ २९ ॥

ஆம்ர பல்லவ கூர்சாட்யம் த்ரோணோதபரிபூரிதம் !
சாபிதாநம் சரத்நஞ்ச ஸர்வ லக்ஷண சம்யுதம் !!

இரண்டு மரக்கால் அல்லது எட்டு லிட்டர் கொள்ளளவு பிடிக்கும் தங்கம் முதலான புதுகுடத்தில் மாவிலை, கூர்ச்சம், தேங்காய், நவ ரத்னங்களோடு கூடிய அழகான கும்பாலங்காரம் செய்து

कुम्भं देवशिरोभागे धान्यासने प्रकल्पयेत् ।
वर्धनीद्वितये न्यस्य तस्य दक्षिणवामयोः ॥ ३० ॥

கும்பம் தேவசிரோபாகே தான்யாஸனே
ப்ரகல்பயேத் !
வர்த்தனீத் விதயேன்யஸ்ய தஸ்ய தக்ஷிண
வாமயோ:!!

நவதான்யங்களுக்கு மேல் எள், பொறி பரப்பிய குடிலாசத்தின் மேல் கும்பத்துக்கு தலையாகக் கருதப்படும் தேங்காயை வைத்து நடுவில் பெரிய கும்பத்தையும் இரு பக்கங்களிலும். வள்ளிநாயகி தெய்வ நாயகிக்காக ஸ்தாபிக்கவும் (அமைக்கவும்)

परितः कलशानष्टौ स्थापयित्वा यथाविधि ।
सुब्रह्मण्यं ततो मध्येपार्श्वयोः शक्तिकाद्वयम् ॥ ३१ ॥

பரித: கலசாநஷ்டௌ ஸ்தாபயித்வா யதா விதி !
ஸுப்ரம்மண்யம் ததோ மத்யே பார்ச்வயோச்
சக்திகா த்வயம் !!

பிறகு நாற்புரமும் எண் திசைகளிலும் எட்டு கும்பங்களை நிறைவான நடுத்தரமான ஓரே அளவான கலசங்களை முறைப்படி நிறுவி நடுவே முருகனையும் இருபுறமும் இரு சக்திகளையும் ஸ்தாபித்து

जयन्ताद्यष्टविद्येशान् पूर्वादिकलशेषु च ।
पूर्वोक्तविधिनावाह्य समभ्यर्च्य यथाविधि ॥ ३२ ॥

ஜயந்தாத்யஷ்ட வித்யேசான் பூர்வாதி கலசேஷுச !
பூர்வோக்த விதிநாவாஹ்ய சமப்யர்ச்ய யதா விதி!!

ஜயந்தன் முதலான எப்போதும் முருகனருகேயே வீற்றிருக்கும் பேறு பெற்றவர்களை கிழக்கு முதலான திசைகளில் அமைத்து முறைப்படி கும்பாலங்கார வேத சிவாகம மந்திரங்களைக் கூறி பஞ்சாஸன பூஜை நியாஸம், தியானம், ஆவரணப் பூசைகளை முறைப்படி செய்து ஜபசமர்ப்பணம் செய்து வேள்விக்காக வேண்டி மூலமந்த்ர ஜப சமர்ப்பணம் செய்து

तत्पूर्वे स्थण्डिलं कृत्वा होमद्रव्याणि गृह्य च ।
अग्न्याधानादिकं सर्वमग्निकार्योक्तमाचरेत् ॥ ३३ ॥

தத் பூர்வே ஸ்தண்டிலங்க்ருத்வா ஹோம த்ரவ்யானி
க்ரஹ்யச !
அக்ன்யா தானாதிகம் சர்வம் அக்னிகார்யோக்த
மாசரேத் !!

கும்பங்களுக்கு முன்பு நாற்சதுர பரப்பில் பூமிக்கு மேல் சற்று உயரமான இடத்தில் ஹோமஞ் செய்ய இடங்கற்பித்து புனிப்படுத்தி எரியோம்பும் விதிமுறைப்படி அக்னி கொணர்ந்து ஸ்தாபித்து பூசித்து வேள்வி அவி சொரிந்து

पलाशसमिधान्नाज्यं लाजक्षीरगुलैरपि ।
स्कस्दस्य मूलमन्त्रेण होमयेत्पञ्चविंशति: ॥ ३४ ॥

பலாச சமிதானாஜ்யம் லாஜக்ஷீர குலை ரபி!
ஸ்கந்தஸ்ய மூல மந்த்ரேண ஹோமயேத் பஞ்ச விம்சதி:!!

புரசு சமித்து, பசு நெய், நெற் பொறி, பால், வெல்லம் முதலிய திரவியங்களால் முருகனுடைய மூலமந்திரத்தினால் 25 முறை வேள்வி வேட்டலை செய்ய வேண்டும்.

पञ्चब्रह्मसर्ववक्त्रयुतै: षण्मूर्तिमन्त्रत: ।
प्रतिद्रव्यं ततो हुत्वा द्रव्यान्ते व्याहृतिं हुनेत् ॥ ३५ ॥

பஞ்ச ப்ரம்ம சர்வ வக்த்ர யுதைஷ் ஷண்மூர்த்தி மந்த்ரத:!
ப்ரதி த்ரவ்யந்ததோ ஹுத்வா த்ரவ்யாந்தே வ்யாஹ்ருதிம் ஹுநேத்!!

முருகனுக்குரிய அறு முகவனுக்குரிய ஆறுமுகத்திற்கும் உரிய பஞ்ச பிரும்ம மந்திர ஸம்ஹிதா மந்திரத்தோடு ஒவ்வொரு திரவியங்களையும் ஆகுதி செய்து முடிவில் வ்யாஹ்ருதி எனும் பூ ர்புவ - ஸுவ - பூர்ப்பு வஸ்ஸு வஸ்வாஹா எனும் ஆகுதிகளைச் செய்து

जगद्भुवादिषण्मन्त्रै: स्कन्दगायत्रिमन्त्रत: ।
तत आचारमानोति द्रव्यं प्रतिहुनेत्तत: ॥ ३६ ॥

ஜகத் புவாதி ஷண்மந்த்ரை ஸ்கந்த காயத்ரி மந்த்ரத:!
தத ஆசாரமானேதி த்ரவ்யம் ப்ரதி ஹுனேத் தத:!!

முருகனுக்குரிய ஆறுமுகத்துக்குரிய ஜகத்புவம் முதலான வேத மந்திர ஸ்கந்த சூக்தத்தையும் காயத்தி மந்திரங்களினாலும் பிறகு ஆசார மானேதி மந்திரங்களால் ஒவ்வொரு திரவியத்துக்கும் ஒவ்வொரு ஆகுதிக்கும் கூறி பிறகு

शक्तिद्वयस्य मूलेन सर्पिषा पञ्चविंशति: ।
सर्वद्रव्यसमायुक्तं तस्य मूलेन होमयेत् ॥ ३७ ॥

சக்தி த்வயஸ்ய மூலேந சார்பிஷா பஞ்ச விம்சதி:!
சர்வ த்ரவ்ய சமாயுக்தம் தஸ்ய மூலேந ஹோமயேத்!!

இரு தேவிகளான வனவல்லி, கஜவல்லிக்கும் அவர்களுக்குரிய மந்திரங்களால் நெய்யினாலும் எல்லா திரவியங்களினாலும் ஹோமமம் செய்ய வேண்டும்.

रात्रिशेषं व्यपोह्याथ प्रात: स्नात्वा गुरूत्तम: ।
अनुष्ठानविधिं ज्ञात्वा प्रतिष्ठास्थानमेत्य च ॥ ३८ ॥

ராத்ரி சேஷம் வ்யபோஹ்யாத ப்ராதஸ்நாத்வா குருத்தம:!
அனுஷ்டாந விதிங்க்ருத்வா ப்ரதிஷ்டாஸ்தாந மேத்யச!!

இவ்வாறு ஓரிரவு (ஈரிரவு மூவிரவு களென்று) முடிந்த வரை ஹோமம் செய்து அதிகாலையில் நீராடி பூசகர் அநுஷ்டான விதிகளை வழுவாது ஆற்றி பிரதிஷ்டை யிடமடைந்து பிறகு

द्वारपूजादिकं कृत्वा कुम्भान्यभ्यर्च्य मन्त्रवित् ।
प्रायश्चित्तार्थमन्त्रेण घृतेनैव शतं हुनेत् ॥ ३९ ॥

த்வார பூஜாதிகான் க்ருத்வா கும்பானப்யர்ச்ய மந்த்ர வித்!
ப்ராயச்சித்தார்த்த மஸ்த்ரேண க்ருதேனைவ சதம் ஹுனேத்!!

வழக்கம் போல் தூரிய பூஜை முதலான துவார பூஜை, பூத சுத்தி, யாகேஸ்வர சிவ பூசை, வரை செய்து பிரார்த்தித்து முருகன், வள்ளி, தெய்வானை, ஜயந்தாதி மந்திர மூர்த்திகளை

பூசித்து ஹோமம் செய்து இடையே உண்டான எல்லா இடையூறுகளையும் போக்க வல்ல அஸ்த்ர மந்திரங்களால் நூறு முறை ஆகுதி செய்க

जयादिरभ्याधानाञ्च राष्ट्रभृच्च हुनेत्तत: ।
शयनाद्बिम्बमुत्थाप्य गव्यै: पञ्चामृतैरपि ॥ ४० ॥

ஜயாதி ரப்யா தானம்ச ராஷ்ட்ரப்ருச்ச ஹுனேத்ததா!
சயனாத் பிம்ப முத்தாப்ய கவ்யை:
பஞ்சாம்ருதைரபி!!

செயல்கள் செம்மையாகும் பொருட்டு ஜயாதி அப்யாதானம் ராஷ்ட்ரப்ருத் முதலான பகுதிகளை பிறகு செய்து படுக்கையிலிருந்து முருகனை எழுப்பி சயனத்திலிருந்து முருக பிம்பத்தை எழுப்பி பஞ்ச கவ்யத்தாலும் பரிசுத்தப் படுத்தி

शुद्धाद्भिरभिषिच्याशु भूषयेद्भूषणार्हकै: ।
शिरोवदनहृत्कुक्षिगुह्यपादद्वयेप्रद: ॥ ४१ ॥

சுத்தாத் பிரபிஷிச்யாசு பூஷயேத் பூஷணார்ஹகை:!
சிரோ வதன ஹ்ருத்குக்ஷி குஹ்ய பாத த்வயே ப்ரத:!!

பரிசுத்தமான நீராலும் நீராட்சி அணிவிக்கத் தக்க அணிகலன்களை அழகாக அணிவித்து தலை, முகம், இதயம், வயிறு தொப்புளுக்கு கீழ் மறைவிடமான மர்மஸ்தானங்கள் இருபாதங்கள் முதலான இடங்களில் முறையே

पञ्चब्रह्मसर्ववक्त्रयुक्त: षण्मूर्तिमेव च ।
विन्यस्य च षडङ्गानि स्वस्वदेशेषु विन्यसेत् ॥ ४२ ॥

பஞ்ச ப்ரம்ம சர்வ வக்த்ர யுக்தஷ் ஷண்மூர்த்தி
மேவச!
வின்யஸ்யச ஷடங்கானி ஸ்வஸ்வ தேசேஷு
வின்யஸேத்!!

பஞ்ச பிரும்ம ஷடங்க சைவ மஹாமந்திரங்களோடு ஆறு முகத்திற்கு ஆறாவது முகத்திற்கும் அந்தந்த இடங்களில் நியாஸம் செய்யவும்

न्यस्त्वाथ मातृकान्यासं मूर्धादिक्रमशो बुध: ।
कुम्भबीजं समादाय बेरस्य हृदि विन्यसेत् ॥ ४३ ॥

ந்யஸ்த்வாத மாத்ருகா ந்யாஸம் மூர்த்தாதி க்ரமசோ
புத:!
கும்பம் பீஜம் சமாதாய பேரஸ்ய ஹ்ருதி
வின்யசேத்!!

பிறகு "அ" முதல் "க்ஷ" வரையுள்ள 51 அக்ஷரமந்திரங்களால் முறைப்படி அந்தந்த அவயவங்களில் நியாஸம் செய்து ஷடாக்ஷர மூலமந்திரத்தை விக்ரஹத்தின் ஹிருதயத்தில் கும்பத்திலிருந்து எடுத்து அறிவறிந்த நிலையில்

मूलमन्त्रेण मतिमान् कुम्भाद्भिरभिषेचयेत् ।
वर्धन्योर्बीजमादाय न्यसेत् स्वस्वस्तनाग्रके ॥ ४४ ॥

மூல மந்த்ரேண மதிமான் கும்பாத் பிரபிஷேசயேத்!
வர்த்தன்யோர் பீஜமாதாய ந்யேஸேத் ஸ்வஸ்வஸ்த
நாக்ரகே!!

நின்று மூல மந்திரமான ஷடாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டே கும்ப நீரால் நீராட்டி மற்ற இரு தேவி கும்பங்களிலிருந்து தேவி மூலமந்திரத்தால் அந்தந்த தேவியின் மார்பகத்தில் சேர்த்து

तत्तत्करकतोयेन स्वबीजेनाभिषेचयेत् ।
विद्येशकुम्भान् पूर्वादिपद्मपीठेऽभिषेचयेत् ॥ ४५ ॥

தத்தத் கரக தோயேந ஸ்வபீஜேநாபி ஷேசயேத்!
வித்யேச கும்பான் பூர்வாதி பத்ம பீடேபிஷேசயேத்!

அந்தந்த, கலச நீரால் தேவி மூல மந்திரத்தால் இரு தேவிக்கும் அபிஷேகித்துப் பின்னர் ஜயந்தாதி வித்யேச கும்ப நீரை ஸ்ரீ முருகனின் பத்ம பீடத்தில் கிழக்கு முதலான திசைகளில்அபிஷேகிக்க வேண்டும்.

वस्त्राभरणमाल्याद्यैरर्चयेत्तु हृदा बुधः ।
महाहविर्निवेद्याथ ताम्बूलमपि दापयेत् ॥ ४६ ॥

வஸ்த்ராபரண மாலாத்யை ரர்சயேத்து ஹ்ருதா புத:!
மஹா ஹவிர் நிவேத்யாத தாம்பூலமபி தாபயேத்!

ஆடை அணிகல மாலைகளாலங்கரித்து ஹிருதய மந்திரத்தால் ஞான வானான அர்ச்சகர் அர்ச்சித்து முறைப்படி பக்குவஞ் செய்யப்பட்ட சிறப்பு நிவேதனம் செய்து பிறகு வெற்றிலை பாக்கும் (முறைப்படி பட்டியாக வாசனைப் பொருள்களோடு கட்டப் பட்டதை) நிவேதனம் செய்ய வேண்டும்

प्रार्थयित्वा नमस्कृत्य ब्रह्मणान् भोजयेत्ततः ।
आचार्यं पूजयेत्तत्र वित्तशाठ्यं न कारयेत् ॥ ४७ ॥

ப்ரார்த்த யித்வா நமஸ்க்ருத்ய ப்ராம்மணான் போஜயேத் தத:!
ஆசார்யம் பூஜயேத்தத்ர வித்தசாட்யன்ன காரயேத்!!

பிறகு ஸ்ரீ முருகப் பெருமானை மனதார வேண்டி நமஸ்கரித்துப் பிறகு அந்தணர்களுக்கு அன்னமளித்து ஆசார்ய சிவாசார்யரை ஸ்ரீ முருகனாக பாவித்து பூசித்து உரிய உயரிய முறையில் சன்மானங்கள் சம்பாவனைகளை ஒளிவு மறைவின்றி செய்விக்கற்பாலது

प्रतिष्ठविधिरित्युक्तं पूजाविधिमथ श्रृणु ।
आचार्यहस्तमादाय बेरकर्ता प्रपूजयेत् ॥ ४८ ॥

ப்ரதிஷ்டாவிதி ரித்யுக்தம் பூஜா விதி மத ச்ருணு!
ஆசார்ய ஹஸ்தாதாதாய பேரம் கர்தா ப்ரபூஜயேத்!!

ஸ்ரீ முருகப் பெருமானின் ஆன்மார்த்த மூர்த்தியின் பிரதிஷ்டை விதத்தை இவ்வாறு கூறப்பட்டது பிறகு பூசை முறைகளை கேள்! (என்று சிவபெருமான் கௌசிக முனிவருக்கு கூறுகிறார்). ஆசார்யர் தனது திருக்கரங்களால் பூஜை செய்ய இருக்கின்றவருக்கு (குருவருளால் திருவருள் பெறும்) (முறையில்) பெற்று பூசிக்க வேண்டும்.

एककालं द्विकालं वा त्रिकालं वा दिनं प्रति ।
पूजास्थानं नवेनैव गोमयेनानुलिप्य च ॥ ४९ ॥

ஏக காலம் த்விகாலம்வா த்ரிகாலம்வா தினம் ப்ரதி!
பூஜா ஸ்தானன் நவேநைவ கோமயேனானு லிப்யச!!

பூஜை புரியும் அறை தரைப்பகுதி அவ்வப்போது பசுஞ்சாணத்தால் சுத்தப் படுத்தப்பட்டு மெழுகி துடைத்து கோலங்கள் போடப்பட்ட நிலையில் தினசரி ஒரு காலமோ, இரு வேளையோ, மூன்று வேளையோ (பூஜகர் விருப்பப்படி)

गन्धपुष्पजलादीनि पूजाद्रव्याणि गृह्य च ।
सौरपूजां पुरा कृत्वा चोत्तराभिमुखस्थितः ॥ ५० ॥

கந்த புஷ்ப ஜலாதீனி பூஜா த்ரவ்யானி க்ருஹ்யச!
சௌர பூஜாம் புரா க்ருத்வா உத்தராபி முக ஸ்த்தித:!!

சந்தனம், உதிரிமலர், (அணிவிக்கும் மாலைசரம்) பூஜைக்குரிய (தீபம், தூபம், கற்பூரம், ஊதுபத்தி, திராக்ஷை, கற்கண்டு, தேன், பால், அன்ன நிவேதனம்) முதலியவற்றோடு சூரிய பூஜையை முன்னதாக செய்து பிறகு வடக்கு முகமாக அமர்ந்து கொண்டோ நின்று கொண்டோ

भस्मनिक्षिप्य बिधिना रुद्राक्षमपि धारयेत् ।
षण्मूर्तिहितं पञ्चब्रह्माभिः पञ्चमन्त्रकः ॥ ५१ ॥

பஸ்ம நிக்ஷிப்ய விதிநா ருத்ராக்ஷமபி தாரயேத்!
ஷண்மூர்த்தி ஸஹிதம் பஞ்ச ப்ரம்மபி: பஞ்ச மந்த்ரத:!!

திருநீறு தரித்து சிவமணிமாலை அணிந்து கொண்டு அறுமுகனின் ஆறுமுகத்துக்குரிய பஞ்ச பிரும்ம ஷடங்க மந்திரங்களை (குருமுகமாகக் கேட்டுக் கொண்டபடி)

शिरोवदनहृत्कुक्षिगुह्यपादद्वये न्यसेत् ।
अङ्गान्यगेषु विन्यस्य प्रणवार्घ्यं प्रकल्पयेत् ॥ ५२ ॥

சிரோவதந ஹ்ருத்குக்ஷி குஹ்ய பாதத்வயே ந்யஸேத் !
அங்கான்யங்கேஷு வின்யஸ்ய ப்ரணவார்க்யம் ப்ரகல்பயேத் !!

தலை, முகம், இருதயம் வயிறு மறைவிட பாதமிரண்டிலும் மந்திர பூர்வமாக ந்யாசார்ச்சனை செய்து பிரணவ மகாமந்திரத்தால் பூஜைக்குரிய அர்க்கிய ஜலத்தில் அபிமந்திரணம் செய்து

विस्तीर्णपीठे मतिमान् पूर्वास्य: परमानयेत् ।
पूर्वद्वारं तु सञ्चिन्त्य द्वारदेवान् प्रपूजयेत् ॥ ५३ ॥

விஸ்தீர்ண பீடே மதிமான் பூர்வாஸ்ய: பரமானயேத் !
பூர்வ த்வாரந்து ஸஞ்சிந்த்ய த்வார தேவான் ப்ரபூஜயேத் !!

ஞான பண்டிதனை பூசிக்கும் பேறு பெற்ற ஞான வானான பூஜகர் கிழக்கு முகமாக பெரிய பீடத்தில் ஸ்ரீ முருகப் பெருமான் திருமேனியை எழுந்தருளச் செய்து கிழக்கு வாயிற் தேவதைகளை நன்கு மனதில் தியானித்து முதலில் பூஜித்து

वास्तुनाथं च नैर्ऋत्यामैशान्यां स्वगुरून् यजेत् ।
आत्मशुद्धिं तत: कुर्यादन्तर्यजनमारभेत् ॥ ५४ ॥

வாஸ்து நாதஞ்ச நைருத்யாம் ஐசான்யாம் ஸ்வகுருன் யஜேத் !
ஆத்ம சுத்திம் தத: குர்யா தந்தர்யஜந மாசரேத் !!

பிறகு வாஸ்து நாதனை பிரும்மாவை தென்மேற்கிலும், தென் கிழக்கில் தனது குருநாதரையும் பூஜித்து ஆன்ம சுத்தியையும் அகப் பூசையையும் மேற்கொள்ள வேண்டும்.

विशेषार्घ्यं प्रकल्प्याथ द्रव्यशुद्धिं समाचरेत् ।
स्कन्दमन्त्रै: समावाह्य सोऽहंभावेव पूजयेत् ॥ ५५ ॥

விசேஷார்க்யம் ப்ரகல்ப்யாத த்ரவ்ய சுத்திம் சமாசரேத் !
ஸ்கந்த மந்த்ரைஸ் சமாவாஹ்ய சோஹம்பாவேந பூஜயேத் !!

பிறகு விசேஷார்க்யம் கல்பித்து பூசித்து சடாக்ஷரத்தால் மந்திரித்து பூசை உபகரணங்கள் திரவியங்களை புனிப்படுத்தி முருக மந்திரத்தால் தன்னை அர்ச்சித்து அவனே தானேயாகி நின்று புறப்பூசை ஆற்ற வேண்டும்.

पूजापर्युषितं सर्वं सुमित्राय प्रदापयेत् ।
पूजापीठे तलास्तीर्णं वामहस्ततलेऽपि वा ॥ ५६ ॥

பூஜா பார்யுஷிதம் சர்வம் சுமித்ராய ப்ரதாபயேத் !
பூஜா பீடே தலாஸ்தீர்ணம் வாம ஹஸ்த தலேபிவா !!

பூஜையில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்கள் நிவேதனங்களை(நிர்மால்யங்களை) சுமித்ர சண்டிகேஸ்வரருக்கு சமர்ப்பித்து முருகன் பூஜை பலனை வேண்டிப் பெற வேண்டும். பூஜை பலகையில் (பீடத்திலோ) இடது கையில் வைத்துக் கொண்டோ

बेरं विवेश्य शुद्धाद्भि: स्नापयेतस्त्रमन्त्रत: ।
आधाराख्यमनन्तं च धर्माद्यांघ्रिचतुष्टयम् ॥ ५७ ॥

பேரன் நிவேஸ்ய சுத்தாத்பி ஸ்நாபயே தஸ்த்ர மந்த்ரத: !
ஆதாராக்ய மநந்தஞ்ச தாமாத்யங்ரி சதுஷ்டயம் !

திருவுருவை எழுந்தருளச்செய்து தூயநீரால் அஸ்த்ர மந்திரத்தால் நீராட்டி ஆதார சக்தி அனந்தாஸன பூஜையும் தர்மம் முதலான சிம்மாஸனத்திலுள்ள

अधर्मादिचतुष्पादमथोर्ध्वच्छदनद्वयम् ।
कन्दादीनि शकुन्यादि मण्डलत्रितयं यजेत् ॥ ५८ ॥

அதர்மாதி சதுஷ்பாத மதோர்த்வப் ஸதநத்வயம் !!
கந்தாதீனி சகுன்யாதி மண்டல த்ரிதயம் யஜேத் !!

அதர்மாதிகளையும் யோகாஸன பூஜையையும் கிழக்கு முதலான பத்மாஸன பூஜையில் சகுனீ முதலான நவ சக்திகளையும் சூர்ய சோம அக்னி மண்டலங்களையும் அதன் அதிபர்களையும்

पृथिव्यादिप्रकृत्यन्तं सुब्रह्मण्यासनं यजेत् ।
भानुमध्ये तु शिवयोर्मध्यगं संस्मरन् बुध: ॥ ५९ ॥

ப்ரதி வ்யாதி ப்ரக்ருத்யந்தம் சுப்ரம்மண்யாஸநம் யஜேத் !
பானு மத்யேது சிவயோர் மத்யகம் ஸம்ஸ்மரன் குஹம் !!

பூமி முதல் (ஆதார சக்தி முதல் குடிலா சக்தி வரை) முருகப் பெருமானின் ஆஸனங்களை பூசித்து சூரிய மண்டலத்தில் அம்மையப்பனோடு நடுவில் முருகப் பெருமானை தியானித்து

तस्मिन् मूर्ति समादाय मूलेनावाहयेत्सुधी: ।
स्थापनं चीशमन्त्रेण सन्निधानं तु पूरुषात् ॥ ६० ॥

தஸ்மின் மூர்த்தி சமாதாய மூலேநாவாஹயேத் சுதீ:!
ஸ்தாபநம் ஈச மந்த்ரேண ஸன்னிதாநம்து பூருஷாத் !!

அந்த விக்ரஹத்தில் சூர்ய மண்டல மத்தியில் சோமாஸ் கந்தராக தியானித்த மூர்த்தியையும் (தனது இதய குகையில் இடைவிடாது இலங்கும்) மூர்த்தியையும் நினைத்து ஈசான மந்திரத்தால் ஆவாஹ ந ஸ்தா பனமும் தத்புருஷ மந்த்ரத்தால் சன்னிதான செய்கையையும்

सन्निरोधमघोरेण स्वागदं वाम मन्त्रत: ।
दिग्बन्धमस्त्रमन्त्रेण कवचेनावकुण्ठनम् ॥ ६१ ॥

ஸன்னிரோத மகோரேண ஸ்வாகதம் வாம மந்த்ரத:!
திக் பந்தமஸ்த்ர மந்த்ரேண கவசேனாவ குண்டனம் !

பிறகு செய்யவேண்டிய சன்னிரோதன செய்கையை அகோர மந்திரத்தாலும் ஸ்வாகதம் எனும் வரவேற்பு அர்க்கியத்தையும் திக்பந்தனத்தை அஸ்த்ர மந்திரத்தாலும் கவச மந்திரத்தால் அவகுண்டனமெனும் மந்த்ர வேலியும்

अमृतीकरणं सद्योजातेनैव तु मन्त्रत: ।
स्वामिन्सर्वजगन्नाथ यावत्पूजावसानकम् ॥ ६२ ॥

அம்ருதீ கரணம் சத்யோஜாதேநைவது மந்த்ரத:!
ஸ்வாமின் ஸர்வ ஜகன்னாத யாவத் பூஜாவஸாநகம் !!

அமிருதீ கரணமெனும் ஸம்ஸ்காரத்தை ஸத்யோஜாத மந்திரத்தாலும் செய்து எல்லா உலகுக்கும் என்றும் நாயகரே தாங்கள் பூசை நிறைவுறும் வரை

तावत्वं प्रीतिभावेन बिम्बेऽस्मिन् संनिधिं कुरु ।
इदं मन्त्रं समुच्चार्य पद्ममुद्रां महाख्यकम् ॥ ६३ ॥

தாவத் சம்ப்ரீதி பாவேந பிம்பேஸ்மின் சன்னிதிர்பவ !
இதம் மந்த்ரம் சமுச்சார்ய பத்ம முத்ரா மஹாக்யகம் !!

(அதுவரை) பூசை நிறைவுறும் வரை இனிய கனிவான களிப்போடு இத்திருவுருவில் நிறைந்து எழுந்தருளியிருக்க வேண்டி மந்திரங்களை மனதால் கூறிக் கொண்டே தாமரை மலர் போன்ற முத்திரையையும், மகாமுத்திரையையும்

षण्मुखं दर्शयित्वाथ पाद्यमाचमनार्घ्यकम् ।
दत्त्वाभिषेचयेदद्भिरब्धिगैर्न तु मन्त्रत: ॥ ६४ ॥

ஷண்முகம் தர்சயித்வாத பாத்யமாசமனார்க்யகம் !
தத்வாபிஷேச யேதத்பி ரப்திகைர்நது மந்த்ரத:!!

ஷண்முகீ முத்திரையையும் காண்பித்து பாத்யம் எனும் திருவடிவத்திருநீறு அளித்து வாயில்மும் முறை ஆசமனம் கொடுத்து தலையில் ஒருமுறை அர்க்கியமும் கொடுத்து அர்க்கிய

ஜலத்தினாலேயே அபிஷேக பாவனையில் நீர்த்துளிகளை மேல் நோக்கி தெளித்து பிம்பத்தின் மேல் மந்திரமின்றிச் செய்க

ततः कुमारमानेति चण्डापि स्कन्दसूक्ततः ।
मूलब्रह्मषडङ्गैश्च गायत्र्याचाभिषेचयेत् ॥ ६५ ॥

தத: குமாரமானேதி சண்டாபி ஸ்கந்த ஸூக்தத:!
மூல ப்ரம்ம ஷடங்கைஸ்ச காயத்ரியாசாபி ஷேசயேத்!!

பிறகு குமாரமான என்ற மந்திரத்தாலும் ஸ்கந்த சூக்தம் என்ற வேத மந்திரத்தாலும், மூல மந்திரத்தாலும், ஸம்ஹிதா மந்திரத்தாலும், ஸ்கந்த காயத்ரியாலும், சுமித்ர சண்ட ஸ்தானத்திலும் அபிஷேகத்தை ப்ரோக்ஷணமாக நீர்த்துளிகள் மேல்நோக்கு தெளிப்பாக செய்ய வேண்டுமென கூறப்படுகிறது.

सूक्ष्मवस्त्रं ततो दत्वा भूषयेद्भूषणार्हकैः ।
मनोरथार्घ्यं दत्वा दण्डभङ्गी समुच्चरेत् ॥ ६६ ॥

ஸூக்ஷ்ம வஸ்த்ரம் ததோ தத்வா பூஷயேத் பூஷணார்ஹகை:!
மனோரதார்க்யம் தத்வாத தண்ட பங்கீம் சமர்ச்சயேத்!!

மனதிற்கு கந்த வண்ணம் முருகனுக்கு மானசீகமாக உயர்ந்த தகுந்த அணிகலன்களால் அலங்கரித்து மனோரத அர்க்கியம் கொடுத்து தண்ட பங்கி நியாச அர்ச்சனையை நன்கு செய்யவும்

वक्त्रभङ्गीमपोह्याथ पञ्चावरणमर्चयेत् ।
धेनुपद्मात्रिशूलं च मकरस्रङ्नमस्कृताम् ॥ ६७ ॥

வக்த்ர பங்கீ மபோஹ்யாத பஞ்சாவரண மர்ச்சயேத்!
தேனு பத்ம த்ரிஶூலம்ச மகர ஸ்ருங் நமஸ்க்ருதாம்!!

வக்த்ர பங்கியை அர்ச்சிக்காமல் பஞ்சாவரண தேவதைகளை அர்ச்சித்து தேனு முத்திரை பத்ம முத்திரை திரிசூல முத்திரை மகர முத்திரையும் ஸ்ருங் முத்திரையையும் காண்பித்து நமஸ்கரிக்கவும்

प्रदर्शयेद्धूपदीपं नैवेद्यमपि दापयेत् ।
पानीयमपि ताम्बूलमुखवाससमन्वितम् ॥ ६८ ॥

ப்ரதர்சயேத்தூப தீபன் நைவேத்யமபி தாபயேத்!
பாணீயமபி தாம்பூல முகவாஸ சமன்விதம்!!

தூபங்காண்பித்து, பிறகு தீபம் காண்பித்து நிவேதனம் நிவேதித்து, குடிநீர் நிவேதித்து, வெற்றிலைப் பாக்கு, வாசனைப் பொருள்களோடு சமர்ப்பித்து

धूपं धूरसि मन्त्रेण दीपमुद्दीप्य मन्त्रतः ।
श्रियै जातेति मन्त्रेण नीराजनमतः परम् ॥ ६९ ॥

தூபம்தூரஸி மந்த்ரேண தீபமுத்தீப்ய மந்த்ரத:!
ச்ரியை ஜாதேதி மந்த்ரேண நீராஜந மத: பரம்!!

தூரஸி என்ற மந்திரத்தால் தூபமும், உத்தீப்ய என்ற மந்திரத்தால் தீபமும், ஸ்ரியை ஜாத என்ற மந்திரத்தால் பிறகு தீபாராதனையும் காண்பித்து

बृहत्सामेति मन्त्रेण भस्मं दत्वा गुहाय च ।
जगद्भवेति मन्त्रेण पुष्पाञ्जलिमतः परम् ॥ ७० ॥

ப்ரஹத் சாமேதி மந்த்ரேண பஸ்மம் தத்வா குஹாயச!
ஜகத் புவேதி மந்த்ரேண புஷ்பாஞ்சலி ரத: பரம்!!

பிருஹத்சாம என்ற மந்திரத்தால் முருகனுக்கு விபூதியை காண்பித்து (பிரஸாதமாக்கி) பிறகு ஜகத்புவம் என்ற மந்திரத்தால் புஷ்பாஞ்சலியும் செய்ய வேண்டும்

मूलमन्त्रं शतं जप्त्वा ब्रह्माङ्गानां दशांशकम् ।
स्तोत्रप्रदक्षिणाभीष्टप्रार्थनां चैव कारयेत् ॥ ७१ ॥

மூல மந்த்ரம் சதம் ஜப்த்வா ப்ரம்மாங்காநாந்த ஸாம்சகம் !
ஸ்தோத்ர ப்ரதக்ஷிணாபீஷ்ட ப்ராா்த்தநாஞ்சைவ காரயேத் !!

மூல மந்திரத்தை நூறு முறை ஜபம் செய்து பஞ்ச பிரும்ம ஷடங்க மந்திரங்களையும் பத்தில் ஒரு பங்காக பத்து முறை ஜபம் செய்து தோத்திரங்கள் கூறி வலம் வருதலைச் செய்து ப்ராத்தனை வேண்டு கோள்களையும் செய்விக்க வேண்டும்.

साधु वाऽसाधु वा कर्म यद्यदाचरितं मया ।
तत्सर्वं देवदेवेश गृहाणाराधनं परम् ॥ ७२ ॥

சாதுவாசாதுவா கா்ம யத்யதாசரிதம் மயா !
தத் ஸா்வந்தேவ தேவேச க்ரஹாணாராதனம் பரம் !!

முறையாகவோ முறை மாறி தவறுதல்களாகவோ என்னால் பூஜை செய்யப்பட்ட முறையில் உண்டாகி யிருக்குமேயாகில் அவைகள் அனைத்தையும் மேலான பூசை வரிசையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

मन्त्रेणानेन देवाय दापयेच्चुलुकोदकम् ।
न्यूनातिरिक्तं यत् कर्म तत्क्षमस्व मया कृतम् ॥ ७३ ॥

மந்த்ரேணானேந தேவாய தாபயேச்சுளு கோதகம் !
ந்யூனாதிரிக்தம் யத்கா்ம தத் க்ஷமஸ்வ மயாக்ருதம் !!

இவ்வாறு மந்திரங் கூறிக் கொண்டு முருகனுக்கு மூல மந்திரம் முடிந்தவரை ஜபித்து விசேஷார்க்கிய ஜலம் சேர்த்து ஆள்காட்டி விரல் நுனிவழியே நீரை விட்டு வலதுகரத்தில் (வரத) (கையில்) அர்ப்பணித்துப் பிறகு என்னால் செய்யப்பட்ட பூசையில் குறைவு நிறைவுகளைப் பொருத்தருள வேண்டுமென ப்ரார்த்திக்கவும்

प्रियाभीष्टो हि भगवान् पुनरागमनाय च ।
पश्चात्सुमित्रपूजां च कुर्यादपि विशेषतः ॥
एवं यः कुरुते मर्त्यः स्कन्दसामीप्यमाप्नुयात् ॥ ७४ ॥

ப்ரியாபீஷ்டோஹி பகவான் புனராகமனாய ச !
பஸ்சாத் சுமித்ர பூஜாம்ச குா்யாதபி விசேஷத:!!
ஏவம் ய: குருதே மா்த்ய ஸ்கந்த ஸாமீப்ய மாப்னுயாத் !

பூஜையால் மன நிறைவெய்திய பகவானே மீண்டும் எனது பூஜையில் எழுந்தருள வேண்டுமென பிரார்த்தித்துப் பிறகு சுமித்ர சண்டிகேஸ்வரரை சிறப்பாக பூஜை செய்து முருக பூஜை பயனை முழுவதும் வேண்டி பெறுவது சிறப்பு ஆகும். இவ்வாறுயார் பூஜை செய்கிறாரோ அவர் முருகனின் சமீபத்தில் எப்போதும் வசிக்கும் பேறு பெறுவர்

इति श्रीकुमारतन्त्रे आत्मार्थयजनविधिर्नाम
सप्तत्रिंशः पटलः

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே ஆத்மார்த்த யஜந விதிர்நாம
ஸப்தத்ரிம்ச: படல:

இவ்வாறு ஸ்ரீகுமார தந்திர ஆகமத்தில் ஆன்மார்த்த வழிபாட்டு முறை அத்யாயமானது முப்பத்து ஏழாவது படலமாக கூறப்பட்டுள்ளது.

॥ अष्टत्रिंशः पटलः ॥

அஷ்டத்ரிம்ச: படல:

38 வது படலம்

तैलाभ्यङ्गविधिः

தைலாபிஷேக விதி:

(தைலம்) எண்ணை காப்பிடும் முறை

तैलाभ्यङ्गं प्रवक्ष्यामि श्रृणु कौशिक सुव्रत ।
स रोगविनाशार्थं गुहं तैलेन लेपयेत् ॥ १ ॥

தைலாப்யங்கம் பிரவக்ஷ்யாமி ச்ருணு கௌசிக சுவ்ரத !
சர்வரோக விநாசார்த்தம் குஹம் தைலேந லேபயேத் !!

முருகப்பெருமானுக்கு (சுகந்த) வாசனைமிகு எண்ணெய்க்காப்பிடுவது எல்லா வியாதிகளையும் போக்கடிப்பதாகும். அப்படிச்சிறப்பான தைலக் காப்பைப் பற்றி கூறுகிறேன். கௌசிகரே ! கேளும்.

सर्वकालेषु कर्तव्यमेके वा नित्यपूजने ।
मासादौ पञ्चदश्यां वा सोमाङ्गारकवारके ॥ २ ॥

சர்வ காலேஷு கர்தவ்ய மேகேவா நித்ய பூஜநே !
மாசாதௌ பஞ்ச தச்யாம்வா சோமாங்காரக வாரகே !!

நித்ய பூஜையில் காலந்தோறும் ஒருமுறை எண்ணெய்காப்பிடவேண்டும். மாதப்பிறப்பு, பௌர்ணமி, அமாவாஸை, செவ்வாய்க்கிழமை திங்கட்கிழமைகளிலும் கூட சிறப்பாக வாசனை பொருந்திய (எள் எண்ணெய்) அல்லது (சந்தனாதி தைலம்) காப்பிடப்பட வேண்டும்.

कृत्तिकायां विशाखायां प्रोक्षणे नैमित्तिके पुनः ।
उत्सवाद्यन्तकाले च काम्ये नैमित्तिके पुनः ॥ ३ ॥

கிருத்திகாயாம் விசாகாயாம் ப்ரோக்ஷணே நைமித்திகேபுந:
உத்ஸவாத்யந்த காலேச காம்யே நைமித்திகே புந: !!

கார்த்திகை, விசாகம் போன்ற நக்ஷத்திரங்களிலும் கும்பாபிஷேக காலங்களிலும் திருவிழா முடிந்து திருக்கழுவாய் திருமஞ்சனம் (பிராயஸ்சித்தாபிஷேகம்) காலங்களிலும் மற்றும் வரும் வார, மாத, வருட விசேஷ தினங்களிலும் மறுபடியும் மறுபடியும் (திரு எண்ணெய்காப்பிடுவது சிறப்பும் பயனுமுடையது)

एवमादिषु कार्येषु तैलाभ्यङ्गं प्रचक्षते ।
शैलजे मृण्मये चैव दारुजेऽभ्यङ्गमुत्तमम् ॥ ४ ॥

ஏவமாதிஷு கார்யேஷு தைலாப்யங்கம் ப்ரசக்ஷதே !
சைலஜே ம்ருண்மயேசைவ தாருஜேப்யங்க முத்தமம் !!

இப்படிப்பட்ட காரியங்களிலும் காலங்களிலும் திருஎண்ணெய்க்காப்பு சிறப்புமிக்கது. கருங் கல்லினால் ஆனதும் மண்ணால் ஆனதும் மரத்தினா லானதும் எண்ணெய்க்காப்புக்குரியது

स्वर्णबेरे भित्तिचित्रे दर्पणेन विचक्षणः ।
रत्नजे लोहजे कुर्यात्प्रोक्षयेद्दारुमूर्धनि ॥ ५ ॥

ஸ்வர்ணபே ரேபித்திசித்ரே தர்பணேந விசக்ஷண: !
ரத்நஜே லோஹஜே குர்யாது ப்ரோக்ஷயேத்தாரு மூர்த்தநி !!

தங்கத்தினால் செய்யப்பட்ட விக்ரஹத் திற்கும் சுவற்றில் சித்திரவடிவில் உள்ளவற்றிற்கும் பிம்பத்திற்கு எதிரே முகம் பார்க்கும் ரசம்பூசிய கண்ணாடியில் வைத்து அந்த நிழல் பிம்பத்தில் செய்தால் அந்த பிம்பத்திற்கு செய்தது போல் இருக்கும். மேலும் ரத்னங்களினால் ஆனதும் உலோகத்தால் மரத்தினால் செய்யப்பட்ட விக்ரஹத்திற்கு

தலையில் மேலிருந்து தெளித்தல் (சிரசில் தைலப்ரோக்ஷணம்)

नवीनतिलतैलञ्च पुष्पगन्धैः सुयोजयेत् ।
स्वर्णपात्रे तु रजते कांसपात्रे च मृण्मये ॥ ६ ॥

நவீன தில தைலஞ்ச புஷ்பகந்தைச்சு யோஜயேத்!
ஸ்வர்ண பாத்ரே துரஜதே காம்ச பாத்ரேச ம்ருண்மயே!!

புது எண்ணெயில் வாசனை மிகு மணத்தை தரும் மலர்களைப் போட்டு தங்கம், வெள்ளி, வெண்கலம், மண்பாத்திரங்களில் (வைக்கவும்)

शुद्धपात्रे गृह्णीयात् तैलं वस्त्रेण शोधितम् ।
निरीक्ष्य मूलमन्त्रेण प्रोक्ष्य चास्त्रेण मन्त्रतः ॥ ७ ॥

சுத்த பாத்ரேண க்ருஹ்ணீயா த்தைலம் வஸ்த்ரேண சோதிதம்!
நிரீக்ஷ்ய மூலமந்த்ரேண ப்ரோக்ஷ்ய சாஸ்த்ரேண மந்த்ரத:!!

சுத்தமான பாத்திரத்தில் எடுத்து துணியினால் வடிகட்டி சுத்தம் செய்து மூலமந்திரத்தால் பார்த்து அஸ்த்ர மந்திரத்தால் மேலே இருந்து விழுமாப்போல நீர்த் தெளிக்கவேண்டும்.

तेन मन्त्रेण संताड्य कवचेनावकुण्ठयेत् ।
धेनुमुद्रां हृदा दत्वा विन्यस्य गुहसंनिधौ ॥ ८ ॥

தேந மந்த்ரேண சந்தாட்ய கவசேனாவ குண்டயேத்!
தேனுமுத்ராம் ஹ்ருதாதத்வா வின்யஸ்ய குஹஸன்னிதௌ!!

அதே அஸ்த்ர மந்த்ரத்தால் நன்குதட்டி கவச மந்திரத்தால் (வேலிபோல) ஆள்காட்டி விரலால் மந்திர வேலியிட்டு பசுமுலைக்காம்பு போல் முத்திரைக்காட்டி ஹ்ருதய மந்திரமுச்சரித்து முருகன் முன் வைக்கவேண்டும்.

संकल्पमपि पुण्याहं वाचयित्वा विचक्षणः ।
धूपदीपं हृदा दत्वा पाद्यमाचमनं तथा ॥ ९ ॥

சங்கல்பமபி புண்யாஹம் வாசயித்வா விசக்ஷணம்!
தூபதீபம் ஹ்ருதாதத்வா பாத்ய மாசமனந்ததா!!

(உறுதி) சங்கற்பம் செய்து புண்யாகம் (நல்லநாளை சொல்லுவிதிலை) செய்து, தூபதீபம் ஹ்ருதய மந்திரத்தால் கொடுத்து பாத்யம், ஆசமனமும் (கொடுத்து).

तेनैव दन्तकाष्ठञ्च तन्मत्रेणैव दर्पणम् ।
ताम्बूलं तेन मन्त्रेण पश्चादभ्यङ्गमाचरेत् ॥ १० ॥

தேனைவ தந்த காஷ்டஞ்ச தன்மந்த்ரேணைவ தர்பணம்!
தாம்பூல -ந்தேந மந்த்ரேண பச்சாதப்யங்க மாசரேத்!!

அதே ஹ்ருதய மந்திரத்தாலேயே பல்துலக்கும்குச்சி அதே மந்திரத்தால் கண்ணாடி தாம்பூலம் சமர்பித்து பிறகு தைலக்காப்பிட வேண்டும்.

प्रच्छन्नपटमावेष्ट्य वस्त्रादीनि विपोह्य च ।
मूलविन्दुसमादाय कूर्चेनास्त्रेण मन्त्रतः ॥ ११ ॥

ப்ரச்சன்ன படமாவேஷ்ட்ய வஸ்த்ர தீனி விபோஹ்யச!
மூலபிந்து சமாதாய கூர்ச்சேநாஸ்த்ரேண மந்த்ரத:!!

திரைசீலையை இழுத்து மூடி பிம்பவஸ்த்ரங்களை களைந்து அஸ்த்ர மந்த்ரத்தால் தர்பை கூர்ச்சத்தால் சிரஸிஸ் எண்ணையை தெளித்து விடவும்.

प्रोक्ष्य बेरस्य शिरसि गुरुर्दक्षिणहस्ततः ।
मूर्धादिपादपर्यन्तमभ्यङ्गमपि पीठकम् ॥ १२ ॥

ப்ரோக்ஷ்ய பேரஸ்ய சிரசி குருர்தக்ஷிண ஹஸ்தத:!
மூர்த்தாதி பாத பர்யந்த மப்யங்க மபி பீடகம்!!

பிம்பத்திற்கு சிரஸில் (தலையில்) புரோக்ஷித்து ஆசார்யர் வலக்கையால் தலைமுதல் கால்வரையிலும் பீடத்திலும் (தடவவேண்டும்).

तैलं हृदयमन्त्रेण लेपयेच्छुद्धवस्त्रत: ।
नमस्कृत्वा क्षमस्वेति शक्तिपूर्वं विचिन्तयेत् ॥ १३ ॥

தைலம் ஹ்ருதய மந்த்ரேண லேபயே ச்சுத்தி வஸ்த்ரத:!
நமஸ்க்ருத்வாக்ஷமஸ்வேதி பக்திபூர்வம் விசிந்தயேத்!!

தூய்மையான துணியால் இருதய மந்திரத்தினால் மெதுவாக தடவி பக்திமேலீட்டோடு வணங்கி பொறுத்தருளவேண்டி நன்கு சிந்திக்க

पिष्टं वामेन मन्त्रेण सर्वामपि लेपयेत् ।
स्नाप्य पश्चादघोरेण तथैवामलकैर्गुरु: ॥ १४ ॥

பிஷ்டம் வாமேன மந்த்ரேண ஸர்வாங்க மபிலேபயேத்!
ஸ்நாப்ய பச்சாத கோரேண ததைவாமலகைர்குரு : !!

அரிசி மாப்பொடியை வாமதேவமந்திரங் கூறிக்கொண்டே முருகனின் முழு உருவத்திலும் தடவவேண்டும். பிறகு நெல்லிவற்றல்தூளால் அகோர மந்திரங்கூறிக் கொண்டு அபிஷேகம் செய்யற்பாலது (அர்ச்சகரால்).

हरिद्रं वक्त्रमन्त्रेण शुद्धद्भिरभिषेचयेत् ।
अर्चनोक्तविधानेन तदूर्ध्वं कर्मकारयेत् ॥ १५ ॥

ஹரித்ரம் வக்த்ர மந்த்ரேண சுத்தாத்பிரபிஷேசயேத்!
அர்ச்சனோக்த விதாநேந ததூர்த்வம் கர்மகாரயேத்:!!

மஞ்சள் தூள் (பொடி)யை கரைத்து தத்புருஷ மந்திரங்கொண்டு சுத்தஜலத்தினாலும் அர்ச்சனை பாதத்தில் செய்வதுபோல் அபிஷேகத்தை தலையிலிருந்து செய்யவேண்டும்.

भक्तेभ्य: परिचारेभ्यो दापयेत् तैलकं क्रमात् ।
ताम्बूलं दापयेत् पश्चादाचार्यमपि तोषयेत् ॥ १६ ॥

பக்தேப்ய: பரிசாரேப்ய: தாபயேத்தைலகம் க்ரமாத்!
தாம்பூலந்தாபயேத் பச்சாதாசார்ய மபி தோஷயேத்!!

முருகனின் பரிவார பக்த மூர்த்திகளுக்கும் அணிவித்து தாம்பூலம் சமர்பித்து (பிரசாத எண்ணெய்) (பக்தர்களுக்கு விநியோகித்து) அபிஷேகம் செய்த ஆசார்ய அர்ச்சகரை சந்தோஷப்படும்மாறு சன்மானங்கள் அளிக்கற்பாலது.

अम्लेन लोहवेराणि शुद्धिं कृत्वैवमर्चयेत् ।
एवं य: कुरुते मर्त्यो सर्वान् कामानवाप्नुयात् ॥ १७ ॥

அம்லே நலோஹபேராணி சுத்திம் க்ருத்வை வ மர்ச்சயேத்!
ஏவம் ய:குருதே மர்த்ய: ஸ்ஸர்வான் காமானவாப்நுயாத்!!

பஞ்சலோக விக்ரஹங்களுக்கு (அபிஷேகத் திற்குப் பின்) அழுக்குகள் விலகும்படி சுத்திசெய்து அலங்கரித்து பூசிக்கவேண்டும். இவ்வாறு யார் செய்கிறார்களோ அவர் எல்லா விருப்பங்களும் இனிதே நிறைவேறப்பெறுவார்.

इति श्रीकुमातन्त्रे तैलाभ्यङ्गविधिर्नामाष्टत्रिंश: पटल:

இதி ஸ்ரீகுமாரதந்த்ரே கௌசிகப்ரச்னே
தைலாபிஷேக
விதி படல:

இவ்வாறு ஸ்ரீகுமார தந்திரத்தில் சௌசிக
ப்ரச்னத்தில் தைலாபிஷேக முறை என்னும்
முப்பத்தி எட்டாவது படலமாகும்.

॥ एकोनचत्वारिंशः पटलः ॥

ஏகோநசத்வாரிம்ச: படல:

39 வது படலம்

मासपूजाविधिः

மாஸ பூஜா விதி படல:

மாத பூசை முறை சுருக்கம்

अतः परं प्रवक्ष्यामि मासपूजाविधिक्रमम् ।
चैत्रे दमनकं प्रोक्तं वैशाखे गन्धपूजनम् ॥ १ ॥

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி மாஸ பூஜா விதி க்ரமம் !
சைத்ரே தமநகம் ப்ரோக்தம் வைசாகே கந்த பூஜனம் !!

இதற்கு மேல் மாதபூஜை முறை, முறைப்படி கூறப்படுகிறது. சித்திரையில் மருக்கொழுந்தும் வைகாசியில் சந்தனமும் சிறப்புப் பொருட்களாக

(சித்திரை மாத முழு நிலா (நாளிலும்) சித்திரை கூடிய நன்னாளிலும் வைகாசி நிறைநிலா நாளோடு இணையும் விசாக விண்மீன் கூடிய நாளில் மைதூர் சந்தனமும்) கூறப்படுகிறது.

ज्येष्ठमासे फलैः पूजा क्षीरेणाषाढ मासमके ।
श्रावणे शर्करापूजा पूर्वैः प्रोष्ठपदेऽर्चना ॥ २ ॥

ஜேஷ்ட மாஸே பலை: பூஜா க்ஷீரேணாஷாட மாஸகே !
ச்ராவணே சர்க்கரா பூஜா பூர்வை: ப்ரோஷ்ட பதேர்ச்சநா !!

ஆனியில் பழங்களாலும், ஆடியில் (பாலாடை திரட்டிப் பால்) பாலபிஷேகம் ஆவணியில் சர்க்கரை அபிஷேகமும், சர்க்கரை கலந்த அரிசி மாவால் செய்யப்பட்ட அதிரஸமும் புரட்டாசி பூரட்டாதியில் பௌர்ணமியில் சிறப்பு பூசை செய்யப்படுகிறது.

अश्विन्यामन्नपूजा च कार्तिक्यां दीपरोहणम् ।
घृतेन मार्गशीर्षे च क्षौद्रेण पुष्यमासके ॥ ३ ॥

அஸ்வின்யா மன்ன பூஜாச கார்த்திக்யாந்தீப ரோஹணம் !
க்ருதேச மார்க சீர்ஷேச க்ஷௌத்ரேண புஷ்ய மாஸகே !!

ஐப்பசி மாத அஸ்வனி நக்ஷத்திரத்தில் பௌர்ணமியில் அன்னாபிஷேக பூஜையும் கார்த்திகையில் பௌர்ணமி கூடிய கார்த்திகையில் தீப பூஜை தீபத்தை உயர்வில் விமானத்தில் ஏற்றி வழிபடுவதும் மார்கழி பௌர்ணமி திருவாதிரை கூடிய நாளில் நெய்யபிஷேகமும் தைப்பூச நிறைநிலா நாளில்தேனாபிஷேகமும்

घृतकम्बलकं माघे फाल्गुने दधिपूजनम् ।
मासपूजां विनान्यैश्च पूजनैर्निष्फलं भवेत् ॥ ४ ॥

க்ருத கம்பளகம் மாகே பால்குனே ததி பூஜனம் !
மாஸ பூஜாம் விநாந்யைச்ச பூஜனைர் நிஷ்பலம் பவேத் !!

மாசியில் நெய்யில் நினைத்த கம்பளம் (ஆட்டு உரோமத்தால் ஆனது) பங்குனியில் தயிர் அபிஷேகம் தயிர்சாத நிவேதனம் என்ற முறைப்படி மாத பூஜைச் சிறப்பு செய்திடாவிடில் (நித்ய) அன்றாடப் பூசையும் உலகுக்கு பயனின்றி ஆகிவிடும்.

प्रजावृद्धिकरं नृणां राज्ञां विजयवर्धनम् ।
नकुर्याच्चेत्तु मोहेन सर्वदोषकरं भवेत् ॥ ५ ॥

ப்ரஜா விருத்திகரன் ந்ருணாம் ராஞ்ஞாம் விஜய வர்தனம் !
நகுர்யாச்சேத்து மோஹேன ஸர்வ தோஷகரம் பவேத் !!

மக்களுக்குச் சந்ததி மரபு வளர்ச்சியும் அரசர்களுக்கு வெற்றி அளிக்கும் இப்பூசையானது அறியாமையால் சரிவரச்

செய்யப்படாவிடில் (நேர்மாராக) எல்லாக் குற்றங்களும் தீவினைகளும் எளிதில் வளரும்.

तस्मात्सर्वप्रयत्नेन कर्तव्यं मासपूजनम् ।
नित्यपूजावसाने तु नैमित्तिकमथाचरेत् ॥ ६ ॥

தஸ்மாத் ஸர்வ பிரயத்நேன கார்தவ்யம் மாஸ பூஜனம் !
நித்ய பூஜாவசாநேது நைமித்திக மதாசரேத் !!

ஆகையினாலேயே இம்மாத பூசையும் நித்திய பூசையின் இறுதியில் மாதச் சிறப்பு பூஜையை மிக மிக முயற்சியெடுத்து செய்யத் தக்கதாகும்.

चैत्रमासपूजा

சைத்ரமாஸ பூஜா

சித்திரை மாத சித்திரை கூடிய நிறை நிலாப்பூஜை

चैत्रेषु षष्ठ्यां सप्तम्यां त्रयोदश्यां तु वार्चयेत् ।

कौशिक उनाच -

न ज्ञातं मदनोत्पत्तिस्तां वदस्व महेश्वर ॥ ७ ॥

ईश्वर उवाच -

சைத்ரேஷு ஷஷ்ட்யாம் ஸப்தம்யாம் த்ரயோதஸ்யாம் து வார்ச்சயேத் !
கௌசிக உவாச :-
கௌசிகோ வாசனஞாதம் மதனோத் பத்திஸ்தாம் வதஸ்வமகேச்வர !!
ஈச்வர உவாச:-

சித்திரை மாதத்தில் ஷஷ்டி அல்லது சப்தமி அல்லது திரயோதசியிலாவது செய்யலாம். கௌசிக முனி கூறுகிறார்:- சிவபெருமானே (ஒப்பிலா அப்பனே) அடியேனறியாத அனங்கன் (மன்மதன்) உதித்த வரலாறு கூறுவீராக.

ஈச்வரோவாச - சிவபெருமான் கூறுகிறார்

पुरा देव्यै मया प्रोक्तं मदनोत्पत्तिकारणम् ।
महर्षे श्रूयतां तेषां क्षोतॄणां पापनाशनम् ॥ ८ ॥

புராதேவ்யை மயா ப்ரோக்தம் மதநோத்பத்தி காரணம் !
மஹர்ஷே ச்ருயதாம் தேஷாம் க்ஷோத்ருணாம் பாபநாசனம் !!

முன்பு என்னால் என் தேவியின் பொருட்டு கூறப்பட்ட காமதேவனின் தோன்றக் காரணமான கூறப்பட்டதை மாமுனிவரே கேளும்! கேட்பவர்களுடைய பாபங்களை (தீவிணைப் பயன்களை) நீக்கவல்ல வலிமை வாய்ந்ததை.

मया पुरा दग्धकामो अन्यैर्यत्र पुनर्ददेत् ।
रतिप्रीतिसमत्वेन गुहेन नयनाम्बुना ॥ ९ ॥

மயா புராதக்த காமோ அன்யைர் யத்ர புனர்ததேத் !
ரதி ப்ரீதி ஸமத்வேன குஹேன நயனாம் புனா !!

என்னால் முன்பு எரிக்கப்பட்ட மன்மதன் வேறு ஒரு சமயத்தில் அவனது துணைவியான ரதிதேவியின் வேண்டுகோளுக்கும் விருப்பத் திற்கும் இணங்க மீண்டும் கருவேளான மன்மதனும் செவ்வேளான முருகப் பெருமானும் கண்ணில் வெளிப்பட்ட நீராலேயே உண்டாயினர்.

तत्र स्थाने समुत्पन्ना दिव्या दमनमंजरी ।
तत्र तद्गन्धमाघ्राय सिद्धसाध्या दिवौकसः ॥ १० ॥

தத்ர ஸ்தானே ஸமுத்பன்னா திவ்யாதமன மஞ்சரீ!
தத்ர தத் கந்த மாக்ராய சித்தஸாத்யாதி வௌகச:!!

அவ்விடத்திலேயே ரதி தேவியானவள் வெளிப்பட்டாள் அங்கு அந்நறுமணமேந்தி ஸித்தர்கள், ஸாத்யர்கள், அமரர்கள் (அனைவரும் வந்தனர்)

सर्वे देवाश्च मुनयो हृष्टा नृत्यन्ति सर्वदा ।
परस्परं चिन्तयन्तो ब्रह्माद्या प्रापुरत्र वै ॥ ११ ॥

ஸர்வ தேவாச்ச முனயோ ஹ்ருஷ்டா நிருத்யந்தி ஸர்வதா !
பரஸ்பரம் சிந்தயந்தோ பிரம்மாத்யா: ப்ராபுரத்ரவை !!

எல்லா தேவர்களும் முனிவர்களும் மிகவும் குதூகலமடைந்து எல்லா விதத்திலும் சந்தோஷமடைந்து ஆடிப்பாடி களித்தார்கள். ஒருவருக்கொருவர் சிந்தித்துக் கொண்டும் சந்தித்துக் கொண்டும் பிரும்மாதி தேவர்களும் அங்கேயே கூடி நின்றனர்.

गुहाय शक्रः प्रणमत् ब्रह्माणमिदमब्रवीत् ।
किमिदं त्वतिसौरभ्यं तद्वदस्व प्रभो ततः ॥ १२ ॥

குஹாய சக்ர: ப்ரணமத் பிரம்மாண மித மப்ரவீத் !
கிமிதம் த்விதி ஸௌரப்யம் தத்வதஸ்வ ப்ரபோதத: !!

முருகப் பெருமானை இந்திரன் வணங்கினார் - பிரும்மாவிடம் இவ்வாறு கூறினார். எவ்வாறு எடுத்தியம்பினாரே ஏ! ப்ரபோ பிறகு அதை கூறுங்கள் என்று

ततः प्रोवाच हृष्टात्मा ब्रह्मा सुरपतिं प्रति ।
पुरा दग्धोऽथ देवेन दीप्तो यत्र मनोभवः ॥ १३ ॥

தத: ப்ரோவாச ஹ்ருஷ்டாத்மா பிரம்மாசுர பதிம்ப்ரதி !
புரா தக்தோத தேவேன தீப்தோயத்ர மனோபவ: !!

பிறகு மன நிறைவோடு பிரும்மாவானவர் இந்திரனிடம் கூறினார். முன்பு பரமசிவனால் மன்மதன் எரிக்கப்பட்ட வரலாற்றையும் மீண்டும் அவரது துணைவியால் (வேண்டப்பட்டு) மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட கதையையும் எடுத்தியம்பினார்.

तत्रोत्पन्ना वनाच्चित्रा दमनी कापि कन्दली ।
यथानङ्गस्तथा सा तु जगदानन्ददायिनी ॥ १४ ॥

தத்ரோத்பன்னாவ நாச்சித்ரா தமனீகாபி கந்தளீ !
யதாநங்க ஸ்ததா ஸாது ஜகதானந்த தாயினீம் !!

அங்கு வந்,த ரதிதேவியானவள் கற்புக் கரசியாய் உலகத்திற்கு உற்ற இன்பத்தை உயர்ந்த இன்பமாகத் தருபவள் மன்மதனையும் தான் மட்டும் கண்டு களித்து உலகத்தவர் மன்மதன் லீலைகளை மட்டும் காணாமல் களிப்பவர்களாகச் செய்தாள்

सर्वेषामपि देवानां हृष्टं दमनपूजनम् ।
ब्रह्मेत्युक्त्वा पुरं प्रायात् दिवं सर्वे ययुस्ततः ॥ १५ ॥

ஸர்வேஷாமபி தேவானம் ஹ்ருஷ்டம் தமனபூஜனம் !
பிரம்மேத்யுக்த்வா பரம்ப்ராயாத் திவம் ஸர்வே யயுஸ்தத: !!

எல்லா தேவர்களுக்கும் மருக்கொழுந்து பூஜையானது (சித்திரைப் பருவ சித்திர விண்மீனில்) மகிழ்ச்சி தருகிறது என்று கூறி எல்லோரும் விண்ணுலகடைந்தனர்.

कुमारस्य महत्प्रीतिर्दान्तं हि मुनिपुङ्गव ।
पूर्वोक्तायां तिथौ विप्र सुमुहूर्ते सुलग्नके ॥ १६ ॥

குமாரஸ்ய மஹத்ப்ரீதிர் தாந்தம்ஹி முனிபுங்கவ !
பூர்வோக்த யாந்திதௌ விப்ர ஸு²முஹூர்தே ஸு²லக்னகே !!

முனிமணியே முருகனுக்கு மிகவும் விருப்பமானஇம்மருக்கொழுந்து பருவ பூசையானது பௌர்ணமி நன்னாளில் நல்ல முகூர்த்த லக்னத்தில் முன்பு கூறப்பட்டது போல செய்யற்பாலது அந்தணரே

गत्वारामं तु दमनं प्रोक्षयेदस्त्रमन्त्रतः ।
हरप्रसादात् संजातो दमनत्वं पुराकिल ॥ १७ ॥

கத்வாராமந்து தமனம் ப்ரோக்ஷயே தஸ்த்ர மந்த்ரத: !
ஹரப்ரஸாதாத் ஸஞ்ஜாதோ தமனத்வம் புராகில !!

முன்பு அரனார் திருவருளால் உண்டானது அல்லவா மருவு - மரிக்கொழுந்து (தமனம்) அதை அஸ்திரமந்திரத்தால் நீர் மேலெழுந்து விழும்படிச் செய்து

सुब्रह्मण्यार्चनायैव नेतव्योऽपि प्रसीद मे ।
एवं दमनमामन्त्र्य संग्राह्य सदनं व्रजेत् ॥ १८ ॥

சுப்ரம்மண்யார்ச்சனாயைவ நேதவ்யோஸி ப்ரஸீதமே !
ஏவம்தமன மாமந்த்ர்ய ஸங்க்ராஹ்ய பவனம் வ்ரஜேத் !!

முருகன் திருவடியை அர்ச்சனையால் அடைய இருக்கும் ஏ ! மரிக்கொழுந்தே எனக்கும் நீ அருள்வாயாக

देवाग्रे स्थण्डिलं कृत्वा तावत्तद्बद्धमलिकाम् ।
कृतनित्यविधिः पश्चात् कुण्डे वा स्थण्डिलेऽपि वा ॥ १९ ॥

தேவாக்ரே ஸ்தண்டிலம் க்ருத்வா தாவத் தத்பத்த மாலிகாம் !
க்ருத நித்ய விதி: பச்சாத் குண்டேவா ஸ்தண்டிலேபிவா !!

முருகனுக்கு முன்பு சிறுமேடை அமைத்து அதில் மருக்கொழுந்தினால் அமைத்த மாலைகளை வைத்து அவைகள் சுத்திகரிக்கப்படும் வரையில் இருக்கப்பட வேண்டும்) பிறகு குண்டம் (ஹோம) அமைத்தோ அல்லது தரையிலேயே சிறுமேடையிலோ

विधिनाग्निं समुत्पाद्य समृद्धं तु हुताशने ।
पलाशसमिधान्नाज्यलाजान् सक्तुतिलानि च ॥ २० ॥

விதினாக்னிம் ஸமுத்பாத்ய ஸம்ருத்தேது ஹுதாசநே !
பலாச ஸமிதாநாஜ்ய லாஜான் ஸக்து திலானிச !!

முறைப்படி அக்னியை பூசித்து புரசு (முருக்கு) சமித்துகளாலும், நெய்யினாலும் பொரிகளாலும், சத்துமாவு, எள்ளினாலும் நிறைவாக வேள்வி செய்து

मूर्ति चैवाङ्गमन्त्रैश्च स्कन्दसूक्तेन होमयेत् ।
त्रिसप्तकृत्वा संपातां तथैव जुहुयात् गुरुः ॥ २१ ॥

மூர்த்திஞ்சை வாங்க மந்த்ரைச்ச ஸ்கந்த சூக்தேந ஹோமயேத் !
த்ரி சப்த க்ருத்வா சம்பாதாம் ததைவ ஜுஹுயாத் குரு:!!

முருகன் மூலமந்திரங்களாலும் ஸ்கந்த சூக்தத்தினாலும் பிரம்மாங்க மந்திரங்களாலும் மும்முறையோ, ஏழுமுறையோ செய்து தமன மாலைகளுக்கு (மரிக்கொழுந்து மாலைகளுக்கு (சம்பாதாஹுதி) மந்திரத்தின் முடிவில் (ஸ்வாஹா) ஸ்வா என்று தீயிலும் ஹா என்று மாலைகளிலும் ஆசார்யர் செய்தல் வேண்டும்.

ततो नित्यावसाने तु स्नपनं कल्पयेद्बुधः ।
अभ्यर्च्य गन्धपुष्पाद्यैर्निवेद्यान्तं क्रमाद्ददेत् ॥ २२ ॥

ததோ நித்யா வசாநேது ஸ்நபநங்கல்பயேது புத:!
அப்யர்ச்சய கந்த புஷ்பாத்யை: நிவேத்யாந்தம் க்ருமாத்ததேத் !!

பிறகு நித்ய பூஜையின் முடிவில் ஸ்நபந காலங்களில் முருகனை அர்ச்சித்து (சந்தனம்) (மலர்கள் முதலியவைகளாலும்) நிவேதனம் வரை முறைப்படி செய்ய வேண்டும்.

मुखवासं च ताम्बूलं गुहाय च हृदा ददेत् ।
हिमतोयेन संमिश्रैर्धूपयेत्तु गुरूः पुनः ॥ २३ ॥

முகவாஸஞ்ச தாம்பூலம் குகாயச ஹ்ருதாததேத் !
ஹிமதோயேன ஸம்மிச்ரைர்தூபயேத்து குரு: புந:!!

பிறகு முகவாசம் என்னும் வாசனைப் பொருள்களோடு தாம்பூலத்தை ஹிருதய மந்திரத்தால் முருகனுக்கு அர்ப்பணித்து பன்னீர் தெளித்து மணங்கமழும்படி குருவான ஆசார்யர் செய்ய வேண்டும்

ततः पुष्पग्रहं कार्यं नानापुष्पैः सुशोभनैः ।
दमनमालां च पात्रस्थां वाहयित्वा द्विजेन तु ॥ २४ ॥

தத: புஷ்ப க்ரஹங்கார்யம் நானாபுஷ்பைஸ்சு சோபனை:!
தமன மாலாஞ்ச பாத்ரஸ்தாம் வாஹயித்வா த்விஜேநது!!

பிறகு மலர்மாலைகள் பல மலர்களால் மணப்பவைகளையும் பாத்திரத்தில் வைக்கப் பட்டுள்ள மரிக்கொழுந்து மருவுமாலை களை அந்தணரை எடுத்துக் கொள்ளச் சொல்லி

सर्वातोद्यसमायुक्तं कृत्वा धामप्रदक्षिणम् ।
द्वारेशानर्च्य देवाग्रे दामं न्यस्त्वासनोपरि ॥ २४ ॥

ஸர்வாதோத்ய சமாயுக்தம் க்ருத்வாதாம ப்ரதக்ஷிணம்!
த்வாரேசாநர்ச்ய தேவாக்ரே தாமன்ய ஸ்த்வாஸநோபரி!!

எல்லா மங்கள வாத்யங்களோடு ஆலயத்தை வலம் வந்து துவாரபாலகர்களை மலர்தூவி வழிபட்டு முருகனுக்கு முன் பெரியதட்டில் ஒரு ஆசனத்தில் மேல் வைத்து

आसनावरणादीनि संपूज्य च यथाविधि ।
मूर्धादिपादपर्यन्तं दामैर्भूष्य विशेद् गुरुः ॥ २६ ॥

ஆஸநாவரணாதீனி சம்பூஜ்ய ச யதா விதி!
மூர்த்தாதி பாத பர்யந்தம் தாமைர்பூஷ்ய விசேத்குரு:!!

ஆஸந மூர்த்தி மூல ஆவரணங்களையும் நன்கு முறைப்படி பூசித்து திருமுடி முதல் திருவடி வரை மரிக்கொழுந்து மாலைகளாலும் சரங்களாலும் தனிக் கொத்துக்களாலும் முருகனின் அங்கங்களில் படும்படி அழகுற அலங்கரிக்க வேண்டும் ஆசார்யர்

सैकत्रिंशत्कलान्यासं मातृकामपि विन्यसेत् ।
प्रभूतहविषं दद्यात् यथावित्तानुसारतः ॥ २७ ॥

ஸைகத்ரிம்சத் கலாந்யாஸம் மாத்ருகாமபி வின்யஸேத்!
ப்ரபூத ஹவிஷந்தத்யாது யதா வித்தானு சாரத:!!

முப்பத்தோரு எண்ணிக்கையுள்ள கலை நியாஸம் ஐம்பத்தோரு வடமொழி மஹாமந்திர எழுத்துக்களால் ஆன மந்திர நியாஸத்தையும் அர்ச்சனைகளாக செய்து தாராளமான அளவில் உயர்ந்த நிவேதனப் பொருள்களை முடிந்த அளவு நிவேதித்து

विज्ञापयेद्गुरुः पश्चात् वाञ्छितार्थफलप्रदम् ।
न्यूनं वाप्यतिरिक्तं वा भगवन् यन्मया कृतम् ॥ २८ ॥

விக்ஞாபயேத் குரு: பச்சாத் வாஞ்சிதார்த்த பலப்ரதம்!
ந்யூனம் வாப்ய திரிக்தம்வா பகவன் யன்மயாக்ருதம்!!

ஆசார்யர் விரும்பும் பயன்களை அடைய நன்கு பிரார்த்தித்து வேண்டுதல் செய்து என்னால் செய்த இப் பூஜையில் அறியாமையாலோ, தெரியாமையாலோ, புரியாமையாலோ, குறை நிறைகள் நிகழ்ந்திருப்பின் அவைகளை பொருத்தருள்க என மன்னிப்பு வேண்ட வேண்டும்.

सर्वं तदस्तु संपूर्णं महासेन कृपाम्बुधे ।
रात्रौ दाम विसृज्याय स्कन्दसूक्तेन पूजयेत् ॥ २९ ॥

ஸர்வந்த தஸ்து சம்பூர்ணம் மஹாசேன க்ருபாம்புதே!
ராத்ரௌ தாம விஸ்ருஜ்யாத ஸ்கந்த சூக்தேந பூஜயேத்!!

பெரிய தேவசேனைத் தலைவரே கருணைக் கடலே யாவும் நிறைவை எய்தியதாக ஏற்றுக் கொள்ள வேண்டி இரவில் (இரவு இறுதிப்பூசையில்) மருக்கொழுந்துகளை நீக்கி ஸ்கந்த சூக்தம் எனும் திருமறையால் பூசிக்க வேண்டும்.

स्नपनं तत्र कर्तव्यं प्रभूतहविषं ददेत् ।
दान्तं निवेदितं सर्वं सुमित्राय प्रदापयेत् ॥ ३० ॥

ஸ்நபனம் தத்ர கார்தவ்யம் ப்ரபூத ஹவிஷந்ததேத் !
தாந்தன் நிவேதிதம் சர்வம் சுமித்ராய ப்ரதாபயேத் !!

ஸ்நபனம் (திருக்குடமுழுக்கு) அங்கு செய்யப்பட வேண்டும் மறுபடியும் மிகுந்த சுவையும் அளவுமுடைய நிவேதனம் நிவேதிக்கப்பட்டு (எல்லா பக்தர்களின் இதய குகையில் இடம்பெற்றுள்ள முருகன் திருப்தியடையும்படி விநியோகிக்க வேண்டும்) முருகனுக்கு முழுதும் அலங்கரிக்கப்பட்ட மருக்கொழுந்து பிரஸாதங்களையும் அவருடைய சண்டீசனான சுமித்ர சண்டிகேஸ்வரருக்கு அர்ப்பணித்து (அவரிடம் முருக பூசையின் முழுப் பயனையும் வேண்டிப் பெற வேண்டும்.

अकृत्वैवं विधानेन देशिको दोषभाग्भवेत् ।
तदन्ते चोत्सवं कुर्यात्सर्वालङ्कारशोभितम् ॥ ३१ ॥

அக்ருத்வைவம் விதாநேந தேசிகோ தோஷ பாக்பவேத் !
ததந்தே சோத்ஸவம் குர்யாது சர்வாலங்கார சோபிதம் !!

ஆசார்யரானவர் (பூஜகர் அர்ச்சகர்) (நேரம், காலம், திரவியம், மந்த்ரம்) இவைகளைத் தவறாமல் மறவால் செய்யத் தவறினால் குற்றங்கள் மலிய நேரிடும். பிறகு உற்சவரை அலங்கரித்து ஆலயம் வலம் வருதலையோ மாடவீதி வலம் வருதலையோ செய்விக்க வேண்டும்.

प्रतिसंवत्सरं दान्तं कारयेदुत्सवोत्तमम् ।
अश्वमेधफलं भुङ्क्त्वा सोऽन्तं स्कन्दपुरं व्रजेत् ।
दमनारोहणं प्रोक्तं श्रृणु शीतोपचारकम् ॥ ३२ ॥

ப்ரதி சம்வத்ஸரம் தாந்தம் காரயேத்த்ஸ வோத்தமம் !
அச்வ மேத பலம் புங்க்த்வா சோந்தே ஸ்கந்தபுரம் வ்ரஜேத் !!
தமனாரோபணம் ப்ரோக்தம் ச்ருணு சீதோப சாரகம் !!

பிரதி வருஷமும் (ஆண்டுதோறும்) சித்திரைப் பருவமாகிய சித்திரை விண்மீன் கூடிய நிறைநிலா நாளில் இத்திருவிழா இயற்றற்பாலது. அஸ்வமேதயாகம் எனும் யாகம் செய்த பலனானது இவ்வழிபாட்டுத் திருவிழாவால் அடையப் படுகிறது. இவ்வாறு இயற்றுபவர்கள் அனைவரும் நிறைவாழ்வை நில உலகில் பெற்று முருகனூரில் முழுமையெய்துவர் இந்த மருக்கொழுந்து வழிபாட்டுக்கு அடுத்து வைகாசி மாதத்தில் பௌர்ணமியில் விசாக நக்ஷத்திரத்தில் நடத்த வேண்டிய சீத உபசாரம் பற்றி கேட்பீராக.

इति चैत्रमासपूजाविधिः

இது (சைத்ர மாஸ பூஜை) சித்திரை மாத சித்திரை கூடிய நிறைநிலாப் பூஜையாகும்.

॥ वैशाखमासपूजाविधिः ॥

வைசாகமாஸபூஜா விதி:

वैशाखे तु विशाखर्क्षे कुर्याच्छीतोपचारकम् ।
नित्यपूजावसाने तु नैमित्तिकमथाचरेत् ।
नवभिस्तु घटैः शुद्धैः शीतोदैः स्नपनान्वितैः ॥ ३३ ॥

வைசாகே து விசாகர்க்ஷே குர்யாச்சீதோபசாரகம் !
நித்ய பூஜா வஸாநேது நைமித்திக மதா சரேத் !
நவபிஸ்து கடைச்சுத்தை : சீதோதைஸ்ந பநாந்விதை:!

வைகாசி மாதத்திலே விசாக விண்மீன் கூடிய பௌர்ணமி நிறை நாளில் சீத உபசாரம் எனும் குளிர்விக்கும் உபசாரம் செய்க. தினப்பூசையின் இறுதியில் சிறப்பு பூசையை இயற்றுக. புது ஒன்பது கும்பங்களில் சுத்தமான குளிர்ச்சியான நீரை நிரப்பி அதில்

नानागन्धै समोपेतैः स्नापयेदसुरान्तकम् ।
कर्पूरकुङ्कुमोपेतैर्हिमाम्बुयुतचन्दनैः ॥ ३४ ॥

நாநா கந்தை ஸ்ஸமோபேதை
ஸ்தாபயேதசுராந்தகம்!
கற்பூர குங்குமோபேதைர் ஹிமாம்புயுத சந்தநை:!

எல்லா நறுமணங்களோடும் சந்தனம், பச்சைக் கற்பூரம், பன்னீர், குங்குமப்பூ சேர்த்து அசுரர்களின் அந்தகனனான முருகப் பெருமானுக்கு (வைகாசி மாதப் பூஜை செய்வதற்காக) ஸ்தாபிக்க வேண்டும். (நிறுவுதலை செய்ய வேண்டும்.)

मूर्धादिपादपर्दन्तमालिलिम्बेन्मुखं विना ।
सौरभ्यपुष्पैर्विविधैस्तत्क्षणप्रतिवोधितैः ॥ ३५ ॥

மூர்த்தாதி பாத பர்யந்த மாலி லிம்பேந்முகம் விநா!
ஸௌரப்ய புஷ்பைர் விவிதை ஸ்தது க்ஷண ப்ரதி
போதிதை:!

முடி முதல் அடி வரை மணப் பொருந்திய சந்தனத்தால் முகம் நீங்கலாகப் பூச வேண்டும். மணம்மிகு மலர்களையும் அதன்மேல் அழகுற அமைத்தல் வேண்டும்.

यथा निरन्तरं विप्र तथैवाच्छादयेद्गुहम् ।
कृष्णागरुभवैर्धूपैर्मृष्टैराजप्रकल्पितैः ॥ ३६ ॥

யதா நிரந்தரம் விப்ர ததைவாச்சாதயேத் குஹம்!
க்ருஷ்ணாக ருபவைர் தூபைர் ம்ருஷ்டை, ராஜ
ப்ரகல்பிதை:!

அருமறைகள் நிறை அந்தணர்கள் நிலை பெற்றிருக்க வேண்டி மணம்மிகு மலர்கள் சந்தனங்கள், நிறை மணிக்காட்சியாக செய்வித்து கஸ்தூரி, அகரு, முதலிய உயர்ந்த தூபங்காட்டி, தீபங்காட்டி, அரசர்கள் அமுது செய்கிறார் போல உள்ள உயர்ந்த முறையில் நிவேதனங்களை தயாரிக்கச் செய்து

कर्पूरवर्तिभिर्दीपैः पायसैः प्रचुरैरपि ।
जपैर्वेदस्वरैर्गीतैर्वाद्यैः सूक्तैर्मनोहरैः ॥ ३७ ॥

கற்பூர வர்திபிர் தீபை: பாயசை: ப்ரசுரைர பி!!
ஜபைர்வேதஸ்வரைர் கீதைர் வாத்யைஸ் சூக்தைர்
மநோஹரை:!

மனங்கள் நிறைந்து மணங்கள் நிறைந்து ஒரே மனதோடு முருகனின் முழுத் திருவருளையும் முயன்று அடையுமாப் போல பாயசம் ஈறாகப் பல்வேறு உணவு வகைகளையும் முறையாக தயாரித்து வேத மந்த்ர மூல மந்த்ர காயத்ரி மந்த்ர மாலா மந்திரங்களாலும் தோத்தரித்து

वीणावेणुरवैस्तोत्रैर्नमस्कारप्रदक्षिणैः ।
पूजयेत्प्रत्यहं स्कन्दं भक्त्या सप्तदिनावधि ॥ ३८ ॥

வீணா வேணுரவை ஸ்தோத்ரைர் நமஸ்கார
ப்ரதக்ஷிணை:!!
பூஜயேத் ப்ரத்யஹம் ஸ்கந்தம் பக்த்யா ஸப்த
திநாவதி!

புல்லாங்குழல் வீணை தோத்திரங்கள் (நமஸ்க்கார பிரதக்ஷிணங்கள்) நிலந்தோய வீழ்ந்து வலம் வந்து தினசரி பக்தி மனங்கமழ தொடர்ந்து ஏழு நாட்கள் வரை செய்க

एवं यः कुरुते मर्त्यः पुत्रपौत्रविवर्धनम् ॥ ३९ ॥
यान्यान् कामयते कामान् तांस्तान् ध्रुवमवाप्नुयात् ।
वैशाखपूजनं प्रोक्तं वसन्तोत्सवमुच्यते ॥ ४० ॥

ஏவம் யஃகுருதே மர்த்ய: புத்ர பௌத்ர விவர்த்தநம்!!
யாந்யாநு காமயதே காமாநு தாம்ஸ்தாநு
த்ருவமவாப்நுயாத்!!
வைசாக பூஜநம் ப்ரோக்தம் வஸந்தோத்ஸவ
முச்யதே!!

யார் இவ்வாறு முறையாக வழிபடுகிறாரோ அவர்கள் எப்படிப்பட்ட விருப்பங்களைக் கோருகிறார்களோ அவையனைத்தும் அவர்கள்

விருப்பப்படியே வாழையடி வாழையாக அவர்களது மரபு பிள்ளைகள், பேரன்கள் என்று இடைவிடாத குலப் பெருமையையும் குல வழித் தோன்றல்களையும் நிச்சயமாக அடைவர்

इति वैशाखमासपूजाविधि:

இது வைசாக மாஸ பூஜை விதியாகும்.

।। वसन्तोत्सवविधिः ।।

வஸந்தோத்ஸவ விதி:

चैत्रे वैशाखमासे तु शुक्लषष्ठ्यां समाचरेत् ।
प्रतिसंवत्सरं कुर्यात् सर्वलोकहिताय वै ।
शुक्लपक्षे शुभर्क्षे च सुमुहूर्ते सुवारके ।। ४१ ।।

சைத்ரே வைசாகமாசேது சுக்ல ஷஷ்ட்யாம்:
ஸமாசரேத்!
ப்ரதி ஸம்வத்ஸரங்குர்யாத் ஸர்வலோக ஹிதாயவை!
சுக்ல பக்ஷே சுபர்க்ஷேச ஸுமுஹூர்தே
ஸுவாரகே!!

வசந்தோத்ஸவ மென்பது வசந்த ருதுவின் இரு மாதங்களான சித்திரை வைகாசி இவைகள் ஷஷ்டி தினத்தில் கொடியேற்றம். செய்து முதல் நாள் திருவிழா துவங்கினால் பத்தாவது நாள் தீர்த்த வாரி சித்திரையில் சித்திரையிலும் வைகாசியில் விசாகத்திலும் நிறைவுறும். ஆண்டுதோறும் அகில உலகமும் நன்மைகள் பெற செய்யப்பட வேண்டும். வளர்பிறையில் உயர்விண்மீனில் நல்லோரையில் நன்னாளில் துவங்கத் தக்கது.

पूर्वेद्युरङ्कुराण्यर्प्य कौतुकं बन्धयेन्निशि ।
स्नपनं कल्प्य देवेशं पूर्वोक्तविधिनार्चयेत् ।। ४२ ।।

பூர்வேத்யு ங்குராண்யர்ப்ய கௌதுகம் பந்தயேந்நிசி!
ஸ்நபநம் கல்ப்ய தேவேசம் பூர்வோக்த விதி
நார்சயேத்!!

முதல்நாள் இரவு முளைப்பாலிகை யிடுதலைத் தொடர்ந்து மறுநாள் இரவு கங்கணம் கட்டிக் கொள்ளுதல் எனும் ரக்ஷாபந்தனக் கிரியை செய்து கொண்டு திருவிழா யாகாலயத்தில் முருகனை கும்பத்தில் புனல் வடிவிலும் குண்டத்தில் அனல் வடிவிலும் மூல உற்சவர் பிம்பத்திலும் முறையாக அர்ச்சித்து வழிபட வேண்டும்.

वसन्तं तु भवेच्छुद्धैर्दिव्यगन्धैर्मनोहरैः ।
नानापुष्पैश्च दामैश्च कुर्यात् पुष्पग्रहं बुधः ।। ४३ ।।

வஸந்தம் து பவேச்சுத்தைதர்
திவ்யகந்தைர்மநோஹரை:!
நாநா புஷ்பைஸ்ச தாமைஸ்ச குர்யாத் புஷ்ப கிரஹம்
புத:!!

அறிவுமிகு அர்ச்சகரானவர் பூந்தோட்ட மெனும் நந்தவனம் நிறுவி அதில் மணமிகு மலர்களை நல்கும் பூச்செடி, பூக்கொடி, பூமரங்களை உயிர்ப்பித்து வசந்த காலமான சித்திரை வைகாசியில் மட்டுமே மலரக்கூடிய மணம்மிகு மலர்களை உற்பத்தி செய்து மனம் மிகு மணம் மிகு மலர்களால் அழகிய மலர் தொடுப்புக்களாம் மணமிகு மலர்மாலைகளைத் தொடுத்து மாலைகட்டி பூமாலைகளைப் புனைந்து அணிவித்து மகிழ்வித்து மகிழ வேண்டும்.

पुष्पमालाञ्च पत्रेषु निक्षिप्य कवचेन तु ।
देवाग्रे स्थण्डिलं कृत्वा हृदा संप्रोक्ष्य चास्त्रतः ।। ४४ ।।

புஷ்பமாலாஞ்ச பத்ரேஷு நிக்ஷிப்ய கவசேநது!
தேவாக்ரே ஸ்தண்டிலம் க்ருத்வா ஹ்ருதாஸம்
ப்ரோக்ஷ்ய சாஸ்த்ரத:!!

மலர் மாலைகளை கவச மந்திரத்தால் அணிவித்து பத்திரங்களால் (இலைககளால்) அதே மந்திரத்தினால் அர்ச்சிக்க வேண்டும்.

முருகனுக்கு முன்பு சிறுமேடை அமைத்து இருதய மந்திரத்தாலும் அஸ்த்ர மந்திரத்தாலும் இயன்ற அளவு நீர் மேலெழுந்து விழுமாப்போல செய்க

अर्चयेद्धूपदीपं च कृत्वा धाम प्रदक्षिणम् ।
ततो मालां समुद्धृत्य शङ्खतुन्दुभिनि:स्वनैः ॥ ४५ ॥

அர்ச்சயேத் தூப தீபஞ்ச க்ருத்வா தாம ப்ரதட்சிணம் !
ததோமாலாம் சமுத்ருத்ய சங்கதுந்துபி நிச்வநை:!!

சங்க வாத்தியம் துந்து பி வாத்யம் (திருச் சின்னம்) இவைகள் முழங்க தூபதீப நிவேதனங் காண்பித்து அர்ச்சித்துப் பூஜிக்க வேண்டும். பிறகு மாலையை எடுத்து

विन्यसेत् स्कन्दमन्त्रेण मूलबेरस्य मूर्धनि ।
कृत्वागरुप्रधूपं च दीपं चैव प्रदापयेत् ॥ ४६ ॥

விந்யஸேத் ஸ்கந்த மந்த்ரேண மூலபேரஸ்ய மூர்த்தநி !
க்ருத்வா கரு ப்ரதூபஞ்ச தீபஞ்சைவ ப்ரதாபயேத் !

முருகனின் மூல மந்திர உச்சரிப்போடு முருகனின் மூல பேர (மூலஸ்தான பிம்ப மூர்த்னி) திருமுடியில் அணிவித்து அகரு என்னும் நகராவாசனைப் பொருள்களை இட்டுத் தீவிகைகள் நீங்கி ஞான அறிவுச் சுடரை வளர்க்கும் தீபங்காட்டிப் பூசிக்க வேண்டும்.

स्नाप्यचोत्सवबेरं तु भूषयेद्भूषणार्हकैः ।
स्वर्णराजतताम्राद्यैर्दोलां कल्प्य विधानतः ॥ ४७ ॥

ஸ்நாப்யசோத்ஸவபேரம் து பூஷயேத் பூஷணார்ஹகை:!
ஸ்வர்ணராஜத தாம்ராத்யை: போலாங்கல்ப்ய விதாநத:!!

முறைப்படி மூலபேரம் போல் உற்சவ சலமூர்த்தியான முருகன் பிம்பத்தை அபிஷேகித்து உரிய அணிகலன்களால் அலங்கரித்து தங்கம் வெள்ளி, தாமிரமாகிய, ஏதேனும் ஒரு ஊஞ்சல் நிறுவி

कूटपञ्जरसंयुक्तां सर्वालंकारशोभिताम् ।
डोलामारोप्य देवेशं शक्तिद्वयसमायुतम् ॥ ४८ ॥

கூட பஞ்சர ஸம்யுக்தாம் சர்வாலங்கார சோபிதாம் !
டோலா மாரோப்ய தேவேசம் சக்தித்வய ஸமாயுதம் !!

கூடு போன்ற எல்லா அழகுகளும் கூடிய ஊஞ்சலில் முருகப் பெருமானை இரு தேவியரோடு ஏற்றுவித்து

वाद्यैर्गीतैश्च नृत्तैश्च स्तोत्रैर्वेदपुराणकैः ।
डोलाक्रीडां ततः कृत्वा देवस्याचमनं ददेत् ॥ ४९ ॥

வாத்யைர் கீதைஸ்ச ந்ருத்தைஸ்சஸ்தோத்ரைர்வேத புராணகை:!
டோலாகீடாந்தத: க்ருத்வா தேவஸ்யாசமநந்ததேத் !!

வாத்யங்கள் முழங்க கீதங்கள் ஒலிக்க ஆடல்கள் சிறக்க துதிகள் புராணங்கள் சூழ ஊஞ்சல் சேவையை செய்வித்து முருகனுக்கு மும்முறை ஆசமனம் கொடுக்க

नालिकेरोदकं चैव पानकं विविधं तथा ।
अपूपान् विविधांश्चैव पायसैर्व्यञ्जनैर्युतम् ॥ ५० ॥

நாளிகேரோதகஞ்சைவ பாநகம் விவிதந்ததா !
அபூபாங்விவிதாம்சைவ பாயஸைர்வ்யஞ்சநைர்யுதம் !!

இளநீர், பானகத்தோடு பலவிதமான வடை அதிரஸம் போன்ற (ஐந்து வகை) பக்ஷணங்களுடன் பருப்பு பாயஸம் போன்ற எல்லாவகை அலங்கார சமையல் வகைகளோடும்

मुद्गान्नं कृसरान्नं च गुान्नं सूपसंयुतम् ।
प्रियङ्गुपिष्टं मधुमत् वल्लिकन्दं सपक्वकम् ॥ ५१ ॥

முத்கான்னம் க்ருஸராந்நஞ்ச குலான்னம் சூபஸம்யுதம் !
ப்ரியங்குபிஷ்டம் மதுமத் வள்ளிகந்தம் ஸபக்வகம் !!

வெண்பொங்கல், எள்சாதம் - வெல்ல அன்னம் - பருப்பு அன்னம், தினை மாவு, தேன் வள்ளிக்கிழங்கைப் பக்குவமாக சுட்டோ வேகவைத்தோ சுவைபட

नालिकेराम्बुपनसं फलपुण्ड्रेक्षुदण्डकैः ।
दद्याद्विधानतस्तत्र ताम्बूलमपि दापयेत् ॥ ५२ ॥

நாளிகேராம்பு பனஸம் பல புண்டரேக்ஷு
தண்டகை:!
தத்யாத் விதானதஸ்தத்ர தாம்பூலமபி தாபயேத்!!

இளநீர் பலாப்பழம் கருந்தண்டு துண்டுகள் போன்ற வற்றையும் நிவேதித்து உயர்ந்த வாசனை பொருந்திய கொழுந்து வெற்றிலைப் பாக்குடன் நிவேதிக்க வேண்டும்.

सर्वातोद्यसमायुक्तं नानाच्छत्रसमावृतम् ।
नानाध्वजसमोपेतं चामरैर्व्यजनैर्युतम् ॥ ५३ ॥

ஸர்வாதோத்யஸமாயுக்தம் நாநாச்சத்ரஸமாவ்ருதம் !
நானா த்வஜ ஸமோபேதம்
சாமரைர்வ்யஜநைர்யுதம் !!

எல்லா வாத்யங்களும் இனிதே ஒலிக்க எல்லா வகையான குடை, கொடி, சாமரங்கள் பக்தஜனங்கள் புடை சூழ

ग्रामप्रदक्षिणं कुर्यात् राजचिह्नैः समस्तकैः ।
परिवेषं क्रमाद्गत्वा मन्दीभूते दिवाकरे ॥ ५४ ॥

க்ராம ப்ரதக்ஷிணம் குர்யாத்
ராஜசிஹ்நைஸ்ஸமஸ்தகை!
பரிவேஷம் க்ருமாத் கத்வா மந்தீ பூதே திவாகரே !!

கிராம பிரதக்ஷிணஞ் செய்து ராஜ மரியாதைகள் மிளிர வீதியுலாப் போந்து மாலையில்

पल्लवैर्मञ्जरीभिश्च फलैः पुष्पैः समृद्धिकैः ।
आस्थानमण्डपोपेते सर्वालंकारसंयुते ॥ ५५ ॥

பல்லவைர் மஞ்சரீபிஸ்ச பலை:
புஷ்பைஸ்ஸம்ருத்திகை!
ஆஸ்தான மண்டபோபேதே சர்வாலங்கார
சம்யுதே!!

கொழுந்துகளோடும், கொத்துக்களோடும் மலர்களோடும், ஆஸ்தான மண்டபத்தை வந்தடைந்து

नृत्तगीतादिसंयुक्ते जलवापीसमीपके ।
देवोद्याने नदे चैव सर्वालंकारसंयुते ॥ ५६ ॥

ந்ருத்த கீதாதி ஸம்யுக்தே ஜலவாபீ சமீபகே!
தேவோத்யானேன தேவைஸ்ச சர்வாலங்கார
சம்யுதே!!

ஆடல் பாடல் நிறைவோடு நீர்நிலைகள் சமீபத்தில் நந்தவனப் பூந்தோட்டத்தில் எல்லா அழகுடனும்

अकुर्वंश्च जलक्रीडान् धारायन्त्रैर्गुणोत्तमाः ।
केचित् स्वर्णमयैः श्रृङ्गैः रौप्यताम्रविनिर्मितैः ॥ ५७ ॥

அகுர்வஞ்ச ஜல க்ரீடான் தாராயந்த்ரைர்
குணோத்தமா:!
கேசித் ஸ்வர்ணமயை ஸ்ருங்கை ரௌப்ய தாம்ர
விநிர்மிதை:!!

சிலர் தங்கமயமான கொம்புகளாலும், அல்லது வெள்ளிமயமான கொம்புகளாலும், நீர் நிலையில் விளையாட்டை செய்வர்.

स्त्रियश्चाप्सरसः सर्वा नरा गन्धर्वकिंनराः ।
एवं कृत्वा जलक्रीडां मण्डपे देवमानयेत् ॥ ५८ ॥

ஸ்த்ரியஸ்சாப்ஸரஸஸ்ஸர்வா நராகந்தர்வ கின்னரா:!
ஏவங்க்ருத்வா ஜலக்ரீடாம் மண்டபே
தேவமானயேத்!!

தேவ உலகத்துப் பெண்களும் மனிதப் பெண்களும், கின்னரர்களும் இவ்வாறு நீர்நிலை விளையாட்டைச் செய்து நீராழியின் நடுவே உள்ள மண்டபத்திற்கு முருகனை எழுந்தருளச் செய்வர்.

स्नपनं कल्प्य विधिना पूजयेदुपचारकैः ।
देवः समागतं स्तुत्वा वसनं कुसुमायुधम् ॥ ५९ ॥

ஸ்நபநம் கல்ப்ய விதினா பூஜயேத் உபசாரகை:!
தேவஸ்ஸமாகதம் ஸ்துத்வா வஸநங்குசுமாயுதம்!!

அங்கு ஸ்நபனம் எனும் குடவழிபாடு குன்றாது ஆற்றி பக்தர்கள் கூட்டத்தினர் நல்ல ஆடை, மலர்களை முருகனுக்கு அன்புக் காணிக்கையாக செலுத்தி மகிழ்வர்.

नीलदूर्वाङ्कुरश्याममतिसौन्दर्यशोभितम् ।
रतिप्रीत्युभयोर्मध्ये पुष्पसायकचापधृत् ॥ ६० ॥

நீல தூர்வாங்குரச்யாமம் அதி ஸௌந்தர்ய சோபிதம்!
ரதி ப்ரீத்யுபயோர்மத்யே புஷ்பஸாயக சாபத்ருத்!!

கரும்பச்சை நிறத்துடனும் அதிக அழகுடைய மன்மதனும் அவனுடைய அழகுமிகு பத்தினியுமான ரதிக்கும் நடுவில் மலரம்பும் கரும்பு வில்லும் கொண்டு

पुष्पमण्डलमध्ये तु रम्योद्याने समर्चयेत् ।
ओं नमः पञ्चबाणाय जगदाह्लादकारिणे ॥ ६१ ॥

புஷ்ப மண்டல மத்யே து ரம்யோ த்யானே சமர்ச்சயேத்!
ஓம் நம: பஞ்சபாணாய ஜகதாஹ்லாதகாரிணே!!

அழகான பூந்தோட்டத்தில் மலர் மண்டலங்களின் மத்தியில் (இவ்வாறு) அர்ச்சிக்க வேண்டும்) வணக்கத்திற்கும் போற்று தலுக்குமுரிய மலர்க்கணைகள் ஐந்துடைய மன்மதரே உலகனைத்தையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வல்லவரே

मन्मथाय जगन्नेत्रे रतिप्रीतिप्रियाय च ।
पुण्डरीकाक्षपुत्राय नमस्ते मीनकेतवे ॥ ६२ ॥

மன்மதாய ஜகந்நேத்ரே ரதிப்ரீதி ப்ரியாய ச!
புண்டரீகாக்ஷ புத்ராய நமஸ்தே மீனகேதவே!!

மனத்திலுதிப்பவருககும் உலகக் கண்ணாகப் போறறப்படுபவருக்கும் ரதிதேவியின் உயர் உயிர் நாயகனானவர்க்கும் தாமரைக் கண்ணனான திருமாலின் தவப் புதல்வருக்கும், மீன் கொடி மன்னர்க்கும் வணக்கங்கள்

मन्मथाय पदं पूर्वं विद्महे तदनन्तरम् ।
कामदेवाय संयुक्तं धीमहीति पदं ततः ॥ ६३ ॥

மன்மதாய பதம் பூர்வம் வித்மஹே ததநந்த்ரம்!
காமதேவா ஸம்யுக்தம் தீமஹி தீப தந்தத:!!

மன்மதாய வித்மஹே காமதேவாய தீமஹி! தந்நோ நங்கப்ரசோதயாத்! மன்மதாய வித்மஹே என்று பதம் முன்பாகவும் வித்மஹே என்ற பதம் இரண்டாவதாகவும் காமதேவாய என்ற பதம் மூன்றாவதாகவும்

तन्नोऽनङ्गपदस्यान्तं प्रयोक्तव्यं प्रचोदयात् ।
चतुर्विंशाक्षरीप्रोक्ता गायत्री मदनस्य तु ॥ ६४ ॥

தந்நோநங்க பதஸ்யாந்தே ப்ரயோக்தவ்யம் ப்ரசோதயாத்!
சதுர்விம்சாக்ஷரீ ப்ரோக்தா காயத்ரீ மதநஸ்ய து!!

தந்நோ அநங்க என்ற பதம் நான்காவதாகவும் ப்ரசோதயாது என்ற பதம் ஐந்தாவதாகவும் இருபத்து நான்கு அக்ஷரங்களை கொண்டது காமதேவனான மன்மத காயத்ரீ மந்தரமாகக் கூறப்படுகிறது.

दक्षे शैवलपिण्डेन रतिं पूर्वं समर्चयेत् ।
मञ्जर्या सहकारस्य वामे प्रीतिं प्रपूजयेत् ॥ ६५ ॥

தக்ஷேசைவல பிண்டேந ரதீம் பூர்வம் ஸமர்ச்சயேத்!
மஞ்சர்யா ஸஹ காரஸ்ய வாமேப்ரீதிம் ப்ரபூஜயேத்!!

தெற்கே ரதிதேவியையும், வடக்கே மன்மதனையும் பூஜித்து அவர்களுக்கு ப்ரியமான மலர்க் கொத்துக்களாலும் பூஜிக்க வேண்டும்.

प्रणवेन धनुर्बाणं तच्छिलीमुखपङ्कजम् ।
वसन्तं वनराजिं च गन्धपुष्पादिभिर्यजेत् ॥ ६६ ॥

ப்ரணவேந தநுர்பாணம் தச்சில்லீமுக பஞ்சகம்!
வசந்தம் வனராஜீஞ்ச கந்த புஷ்பாதிபிர்யஜேத்!!

பிரணவ மந்திரத்தால் மலர்கணைகள் ஐந்து உடையவரையும் வசந்தகால மன்மதனையும் தாமரைக் கண்ணியான ரதிதேவியையும் சந்தனம் மணமிகு மலர்களால் போற்றுக.

वस्त्रेण वेष्टय नैवेद्यं पायसं तु निवेदयेत् ।
ताम्बूलं दापयेत् पश्चात् तोषयेत्तान् विशेषतः ॥ ६७ ॥

வஸ்த்ரேண வேஷ்ட்ய நைவேத்யம் பாயஸம் து நிவேதயேத்!
தாம்பூலந்தாபயேத் பஸ்சாத் தோஷயேந்தான்விசேஷத:!!

உயர்ந்த துணிகளால் அலங்கரித்து பால்பாயசம் நிவேதித்து மணமிகு தாம்பூலம் சமர்ப்பித்து அவர்களை இயன்ற அளவு சந்தோஷப்படும்படி செய்வது சாலச் சிறந்ததாகும்.

तस्माद्वसन्तमूर्तिं च रतिकाम समन्वितम् ।
देवाय दर्शयेद्विद्वान् फलैः पुष्पोपहारकैः ॥ ६८ ॥

தஸ்மாத்வஸந்த மூர்த்திஞ்ச ரதிகாமசமந்விதம்!
தேவாய தர்சயேத்வித்வாந் பலை: புஷ்போபஹாரகை:!!

ஆகையினால் வசந்த காலத்தில் வசந்த மூர்த்தியை ரதிமன்மதனோடு பக்தர்களுக்கு காண்பித்து (பழங்கள் புஷ்பங்களால்) கனிகளாலும் மலர்களாலும் மகிழ்ச்சியூட்ட வேண்டும்

इक्षुदण्डैश्च गन्धैश्च ताम्बूलैश्च मवेहरेः ।
नानादीपशतैर्गेहं रात्रौ देवालयं व्रजेत् ॥ ६९ ॥

இக்ஷு தண்டைஸ்ச கந்தைஸ்ச தாம்பூலைஸ்ச மநோஹரை:!
நாநாதீபசதைர்கேஹம் ராத்ரௌ தேவாலயம் வ்ரஜேத்!!

கரும்புகளாலும் மணமிகு மலர்கள் சந்தனங்களாலும் மனங்கவர் நூறு விளக்குகளாலும் ஏற்றி மகிழ்வித்து இரவில் முருகப் பெருமானை ஆலயத்திற்கும் வீதியுலா முடிந்து பிரவேசிக்கச் செய்ய வேண்டும்.

प्रभूतहविषं दद्यात् यथाविभवविस्तरम् ।
ताम्बूलं दापयेत् पश्चात् धूपदीपं हृदा ददेत् ॥७० ॥

ப்ரபூதஹவிஷந்தத்யாத் யதாவிபவ விஸ்தரம்!
தாம்பூலம் தாபயேத் பஸ்சாத் தூபதீபம் ஹ்ருதாததேத்!!

ஆலயம் வந்தவுடன் அதிக அளவில் மிகுந்த சுவையில் பிரஸாதங்கள் முருகனுக்கு பொருளா தாரத்துக்குத் தக்கவாறு செய்து தூபதீபம் காட்டி நிவேதித்து தாம்பூலம் சமர்ப்பித்து பிறகு

शुद्धैरन्नैश्च विविधैः रपरैर्वामहामुने ।
जपैर्वेदस्वरैर्गीतैर्वाद्यैर्नृत्तैर्मनोहरैः ॥ ७१ ॥

சுத்தைரந்நைச்ச விவிதை: ரபரைர்வாம ஹாமுநே!
ஜபைர்வேதஸ்வரைர்கீதை: வாத்யைர்ந்ருத்தைதர் மநோஹரை:!!

முனிவரே! மனதுக் உகந்த பலவிதமான சுத்தமான அன்னங்களாலும், ஜபங்களாலும் வேதமந்த்ர ஒலிகளாலும் வாய்ப்பாட்டுக்களாலும் வாத்ய இசைக் கருவிகளாலும்

वीणावेणुवरैस्तोत्रैर्नमास्करैः प्रदक्षिणैः ।
एवं यः कुरुते मर्त्यः स पुण्यां गतिमाप्नुयात् ॥ ७२ ॥

வீணாவேநு வரைஸ்தோத்ரைர்ந மஸ்காரை: ப்ரதக்ஷிணை:!
ஏவம்.ய: குருதே மர்த்யஸ்ஸ புண்யாங்கதி மாப்நுயாத்!!

வீணை, புல்லாங்குழலாலும், துதிப்பாடல் களாலும், வணங்கி வலம் வந்து முறையாக பணிவாக, அன்பாக, முருகனுக்கே தன்னை அர்ப்பணித்து யார் ஒருவர் முறை வழுவாது முருகனுக்கு செய்கிறார்களோ அவர்கள் நற்கதியை புண்யகதியையெய்துவர்.

यान् यान् कामयतेमर्त्यास्तान् स्तान् ध्रुवमवाप्नुयात् ।
वसन्तोत्सवमाख्यातं ज्येष्ठमासार्चनं श्रृणु ॥ ७३ ॥

யாந்யாந் காமயதே மர்த்ய ஸ்தாம்ஸ்தாந் த்ருவ மவாப்நுயாத் !!
வஸந்தோத்ஸவ மாக்யாதாம் ஜ்யேஷ்ட மாஸார்ச்சனம் ஸ்ருணு!

எந்தெந்த விருப்பங்களை கோருகிறார்களோ அவையனைத்தும் நிச்சயமாக அடைவார்கள் வசந்தோற்சவம் எனும் இதற்குப் பிறகு ஆணி மாத பருவ பூசையைக் கேட்பீராக.

इति वसन्तोत्सवपूजाविधिः ।

இது வஸந்தோத்ஸவ பூஜை விதியாகும்.

॥ ज्येष्ठमासपूजाविधिः ॥

ஜ்யேஷ்ட மாஸ பூஜா விதி:

ஆனி மாத பௌர்ணமி

ज्येष्ठमासे मूलर्क्षे पूजयेत् स्वादुभिः फलैः ।
कदली पनसाम्रोत्थैर्तलिकेरफलैरपि ॥ ७४ ॥

ஜேஷ்டமாஸேது மூலர்க்ஷே பூஜயேத் ஸ்வாதுபி: பலை:!
கதளீபநஸாம் ரோக்தைர்ந்நாளிகேர பலைரபி!!

ஆனியிலோவெனில் முருகனைப் பருவம் சேர்ந்த மூல விண்மீனில் சுவைமிகு பழங்களான வாழை, பலா, மா, இளநீர், தேங்காய் இவைகளை சமர்ப்பித்து

शर्करामधुसंयुक्तैर्यथाविभवस्तरम् ।
नवभाण्डे समाहृत्य न्यस्तव्य प्रोक्ष्य चास्रतः ॥ ७५ ॥

சர்க்கரா மது ஸம்யுக்தைர் யதாவிபவ விஸ்தரம்!
நவபாண் டே ஸமாஹ்ருத்ய ந்யஸ்த்வாக்ரே ப்ரோக்ஷ்யசாக்ரத:!!

மேலும் வசதிக்குத் தக்கவாறு சர்க்கரை, தேன் முதலியவைகளை ஒன்பது புது பாத்திரங்களில் கொண்டுவந்து முருகனுக்கு முன்னர் சுத்திகரிக்கப்பட்ட சிறுமேடையில் எல்லாவற்றையும் வைத்து

संकल्पमपि पुण्याहं वाचयित्वा द्विजोत्तमैः ।
आधाराधेयपूजान्ते पवमानमुदीरयन् ॥ ७६ ॥

ஸங்கல்பமபி புண்யாஹம் வாசயித்வா த்விஜோத்தமை:!
ஆதாராதேய பூஜாந்தே பவமாந முதீரயந்!!

விநாயகர் பூஜை சங்கல்பம் புண்யாக வாசனம் முதலியவைகளை முறைப்படி மறையறிந்த வேதவிற்பன்னர்களால் செய்வித்து பவமான சூக்தம் என்ற வேதமந்திரமும் ஓதி

यामार्धं वा तदर्धं वा पठेत्तन्मूलतोऽपि वा ।
स्कन्दसूक्तेन मतिमान् शीतोष्णैरभिषेचयेत् ॥ ७७ ॥

யாமார்தம்வா ததர்தம்வா படேத்தந்மூ லதோபிவா!
ஸ்கந்த சூக்தேந மதிமாநு சீதோஷ்ணை ரபிஷேசயேத்!!

பிறகு 1, ½ மணி நேரமோ அல்லது ¾ மணி நேரமோ முருகனின் ஆறெழுத்து மந்திரமும் ஓதி ஸ்கந்த சூக்தத்தினாலும் முருகனுக்கு குளிர் நீராலும் வெப்ப நீராலும் நீராட்ட வேண்டும்.

वस्त्रैर्गन्धः सुमाल्यैश्च भूषणैर्भूषयेद्गुहम् ।
हिमतोयाक्तकल्हारैः नैरन्तर्यापि भूषयेत् ॥ ७८ ॥

வஸ்த்ரைர் கந்தை ஸ்ஸுமால்யை ஸ்ச பூஷணைர் பூஷயேத் குஹம்!
ஹிமதோயாக்த கல்ஹாரைர் நைரந்தர்யாபி பூஷயேத்!!

துணிகளாலும், மணமிகு மலர்மாலைகளாலும், முருகனை அலங்கரித்து பன்னீர் தெளித்த செங்கழுநீர்ப் பூக்களாலும் அழகு படுத்தவும்

पञ्चावरणपूजाञ्च कुर्यादपि विशेषतः ।
पायसं गुलसंयुक्तं ताम्बूलमपि दापयेत् ॥ ७९ ॥

பஞ்சாவரண பூஜாஞ்ச குர்யாதபி விசேஷத:!
பாயஸங்குட ஸம்யுக்தம் தாம்பூல பிதாபயேத்!!

பஞ்சாவரண பூஜை முடிய முருகனைப் பூசித்துப் பாயசம், வெல்லம் அதிகம் சேர்ந்தது நிவேதித்து மணமிகு வெற்றிலைப் பாக்கு வகைகளும் நிவேதிக்க வேண்டும்.

त्रिसंध्यमर्चयेदेवं सर्वकामस्य सिद्धये ।
ज्येष्ठमासार्चनं प्रोक्तमाषाढे पूजनं श्रृणु ॥ ८० ॥

த்ரிஸந்த்ய மர்ச்சயேதேவம் ஸர்வ காமஸ்ய ஸித்தயே!
ஜ்யேஷ்ட மாஸார்ச்சநம் ப்ரோக்த மாஷாட பூஜநம் ஸ்ருணு!!

காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் அறம், பொருள், இன்பம் மூன்று மடைய பூசிக் கற்பாலது இவ்வாறு ஆனிப் பௌர்ணமி மாத சிறப்பு பூசை சொல்லப்பட்டது. அடுத்த ஆடி மாதப் பூசையைக் கேட்பீராக

इति ज्येष्ठमासपूजाविधिः

இது ஜ்யேஷ்டமாலை பூஜை முறையாகும்.

॥ आषाढमासपूजाविधिः ॥

ஆஷாடமாஸபூஜா

ஆடிமாத பூஜை செய்யும் முறை

पूर्वफल्गुनि नक्षत्रे चाषाढे मासपूजनम् ।
कौतुकं बन्धयेद्रात्रौ देवदेव्यौ च मन्त्रवित् ॥ ८१ ॥

பூர்வ பல்குனி நக்ஷத்ரே சாஷாடே மாஸ பூஜநம்!
கௌதுகம் பந்தயேத்ராத்ரௌ தேவதேவ்யௌச மந்த்ரவித்!!

ஆடி மாதத்தில் பூர நக்ஷத்திரத்தில் மாதச் சிறப்பு பூசை செய்ய வேண்டும். முதல் நாள் இரவில் (முலைப்பாலிகைகளோடு சந்திரனைப் பூசித்து) ஆசார்யர்தானும் முருகன், வள்ளி, தெய்வானை அம்பிகைகளுக்கும் கங்கணக் காப்பு மந்திரப் பூர்வமாக செய்யற்பாலது

प्रभाते ब्रह्मचारिभ्यो यज्ञसूत्राणि दापयेत् ।
हरिद्रां चैव कन्याभ्यो दक्षिणा सहितं बुधः ॥ ८२ ॥

ப்ரபாதே ப்ரம்ஹசாரிப்யோ யக்ஞ சூத்ராணி தாபயேத்!
ஹரித்ராந்சைவ கந்யாப்யோ தக்ஷிணா ஸஹிதம் புத:!!

அன்று (பூர நக்ஷத்திரக்)காலையில் உபநயனம் செய்விக்கப்பட்டு காயத்ரீ மந்த்ரோபதேசம் ஆனவர்களுக்கு பூணூல்கள் வழங்கி கன்னிச் சிறுமிகளுக்கு மஞ்சள் கிழங்குகளையும் தக்ஷிணைக் கையுறைப் பொருள்களோடு வழங்குதல் வேண்டும்.

प्रीतये देवदेवीनां मद्भक्तेभ्यो विधानतः ।
मुद्गाङ्कुरं सलवणं देव्योः पादे समर्पयेत् ॥ ८३ ॥

ப்ரீதயே தேவ தேவீநாம் மது பக்தேப்யோ விதாநத:!
முத்காங்குரம் ஸலவணம் தேவ்யா: பாதே ஸமர்பயேத்!!

தேவரும், தேவியாரிருவரும் மகிழ்வதற்காக முருகப் பக்தர்களுக்கு முளையிடப்பட்டப் பச்சைப்பயிறு சிறிதளவு உப்பு கலந்து முருகனுடைய இரு தேவிகளுடைய பாதத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (பிறகு விநியோகிக்க வேண்டும்)

ग्रामप्रदक्षिणं कुर्यात् सर्वसंपत्कराय च ।
जलतीरं समागम्य यथाविभवविस्तरम् ॥ ८४ ॥

க்ராம ப்ரதக்ஷிணம் குர்யாத் ஸர்வ ஸம்பத்கராய ச !
ஜலதீரம் ஸமாகம்ய யதா விபவ விஸ்தரம் !!

எல்லா மங்களங்களையும் தரவல்ல கிராம பிரதக்ஷிண மெனும் திருவீதியுலாவை நீர்நிலை ஓரம்வரை சக்திக்குத் தக்கவாறு செய்தல் (நலம் பயக்கும்)

पीठोपरि समारुह्य देवदेव्यौ च भक्तिमान् ।
युवतीभिश्च युवभिर्जलक्रीडां विधाय च ॥ ८५ ॥

பீடோபரி ஸமாருஹ்ய தேவ தேவ்யௌச பக்திமான் !
யுவ தீபிச்ச யுவபிர் ஜ்ஜல க்ரீடாம். விதாய ச !!

திருக்குளத்தில் ஓடத்தில் முருகப் பெருமானை தேவியரோடு எழுந்தருளச் செய்து வாலிப நங்கையர்கள் நம்பியர்களும் நீராடி, நீர் விளையாடியும், மகிழ்ந்தும், மகிழ்வித்தும், சிறப்பிப்பது கூறப்பட்டுள்ளது.

यामं वापि तदर्धं वा तदर्धं वा समाचरेत् ।
प्रविश्य भवनं पश्चात् प्रभूतहविषं ददेत् ।
ब्राह्मणान् भोजयेद्विद्वान् दीनानाथांश्च भोजयेत् ॥ ८६ ॥

யாமம் வாபி ததர்தம் வா ததர்தம் வா ஸமாசரேத் !
ப்ரவிச்ய பவநம் பச்சாது ப்ரபூத ஹவிஷந்ததேத் !!
ப்ராம்மணாநு போஜயேத் வித்வாநு தீநாநாதாந்ச போஜயேத் !!!

ஒன்றரை மணிநேரம் அல்லது ¾ மணி நேரமாவது செய்து ஆலயம் சேர்ந்து பிறகு கணிசமான நிவேதனம் நிவேதித்து

इति श्रावणमासपूजाविधिः

ச்ராவண மாச பூஜா (ஆவணி மாத பூஜை முறை)

क्षीरपूजाविधिः

க்ஷீர பூஜா விதி:

पूर्वाषाढे तु तन्मासे श्रवणे वा गुणान्विते ।
पूर्णिमायां तु वाऽषाढे कुर्यात्क्षीराभिषेचनम् ।
गवां वृद्धिकरं सर्वसस्यवृद्धिकरं शुभम् ॥ ८७ ॥

பூர்வாஷாடேது தந்மாசே ச்ரவணே வாகுணாந்விதே !
பூர்ணிமாயாந்து சாஷாடே குர்யாத் க்ஷீராபிஷேசநம் !
கவாம் வ்ருத்திகரம் ஸர்வ ஸஸ்ய வ்ருத்தி கரம் சுபம் !

ஆவணி மாதத்தில் பூராட விண்மீனில் பௌர்ணமியில் பாலாபிஷேகம் செய்விக்க வேண்டும். இதனால் பசு விருத்தியும் பயிர் விருத்தியும் உண்டாகும்.

गोक्षीरं ग्राह्य धारोष्णं नवभाण्डेषु पूरयेत् ।
शालिभिस्तण्डुलं कृत्वा विन्यसेत् क्षीरकुम्भकम् ॥८८॥

கோக்ஷீரம் க்ராஹ்ய தாரோஷ்ணம் நவபாண்டேஷு பூரயேத் !
சாலி பிஸ்தண்டிலம் க்ருத்வா விந்யசேத் க்ஷீர கும்பகம் !!

பசும்பாலை எடுத்து புதுப் பானைகளில் நிரப்பி நெல்மணிகளால் சிறுமேடை செய்து முருகன் முன்பு பானைகளை வைக்கவும்

उत्तमं दशभारं तु मध्यमं तु तदर्धकम् ।
तदर्धमधमं ज्ञेयं तदर्धमधमाधमम् ॥ ८९ ॥

உத்தமந்தச பாரந்து மத்ய மந்து ததர்தகம் !
ததர்தம் மதமம் க்ஞேயம் ததர்தம் மதமாதமம் !!

பத்து பாரம் உயர்வென்றும் ஐந்துபாரம் மத்தியமம் என்றும் 2½ பாரம் அதமம் என்றும் 1¼ பாரம் அதமாதமம் என்றும் கூறப்படுகிறது.

अस्त्रमन्त्रेण संप्रोक्ष्य ब्रह्माङ्गैरपि पूजयेत् ।
धूपदीपं ततो दत्वा पयोभिः स्नापयेद्गुहम् ॥ ९० ॥

அஸ்த்ர மந்த்ரேண ஸம்ப்ரோக்ஷ்ய ப்ரஹ்மாங்கை ரபி பூஜயேத் !!
தூப தீபந்ததோ தத்வா பயோபிஸ்ஸ்நாபயேத் குஹம் !

அஸ்த்ர மந்திரத்தினால் புரோக்ஷணம் செய்து பஞ்ச பிரும்ம ஷடங்க மந்திரங்களால் பாலைப் பூசித்து தூப தீபங்காட்சி அப்பூசித்த பாலால் முருகனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

आप्यायस्वेति मन्त्रेण स्कन्दसूक्तेन मन्त्रतः ।
कुमारमानेति मन्त्रेण मूलब्रह्मषडङ्गकैः ॥ ९१ ॥

ஆப்யாயஸ்வேதி மந்த்ரேண ஸ்கந்த ஸூக்தேந மந்த்ரத:!
குமார மாநேதி மந்த்ரேண மூல ப்ரஹ்ம ஷடங்ககை:!

ஆப்யாய எனத் துவங்கும் மந்திரத்தினாலும் ஸ்கந்த சூக்த வேத மந்திரத்தினாலும் குமார மான் என்ற மந்திரத்தினாலும் ஸ்ரீ முருகன் ஷடாக்ஷர மந்திரத்தாலும் பஞ்ச பிரும்ம ஷடங்க மந்திரங்களினாலும்

क्षीरैश्च शुद्धतोयैश्च स्नाप्याभ्यर्च्य यथाविधिः ।
प्रभूतहविषं दत्वा ब्राह्मणानपि भोजयेत् ॥ ९२ ॥

க்ஷீரைச்ச சுத்த தோயைச்ச ஸ்நாப்யாப்யர்ச்ய யதாவிதி!
ப்ரபூத ஹவிஷந்தத்வா ப்ராம்மணாநபி போஜயேத் !

பசும்பாலினாலும் தூய நன்நீராலும் அருள்மிகு முருகப் பெருமானுக்கு நன்னீராட்டி சுவைமிகுப் பெருமளவு அன்ன வகைகளை நிவேதித்து பக்தப் பெருமக்களுக்கும் அந்தணர்களுக்கும் அன்னம் பாலிக்கவும்

एवं यः कुरुतेमर्त्यः स पुण्यफलमाप्नुयात् ।
अनुक्तमन्यतो ग्राह्यमधिकं नैव दूष्यते ।
क्षीरपूजाविधिः प्रोक्तः पवित्रारोपणं श्रृणु ॥ ९३ ॥

ஏவம் ய: குருதே மர்த்யஸ்ஸபுண்ய பல மாப்னுயாத் !
அனுக்த மன்யதோ க்ராஹ்ய மதிகஞ்சைவ தூஷ்யதே !!
க்ஷீர பூஜா விதி: ப்ரோக்த: பவித்ராரோபணம் ச்ருணு !!!

இவ்வாறு எவரொருவர் முறை வழுவாது காலந்தவறாது முருகனுக்கு முழுமனதுடன் மாத பூசையை மறவாது செய்து வருவாரோ அவரே தீவினைகள் யாவும் நீங்கப்பெற்று தூய நல்வினைப்பயன் முழுதுமெய்துவர். கூறப்படாதவை களை சித்தத்தில் சஞ்சரிக்கும் முருகன் அப்போது தோன்றுபவைகளாக கொண்டு செயலாற்றுக. முடியாதவைகளை நீக்குக. இவ்வாறு பாற்பூசை பகரப்பட்டது. மேல் புனிதப்படுத்தும் பவித்ர சமர்ப்பணம் கூறுகிறேன் கேட்பீராக.

इति क्षीरपूजाविधिः

இது க்ஷீரபூஜை முறையாகும்.

॥ पवित्रारोपणविधिः ॥

பவித்ரா ரோபண விதி:

(பவித்ரா ரோபணம் முறை)

आषाढादित्रयोपेता श्रेष्ठमध्यमकन्यसाः ।
आश्विनीकृत्तिमामासावथवा संप्रकीर्तितौ ।
पूर्वपक्षे चतुर्दश्यामाषाढे मासि कारयेत् ॥ ९४ ॥

ஆஷாடாதித்ரயோமாஸா ஸ்ரேஷ்ட மத்யமகன்யஸா:!
அச்வினீ க்ருத்திகாமாஸா வதவா ஸம்ப்ரகீர்த்திதௌ !
பூர்வ பக்ஷே சதுர்தஸ்யாம் ஆஷாடேமாஸி காரயேத் !

ஆடி முதல் ஆவணி புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுள் முறையே உத்தமம் மத்யமம் அதமம் எனக் கூறப்படுகிறது. ஐப்பசி, கார்த்திகை மாதத்திலும் முடியாத சமயம் செயற்பாலது வளர்பிறை சதுர்தசியில் ஆடி மாஸத்தில் (செய்வது நன்று) செய்விக்கவும்.

इतरेषु च मासेषु पक्षयोरुभयोरपि ।
चतुर्दश्यां च षष्ठ्यां वा पूर्णिमायां .च कारयेत् ॥९५ ॥

இதரேஷு ச மாஸேஷு பக்ஷயோ ருபயோரபி!
சதுர்தஸ்யாஞ்ச ஷஷ்ட்யாம்வா பூர்ணிமாயாஞ்ச.
காரயேத்!!

மற்ற மாதங்களிலோவெனில் இரு பிறைகளிலும் சதுர்தசி (14-வது திதி) ஷஷ்டி (6-வது திதி) பூர்ணிமா (நிறைநிலா நாளில் செய்விப்பது நன்று)

कुत्तिकादीपतः पश्चात् नैव कार्यं पवित्रकम् ।
शुवलपक्षे गृहस्थानां यतीनां तु द्विपक्षयोः ॥ ९६ ॥

க்ருத்திகா தீபத: பஸ்சாத் நைவ கார்யம் பவித்ரகம்!
சுக்ல பக்ஷேக்ரு ஹஸ்தானாம் யதீநாந்து
த்விதபக்ஷயோ:!!

கார்த்திகை தீபத்திற்கு பிறகு பவித்ரோற்சவம் செய்யக் கூடாது. வளர்பிறையில் இல்லறத்தோர்களும் துறவிகள் இரு பிறவியிலும் (செய்யலாம்)

भोगमोक्षप्रदं साक्षात् पवित्रारोपणं मुने ।
संवत्सरकृतं पापं नाशयत्यस्य पूजनात् ॥ ९७ ॥

போக மோக்ஷ ப்ரதம் சாக்ஷாத் பவித்ரரோபணம்
முனே!
சம்வத்ஸர க்ருதம் பாபம் நாஸயத்யஸ்ய பூஜநாத்!

முனிவரே! இகபர நலமளிக்கும் பவித்ர சமர்ப்பணம் உற்சவமாவது ஆண்டு முழுவதும் அறியாமையாலோ தெரியாமையாலோ அல்லது புரியாமையாலோ ஒரு முறையோ பல முறையோ உண்டான தீவினைப் பயன்கள் எல்லோரையும் வந்தடையா வண்ணம் காத்தற்பாலது. எனவே முயற்சியோடு முயன்று தவறாமல் மறவாமல் ஆண்டுதோறும் ஆற்றற்பாலது அவசியமே.

प्रायश्चित्तमकुर्वाणा ब्राह्मणाः शुद्धिमाप्नुयुः ।
प्रत्यहं वाङ्मनः कायकृतानि कलुषानि च ॥ ९८ ॥

ப்ராயஸ்சித்த மகுர்வாணா ப்ராம்மணாஸ்
சுத்திமாப்னு யு:!
ப்ரத்யஹம் வாங்மந: காய க்ருதானி கலுஷானி ச!!

கழுவாய் வேறு செய்யப்படாமலேயே அந்தணர்கள் புனித வாய்ப்படுகிறார்கள். தினசரி வாக்கு மனம் காயம் (தேஹம்) இவைகளால் இயற்றப்படும் தீவினைகளை.

तेभ्यः पवित्रे कुरुते तस्मादेत् पवित्रकम् ।
सावणरजतैः सूत्रैः पट्टोर्णैः सूत्रकैरपि ॥ ९९ ॥

தேப்ய: பவித்ரம் குருதே தஸ்மாதேதது பவித்ரகம்!
ஸௌவர்ணை ரஜதைஸ்ஸூத்ரை: பட்டோர்னைஸ்
சூத்ரகைரபி!!

அகற்றுவதாலேயே இந்த உற்வத்திற்கு பவித்ரோற்சவம் எனக் கூறப்படுகிறது. ஆண்டவனுக்கு வேத மந்திரங்களால் புனிதப் படுத்தப்பட்ட பட்டு நூல் பருத்தி நூல் வெள்ளி தங்க கம்பிகளால் அணிவிப்பது அனைவரையும் அவரவர் தீவினையிலிருந்து புனிப்படுத்துகிறது.

कार्पासजभवैरन्यैर्मौञ्जिभिर्दर्भसंभवैः ।
वल्कलोत्थैश्च सूत्रैश्च नवभिर्गुणितैः शुभैः ॥ १०१ ॥

கார்பாஸ ஜபவைரன்யைர்
மௌஞ்சிபிர்தர்பஸம்பவை:!
வல்கலோக்தைஸ்ச சூத்ரைச்ச நவபிர்குணிதைஸ்
சுபை:!!

பருத்தி, தர்பை, மரவுரித் தோல், நூல் போன்ற ஒன்பது வகைகளாலும் பவித்ரா ரோபணமான செய்யற்பாலது மங்களங்களை வளர்க்கும்

द्विजातिकृतकार्पास सूत्रैः शुभ्रैरनिन्दितैः ।
रोमादिशोध्यतोयेन प्रक्षाल्य प्रोक्ष्य चास्त्रतः ॥ १०१ ॥

த்விஜாதி க்ருத கார்பாச சூத்ரைஸ்
சுப்ரைரனிந்திதை:!
ரோமாதி சோத்ய தோயேந ப்ரக்ஷால்ய ப்ரோக்ஷ்ய
சாஸ்த்ரத:!!

அந்தணர்களால் ஆக்கப்பட்ட வெண்மையான தூய்மையான குற்றங்காணா பவித்ர நூல்மாலையை உரோமம் முதலியவையில்ல தூய்மையான நீரால் அலம்பி அஸ்த்ர மந்திர நீரால் மேல்நோக்கி தெளித்து

शुष्कं कृत्वा हृदा सम्यक् पवित्रं कारयेत्सुधीः ।
शक्तयस्तु शकुन्याद्या नवसूत्राधिदेवताः ॥ १०२ ॥

சுஷ்கங்க்ருத்வா ஹ்ருதா ஸம்யக் பவித்ரங்காரயேக்
ஸுதீ:!
சக்தயஸ்து சகுன்யாத்யா நவசூத்ராதி தேவதா:!!

முருகப் பெருமானின் ஒன்பது தனசக்தி தேவதைகளான சகுன்யா முதலான ஒன்பது அதி தேவதைகளை இருதய மந்திரத்தால் மேற்கூறிய பவித்ர மாலையை ஒவ்வொரு கட்டம் கட்டமாக கட்டி பவித்ரமாக்கிய பின்

अष्टोत्तरशतैः सूत्रैः कुर्यात् स्कन्दावतारकम् ।
उत्तमं बेरदैर्घ्यं स्यान्मध्यमं बाहुमात्रकम् ॥ १०३ ॥

அஷ்டோத்தர சதை ஸ்ஸூத்ரை: குர்யாத்
ஸ்கந்தாவதாரகம்!!
உத்தமம் பேர தைர்க்யம் ஸ்யாத் மத்யமம் பாஹு
மாத்ரகம்!

நூற்றெட்டு இழைகளாலான பவித்ர பட்டு மாலையை முருகனின் முழு அளவு நீளம் உத்தமமாகவும், உயர்வாகவும் தோளளவு நடுத்தரமாகவும்

अधमं तु शिरोवेष्टं पवित्रं मुनिपुंगव ।
षट्कं मूर्ध्नि प्रकर्तव्यं षण्मूर्तिमरूपकम् ॥ १०४ ॥

அதமந்து சிரோவேஷ்டம் பவித்ரம் முநி புங்கவ!
ஷட்கம் மூர்த்நி ப்ரகர்தவ்யம் ஷண்மூர்த்தி
மநுரூபகம்!!

தலைச் சுற்றளவு மட்டும் தயாரிப்பது அதமம் எனவும் ஆறுமுகப் பெருமானெனில் ஆறுதலையும் சுற்றுமளவு தயாரிக்க வேண்டும். முனிகுலத்திலகமே

पीठे स्पर्शनकं षटकं बाह्यमाला तथैव च ।
अष्टोत्तरशतं सूत्रमुत्तमं परिचक्षते ॥ १०५ ॥

பீடேஸ்பர்சநகம் ஷட்கம் பாஹ்ய மாலா ததை வச!
அஷ்டோத்தர சதம் சூத்ரம் உத்தமம் பரிசக்ஷதே!!

நூற்றெட்டு இழைகளாலான பவித்ர மாலை கழுத்தில் அணிவித்தால் திருவடிக்குக் கீழ் பீடம் வரை தொங்கி நிற்பது சிறப்பெனக் கொள்க

तदर्धं मध्यमं ज्ञेयं कन्यसं तु तदर्धकम् ।
शतं वाऽपि तदर्धं वा पवित्रं कारयेत्सुधीः ॥ १०६ ॥

ததர்தம் மத்யமம் க்ஞேயம் கன்யசந்து ததர்தகம்!
சதம்வாபி ததர்தம்வா பவித்ரம் காரயேத் சுதீ:!!

அதற்க்கடுத்த நிலை நடுத்தரமாகவும் அதற்கடுத்த நிலை சாதாரண நிலையெனவும் கொள்ளவும். நூறு அல்லது ஐம்பதிலும் செய்யலாம்

एकैकया तु संवृद्ध्या तन्तवो द्वादशात्मिकाम् ।
नीचाल्पमध्यमं श्रेष्ठमुत्तमादित्रयं तथा ॥ १०७ ॥

ஏகைகயாது ஸம்வ்ருத்யா தந்தவோத்வாத
சாத்மிகாம்!
நீசால்ப மத்யமம் ச்ரேஷ்ட முத்தமாதி த்ரயம் ததா!!

ஆண்டுக்கு ஆண்டு கீழிலிருந்து மேல்வரை முறையாக ஏற்றி ஏற்றிச் செய்வது போற்றற்குரியது என உணர்க

ग्रन्थयस्तन्तुसंख्या स्यात् कूलगर्भं नवं मता ।
यथेष्टग्रन्थयो वाऽपि समाः सर्वशतांसिताः ॥ १०८ ॥

க்ரந்தயஸ்தந்து ஸங்க்யாஸ்யாத் கூல கர்ப நவம்மதா!
யதேஷ்ட க்ரந்த்யோவாபி சமாஸ்ஸர்வ சதாஸிதா:!!

அதிலிடப்பட்டு முடிச்சுகளின் எண்ணிக்கையானது நூற்றெட்டும் சம அளவில் தூய்மையாக அருமையாக இருத்தல் நலமெனக் கருதப்படுகிறது.

एकद्वित्र्यङ्गुला वाऽपि ग्रन्थिमानमिहोच्वते ।
ग्रन्थयो वेष्टदेशेषु विधातव्यं विचक्षणैः ॥ १०९ ॥

ஏகத்வித்ரயங்குலோ வாபி க்ரந்திமாந மிஹோச்யதே!
க்ரந்தயோ வேஷ்டதேசேஷு விதாதவ்யம் விசக்ஷணை:!!

ஓரே சம அளவுள்ள முடிச்சுகளாக ஓரங்குலம் அல்லது இரு அங்குலம் அல்லது மூன்றங்குலம் முடிச்சிடும் இடம் அறிவுக் கூர்மையால் செயற்பாலது

कुर्यात् पवित्रं शक्तीनां कण्ठादाजानुमात्रकम् ।
मयूरगजयोः सूत्रं तन्मस्तकपदावधि ॥ ११० ॥

குர்யாத் பவித்ரம் சக்தீநாம் கண்டாதாஜாநு மாத்ரகம்!
மயூர கஜயோஸ் ஸூத்ரம் தந்மஸ்தக பதாவதி!!

முருகனின் இரு தேவிகளுக்கும் அணிவிக்கும் பவித்ரப்பட்டு மாலையானது கழுத்திலிருந்து முழங்காலளவு மட்டுமே இருக்கத் தக்கது. மயில் யானைகளுக்கு கழுத்து முதல் பாதம் வரை அளவுப் பார்த்து செய்வித்து பூசித்து புனிப்படுத்தி அணிவிப்பதே நன்றெனக் கொள்க

समानेनात्मनः कुर्यात् पवित्रं कुम्भसंख्यया ।
क्रमागमज्ञशिष्याणामात्मवत् समुदीरितम् ॥ १११ ॥

சமாநேநாத்மந: குர்யாத் பவித்ரம் கும்ப சங்க்யயா!
க்ரமாகம ஞ்சிஷ்யாணா மாத்மவத் சமுதீரிதம்!!

ஆகம அறிவுமிகு ஆசார்யர் தனக்கும் தனது சீடர்களுக்கும் கும்பங்களில் எண்ணிக்கைக்கு மேல் பவித்ரம் செய்யாது கும்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில் செய்து சாத்தி புனிதப்படுத்தி முருகப் பெருமானுக்கு அணிவித்துப் பின்னர் அவரது அருட்பிரஸாதமாக சீடர்களுக்கு அணிவிப்பார்.

रक्तचन्दनकाश्मीरगैरिकागरुचन्दनैः ।
कुष्ठकर्पूरसंमिश्रं हरिद्राकृष्णगन्धकैः ॥ ११२ ॥

ரக்த சந்தன காஸ்மீர கைரிகா கருசந்தனை:!
குஷ்ட கற்பூர ஸம்மிஸ்ரம் ஹரித்ரா க்ருஷ்ண கந்தகை:!!

கிருஷ்ண சந்தம் (கருஞ் சந்தனமோவெனில்) பவித்ரஹோம ரக்ஷையுடன் சந்தனத்தில் குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, கஸ்தூரி மஞ்சள் தூள் இவைகளைக் கலந்து பிசைந்து சேர்த்து

रंजयेद्धृदयेनैव रक्तसूत्रादिभिस्तु वा ।
अन्तः शालागजस्थानप्रासादान्मूलवेश्मनाम् ॥ ११३ ॥

ரஞ்சயேத்ருத யேநைவ ரக்த ஸூத்ராதி பிஸ்துவா!
அந்தஸ்ஸாலா கஜஸ்தாந ப்ராஸாதாந்மூள வேஸ்மநாம்!!

இருதய மந்திரத்தால் மூலவர் முதல் எல்லா பிம்பங்களுக்கும் ஆலயத்தின் மூலதேசம் முதல் எல்லா இடங்களிலும் இட்டு மந்திரித்த சிவப்புபட்டுக் கயிற்றாலும் கூட கட்டிப் புனிதப்படுத்தலாம்

षट्सूत्रस्यैव कर्तव्यं तन्तुना संप्रशस्यते ।
एवं संकल्प्य पूर्वेद्युरधिवासनमाचरेत् ॥ ११४ ॥

ஷட்ஸூத்ரஸ்யைவ கார்தவ்யம் தந்துநாஸம் ப்ரஸஸ்யதே!
ஏவம் ஸங்கல்ப்ய பூர்வேத்யு ரதிவாஸந மாசரேத்!!

ஆறு ஆறுப்பட்டு கயிற்றினாலேயே கட்டப்பட வேண்டும். இவ்வாறு உறுதி செய்து முதல் நாளே கும்பங்களில் தயாரித்து அர்ப்பணித்து மந்திரித்து பூசித்து வேள்வி செய்து தீக்கடவுளால் அங்கீகரிக்கப்பட்டுச் செய்வதே சிறந்தது.

प्रासादस्याग्रके वाऽपि दक्षिणे पश्चिमेऽपि वा ।
कल्पिते मण्डपे वाऽपि पूर्वोक्तस्यैव कल्पितम् ॥ ११५ ॥

ப்ராஸாதஸ்யாக்ர கேவாபி தக்ஷிணே பஸ்சிமேபிவா !
கல்பிதே மண்டபே வாபி பூர்வோக்தஸ்யைவ கல்பிதம் !!

ஆலயத்திற்கு முன்போ தென் திசையிலோ மேற்திசையிலோ மண்டபத்தில் செய்வது நன்று. அல்லது பவித்ர மண்டபம் தனியாக உள்ள ஆலயத்தில் முன்பு செய்யப்பட்ட இடமிருப்பின் அங்கேயும் செய்யலாம்.

वितानदर्भमालादिफलपल्लवशोभिते ।
मध्ये वेदिसमायुक्ते नवपञ्चैककुण्डके ॥ ११६ ॥

விதாந தர்ப மாலாதி பல பல்லவ சோபிதே !
மத்யே வேதி ஸமாயுக்தே நவபஞ்சைக குண்டகே !!

மேல்கட்டி தர்பைமாலைகள் பழ கொத்துக்கள் தளிர் அலங்காரம் இவைகளுடன் கூடிய அழகிய மண்டபத்தின் நடுவில் வேதிகை அமைத்து வழக்கப்படி பழக்கப்படி அல்லது 9,5,1 என்ற அளவில் ஹோம குண்டங்கள் அமைத்து

तत्संख्यास्थण्डिलोपेते वेदिकारहितेऽपि वा ।
स्थण्डिलं शालिभिः कुर्यादष्टद्रोणैर्यथाविधिः ॥ ११७ ॥

தத்ஸங்க்யா ஸ்தண்டிலோ பேதே வேதிகார ஹிதேபிவா !
ஸ்தண்டிலம் ஸாலிபி: குர்யாத் அஷ்டத்ரோணைர் யதாவிதி: !!

வேதிகை இல்லையெனில் சிறுமேடை அமைத்து சிறுமேடையின் உயரத்தை 16 மரக்கால் (64 Kg) நெல்மணிகளால் அதில்பாதி 8 (32 Kg) மரக்கால் முனை முரியாத நல்ல அரிசி அதில்பாதி பாதி அளவில் கோதுமை முதலான ஒன்பது நவதான்யங்களும் மேல் கருப்பு எள்மேல் நல்ல நெற்பொறி அமைத்து அதன்மேல் தர்பைகள் வடக்கு நுனியாக பரப்பி முறைப்படி

स्कन्दकुम्भं च वर्धन्यौ परितश्चाष्टकुम्भकैः ।
स्थाप्य सम्यग् वितानाद्यैर्भूषयित्वाऽथ मण्डपम् ॥ ११८ ॥

ஸ்கந்த கும்பஞ்ச வர்தந்யௌ பரிதஸ்சாஷ்ட கும்பகை: !
ஸ்தாப்ய ஸம்யக்விதாநாத்யைர் பூஷயித்வாத மண்டபம் !!

முருகன் கும்பம் வள்ளி தெய்வானைக் கும்பங்களும் சுற்றி அஷ்ட வித்யேச கும்பங்களும் நிறுவி அலங்கரித்து

कृतनित्यविधिः सौरपूजा शुद्धमना गुरुः ।
पुण्याहप्रोक्षणं कृत्वा प्रकीर्य विकिरानपि ॥ ११९ ॥

க்ருதநித்ய விதிஸ்ஸௌர பூஜா சுத்தமநாகுரு: !
புண்யாஹ ப்ரோக்ஷணம் க்ருத்வா ப்ரகீர்ய விகிராநபி !!

நித்ய பூஜா விதிமுறைப்படி விநாயகர் பூசை, புண்யாக வாசனம், சூரியப் பூசை செய்து மண்டப தேவதைகளை பூசித்து பூதசுத்தி, முதலான சுத்தி செய்து கொண்டு பஞ்சகவ்யம் கூட்டிப் பரமனை ஆராதித்து நெல்பொறி மலர்கள் மஞ்சள் அரிசி, வெண்கடுகு, முதலியவை களோடு பஞ்ச கவ்யத்தைச் சேர்த்து அஸ்த்ர வேத மந்திரத்தோடு வாரித் தெளிக்க வேண்டும்.

मण्डपार्चनमार्गेण सर्वान् देवान् समर्चयेत् ।
मध्ये स्कन्दं समावह्य महावल्लीं च दक्षिणे ॥ १२० ॥

மண்ட பார்ச்சன மார்கேண ஸர்வாந் தேவாந் ஸமர்ச்சயேத் !
மத்யேஸ் கந்தம் ஸமாவாஹ்ய மஹாவள்ளீஞ்ச தக்ஷிணே !!

மண்டப பூஜை செய்யும் முறைப்படி முருகனின் பரிவார மூர்த்திகள் முழுவதும் பூசித்து நடுவில் ஸ்ரீ முருகனையும் தெற்குப் பக்கத்தில் மகாவள்ளி நாயகியையும்

देवसेनां तथा वामे जयन्ताद्यान् समावृते ।
स्थण्डिलं पश्चिमे कूर्यात् रक्तषड्दलपद्मयुकू ॥ १२१ ॥

தேவசேனாந்த ததாவாமே ஜயந்தாத்யாநு ஸமாவ்ருதே !
ஸ்தண்டிலம் பஸ்ச்சிமே குர்யாத் ரக்த ஷட்தல பத்மயுக் !!

தேவசேனாவை வடக்குக் கும்பத்திலும் சுற்றியுள்ள எட்டு கும்பங்களிலும் மேற்குத் திசையில் ஒரு சிறு மேடையில் ஆறுதள (பத்ம) தாமரைத் தளங்கிறி அதில்

तस्मिन् कुम्भं विदध्यार्च्य प्राप्यानुज्ञां ततो गुरुः ।
द्वारेशानर्चयेद् देवसमीपे स्वासने स्थितः ॥ १२२ ॥

தஸ்மின் கும்பம் விதத்யார்ச்ய ப்ராப்யானுக்ஞாந்த தோகுரு:!
த்வாரேசானர்ச்சயேத்தேவ சமீபே ஸ்வாஸனேஸ்தித:!!

அதில் கும்பம் வைத்து முருகனால் பூசித்து அனுமதி பெற்று துவார பாலகர்களை அவர்களது ஆஸனத்தில் பூசித்து

आसनार्चनमारभ्य कुर्यादावाहनान्तकम् ।
गव्यैः पञ्चासृतैः स्नाप्य विशेषस्नपनेन च ॥ १२३ ॥

ஆஸநார்சன மாரப்ய குர்யாதா வாஹனாந்தகம்!
கவ்யை: பஞ்சாம்ருதைஸ் ஸ்நாப்ய விசேஷ ஸ்நாபனேநச !!

முறைப்படி பஞ்சாஸன பூஜை செய்து நியாசங்கள் செய்து ஆவாஹித்து ஆவரணப் பூஜை செய்து ஹோமம் செய்து பூர்ணாஹுதி செய்து ஸ்ரீ முருகனுக்கு சந்தனாதி தைலம் முதல் பஞ்ச கவ்யம் பஞ்சாமிருதம் முதலிய வரிசைக் கிரமப்படி அபிஷேகித்துப் பின்னர் விசேஷ ஸ்நபன கும்பங்களை அபிஷேகம் செய்து

पञ्चावरणमार्गेण गन्धपुष्पादिनार्चयेत् ।
सैकत्रिंशत्कलान्यासं विधिना कारयेद्बुधः ॥ १२४ ॥

பஞ்சாவரண மார்கேண கந்த புஷ்பா திநார்சயேத்!!
சைக த்ரிம்சத் கலாந்யாஸம் விதிநாகாரயேத் புத:!

ஐந்து ஆவரணத் தேவதைகளையும் (சந்தனம்) மணமிகு புஷ்பங்களால் அர்ச்சித்து முப்பத்தோரு கலாமந்திரங்களால் நியாசம் செய்து மதிமிகு ஆசார்யர் முறைப்படி செய்விக்க வேண்டும்

भक्ष्यभोज्यन्नपानादिप्रभूतहविषं ददेत् ।
कौतुकं वन्धयित्वा तु गत्वा कुण्डान्तिकं गुरूः ॥ १२५॥

பக்ஷ்ய போஜ்யாந்ந பாநாதி ப்ரபூத ஹவிஷந்தநேத்!
கௌதுகம் பந்தயித்வாது கத்வா குண்டாந்திகம் குரு:!!

முருகனுக்கு பவித்ராரோபணத்திற்காக கங்கணம் கட்டிவிட்டு பலவித இனிப்பு கார வகைகளும் பால் பாயசம் போன்றவற்றோடு கூட சுவைமிகு அன்னங்களும் நிவேதித்து மீண்டும் யாகசாலையில் குண்ட சமீபம் வந்து

अग्निकार्योक्तमार्गेण स्विष्टान्तं होममाचरेत् ।
समिदान्नंश्च लाजांश्च सर्षपं शालिभिस्तिलैः ॥ १२६ ॥

அக்னிகார்யோக்த மார்கேண ஸ்விஷ்டாந்தம் ஹோம மாசரேத்!
ஸமிதந்நாம்ச்ச லாஜாம்ச்ச ஸர்ஷபம்சாலி பிஸ்திலை:!!

பிறகு அக்னியில் முறைப்படி பூர்ணாஹுதிக்கு முன் செய்யப்பட வேண்டிய சமித்து, அன்னம், நெய், நெற்பொறி, வெண்கடுகு, நெல், எள்

सक्तुवेणुयवैश्चैव मुद्गमाषप्रियङ्गुभिः ।
पलाशखदिराश्वत्थवटैः प्रागादिदिक्षु च ॥ १२७ ॥

ஸக்து வேணுயவைச்சைவ முத்கமாஷ ப்ரியங்குபி:!
பலாச கதிராச்வத்த வடை: ப்ராகாதி திக்ஷு ச !!

சத்துமாவு, மூங்கிலரிசி, யவை, நெல், பச்சைப்பயிறு, உளுந்து, தினைகளாலும், முருக்கன், (பொரசு சமித்துக்களாலும்) கருங்காலி, அரசு, ஆல் ,இவைகளை ஒன்பது குண்டங்களில் கிழக்கு முதலான திசைகளிலும்

शमीखादिरमायूरप्लक्षोऽग्न्यादिविदिक्षु च ।
प्रधानस्य पलाशेन शतं वाऽपि तदर्धकम् ॥ १२८ ॥

சமீ காதிர மாயூர ப்லக்ஷோ க்ந்யா திவி திக்ஷு ச !!
ப்ரதாநஸ்ய பலாசேந சதம் வாபி ததர்தகம் !

வன்னி கருங்காலி, நாயுருவி, இச்சி/அத்தி, இவைகளை தென்கிழக்கு முதலிய திசைக் குண்டங்களிலும் பிரதானமான குண்டத்தில் பொரசு, சமித்துக்களால் நூறு அல்லது ஐம்பது முறை

स्कन्दमूलेन स ब्रह्मा मूर्तिमन्त्रैः षडङ्गकैः ।
हुत्वाऽथ स्कन्दसूक्तेन षण्मन्त्रेण रसाहुतिः ॥ १२९ ॥

ஸ்கந்த மூலேந ஸப்ரஹ்மா மூர்த்தி மந்த்ரை ஷ்ஷடங்ககை:!
ஹுத்வாதஸ்கந்த சூக்தேந ஷண்மந்த்ரேண ரஸாஹுதி:!!

ஸ்ரீமுருகனின் மூலமந்திரமான ஷடக்ஷர மந்திரத்தாலு,ம் பஞ்சபிரும்ம ஷடங்க மந்திரங்களாலும், ஸ்கந்தசூக்தத்தாலும் ஆறு வகை பிரயோக மந்திரங்களாலும் ஆறு ஆறு முறை ஆறு திரவியங்களால் ஹோமம் செய்து

ततः कुमारमानेति मन्त्रेणैव तथा हुनेत् ।
एवं प्रधानकुण्डं स्यात्तदर्धेन तदर्धकम् ॥ १३० ॥

தத: குமாரமாநேதி மந்த்ரேணைவ ததாஹுநேத்!
ஏவம் ப்ரதாந குண்டம்ஸ்யாத் ததர்தேந ததர்தகம்!!

பின்னர் குமாரமான் என்ற மந்திரத்தாலும் ஹோமங்களை பிரதான குண்டத்திலும் அதில் பாதி எண்ணிக்கை வீதம் மற்ற எட்டு குண்டங்களிலும் செய்து

स्थालीपाकं ततः कृत्वा तद्धृदा विभजेत्त्रितम् ।
गुहांशमग्निभागं च मध्वाज्याभ्यां च मिश्रितम् ॥ १३१ ॥

ஸ்தாலீ பாகம் ஹவி: க்ருத்வா தத்ருதா விபஜேத் த்ரிதா!
குஹாம்சத மக்னி பாகந்ச மத்வாஜ்யாப்யாஞ்ச மிச்ரிதம்!!

யாகாலயத்திலேயே முறைப்படி தயாரிக்கப்பட்ட அன்னத்தை மூன்று பகுதியாக்கி ஆசார்ய பாகமொன்றை நீக்கி ஏனைய இருபாகத்திலும் நெய், தேன், சேர்த்து

कुर्यातात्मीयभागन्तु लवणेन घृतेन वा ।
हृदा देवांशमभ्यर्च्य तमादाय गुहान्तिकम् ॥ १३२ ॥

குர்யாதாத்மீய பாகந்து லவணேந க்ருதேநவா!
ஹ்ருதா தேவாம்ச மப்யர்ச்ய தமாதாய குஹாந்திகம்!!

ஆத்மபாகமெனப்படும் ஆசார்யபாகத்தில் உப்பு நெய் சேர்த்து இருதய மந்திரத்தால் சேர்த்து தேவாம்ச பாகத்தை மட்டும் முருகனுக்கு சமீபத்தில்

गत्वा निवेद्य देवाय नीत्वा विज्ञाप्य मन्त्रवित् ।
दन्तष्ठञ्च तैलञ्च पूर्वे ततपुरुषं स्मरन् ॥ १३३ ॥

கத்வா நிவேத்ய தேவாய நீத்வா விக்ஞாப்ய மந்த்ரவித்!
தந்த காஷ்டஞ்ச தைலஞ்ச பூர்வே தத்புருஷம் ஸ்மரேத்!!

கொண்டு வந்து நிவேதித்து மந்திரப்பூர்வமாக மனப்பூர்வமாகவும் வேண்டிக் கொண்டு பல்துலக்கும் குச்சி ஸ்நானதைலம் முதலில் தத்புருஷ மந்திரத்தை நினைத்து

दक्षिणे दण्डकौपीनं बहुरूपेण मन्त्रत: ।
कमण्डल्वक्षमालाञ्च पश्चिमे सद्यमन्त्रत: ॥ १३४ ॥

தக்ஷிணே தண்டகௌபீநம் பஹுரூபேண மந்த்ரத:!
கமண்டல்வக்ஷ மாலாஞ்ச பஸ்சிமே ஸத்ய மந்த்ரத:!!

தெற்குப் பகுதியில் ஞானதண்டம் கோவணம் முதலியவைகளை பஹுரூபமென வரும் வேதமந்திரத்தாலபி மந்திரித்து கமண்டலு ஜபமாலை இவைகளை மேற்கில் வைத்து ஸத்யோஜாதமந்திரத்தாலும்

वामे ज्ञानञ्च भस्मानि दर्पणं वाममन्त्रत: ।
ऐशान्यां पादुकानाञ्च ताम्बूलं त्वीशमन्त्रत: ॥ १३५ ॥

வாமே ஞானஞ்ச பஸ்மாநி தர்ப்பணம்வாம மந்த்ரத:!
ஐஸான்யாம் பாதுகாநாஞ்ச தாம்பூலம் த்வீச மந்த்ரத:!!

வடக்குப் பகுதியில் வேல், விபூதி, கண்ணாடி, இவைகளை வைத்து அதற்குரிய மந்திரமோதி வடகிழக்கில் இருபாதுகைகளையும் தாம்பூலமும் வைத்து ஈசான மந்திரமோதி

स्थण्डिले सूत्रनिकटे परितश्चापि साधयेत् ।
पवित्राणि च तन्मध्ये पात्रे स्थाप्य शुभाणुना ॥ १३६ ॥

ஸ்தண்டிலே ஸுத்ரநிகடே பரிதஸ்சாபிஸாதயேத்!
பவித்ராணிச தன்மத்யே பாத்ரேஸ்தாப்ய சுபாநுநா!!

சிறுமேடையில் பவித்ர சூத்ரங்களை தாம்பாளத்தில் முறைப்படி சூத்ர குஞ்சங்களை கிழக்கு நோக்கி மத்தியில் வைத்து

अस्त्रेण प्रोक्षितं सम्यगवकुण्ठ्य हृदार्चनम् ।
धेनुमुद्रामृतीभूतं स्कन्दाङ्गैर्मनुभिर्यजेत् ॥ १३७ ॥

அஸ்த்ரேண ப்ரோக்ஷிதம் ஸம்யக் அவகுண்ட்ய ஹ்ருதார்ச்சனம்!
தேனுமுத்ரா் ம்ருதீபூதம் ஸ்கந்தாங்கைர்மநுபிர்யஜேத்!!

அஸ்திர மந்திரத்தில் புரோக்ஷணம் செய்யப்பட்டதும் கவச மந்திரத்தால் அவகுண்டனமெனும் மந்திர வேலியிடப்பட்டதும் இருதய மந்திரத்தால் இருதய பூர்வமாய் அர்ச்சிக்கப்பட்டதுமான அமுதமயமாக்கும் பசுமாட்டு நாற்காம்பு போன்ற தேனுமுத்திரையைக் காண்பித்து அமிருதமயப் புனிதமான பவித்ரசூத்ர மாலைகளை முருகனின் திருமேனியில் அலங்கரிக்கச் செய்யச் சொல்ல வேண்டும்.

मण्डले वेदिकोर्ध्वे तु पवित्रस्याशुचासनम् ।
मृगाजिनादिना चापि स्थापयेत्पावकान्तिके ॥ १३८ ॥

மண்டலே வேதிகோர்த்வேது பவித்ரஸ்யாசுசாஸநம்!
ம்ருகாஜிநாதிநாவாபி ஸ்தாபயேத் பாவகாந்திகே!!

வேதிகை மேலுள்ள மண்டலத்தில் பவித்ரப்புனித ஆசனத்தில் மான்தோல் முதலிய பொருள்களால் தென்கிழக்குப் பகுதியில் அக்னியிடம் வைக்கவும்

संवत्सरकृतं पापं यदसाक्षिणमव्ययम् ।
प्रायश्चित्तार्थमेतस्य पवित्रत्वं त्वां नमाम्यहम् ॥ १३९ ॥

ஸம்வத்ஸர க்ருதம் பாபம் யதாஸாக்ஷிணமவ்யயம்!
ப்ராய்சித்தார்க்த மேதஸ்ய பவித்ரம் த்வாநே மாம்யஹம்!!

வைத்து இவ்வாறு வேண்டிக் கொள்ளவும்ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பாபங்கள் முருகன் முன்னிற்க ஆதவனைக் கண்ட பனித்திவலைகள் போல் நீக்கவல்ல ஏ! பவித்ர மாலைகளே உன்னை முருகனாகவே வணங்குகிறோம்.

सुब्रह्मण्यं स्मरन् ब्रह्मा षडङ्गैर्मूलमन्त्रत: ।
स्तण्टिले सूत्र निकटे परितश्चापि साधयेत् ॥ १४० ॥

சுப்ரம்மண்யம் ஸ்மரந் ப்ரம்மா ஷடங்கைர்மூல மந்த்ரத:!
ஸ்தண்டிலே ஸூத்ரநிகடே பரிதஸ்சாபி ஸாதயேத்!!

இவ்வாறு மந்திரபூர்வமாக மனப்பூர்வமாக பவித்ர சூத்ரமாலைகளை (அதிவாஸம்) ஓரிரவு பூஜையில் வைத்து முருகனை முழுதும் மனதார நினைத்து ஹிருதயாதி ஷடங்க மந்திரங்களாலும் பின் ஷடாக்ஷர மூல மந்திரத்தாலும்

इदं मन्त्रं समुच्चार्य पवित्राण्यधिवासयेत् ।
पवित्राणिच तन्मध्ये पात्रे स्ताप्य शिवाणुना ॥ १४१ ॥

இதம்மந்த்ரம் ஸமுச்சார்ய பவித்ராண்யதிவாஸயேத்!
பவித்ராணிச தந்மத்யே பாத்ரே ஸ்தாப்ய சிவானுநா!!

சிறுமேடையில் பவித்ர சூத்ர மாலைகளிலும் நான்கு புறங்களிலும் பாத்திரத்திலும் பஞ்சாக்ஷர மந்திரங்களால் பிராா்த்தித்து ஜபித்து மலர்களைப் போட்டு

ददेद्वह्निस्थदेवाय तृतीयांशं चरुं गुरु: ।
त्रिसप्तकृत्वा संपातं तथैव जुहुयात्तत: ॥ १४२ ॥

ததேத்வன்னிஸ்ததேவாய த்ருதீயாம்சஞ்ச ரும்!
த்ரிஸப்த க்ருத்வா ஸம்பாதம் ததைவ ஜுஹுயாத்தத:!!

அந்தப் பவித்ர சூத்ரங்களுக்கு 21 முறை ஸம்பாதாஹுதி எனும் ஸ்வா என்று அக்னியிலும் ஹா என்று சூத்திரப்பட்டுப் பவித்ரத்திலும் ஷடக்ஷர மங்களாலும் (இயன்றவரை) செய்து

चरुशेषं हुतं भुक्तवा रात्रिशेषं व्यपोह्य च ।
तत: प्रभाते सुस्नात: स्नानसंध्यानुतर्पणम् ॥ १४३ ॥

சருசேஷம் ஹுதம் புக்த்வா ராத்ரிசேஷம் வ்யபோஹ்யச!
தத: ப்ரபாதே சுஸ்நாத: ஸ்நாந ஸந்த்யாநு தர்ப்பணம்!!

அன்ன ஹோமம் செய்து ஹுதசேஷங்களை ஆசார்யர் ஆத்மார்ப்பணம் செய்து கொண்டு மறுநாள் காலையில் முறைப்படி ஸ்நாநஸந்த்யா நுஷ்டானங்களையும் விசேஷ சந்தி தர்ப்பணாதிகளையும் முடித்துக் கொண்டு

समाचम्य कृतन्यासं सामान्यार्घ्यकरो गुरु: ।
कृत्वा नित्यविधि: सम्यगाचार्यो मन्त्रवित्तम: ॥ १४४ ॥

சமாசம்ய க்ருதந்யாஸ ஸாமாந்யார்க்ய கரோத்குரு:!
க்ருத்வாநித்ய விதிம்ஸம்ய காசார்யோ மந்த்ரவித்தம:!!

மும்முறை முறைப்படி ஆசமனம் செய்து பூதசுத்தியாதிகளை முடித்துக் கொண்டு சாமான்யார்க்யத்தோடு நித்ய விதிமுறைப்படி செய்து கொண்டு மந்திரவிதிமுறையறிஞரான அர்ச்சகர்

द्वारं द्वाराधिपानिष्ट्वा गत्वा कुम्भान्तिकं गुरु: ।
सास्रान् दिक्पालकान् कुम्भान् पूर्वं कृत्वा समर्चयेत्
॥ १४५ ॥

த்வாரம் த்வாராதி பாநிஷ்ட்வா கத்வா கும்பாந்திகம் குரு:!
சஸ்த்ராந்திக் பாலகாநு கும்பான் பூர்வம்க்ருத்வா ஸமர்சயேத்!!

நான்கு த்வாராதிபதிகளைப் பூசித்து கும்ப பூஜைகளையும் முடித்து குண்டசமீபம் வந்து திக்பாலக கும்பங்களையும் அவர்களது ஆயுதங்களையும் முதலில் பூஜித்து விட்டு

कुण्डाधिदेवतान् पूज्य परिषिच्य यथाक्रमम् ।
स्कन्दमूलेन सब्रह्ममूर्तिमन्त्रै: षडङ्गकै: ॥ १४६ ॥

குண்டாதிதேவதா: பூஜ்ய பரிஷிச்ய யதாக்ரமம்!
ஸ்கந்த மூலேநஸ ப்ரம்மமூர்த்தி மந்த்ரைஷ்ஷடங்ககை:!!

முறைப்படி குண்ட தேவதைகளையும் பூஜித்து நாற்புறமும் முறைப்படி பரிசேஷணம்

செய்து முருகனின் மூலத்தாலும் பிரும்மாங்க பஞ்சபிரும்ம ஷடங்க மந்திரங்களாலும்

नाडीसंधानमार्गेण योजयेद् भावयेद् गुहम् ।
यान्येतानि पवित्राणि भगवान् संस्कृतानि च ॥ १४७ ॥

நாடீசந்தான மார்கேண யோஜயேத்
பாவயேத்குஹம் ।
யாந்யே தாநி பவித்ராணி பகவாநு ஸம்ஸ்க்ருதாநிச ॥

மண்டலத்திலு,ம் கும்பத்திலும், குண்டத்திலும், முருகனை நாடி சந்தான முறையில் ஒருங்கிணைத்து முருகனை மூன்றிடத்திலும் பூசித்தவரை ஒன்றுபடுத்தி

मण्डलस्थगुहेनैव पावकस्थगुरुं तथा ।
अर्चयामि घटस्थाय गुहायाध्येषयेदिति ॥ १४८ ॥

மண்டலஸ்த குஹேநைவ பாவகஸ்த குஹந்ததா ।
அர்ச்சயாமி கடஸ்தாய குஹாயாத்யேஷயேதிதி ॥

ப்ரபோ முருகா இங்குள்ள அனைத்து பவித்ரசூத்ர மாலைகளனைத்தும் செய்யப் படவேண்டிய அனைத்து சடங்குகளும் உனதருளால் செய்யப்பட்டு யாவும் உனக்கே அறப்பணிக்கே முயற்சியோடு உள்ளோம் என வேண்டி

समर्च्य रक्षणामस्मै षट्पवित्राणि देशिकः ।
एकैकं शक्तिवर्धन्यौ जयान्तदिभ्य एव च ॥ १४९ ॥

சமர்ச்ய ரக்ஷணாமஸ்மை ஷட்பவித்ராணி தேசிக: ।
ஏகைகம் சக்தி வர்த்தந்யௌ ஜயந்தாதிப்ய ஏவச ॥

அர்ச்சித்து இவைகள் எங்களைக் காப்பதற்காக உனதருளை வேண்டி தங்களுக்கும் தேவியிருவருக்கும் ஜயந்தாதி எண்மருக்கும் பரிவார மூர்த்திகட்கும்

द्वारेशेभ्यो दिगीशेभ्यो दद्याद् गन्धपवित्रकम् ।
तत्तन्नामचतुर्थ्यन्तैः प्रतिगृह्णेति दापयेत् ॥ १५० ॥

த்வாரேசாப்யோ திகீசேப்யோ தத்யாத் கந்த
பவித்ரகம் ।
தத்தந்நாம சதுர்த்யந்தை: ப்ரதிக்ருண்ணேதி
தாபயேத் ॥

வாயிற்தோரண தேவதைகளும் திசைத்தேவர் களுக்கும் மணமிகு பவித்ரங்களை அவரவருடைய நான்காவது விபக்தியோடு நம: என முடியும் செல்வமளிக்கும் மந்திரம் சேர்த்து சாத்தி

यागशालागजस्थानं प्रासादपचनालयम् ।
द्वारकान् सूत्रषट्केण वर्मणा परिवेष्टयेत् ॥ १५१ ॥

யாகசால கஜஸ்தாநம் ப்ராசாத பசநாலயம் ।
த்வாரகாநு சூத்ரஷட்கேந வர்மணா
பரிவேஷ்டயேத் ॥

ஆறாறு சூத்ரங்களடங்கிய யாகசாலை யானை கோபுரம் திருமடப்பள்ளி த்வாரபாலகர்களுக்கு கவச மந்திரத்தால் பவித்ரம் சமர்ப்பித்து

द्वारं पूर्ववदभ्यर्च्य गर्भगेहं प्रविश्य च ।
दन्तकाष्ठं च तैलं च ताम्बूलं हृदयेन च ॥ १५२ ॥

த்வாரம் பூர்வதப்யர்ச்ய கர்பகேஹம் ப்ரவிஸ்ய ச ।
தந்த காஷ்டஞ்ச தைலஞ்ச தாம்பூலம்
ஹ்ருதயேநச ॥

பிறகு மூலாலயம் செல்லும் முன் முன்போல் வழக்கம்போல் துவாரபாலகர்களை அர்ச்சித்து கருவறைக்குள் சென்று கந்தனுக்கு முன் பல்துலக்கும் குச்சி மணமிகு நல்எண்ணெய் வெற்றிலைப் பாக்கு இவைகளை ஹ்ருதய மந்திரத்தால் கொடுத்து

उपचारक्रमणैव युक्त्यादद्याद् क्रमाद् गुरुः ।
आधाराधेयपूजां च कुर्यादपि विशेषतः ॥ १५३ ॥

உபசார க்ரமேணைவ யுக்த்யா தத்யாத் க்ரமாத் குரு: ।
ஆதாராதேய பூஜாம்ச குர்யாதபி விசேஷத: ॥

உபசாரம் செய்யும் வரிசைப்படி ஆசார்யரானவர் ஆதாரசக்தி முதல் பஞ்சாஸன நியாஸ ஆவாஹநாதி பஞ்சாவரண பூஜைகளை சிறப்பாக முறைப்படி செய்து

विशेषस्नपनोपेतं यथाविभवविस्तरम् ।
आमन्त्रणपवित्रान्तं सुधामुद्राप्ररोपितम् ॥ १५४ ॥

விசேஷ ஸ்நபநோபேதம் யதாவிபவ விஸ்தரம்!
ஆமந்த்ரண பவித்ராந்தம் சுதாமுத்ரா ப்ரரோபிதம்!!

சிறப்புக் கலச பூஜைகளை பொருளாதார அடிப்படையில் செய்விக்க வேண்டும். ஆரம்பம் முதல் பவித்ராரோபணம் செய்யும் வரை தேனுமுத்ரையெனும் அமிர்த முத்ரை ஆங்காங்கு பூஜாஸ்தானங்களில் காண்பிக்கப்பட வேண்டும்

गुहायारेप्य तन्मूर्ध्नि रेचकेण गुहार्चना ।
आमन्त्रणात्मकं कर्म पठेद् देवेशसंनिधौ ॥ १५५ ॥

குஹாயாரோப்ய தன்மூர்த்னி ரேசகேந குஹார்சனா!
ஆமந்த்ரணாத்மகம் கர்ம படேத்தேவேச ஸன்னிதௌ!!

பவித்ர உற்சவ துவக்கம் முதல் முருகன் சந்நிதியில் வேதமந்த்ர படனம் (வாசித்தல்) (ஸ்வர அக்ஷர சுத்தமாக உதாத்த அனுதாத்த ஸ்வரித தீர்க்க ஸ்வரிதத்துடன் அனுஷங்கமாக சொல்லுவித்தல்) பவித்ராரோபண சமயம் வரை நீட்டிக்கப்பட வேண்டும்

नमस्ते विदिवच्छिद्र पुराणेश मखं प्रति ।
प्रभावान्मन्त्रयामि त्वां तदिच्छावाप्तिकारणम् ॥ १५६ ॥

நமஸ்தேவிதிவச்சத்ர புராணே சமகம் ப்ரதி!
ப்ரபாவான்மந்த்ர யாமித்வா ததிச்சவாப்தி காரணம்!!

புராணம் வாசித்தல், வேதம் ஓதுவித்தல் அதன் முழுப்பயனை அடைய விரும்புபவர்கள் யாகங்கள் எவ்வெப்பொழுது எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் கண்டிப்பாக முழு கவனத்தோடு எவ்வாற்றானும் கண்காணிக்க வேண்டும், - ஏனெனில் ஒளி வடிவாகவும் ஒலிவடிவாகவும் இறைவன் இருந்து பிரதிபலிப்பதை அனல் வடிவிலும் புனல் வடிவிலும் வழிபாடு நடத்தும் சமயங்களில் முறைப்படி நடத்துவது நலமிகு நற்செயலாகும்.

तत्सिद्धिमनुजानीहि यत: शरवणोद्भव ।
सर्वदा सर्वथा स्वामिन् नमस्तेऽस्तु प्रसीद मे ॥ १५७ ॥

தத்ஸித்தி மனுஜாநீஹி யதஸ் சரவணோத்பவ!
சர்வதா ஸர்வதா ஸ்வாமின் நமஸ்தேஸ்து ப்ரஸீதமே!!

அதன் முழுப்பயனைத் தரவல்ல முருகப் பெருமானே இவ்வகையான நல்வாய்ப்புகளை மேலும் மேலும் எவ்வெப்போதும் எங்களுக்கு வழங்கியருள் பாலித்து ஆட்கொள்ள வேண்டும்.

जप्त्वा निवेद्य देवाय नमस्कृत्वा समापयेत् ।
षट्पवित्राणि मतिमान् मूर्तिमन्त्रै: प्रदापयेत् ॥ १५८ ॥

ஜப்த்வா நிவேத்ய தேவாய நமஸ்க்ருத்வா சமாபயேத்!
ஷட்பவித்ராணி மதிமான் மூர்த்தி மந்த்ரை: ப்ரதாபயேத்!!

ஜபித்து நிவேதித்து முருகனை முழுதும் வணங்கி பவித்ரா ரோபணம் எனும் புனிதப்பட்டு மாலைகளை நித்ய நிர்மலப் புனிதனுக்கு ஆண்டுப்பூசை அகிலத்திற்குப் பயன் தரவும் ஆறு பவித்ர மாலைகளை முருகனின் ஆறு மந்திரங்களையும் கூறி ஆறு பவித்ர மானவர்களுக்கு ஆறுமுகனின் அருட்பிரஸாதங்களாக ஆகம மறிந்த ஆசார்யர் அளித்து மகிழ்விப்பார்.

स्कन्दमूलेन मन्त्रेण दद्यात् स्कन्दावतारकम् ।
मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं च यत् कृतम् ॥ १५९॥

ஸ்கந்த மூலேந மந்த்ரேண தத்யாத்
ஸ்கந்தாவதாரகம்।
மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்தி ஹீநஞ்ச
யத்க்ருதம்॥

அச்சமயம் முருகனின் மூல மந்த்ரங்களை முறைப்படி முடிந்தவரை ஜபிக்கச் சொல்ல வேண்டும். அப்போது பக்தர்கள் முருகனின் புகழ்மிகு வரலாற்றை பக்திப் பரவசத்தோடு கேட்கும்படி புராண ப்ரவசன ஏற்பாடு செய்யத் தக்கது. பிறகு முருகனிடம் எங்களால் செய்யப்பட்ட பவித்ரோற்சவ வரிசையிலோ மந்திரங் கூறுவதில் செய்த காரியங்களில் மனோலயமில்லாத பக்திகுறைவு போன்ற

जपहोमार्चनाहीनं कृतं नित्यं मया तव ।
कृतं सावित्रिहीनं च तत्पूरय विधानतः ॥ १६० ॥

ஜபஹோமார்சநா ஹீநம் க்ருதம் நித்யம் ம யாதவ।
க்ருதம் சாவித்ரி ஹீநஞ்ச தத் பூரய விதாநத:॥

ஜப எண்ணிக்கைக் குறைவு வேள்வியில் எழுந்த குறைகள் எவையெனும் இருப்பின் முருகா உன் திருவருளால் அவைகள் அனைத்தும் நிறைவெய்தி நற்பயன்களையே நாளும் அளிக்க அருள்வாயாக

त्वया पवित्रितं सर्वं जगदेतच्चराचरम् ।
तथाप्यत्र पवित्राणि दापयामि त्वदाज्ञया ॥ १६१ ॥

த்வயா பவித்ரிதம் சர்வம் ஜகதேதச்சராசரம்।
தவாப்யத்ர பவித்ராணி தாபயாமி த்வதாக்ஞயா॥

தங்கள் திருவருளால் எப்போதும் உலகம் எங்கும் புனிதப்பட்டுத் தங்கள் திருவாணையால் உலகம் உய்ய உவப்பவந்து உதித்து அருள் புரிவீராக

निवेद्य देवदेवाय नमस्कुर्याद् विशेषतः ।
शक्तिद्वये पवित्रे द्वे दद्यात् तत्तद्धृदाधुना ॥ १६२ ॥

நிவேத்ய தேவதேவாய நமஸ்குர்யாத் விசேஷத:।
சக்தித்வயே பவித்ரேத்வே தத்யாது
தத்தத்ருதாதுநா॥

முருகப் பெருமானுக்கு எல்லாவற்றையும் மனமொழி மெய்களால் நிவேதித்து (தெரிவித்து) சிறப்பாக வணங்கி இரு தேவிமார்களுக்கு இதய மந்திரத்தோடு இப்பொழுது பவித்ர மாலை சாத்தி மனமுருகி வழிபாடி யியற்றுக

दिगीशपरिवारेभ्यो देवेभ्यस्त्वेकमेककम् ।
सुमित्रक्षेत्रपालेभ्यो दद्याद् गन्धपवित्रकम् ॥ १६३ ॥

திகீச பரிவாரேப்யோ தேவேப்யஸ்த்வேகமேககம்।
சுமித்ர க்ஷேத்ர பாலேப்யோ தத்யாத்
கந்தபவித்ரகம்॥

திசைத் தேவரெண்மருக்கும் ஏனைய முருகனின் ஆலயத்திலுள்ள பரிவார மூர்த்தங்களுக்கும் சுமித்ர சண்டிகேஸ்வரருக்கும் க்ஷேத்ரபாலரெனும் பைரவ மூர்த்திக்கும் தெய்வமணங்கமழ் புனிதப்பட்டு மாலைகளை சமர்ப்பித்து வேண்டுக.

प्रायश्चित्तं ततः कुर्यादस्त्रेणैव शताहुतिः ।
सिद्धान्तपुस्तके तद्यात् स्वगुरोश्च पवित्रकम् ॥ १६४ ॥

ப்ராயஸ்சித்தந்தத: குர்யாதஸ்த்ரேணைவ
ஸதாஹுதி:।
ஸித்தாந்த புஸ்தகே தத்யாத் ஸ்வகுரோஸ்ச
பவித்ரகம்॥

மேலும் வேண்டுவதோடு வாளா இருந்துவிடாது எக்குறை எப்படி ஏற்பட்டிருப்பினும் அவை யாவும் முழுதும் நீங்கிமுழுப் பயனை அடைய அஸ்திர மந்திரங்களால் நூறு முறைத் தனித்தனியாக எல்லா அஸ்திரங்களையும் அதே அக்னியில்

செய்து மனநிறைவோடு தனது குருவுக்கு மேலும் ஞானமளிக்கும் இரு ஞான நூல்களை பணிவோடு சமர்ப்பித்து வணங்க வேண்டும்.

प्रभूतहविषं दद्यात् यथाविभवविस्तरम् ।
ब्राह्मणान् भोजयेत् पश्चात् दीनानाथांश्च भोजयेत् ॥ १६५ ॥

ப்ரபூத ஹவிஷந்தத்யாது யதாவிபவ விஸ்தரம் !
ப்ராம்மணாநு போஜயேத் பஸ்சாத் தீநாநாதாம்ஸ்ச போஜயேத் !!

சுவைமிகுப் பேருணவை பொருளாதார மேம்பாட்டுக் கிணங்க பெருமானின் முன் முழுவதும் சமர்ப்பித்து நிவேதித்து பக்தப் பெருமக்கள் அனைவருக்கும் உவகையூட்டும் முறையில் அந்தணர்களுக்கும், ஏழை, எளியவர் குருடு, செவிடு போன்ற ஊனமுற்றவர்களுக்கும் அன்னதானத்தை நிதானமாக செய்து முழுப்பயனையும் முறையே பெறுக.

उत्तमं दशनिष्कं स्यात् मध्यमं तु तदर्धकम् ।
तदर्धमधमं ज्ञेयं देशिकस्य तु दक्षिणा ॥ १६६ ॥

உத்தமம் தஸநிஷ்கம் ஸ்யாத் மத்யமந்து ததர்தகம் !
ததர்த மதமம்ஞேயம் தேஸிகஸ்யது தக்ஷிணா !!

பழைய காலத்தில் ரூபாய் நாணயங்கள் வெள்ளியினாலானவைகள் எனவே ஆசார்யருக்கு பவுன் விலை மலிவானதாகவும் இருந்த காரணத்தாலும் என்ன விலை விற்றாலும் பவுன்தான் தங்கந்தான் சன்மானமாகத் தரவேண்டுமென உயர்ந்த நிலையாக பத்து பவுனும் நடுத்தரமாக ஐந்து பவுனும் 2½ பவுன் கடை நிலையாகவும் பவித்ர உற்சவ ஸ்தலக்ஞர் உள்ளூர் ஆசார்யருக்கு மனமுவந்து வழங்க வேண்டும்.

मूर्तिपानां तदर्धं स्यात् जापकानां तदर्धकम् ।
अत्रोपकरणं सर्वं देशिकाय प्रदापयेत् ॥ १६७ ॥

மூர்த்திபாநாம் ததர்த்தம் ஸ்யாத் ஜாபகாநாம்த ததர்த்தகம் !
அத்ரோபகரணம் ஸர்வம் தேஸிகாய ப்ரதாபயேத் !!

ஆசார்யருக்கு எவ்வளவு எந்த விகிதத்தில் வழங்கப்பட்டதோ அதில் பாதி மீதி எட்டு ரித்விக்குகளுக்கும் சாதகருக்கும் அதில் பாதி வேதமோதிய விற்பன்னர்களுக்கும், அங்கு புதிதாக வாங்கி பயன்பட்ட புதுகுடங்கள் சொம்புகள் தங்க வெள்ளிக் கம்பிகள் வெள்ளி ச்ருக்சிருவம், வெள்ளி மணப்பலகை, பஞ்சபாத்திரம், உருத்திரணி கிண்டி பவித்ரம், காப்பு, தர்ஜனி, போன்றவைகளையும் அச்சபையிலேயே மனமுவந்து ஆசார்யருக்கு வழங்கி மகிழ்வித்து எல்லோரும் மகிழ வேண்டும். ஏனெனில் முருகனுக்கே முழுதும் வழங்கிய பயனை அவரின் பிரதிநிதியாய் இருந்து பெற்றுக் கொண்டு வாழ்த்தும் ஊனக்கண்ணாலும் காணக் கூடிய முருகப்பிரானே உள்ளூர் பூஜகர் சிவாச்சாரியார் ஆவார்.

पवित्राणिच दर्भांश्च वस्त्राण्याभरणानि च ।
पुनः पुनः प्रयोक्तव्यं पूतान्येतानि सर्वदा ॥ १६८ ॥

பவித்ராணிச தர்பாம்ஸ்ச வஸ்த்ராண்யாபரணாநிச !
புந: புந: ப்ரயோக்தவ்யம் பூதாந்யேதாநி ஸர்வதா !!

எப்பொழுதும் புனிதமாயுள்ள மீதமுள்ள பவித்ரமாலைகள் பட்டு, வஸ்திரங்கள் முருகனின் ஆடை, ஆபரணங்கள் மறுபடியும் மறுபடியும் உபயோகிக்கத் தக்கனவானதால் முறைப்படி பாதுகாத்துப் பயன்படுத்துக.

मण्डलस्थं घटं चैव वह्निस्थं नित्यमर्चयेत् ।
अर्धमासं च सप्तर्क्षं पञ्चाहं वा त्रयाहकम् ॥ १६९ ॥

மண்டல ஸ்தம்கடஞ்சைவ வந்நிஸ்தம் நித்யமர்சயேத் !
அர்த மாசஞ்ச ஸப்தர்க்ஷம் பஞ்சாஹம் வாத்ரயாஹகம் !!

மண்டலத்திலும், கடத்திலும், அக்னியிலும், பதினைந்து நாட்களுக்கும், அல்லது ஏழு நாட்களுக்கும், அல்லது ஐந்து நாட்களுக்கும் அல்லது மூன்று நாட்களாவது முறைப்படி தொடர்ந்து அர்ச்சிப்பது வேள்வி செய்வது நலம்பல பயக்கும்

एवं पवित्रं पूजां च प्रकुर्यात्तु दिनं प्रति ।
मन्त्रतर्पणकर्मान्तं कृत्वा निष्कृतिमाचरेत् ॥ १७० ॥

ஏவம் பவித்ரம் பூஜாஞ்ச ப்ரகுர்யாந்து தினம்ப்ரதி !
மந்த்ர தர்ப்பண கர்மாந்தம் க்ருத்வா நிஷ்க்ருதி மாசரேத் !!

இவ்வாறு மீண்டும் குற்றங்கள் வாரா வண்ணம் தினசரியே எந்தக் குறையும் எழா வண்ணம் எல்லோரும் கண்ணும் கருத்துமாக மந்த்ர தர்ப்பணங்களோடு தினப் பூசையையும் செய்து தானும் மகிழ்ந்து உலகும் மகிழும்படி செய்க.

अंस्त्रेणैव शतं पश्चात् पूर्णां वै चित्ररूपिणीम् ।
लक्षञ्चाघोरमावर्त्य चाज्यहोमं समाचरेत् ॥ १७१ ॥

அஸ்த்ரேணைவ சதம்: பஸ்சாத் பூர்ணாம்வை சித்ர ரூபிணீம் !
லக்ஷஞ்சா கோர மாவர்த்யாசாஜ்ய ஹோமம் ஸமாசரேத் !!

பிறகு அஸ்த்ரமந்திரங்களை நூறு, நூறு ஆவர்த்தி ஜப ஹோமம் செய்து ஒரு லக்ஷம், அகோராஸ்த்ர ஜபம் செய்து பத்தாயிரம் ஹோமம் செய்து விட வேண்டும்.

भसितं दर्शयित्वाथ वह्निस्थं योजयेद् गृहम् ।
वह्नेर्मन्त्रं च सहृत्य नीत्वा तं द्वादशान्तके ॥ १७२ ॥

பஸிதம்தர்சயித்வாத வந்நிஸ்தம் யோஜயேத்குஹம் !
வந்நோர் மந்த்ரஞ்ச ஸம்ஹ்ருத்ய நீத்வாதம் த்வாதசாந்தகே !!

அனல் வழிபாட்டில் அமர்ந்துள்ள அரனார்பாலனை புனல் குடத்திலும் புன்னகையோடுள்ள புண்ணியனோடு அன்போடு சேர்ப்பித்து விடவேண்டும். (தலைக்கு மேல் 12 அங்குல உயரத்தில் குருவடிவாக திருவடித்தீக்கை செய்து எப்போதும் தப்பாது அருள்பாலிக்கும் முருகனை குருவாய் வருவாய் அருள்வாய் முருகா என அழைத்து குடவடிவில் உள்ள குமரன் தன் வலக்கரத்தில் யாக பயன்களை மலர்ப்புனலால் மகிழ்ந்து சேர்ப்பிக்க)

हृदये संनिवेश्याग्निं विसृज्योद्वास्य विष्टरान् ।
परिधिं च बलिं दद्यात् समाचम्य गुरुः शुचिः ॥ १७३ ॥

ஹ்ருதயே ஸந்நிவேச்யாக்னிம் விச்ருஜ்யோ த்வாஸ்ய விஷ்டரான் !
பரிதிஞ்ச பலிந்தத்யாத் ஸமாசம்ய குரு: சுசி: !!

இருதயத்திலிருந்து எடுத்த ஜாடராக்னியை பௌதீக சிவாக்னியோடு சேர்ப்பித்து மீண்டும் இதயத்தில் சேர்ப்பித்துக் கொள்ளல் (மரபு) வேண்டும். மதிமிகு அர்ச்சக ஆசார்யர் (பரிதி விஷ்டர பரிஸ்தரனங்களில்) யாக குண்டத்தின் மேல் வைத்த நீளமான நேரான 4 யாக சமித்துக் குச்சிகளிலும், பூசிக்கப்பட்ட பிரும்ம, விஷ்ணு, ருத்ர, ஈஸ்வரர்களையும் நடுமேகலையில் வைத்துப் பூசித்த நீளமான 4 விஷ்டரங்கள் எனும் தர்பை கட்டுடைய முடிச்சுடையவைகளில் திசைமன்னர் பதின்மரையும் கீழமேகலையில் அவர்களது பத்து ஆயுதங்களையும் பூசித்து பலியன்னமிட்டு வழியனுப்பி அர்க்ய ஆசமனங் கொடுத்து மீண்டும் அழைக்கும் போது அவசியம் வந்து அருள்புரிய பிரார்த்தித்து கொள்வார்.

स्कन्दकुम्भे च वर्धन्यौ मन्त्रान् संहृत्य योजयेत् ।
दिक्पालानस्त्रसहितान् द्वारपालांश्च संस्थितान् ॥ १७४ ॥

ஸ்கந்த கும்பேச வர்த்தந்யௌ மந்த்ராந்
ஸம்ஹ்ருத்யயோஜயேத் !
திக்பாலநஸ்த்ர ஸஹிதாந் த்வார பாலாம்ச்ச
ஸம்ஸ்திதாந் !!

முருகன் கும்பத்திலிருந்து முருகன் பிம்பத்திற்கும் இருதேவி கும்பங்களிலிருந்து இருதேவியர்களையும், ஆகர்ஷித்து மலர்களால் சேர்ப்பித்து நிலைநிறுத்திப் பூசித்து பிறகு அபிஷேகித்து அருள்மனம் மேலும் பொலிவுறச் செய்ய வேண்டும். பிறகு திசைத் தேவர்களையும், அஸ்த்ர தேவர்களையும், கர்ப்பக் கிரஹத்தின் உட்புறமே அந்தந்த இடத்தில் அபிஷேகித்து அருள்நிலை நாட்டுக. துவார பாலகர்களையும் அவ்வண்ணமே செய்க.

अर्घ्यं तन्नित्यपूजाङ्गं पुज्याद्यैः षरिकल्पयेत् ।
रव्यन्तं संविसृज्याथ पवित्राणि षडाननात् ॥ १७५ ॥

அர்க்யந்தந்நித்ய பூஜாங்கம் புஷ்பாத்யை:
பரிகல்பயேத் !
ரவ்யந்தம் ஸம் விச்ருஜ்யாத பவித்ராணி
ஷடாநநாத் !!

பூஜை நிறைவு அர்க்யமான நிரோதார்க்யம் அளித்து மலர் முதலியவைகளால் பூஜித்து சூரியன் வரை நிறைவு செய்து முருகனிடமிருந்து பவித்ரமாலைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

आदाय च सुमित्राय सर्वाण्येतानि दापयेत् ।
पवित्रं नित्यपूजाङ्गं पुष्पाद्यैः परिकल्पयेत् ॥ १७६ ॥

ஆதாயச சுமித்ராய ஸர்வாண்யை தாநிதாபயேத் !
பவித்ரம் நித்ய பூஜாங்கம் புஷ்பாத்யை:
பரிகல்பயேத் !!

அன்றைய நித்ய பூஜையின் அங்கமாக இவையனைத்தையும் சமர்ப்பித்து மலர்கள் தூவி மகிழ்வோடு நிறைவேற்றுக. முடிவில் முருகனின் சண்டிகேஸ்வரரான சுமித்ரசண்டிகேஸ்வரருக்கு பவித்ரம் சமர்ப்பித்து முருகனின் யாக பூஜா பவித்ர சமர்ப்பண முழுப்பயனையும் வேண்டி நிறைவு செய்ய வேண்டும்.

एवं यः कुरुते मर्त्यः पवित्रोत्सवमुत्तमम् ।
मुच्यते ब्रह्महत्यायाः किं पुनश्चोपपातकैः ॥ १७७ ॥

ஏவம்ய குருதே மர்த்ய: பவித்ரோத்ஸவ முத்தமம் !
முச்யதே ப்ரம்மஹத்யாயா: கிம்புநச்சோப பாதகை:!!

இவ்வாறு காலந்தவறாது திரவியம் குறையாது, பக்திப்பணிவுமிகு, அன்பு குறையாது ஆண்டுதோறும் செய்விக்கத் தூண்டி எல்லோரையும் முருகனிடம் ஈடுபடுத்தி செய்து வருவார்களானால் (பிரும்மஹத்தி) பிராம்மணனைக் கொலை செய்த பாவமே நீங்குமேயென்றால் மற்ற பாபங்கள் நிச்சயமாக நீங்குமெனப் பொருள்) சகல பாபமும் தோஷமும் நீங்கிச் சுகமடைவர்

सर्वान् कामानिहप्राप्य सोऽन्ते स्कन्दपुरं व्रजेत् ।
पवित्रारोपणं प्रोक्तं श्रृणु श्रावणपूजनम् ॥ १७८ ॥

சர்வாநு காமாந்நிஹப்ராப்ய ஸோந்தே ஸ்கந்தபுரம்
வ்ரஜேத் !
பவித்ராரோபணம் ப்ரோக்தம் ச்ருணு ச்ராவண
பூஜநம் !!

(குறிப்பு) பிராம்மணனைக் கொலை செய்வது என்பது உயிரை எடுப்பது மட்டுமல்ல. (அவர்கள் தர்மங்களை செய்யவிடாமல் தடுப்பது. காலம் மாறிவிட்டது என்று மிரட்டி அவர்கள் வழிக்கு அந்தணர்களைத் திருப்புவதே பிராம்மணனைக் கொலை செய்ததை விட கொடிய கழுவாயில்லாத பாபமாகும் என்பதை யூகித்து அறிய நலமிகு பயக்கும்)

எல்லா இனிய நலன்களும் இனிதே இங்கேயே பெற்று நீடுழி வாழ்ந்து நிறைவாக

நிர்மலமான முருகனடியை முறையாக எய்துவர். பவித்ராரோபணம் என்னும் இப்பூசையில் ஆடியில் செய்ய வேண்டும் பிறகு ஆவணி மாத சிறப்பு பூசை பற்றிக் கேட்பீராக.

इति पवित्रारोपणविधिः

இதி பவித்ராரோபணவிதி:

இது பவித்ராரோபண முறையாகும்.

।। श्रावणपूजाविधिः ।।

சிராவணமாஸ பூஜா

ஆவணி மாத பூஜை முறை

श्रावणे तु श्रविष्ठान्तं तद्दिनात्पूर्वरात्रके ।
कौतुकं बन्धयेद्देवं पायसान्नं निवेदयेत् ।। १७९ ।।

ச்ராவணேது ச்ரவிஷ்டாந்தம் தத்திநாத் பூர்வராத்ரகே!
கௌதுகம் பந்தயேத்தேவம் பாயஸாந்நம் நிவேதயாத்!!

ஆவணியில் அவிட்டத்தில் முடியில் வண்ணம் முன்னாளே முருகனுக்கு கங்கணங்கட்டி பாயஸம் நிவேதித்து பிரார்த்திக்க

प्रातः संध्यावसाने तु यथाविभवविस्तरम् ।
स्नपनं कल्प्य संपूज्य कुङ्कुमेनैव लेपयेत् ।। १८० ।।

ப்ராதஸ்ஸந்த்யாவஸாநேது யதாவிபவ விஸ்தரம்!
ஸ்நபநங்கல்ப்ய ஸம்பூஜ்ய குங்குமேநைவ லேபயேத்!!

மறுநாள் காலை காலைக்கடன் நிறைவேற்றி பொருளாதாரத்துக்குத் தக்கவாறு கும்பங்கள் நிறுவிபூசித்து குங்குமமிடுக.

नववस्त्रेण संवेष्ट्य भूषयेद्भूषणार्हकैः ।
बन्धूकपुष्पदामैश्च नैरन्तर्यं विभूषयेत् ।। १८१ ।।

நவ வஸ்த்ரேண ஸம்வேஷ்ட்ய பூஷயேத் பூஷணார்ஹகை:!
பந்தூக புஷ்ப தாமைச்ச நைரந்தர்யம் விபூஷயேத்!!

புத்தாடை அணிவித்து பூஷணங்களால் அலங்கரித்து செம்பருத்தி மலர் மாலைகளால் அழகுறச் செய்து நிறைமணிகளால் அலங்கரிக்கவும்

शर्करायाः शतप्रस्थं तदर्धं वा तदर्धकम् ।
पात्रे निधाय मतिमान् षण्मुखाय निवेदयेत् ।। १८२ ।।

சர்க்கராயாச்சத ப்ரஸ்தம் ததர்தம் வாததர்தகம்!
பாத்ரேநிதாய மதிமாந் ஷண்முகாய நிவேதயேத்!!

ஒரு பெரியபடி (2 லிட்டர்) சர்க்கரைப் புது பாத்திரத்தில் புதுசர்க்கரையை (வைத்து) (அல்லது) 1 லிட்டர் அல்லது அரை லிட்டர் மதிமிகு பூஜகர் வைத்து அறுமுகப் பெருமானுக்கு அமுது செய்விக்க வேண்டும்.

प्रभूतहविषं दद्यात्ताम्लञ्च निवेदयेत् ।
एवं यः कुरुते मर्त्यः स पुण्यां गतिमाप्नुयात् ।
प्रोक्तं श्रावणपूजाञ्च श्रृणु भाद्रपदार्चनाम् ।। १८३ ।।

ப்ரபூத ஹவிஷந்தத்யாத் தாம்பூலஞ்ச நிவேதயேத்!
ஏவம்ய:குருதே மர்த்யஸ்ஸபுண்யங்கதிமாப்நுயாத்!!
ப்ரோக்தம் ச்ராவண பூஜாச ச்ருணுபாத்ர பதார்ச்சநம்!!!

சுவைமிகு, அளவுமிகு அன்னம் படையல் செய்து மணமிகு வெற்றிலை பாக்குடன் நிவேதிக்க வேண்டும் இவ்வாறு செய்பவர் நற்கதியை அடைவதோடு நாளும் நலமே பெறுவர். ஆவணிப்பூசை அறிவிக்கப்பட்டது புரட்டாசிப் பூசை பற்றியைக் கூறுகிறேன். கேளும்.

इति श्रावणपूजाविधिः

இதி ச்ராவணபூஜா விதி:

॥ भाद्रपदमासपूजाविधिः ॥

(பாத்ர மத மாஸ பூஜா)

पूर्वाषाढे तु नक्षत्रे मासि भाद्रपदे यजेत् ।
कुसुमैः केतकैश्चैव शतैर्वाऽपि तदर्धकैः ।
सक्तुलाजतिलोपेतैः सहस्रप्रस्थमुत्तमम् ॥ १८४ ॥

பூர்வாஷாடேது நக்ஷத்ரே மாசி பாத்ர பதே யஜேது!
குசுமை: கேதகைச்சைவ சதைர்வாபி ததர்த்தகை:!!
சக்துலாஜ திலோபேதை ஸ்ஸஹஸ்ர ப்ரஸ்த முத்தமம் !!!

ஆவணி மாதப் பௌர்ணமியோடு பூராட நக்ஷத்திரத்தில் வரும் தினம் சிறப்பு மாத பூஜை தினமாகும். நூறு அல்லது ஐம்பது தாழம்பூக்களால் பூசிக்க வேண்டும். சத்துமாவு எள்ளுடன் கலந்தது ஆயிரம் படிகள் உயர்ந்ததாகக் கொள்ளப்படுகிறது.

तदर्धं मध्यमं पिष्टं सन्यसंस्यात्तदर्धकम् ।
अपूपं सर्पिषा कृत्वा पूरयेत्तु घटे घटे ॥ १८५ ॥

ததர்தமத்யமம் பிஷ்டம் கன்யஸம்ஸ்யாத்த ததர்தகம்!
ஆபூபம் சர்பிஷா க்ருத்வா பூரயேத்து கடே கடே !!

அதில் பாதியான 500 லிட்டர் அரிசிமாவும், 250 லிட்டர் அரிசிமாவும், மத்யமம் அதமமாகக் கருதப்படுகின்றது. இந்த அளவுக்கு ஒப்பாக வெல்லம் சேர்த்து நெய்யினால் அதிரஸங்கள் செய்து புதுப்புது மண்பானைகளுள் சேர்ப்பித்து

श्रीसूक्तैर्वेष्टयित्वाथ कूर्चं न्यस्त्वा विचक्षणः ।
विशेषस्नपनैः स्नाप्य प्रभूतहविषं ददेत् ॥ १८६ ॥

ஸ்ரீ தூக்தைர்வேஷ்ட யித்வாத கூர்சம்ந்யஸ்த்வா விசக்ஷண:!
விசேஷ ஸ்நபனைஸ்நாப்ய ப்ரபூத ஹவிஷந்ததேத்!!

ஸ்ரீ சூக்த யஜுர்வேத மந்திரங்களால் முருகப் பெருமான் மேல் வரிசையாக அழகுற அர்ப்பணித்து அலங்கரிப்பதற்கு முன் சிறப்புக் குடமுழுக்குப் பூசை வேள்வியும் செய்து நீராட்சி தாராளமாக பக்தர்களுக்கு விநியோகிக்கும்படி ஏராளமாக சுவைமிகு அன்னம் தயாரித்து முருகனுக்கு முன் முறைப்படி அத்தனையும் சமர்ப்பித்து நிவேதிக்க வேண்டும்.

कदलीपनसैर्युक्तानपूपांश्च विशेषतः ।
ताम्बूलञ्च हृदा दत्वा प्रार्थयेदर्थमीप्सितम् ॥ १८७ ॥

கதளீப நஸைர்யுக்தா நபூபாம்ச்ச விசேஷத:!
தாம்பூ லஞ்ச ஹ்ருதா தத்வா ப்ரார்த்தயே தார்த்தமீப்சிதம்!!

பூவன் பழங்களாலும் பலாச் சுளைகளாலும் நிறைத்து கூட சுவைமிகு நெய் அதிரஸங்களையும் நிவேதித்து மணம்மிகு தாம்பூலத்தையும் நிவேதித்து விரும்பும் வேண்டு கோள்களை விண்ணப்பிக்கலாம்

एवं यः कुरुते मर्त्यः सर्वपापैः प्रमुच्यते ॥
प्रोक्तं भाद्रपदे पूजाप्यश्विनीपूजनं श्रृणु ॥ १८८ ॥

ஏவம் ய: குருதே மர்த்ய ஸர்வ பாபை ப்ரமுச்யதே!
ப்ரோக்தம் பாத்ரபதே பூஜாப்ய அச்விநீ பூஜநம் ச்ருனு!!

இவ்வாறு எவர் முருகனுக்கு முறை வழுவாது காலந்தவறாது திரவியங்கள் குறையாது மந்திரங்களை முறைப்படி சொல்வித்து செய்கிறார்களோ அவர்கள்எல்லாப் பாபங்களிலிருந்து விடுபடுவதோடு விரும்பும் நற்பயன்களையும் அடைகிறார்கள். இவ்வாறு ஆவணிப் பௌர்ணமி பூராட சிறப்புப் பூசை கூறப்பட்டது. அடுத்து ஐப்பசி அசுவதி பௌர்ணமி சிறப்பு பூஜை பற்றி கேட்பீராக

इति भाद्रपदमासपूजाविधिः

இது பாத்ர பத மாஸ பூஜா முறையாகும்

॥ आश्वीजमासपूजाविधिः ॥

ஆஸ்விஜ மாஸபூஜா
ஐப்பசி மாத பூஜை

अश्विन्यामाश्विजे मासे प्रीणयेदन्नपूजनात् ।
विशेषस्नपनात्पूज्य भूषयेद्भूषणार्हकैः ॥ १८९ ॥

அச்விந்யாமாச்விஜே மாஸே ப்ரீணயே தன்னபூஜ நாத் !
விசேஷ ஸ்நபநாத் பூஜ்ய பூஷயேத் பூஷணார் ஹகை:!!

ஐப்பசி மாதப் பௌர்ணமியில் அசுவனி நக்ஷத்திரத்தில் அன்னபூஜையினால் அழகன் முருகனை மகிழ்விக்க வேண்டும். சிறப்பு குடமுழுக்காக கலசபூஜை புரிந்து மங்களநீராட்டி உயர்ந்தவகை ஆடை அணிகலன்களால் அலங்கரித்து

लक्ष्मीपुष्पैश्च कुसुमैरुत्पलैः पूजयेद्गुहम् ।
शुद्धान्नं पायसं मुद्गं गुलान्नं कृसरान्नकम् ॥ १९० ॥

லக்ஷ்மீ புஷ்பைச்ச குசுமைருத் பலை: பூஜயேத் குஹம் !
சுத்தான்னம் பாயஸம் முத்கம் குளான்னம்க் ருஸ ரான்னகம் !!

தாமரை மலர்களாலும் நீலோத்பல மலர்களாலும் முருகனைப் பூசித்து சுத்தான்னம், பாசிப்பருப்பு பாயசம், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் (எள்ளன்னம்) எள்பொரித்துப் போட்ட வெல்ல அன்னம்

नीवारान्नं प्रियङ्गवन्नं दध्यन्नं वैणवान्नकम् ।
श्यामाकान्नं च नव्यञ्च मध्वन्नं घृतान्नकम् ॥ १९१ ॥

நீவாரான்னம் ப்ரியம்க்வன்னம் தத்யன்னம் வைணவான்னகம் !
ச்யாமாகான்னஞ்ச நவ்யஞ்ச மத்வன்னஞ்ச க்ருதான்னகம் !!

தினைச் சர்க்கரைப் பொங்கல், தயிரன்னம் மூங்கிலரிசி அன்னம், தேனன்னம், நெய்யன்னம், வரகரிசி அன்னம் போன்ற அன்னங்களும்

माषान्नं चैव मुद्रान्नं गोधूमान्नञ्च षोडश ।
एतैश्चैव द्विरष्टाद्यैः प्रीणयेत्तु षडाननम् ॥ १९२ ॥

மாஷான்னம் சைவ முத்கான்னம் கோதூமான்னஞ்ச ஷோடச !
ஏதைஸ்சைவத் சிரஷ்டாத்யை: ப்ரீணயேத்து ஷடானனம் !!

உளுந்தன்னம், பயிறு கலந்த வெண்பொங்கல், கோதுமை சாதம் போன்ற 16 வகை அன்னங்களால் ஆறுமுகப் பெருமானை ஆனந்திக்கச் செய்ய வேண்டும்.

फल्गुन्यामेव तन्मासे प्रकुर्यात् पार्वतीव्रतम् ।
तत्पूर्वे तु महावल्लीं देवसेनां महामुने ॥ १९३ ॥

பல்குன்யாமேவ தன்மாஸே ப்ரகுர்யாத் பார்வதீ வ்ருதம் !
தத்பூர்வேது மஹாவள்ளீம் தேவஸேநாம் மஹாமுனே !!

கௌசிக மாமுனிவரே ஐப்பசிப் பூரத்தில் ஆடிப்பூரம் போல் பார்வதிவ்ருதம் இயற்றப்பட வேண்டும். அதற்கு முன்னர் வள்ளீ தேவசேனாவ்ருதம் இயற்றப்பட வேண்டும்.

स्वर्णसूत्रेण विधिना कौतुकं बन्धयेन्निशि ।
ततः प्रभाते कन्याभ्यः स्नानाङ्गं दापयेत्सुधीः ॥ १९४ ॥

ஸ்வர்ண சூத்ரேண விதினா கௌதுகம் பந்தயேன் நிசி !
தத: ப்ரபாதே கன்யாப்யஸ் ஸ்நாநாங்கம் தாபயேத் ஸுதீ:!!

தங்கக் கம்பியினால் முறைப்படி கங்கணம் இரவில் கட்டப்பட வேண்டும். பிறகு அதிகாலையில் கன்னிப் பெண்களுக்கு மங்கள நீராடும் அங்கமாக அனைத்தும் வழங்க வேண்டும்.

स्नातेभ्यो वसनं गन्धं दाम चापि विशेषतः ।
नवभागादिभारान्तमुत्तमादित्रयं त्रयम् ॥ १९५ ॥

ஸ்நாதேப்யோ வஸநம் கந்தம் தாமசாபிவிசேஷத:!
நவபாராதி பாராந்த முத்தமாதித்ரயம் த்ரயம் !!

நீராடியக் கன்னிப் பெண்களுக்கு புத்தாடை நறுமணமிகு சந்தனம், மணமிகு மாலைகள், இவைகளெல்லாம் ஒன்பது பார முதல் ஒரு பாரம் வரை உத்தமம், மத்யமம், அதமம் என்ற கணக்கில் வழங்க வேண்டும்.

पात्रस्थान्सांकुरान्मुद्गान् तण्डुलान् सोपदंशकान् ।
दापयित्वा तु शक्तिभ्यां विधिना मन्त्रवित्तमः ॥ १९६ ॥

பாத்ரஸ்தாந் ஸாங்குராந் முத்காந் தண்டுலான் ஸோபதம்சகான்!
தாபயித்வாது சக்திப்யாம் விதிநா மந்த்ரவித்தம் !!

பாத்திரங்களிலுள்ள முளையிட்ட பயிறுகளையும், அரிசிகளையும் உப உணவுகளோடு இரு சக்திகளான வள்ளி தெய்வயானைக்கு முறைப்படி மந்திரமறிந்தவர் அளித்துவிட்டு

मूलदेव्यौ समब्यर्च्य विशेषस्नपनेन च ।
यात्रादेव्यौ कृते स्नाते नवशाटीपरिच्छदे ॥ १९७ ॥

மூலதேவ்யௌ ஸமப்யார்ச்ய விசேஷஸ்நபநேநச!
யாத்ரா தேவ்யௌ க்ருதேஸ்நாதே நவசாடீ பரிச்சதே !!

மூலஸ்தான வள்ளி, தெய்வயானை இருவரையும் நன்குஅர்ச்சித்து சிறப்புத் திருமஞ்சன வரிசையில் உற்சவ மூர்த்தி தேவி இருவருக்கும் மங்கள நீராட்டி புத்தாடை புனைந்து

शुद्धनैवेद्यसन्तुष्टे गन्धस्रग्दामभूषिते ।
पयोघृतधरे कृत्वा दिनशेषं नयेत्क्रमात् ॥ १९८ ॥

சுத்தநைவேத்ய ஸந்துஷ்டே கந்தஸ்ருக்தாம பூஷிதே!
பயோக்ருத தரே க்ருத்வா தினசேஷந்நயேது க்ருமாத் !!

சுத்தமான மணமிகு சந்தனமிட்டு குங்குமிட்டு மணமிகு மலர்மாலைகள் சூட்டி அர்ச்சித்து சுத்தான்னம், பால், தயிர் இவைகளுடன் தினக்கட்டளை நிவேதனமும் நிவேதித்து

कृत्वा च पेषणीपूजां याम्यायां पावकेपि वा ।
तत्रामलकपिष्टेव रजन्याऽपि सुगन्धिना ॥ १९९ ॥

க்ருத்வாசபேஷணீ பூஜாம் யாம்யாயாம் பாவகேபிவா!
தத்ராமலக பிஷ்டேந ரஜன்யாபி சுகந்தினா !!

தெற்கிலோ அல்லது தென்கிழக்கிலோ கருங்கல்லினாலான தான்யங்களை மாவாக்கும் கையினால் அரைக்கும் எந்திரத்துக்கும் முறைப்படி பூஜை செய்யுமுன் அங்கு நெல்லிவற்றல் தூள் அரிசிமாவு, மஞ்சள் தூள் முதலான வாசனை திரவியங்களால்

संस्थाप्य पेषणीं कृत्वा सप्तधान्यकृताश्रयाम् ।
गन्धैरालिप्य वस्त्रेण नवेनाच्छद्यसासनाम् ॥ २०० ॥

ஸம்ஸ்நாப்ய பேஷணீம் க்ருத்வா சப்த தான்யக்ருதாஸ்ரயாம்!
கந்தை ராலிப்ய வஸ்த்ரேண நவேநாச்சாத்ய ஸாஸநாம் !!

நீராட்டி சந்தனம் பூசி, புத்தாடை புனைந்து ஏழு தான்யங்களையும் பூசித்து புத்தாடையால் மூடி

ध्यात्वाथ पेषणीं गौरीं समभ्यर्च्य यथाविधि ।
नैवेद्यं सोपदंशञ्च दत्वा स्त्रीभिः प्रसादितम् ॥ २०१ ॥

த்யாத்வாத பேஷணீம் கௌரீம் ஸமப்யார்ச்ய யதா விதி!
நைவேத்யம் ஸோபதம் சஞ்ச தத்வாஸ்த்ரீபி:ச ப்ரஸாதிதம் !!

கருங்கல் எந்திரத்தில் முருகனின் தாய் கௌரீயையும் முறைப்படி ஆவாஹித்து பூஜித்து உப உணவுகளோடு உணவு நிவேதித்து மூவராலும் ஆசிபெற்று

ग्रामप्रदक्षिणं कृत्वा देवदेव्यौ च भक्तितः ।
सर्वालङ्कारसंयुक्तं पाददीपैः समन्वितम् ॥ २०२ ॥

க்ராம ப்ரதக்ஷிணம் க்ருத்வா தேவதேவ்யௌ ச பக்தித:!
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் பாததீபை ஸ்ஸமந்விதம் !!

முருகப் பெருமானை வள்ளி நாச்சியாரையும் தெய்வயானை நாச்சியாரையும் அலங்காரத்தோடு அகங்குழைந்து வீதியுலா வலம் செய்வித்து தீவெட்டி பந்தம் இவைகளோடு

तत्काले दापयेन्मुद्गांकुरं लवणसंयुतम् ।
वीथ्यां वीथ्यां जनेभ्यश्च व्यंजनं तण्डुलान्वितम् ॥ २०३ ॥

தத்காலே தாபயேந்முத்காங்குரம் லவண ஸம்யுதம்!
வீத்யாம் வீத்யாம் ஜநேப்யச்ச வ்யஞ்ஜநம் தண்டுலாந்விதம் !!

அச்சமயம் (வீதியுலா நேரத்தில்) முளைப்பயிறு, உப்பு சரியாக கலந்ததை வீதிக்கு வீதி மக்களுக்கு வெல்லம், தேங்காய், கரும்பு கலந்த அரிசியையும் வழங்க வேண்டும்.

आलयं तु प्रविश्याथ परिवेषक्रमान्नयेत् ।
शिष्योपाध्यायसंयुक्तान् सिद्धान्ताध्ययनं जपेत् ॥ २०४ ॥

ஆலயந்து ப்ரவிச்யாத பரிவேஷ க்ரமாந்நயேத்!
சிஷ்யோபாத்யாய ஸம்யுக்தான் ஸித்தாந்தாத்ய யநந்ஜபேத் !!

ஆலயம் திரும்பி வந்தவுடன் பரிவேஷ மரபுப்படி ஆசிரியர்களும் சீடர்களும் சிவஞான போதம் மூலமும் உரையும் படிக்க வேண்டும்.

ऋग्यजुः सामगाथर्वा वेदांगं च पृथक्पृथक् ।
शिवधर्मपुराणानि सेतिहासानि तत्समम् ॥ २०५ ॥

ருக்யஜு ஃஸ் ஸாமகாதர்வா வேதாங்கஞ்ச ப்ரதக் ப்ரதக்!
சிவதர்ம புராணாநி ஸேதிஹாஸாநி தத்ஸமம் !!

ருக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம், வேதத்துக்கு அங்கமானவை களையும் தனித்தனியேயும் சிவபுண்ணிய தர்ம புராணங்களையும் இதிஹாஸம் முதலிய வைகளையும்

काव्यञ्च शब्दशास्त्रञ्च ज्योतिश्शास्त्रं ततः परम् ।
आयुर्वेदं द्राविडञ्च श्रावयेत्प्रीणयेद्गुहम् ॥ २०६ ॥

காவ்யஞ்ச சப்த சாஸ்த்ரஞ்ச ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரம் தத: பரம்!
ஆயுர்வேதம் த்ராவிடஞ்ச ச்ராவயேத் ப்ரீணயேத் குஹம் !!

இலக்கியம், சப்தம், சாஸ்த்ரம், ஜோதிஷம், இவைகளை பிறகும் ஆயுர்வேதம் தென்மொழித் தமிழ் இவைகளை முருகப் பெருமான் மகிழும் வண்ணம் கேட்கும்படி நன்கு சொல்லச்சொல்ல வேண்டும்.

ब्राह्मणान्भोजयेत्तत्र वैदिकान् शिवभक्तकान् ।
कन्याश्च ब्रह्मचारींश्च दीनानाथांश्च भोजयेत् ॥ २०७ ॥

ப்ராம்மணாந் போஜயேத்தத்ர வைதிகாந் சிவபக்தகாத்!
கந்யாச்ச ப்ரம்மசாரீம்ச்ச தீநாநாதாம்ச்ச போஜயேத் !!

அந்தணர்களையும், மற்றும் வேத விற்பன்னர் களையும், சிவபக்தர்களையும், சாப்பிடச் செய்து கன்னிப் பெண்கள் மணமாகாத பிரும்மச்சாரிகள் ஏழைகள், குருடர்கள், அனைவரையும் சாப்பிடச் செய்ய வேண்டும்.

विधानमेतत्कर्तव्यं देव्या: सन्तुष्टकारणम् ।
एवं य: कुरुते मर्त्य: सर्वान्कामानवाप्नुयात् ।
अश्विनीपूजनं प्रोक्तं कृत्तिकापूजनं श्रृणु ॥ २०८ ॥

விதாநமேதத் கர்தவ்யம் தேவ்யாஸ் ஸந்துஷ்ட காரணம்!
ஏவம் ய: குருதே மர்த்ய ஸ்ஸர்வாந் காமாந் வாப்நுயாத்!!
அச்வநீ பூஜநம் ப்ரோக்தம் க்ருத்திகா பூஜநம் ச்ருணு!!

முருகப் பெருமான் முழுதும் சந்தோஷமடைய இம்முறைப்படி செய்வது சாலச் சிறந்தது. இவ்வாறு எவர் செய்கிறாரோ அவர் எல்லா விருப்பங்களையும் இனிதே எய்துவர். மாமுனிவரே அசுவனி பூஜை இவ்வாறு சொல்லப்பட்டது. கார்த்திகை பூஜை முறையைக் கேட்பீராக

इत्याश्विजमासपूजाविधि:

இது ஆஸ்வீஜமாஸ் பூஜா விதியாகும்.

॥ कार्तिकमासपूजाविधि: ॥

கார்த்திக மாஸ பூஜா
கார்த்திகைமாத பூஜை முறை

ब्राह्मणा यजुसूक्तैश्च भूभुजा: कुक्कुटैरपि ।
वैश्या: कर्पूरखण्डैश्च शूद्राद्या: फलपुष्पकै: ।
कार्तिक्यां कृत्तिकायोगे य: कुर्यात्स्वामिदर्शनम् ॥ २०९॥

ப்ராம்மணாயஜுஸூக்தைச்ச பூபுஜா: குக்குடைரபி!
வைச்யா: கற்பூர கண்டைச்ச சூத்ராத்யா: பல புஷ்பகை:!!
கார்திக்யாம் க்ருத்தியோகே ய: குர்யாத் ஸ்வாமி தர்சநம்!!!

ஸ்வாமி என்ற பெயருக்கு எல்லாம் தமக்கே உரியர் என்பது பொருள் பரமசிவனையும் தமக்கே உரிய தாதையாகவும் சீடனாகவும் உரியதால் முருகனுக்கு ஸ்வாமி - தகப்பன் ஸ்வாமி - ஸ்கந்த சுவாமி - இவ்வளவு சிறப்பு பொருந்திய முருகப் பெருமானை கார்த்திகை மாதக்கார்த்திகை நக்ஷத்திரத்தில் பிராம்மணர்கள் யஜுர் வேத மந்திரங்களாலும், அரசர்கள் சேவல் முதலானவைகளோடும் வணிகச் செட்டியார்கள் தேங்காய் முதலியவைகளாலும், சூத்திரர் முதலானவர்கள் பழங்கள், புஷ்பங்கள் முதலியவைகளாலும் சேவிக்க

सप्तजन्मभवेद्विप्रो धनाढ्यो वेदपारग: ।
कार्तिक्यां कृत्तिकापर्वयोगे वृषलग्नके ॥ २१० ॥

ஸப்த ஜந்ம பவேத்விப்ரோ தநாட்யோ வேதபாரக:!
கார்திக்யாம் க்ருத்திகாபர்வ யோகே வ்ருஷப லக்நகே!!

ஏழு ஜன்மங்கள் உத்தமமான பிராம்மணர்களாகவும் செல்வந்தர்களாகவும் வேதம் முழுதும் ஓதுபவர்களாகவும் ஆவார்கள். கார்த்திகை மாதம் பௌர்ணமியோடு கூடிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் நலந்தரும் ரிஷப லக்னத்தில்

श्रद्धया कार्तिकेयाय य: कुर्याद्घृतदीपिकाम् ।
तस्य पुण्यमसंख्येयं विश्वामित्र महामुने ॥ २११ ॥

ஸ்ரத்தயா கார்த்திகேயாய ய: குர்யாத் க்ருத தீபிகாம்!
தஸ்யா: புண்ய மஸங்க்யேயம் விஸ்வாமித்ர மஹா முநே!!

விசுவாமித்திர முனிவரே! அன்போடும் ஆசாரத்தோடும் முருகனுக்காக எவர் நெய் தீபம் ஏற்றுகிறாரோ அவருக்கு எண்ணிலடங்கா புண்யமானது எனக் கருதப்படுகிறது

कृत्तिकापर्वयुक्तेनालाभे पर्वणि सम्मतम् ।
रोहिण्यां वा भरण्यां वा दीपं पर्वणि कारयेत् ॥ २१२ ॥

க்ருத்திகா பர்வ யுக்தேநா லாபே: பர்வணி ஸம்மதம்!
ரோஹிண்யாம் வாபரண்யாம் வா தீபம் பர்வணி காரயேத்!!

கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று கார்த்திகை நக்ஷத்திரம் சேர்ந்தோ அல்லது ரோகிணி பரணியோடு சேர்ந்து வந்தாலும் பரணி, கார்த்திகை ரோகிணி மூன்று நாட்களிலும் தீபமேற்றி வழிபடலாம். பௌர்ணமியில் வழிபாடு சிறப்பு

अपर्वणिकृतं दीपं राजराष्ट्र विनश्यति ।
पर्वद्वये तु सम्प्राप्ते पूर्वं त्यक्त्वा परं ग्रहेत् ॥ २१३ ॥

அபர்வணி க்ருதம் தீபம் ராஜராஷ்ட்ரம் விநஸ்யதி!
பர்வத்வயேது ஸம்ப்ராப்தே பூர்வந் யக்த்வா பரம் க்ருஹேத்!!

பௌர்ணமி சேராத கார்த்திகை தீபம் அரசர்களுக்கு அழிவைத் தரும். இரு பௌர்ணமி ஓரே மாதத்தில் வருமாயின் முன் பௌர்ணமியை விட்டுவிட்டு பின் பௌர்ணமியையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

पूर्णायां खण्डितायां तु द्वयोर्नाड्याधिकं ग्रहेत् ।
रवेरस्तमनात्पूर्वे पादयामाद्विधानत: ॥ २१४ ॥

பூர்ணாயாம் கண்டிதாயாந்து த்வயோர்நாட்யாதிகம் க்ருஹேத்!
ரவேரஸ்த மநாத்பூர்வே பாதயாமாத்விதாநத:!!

பௌர்ணமி இருநாளில் பிரிந்து வருமாயின் இரண்டு நாளில் என்று அதிக நாழிகைகள் சூரிய அஸ்தமனத்திற்கு முன் நான்காவது யாமத்தில் சம்பந்தத்தோடு இரவில் வியாபித்துள்ள நாளைச் சரியெனக் கொள்ள வேண்டும்.

कालस्तदूर्ध्वे यामार्धपर्यन्तं दीपकर्मणि ।
नक्षत्रमृद्ध्या संस्पृष्टे तत्कालान्ते समाचरेत् ॥ २१५ ॥

காலஸ்த தூர்த்வே யாமார்த்த பர்யந்தந்தீப கர்மணி!
நக்ஷத்ர வ்ருத்யா ஸம்ஸ்ப்ருஷ்டே தத்காலாந்தே ஸமாசரேத்!!

அதற்கு மேல் இரவில் இரண்டாவது யாமம் முடிய பௌர்ணமி இருக்கும் நாள் கார்த்திகை தீபமேற்ற ஏற்ற நாள். அதிக நேரமிருக்கும் பௌர்ணமி நாளிலே தீபமேற்றத் தேர்ந்தெடுக்கவும்

यल्लग्ने विषसंस्पृष्टे तल्लग्नं परिवर्जयेत् ।
विषस्य परपूर्वे तु घटिकाद्वयत: शुभम् ॥ २१६ ॥

யல்லக்நே விஷஸம்ஸ் ப்ருஷ்டே தல்லக்நம் பரிவர்ஜயேத்!
விஷஸ்ய பர பூர்வேது கடிகாத்வயத ஸ்சுபம்!!

எந்த லக்னத்தில் குறை சேருமோ அதை விட்டு விடவும். அதற்கடுத்த அல்லது முன்னர் 2 நாழிக்கு முன்னரோ அல்லது பின்னரோ உள்ள சுபமான லக்னத்தை தீபமேற்ற தேர்ந்தெடுக்கவும்

कर्तुरष्टमराश्यादिलाक्षदोषनिरूपणम् ।
विष्टिवैनाशिकर्क्षादिप्रेक्षणं नात्र सम्मतम् ॥ २१७ ॥

கர்துரஷ்டம ராஸ்யாதி லக்ஷதோஷ நிரூபணம்!
விஷ்டிவை நாசகர்க்ஷாதி ப்ரோக்ஷணந்நாத்ர ஸம்மதம்!!

தீபமேற்ற இருக்கும் எஜமானருக்கு அஷ்டம ராசியில் சந்திராஷ்டம தோஷம் போல் தோஷம் அநேகமிருப்பதால் விஷம் வைநாசிகம் தரும் நக்ஷத்திரம் இல்லாமல் இருக்க வேண்டும். புரோக்ஷணம் நல்ல வேளையில் செய்வதே நல்லது.

पर्वयुक्तमयुक्तं वा नक्ष::ं तु प्रधानकम् ।
एवं परीक्ष्य मतिमान् कृत्तिकादीपमाचरेत् ॥ २१८ ॥

பர்வயுக்தம யுக்தம் வா நக்ஷத்ரந்து ப்ரதாநகம்!
ஏவம் பரீக்ஷ்ய மதிமாந் க்ருத்திகா தீபமாசரேத்!!

பௌர்ணமியோடு இணைந்தாலும் இணையா விட்டாலும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரம் தான் முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும். மதிமிகுஅர்ச்சகர் இவ்வாறு பரிசோதித்து கிருத்திகை தீபத்தை நடத்த வேண்டும்.

पूर्वेद्युः कौतुकं बध्वा स्नाप्यचोत्सवबेरकम् ।
मङ्गलांकुरमन्त्रैश्च कुर्याद्विध्युक्तमार्गतः ॥ २१९ ॥

பூர்வேத்யு: கௌதுகம் பத்வா ஸ்நாப்ய சோத்ஸவ பேரகம்!
மங்களாங்குர மந்த்ரைஸ்ச குர்யாத் வித்யுக்த மார்கத:!!

உற்வசவருக்கு நீராட்டி முதல் நாள் கங்கணங்கட்டுவதற்கு முன் முளைப்பாலை யிடுவதை முறைப்படி செய்து மங்களாங்குர மந்திரங்களான ஓஷதி சூக்தம் எனும் மந்திரங்களோடு செய்யவும்

दीपारोहणकालस्य पूर्वे स्वामिनमर्चयेत् ।
मूलबेरमलंकृत्य पूषयेद्भूषणार्हकैः ॥ २२० ॥

தீபாரோஹண காலஸ்ய பூர்வேஸ்வாமிந மார்ச்சயேத்!
மூலபேர மலங்க்ருத்ய பூஷயேத் பூஷணார் ஹகை:!!

தீபமேற்றுவதற்கு முன்பு ஸ்ரீ முருகப் பெருமானை அர்ச்சிக்க வேண்டும். மூலஸ்தான முருகனை கருவறை கந்தசுவாமியை உரிய உயரிய ஆபரணங்களால் அலங்கரிக்க வேண்டும்.

नीलोत्पलैश्च कमलैः पट्टिकैः पुष्पकैर्यजेत् ।
प्रभूतहविषं दत्वा ताम्बूलं दापयेत्ततः ॥ २२१ ॥

நீலோத்பலைஸ்ச கமலை: பட்டிகை: புஷ்பகைர்யஜேத்!
ப்ரபூத ஹவிஷந்தத்வா தாம்பூலந்தா பயேத்தத:!!

நீலோத்பல மலர்களாலும், தாமரை மலர்களாலும் தங்கப்பட்டி, மஞ்சள்பட்டி போன்ற மலர்களால் முருகனைப் பூசித்து அதிக அளவில் மிகுந்த சுவையோடு முருகனுக்கு முன் அவ்வுணவைப் படைத்து தாம்பூலமும் தரமாக தர வேண்டும்.

आलये मण्डपे वाऽपि यागमण्डप एव च ।
शिवाग्निं तत्र संपूज्य गुहं सांगं समर्चयेत् ॥ २२२ ॥

ஆலயே மண்டபே வாபியாக மண்டப ஏவச!
சிவாக்நிம் தத்ரஸம்பூஜ்ய குஹம் சாங்கம் சமர்ச்சயேத்!!

ஆலயத்திலோ மண்டபத்திலோ (யாகமண்டபம்) வேள்விச் சாலையிலோ சிவாக்னியை ஆராதித்து அதில் ஸ்ரீ முருகப் பெருமானை ஆஸன ஆவரணங்களுடன் பூஜித்து

समिदाज्येन चरुणा दीपैः कार्पासबीजकैः ।
क्षीरेण शतमर्धं वा तदर्धं वा हुनेत्सधीः ॥ २२३ ॥

சமிதாஜ்யேந சருணாதீபை: கார்பாஸ பீஜகை:!
க்ஷீரேண சதமர்தம்வா ததர்தம் வாஹுநேத் சுதீ:!!

மதிமிகு அர்ச்சகரானவர் ஸ்ரீமுருகப் பெருமானுக்கு சமித்துக்கள் அன்னம், நெய், பால், பருத்தி விதைகள், இவைகளால் தனித்தனியே நூறு அல்லது ஐம்பது அல்லது இருபத்தைந்து முறையாவது ஹோமம் செயற்பாலது

स्कन्तमूलेन मन्त्रेण दशांशंजुहुयात्ततः ।
स्कन्दसूत्रं मन्त्रषट्कैर्द्रव्यषट्कैर्हुनेत्क्रमात् ॥ २२४ ॥

ஸ்கந்த மூலேண மந்த்ரேண தசாம்சாந் ஜுஹுயாத்தத:!
ஸ்கந்த சூக்தம் மந்த்ரஷட்கைர் த்ரவ்ய ஷட்கைர் ஹுநேது க்ரமாத்!!

ஸ்கந்த மூலமெனும் ஷடக்ஷர மந்திரத்தாலும், அதில் பத்தில் ஓருபங்கு ஹோமம் செய்ய வேண்டும். ஸ்கந்த சூக்தம் ஷடக்ஷரத்தின் ஆறுபிரயோக முறை மந்திரங்களாலும் ஆறுமுறைப்படி ஆறுதிரவியங் களால் செய்ய வேண்டும்.

कुमारमातेति मन्त्रेण प्रतिद्रव्यं हुनेत्ततः ।
पूर्णाहुतिं ततो हुत्वा शिवाग्निं च विसर्जयेत् ॥ २२५ ॥

குமாரமேதி மந்த்ரேண ப்ரதித்ரவ்யம் ஹுநேத்தத:!
பூர்ணாஹுதிம் ததோஹுத்வா சிவாக்நிஞ்ச விஸர்ஜயேத்!!

அயம்குமாரோ என்ற வேத மந்திரத்தாலும் மாதே குமாரம் என்ற யஜுர் வேத மந்திரத்தினாலும் ஒவ்வொரு திரவியத்தையும் ஹோமம் செய்து பூர்ணாஹுதி செய்து சிவாக்னியை முறைப்படி பராங்முகார்க்யம் கொடுத்து நிறைவு செய்ய வேண்டும்.

नारिकेलशमिस्तालपनसासनखादिराः
चम्पको देवदारुश्च मधुकः सालवृक्षकः ॥ २२६ ॥

நாளிகேர சமிஸ்தால பநசாஸந காதிரா:!
சம்பகோ தேவதாருஸ்ச மதுகஸ்ஸாலவ்ருக்ஷகா:!!

அந்த அக்னி (சிவாக்னியிலிருந்து) கிருத்திகா தீபமேற்ற வேண்டும். தென்னைமரம் மட்டை, பனைமரம் மட்டை, பலாமரம், கருங்காலி மரங்கள் மட்டைகள், கிளைகள் (இவைகளால்)

तदग्नौ दीपमारोप्य कृत्तिकादीपमाचरेत् ।
दीपदण्डद्रुमाः प्रोक्ताः कारयेल्लक्षणान्वितम् ॥ २२७ ॥

ததக்நௌ தீபமாரோப்ய க்ருத்திகாதீப மாசரேத்!
தீப தண்டத்ருமா: ப்ரோக்தா: காரயேல் லக்ஷணாந்விதம்!!

செண்பக மரம், தேக்கு மரம், தேவதாரு மரம், இலுப்பை மரம் இவைகளால் தீப தண்டத்துக்கு பயன்படுத்தக் கூடிய மரங்களால்அழகாகச் செய்யப்பட வேண்டும்.

अलाभे तु बहिः स्थाने वृक्षयोग्यद्रुमं ग्रहेत् ।
ध्वजदण्डोक्तमार्गेण दीपदण्डं प्रकल्पयेत् ॥ २२८ ॥

அலாபேது பஹிஸ்தாநே வ்ருக்ஷயோக்ய த்ருமம் க்ரஹேத்!
த்வஜதண்டோக்த மார்கேண தீபதண்டம் ப்ரகல்பயேத்!!

கிடைக்காத நிலையில் கொடி மரத்துக்குக் கூறப்பட்ட இலக்கண வரம்பு வண்ணம் எடுத்துக் கொள்ளத்தக்க மரங்களுள் ஒன்னால் தீப தண்டம் செய்ய வேண்டும்.

त्रितालं स्तम्भनाहं स्यादृजुं शुद्धसमन्वितम् ।
नवकीलं समारभ्य व्योमकीलविवर्धनात् ॥ २२९ ॥

த்ரிகாலம் ஸ்தம்ப நாஹம்ஸ்யாத்ருஜும் சுத்த மந்நிதம்!
நவகீலம் சமாரப்ய வ்யோமகீல விவர்த்தநாத்!!

நேராகவும், சுத்தமானதாகவும், கீழ்முதல் மேல் வரை ஒன்பது நிலைப்படிகள் மூன்றுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதாகவும் இரும்பல்லாத இதர உலோக ஆணிகள் உபயோகிக்கத் தக்கது

सप्तविंशतिकीलान्तं रोहणार्थं सुयोजयेत् ।
द्वादशांगुलकारस्य व्योमांगुलविवर्धनात् ॥ २३० ॥

சப்த விம்சதி கீலாந்தம் ரோஹணார்த்தம் சுயோஜயேத்!
த்வாதசாங்குல காரஸ்ய வ்யோமாங்குல விவர்த்தநாத்!!

இருபத்தேழு முளை ஆணிவரை முழுவதும் செம்பினாற் செயற்பாலது. இவையாவும் மேலே ஏறி தீபம் வைக்க வசதியாக இருப்பதற்கு அமைக்கப்பட வேண்டும். இவைகளுள் (ரோகிணி முதல் துவங்கி 27-வது நக்ஷத்திரமாக 27 முனை ஆணியில் பூஜிக்க வேண்டும். மேல் கார்த்திகை பூஜிக்கப்பட வேண்டும்)

द्वाविंशदंगुलान्तं स्याद्दण्डात्कीलंविनिर्गत: ।
द्व्यंगुलात्पादवृद्ध्यादि षडंगुलसमावधि ॥ २३१ ॥

த்வாவிம் சதங்குலாந்தம் ஸ்யாத் தண்டாத் கீலம் வினிர்கத:!
த்வ்யங்குலாத் பாத வ்ருத்யாதி ஷடங்குல ஸமாவதி!!

22 அங்குல நீளம் வரை 2 அங்குல கனத்தில் கீல் முனைகள் அமைக்க வேண்டும். (அதாவது மரத்தில் உள் செலுத்தப்பட்டதும் வெளியில் கால் வைத்து ஏறி செல்ல வசதியாக அவைகள் அமைக்கப்பட வேண்டும்)

विस्तारं तद्घनं ज्ञेयं निर्गमादर्धमात्रकम् ।
दण्डप्रोक्तञ्च कीलानां सुदृढं कल्पयेद्बुध: ॥ २३२ ॥

விஸ்தாரம் தத்கணம் ஞேயம் நிர்கமாதர்த்த மாத்ரகம்!
தண்டப்ரோக்தஞ்ச கீலானாம் ஸுத்ருடம் கல்பயேத் புத:!!

நீளம், கனம் இரண்டும் தாங்கும் அளவு தரமாக இருக்கும் வண்ணம் அறிவாளியான ஆச்சாரியைக் கொண்டு ஆசார்யர் முன்னரே செய்வித்து வைக்கச் சொல்ல வேண்டும்.

लोहचक्रं तदूर्ध्वे तु व्योममूलं त्रिपादवत् ।
सुदृढं स्थापयेत्पात्रं धारणायां महामुने ॥ २३३ ॥

லோஹ சக்ரம் ததூர்த்வேது வ்யோம மூலம் த்ரிபாதவத்!
சுத்ருடம் ஸ்தாபயேத் பாத்ரம் தாரணாயாம் மஹாமுனே!!

மேலே வட்ட வடிவமாய் முக்காலி வடிவில் கொப்பரை போன்ற பாத்திரம் வைக்குமாப்போல திடமாக அமைக்கச் சொல்ல வேண்டும் முனிவரே!

दारूवद्भवानि चक्राणि प्रतिकूलं सुयोजयेत् ।
न्यस्तव्याश्चक्रवद्दीपं स्तम्भमूलात्पृथक्पृथक् ॥ २३४ ॥

தாருத்பவானி சக்ராணி ப்ரதிகூலம் சுயோஜயேத்!
ந்யஸ்தவ்யாஸ்சக்ர வத்தீபம் ஸ்தம்பமூலாத் ப்ரதக் ப்ரதக்!!

மரத்தால் இல்லாமல் தீபஸ்தம்பம் அடி முதல் முடி வரை செம்பால் கீல் முனைகள் உள்ளும் புறமும் சரிபங்காய் இருக்கும்படி அமைத்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் மரத்தாலானது ஆபத்தானது

दीपिका प्रतिचक्रञ्च रसद्वादशषोडश ।
सहस्रदीपयुक्तं वा शतदीपयुतं तु वा ॥ २३५ ॥

தீபிகா ப்ரதி சக்ரஞ்ச ரஸத்ராதச ஷோடச!
ஸஹஸ்ர தீப யுக்தம் வாசத தீபயுதந்துவா!!

மேலே வைக்கப்படும் செம்பு பெரிய தட்டில் ஆறுபன்னிரண்டு 16 தளத்தட்டுகளாக வைக்கலாம். ஏனெனில் 1008 தீபங்களோ குறைந்த பாரம் 108 தீபங்களோ, வைக்க ஏதுவாக அமைக்கலம்

स्थापयेद्दीपदण्डांश्च मालाकारेण वास्तुन: ।
तोरणाकारतो वाऽपि वृत्ताकारेण वाथवा ॥ २३६ ॥

ஸ்தாபயேத்தீப தண்டாம்ஸ்ச மாலா காரேண வாஸ்துந:!
தோரணாகாரதோ வாபி வ்ருத்தா காரேண வாதவா!!

வட்ட வடிவமாகவோ, மாலைகள் போல் பல மடிப்புக்களோடோ தோரணங்கள் போல் படிப்படியாகவோ வஸ்துலக்ஷணத்துக்குட்பட்டு செய்விக்க வேண்டும்.

प्रासादस्यैव परितश्चतुर्दिक्षु विशेषत: ।
कूटाकाराणि कृत्वाथ चतुर्गात्रयुतानि च ॥ २३७ ॥

ப்ரஸாதஸ்யைவ பரிதஸ்சதுர்திக்ஷு விசேஷத:!
கூடாகாராணி க்ருத்வாத சதுர்காத்ர யுதானிச!!

ஆலயத்துக்கு நாற்புறமும் சிறப்பாக கூடாரம் போல் நான்கு அளவான சொக்கல் பனை கட்டி விட்டு

कूटवन्धेषु सर्वत्र पात्राणि न्यस्य कारयेत् ।
पुण्याहप्रोक्षणं कृत्वा दण्डं पूर्वेऽपि वासयेत् ॥ २३८ ॥

கூட பந்தேஷு ஸர்வத்ரபாத்ராணின்யஸ்ய காரயேத்!
புண்யாஹ - ப்ரோக்ஷணம் க்ருத்வா தண்டம் பூர்வேபி வாஸயேத்!!

நான்கிலும் தீபபாத்ரம் அமைத்து முருகனுக்கு முன்பு தீபஸ்தம்பம் நாட்டி புண்யாக வாசன நீர்த்தெளித்து பிறகு தீபம் வைக்க வேண்டும்.

बलिपीठाग्रके वाऽपि ध्वजदण्डाग्रकेऽपि वा ।
यथ दृढतरं स्थाप्य पूरयेच्छुद्धवालुकैः ॥ २३९ ॥

பலி பீடாக்ரகேவாபி த்வஜ தண்டாக்ரகேபிவா!
யதா த்ருடதரம் ஸதாப்ய பூரயேச்சுத்த வாலுகை:!!

பலிபீடத்திற்கு முன்போ கொடிமரத்துக்கு முன்பாகவோ ஸ்தம்பத்தை ஆழ குழிவெட்டி நிலை நிறுத்தி மணல்களால் நிரப்பி ஆடாதவாறு அமைக்க வேண்டும்.

वेदिमूले प्रकर्तव्यं वृत्तं वा चतुरश्रकम् ।
त्रिहस्तमात्रविस्तीर्णमेकहस्तोन्नता शुभा ॥ २४० ॥

வேதி மூலே ப்ரகர்தவ்யம் வ்ருத்தம்வா சதுரஸ்ரகம்!
த்ரிஹஸ்தமாத்ர விஸ்தீர்ணமேக ஹஸ்தோன்னதா சுபா!!

ஸ்தம்பத்தின் அடியிலே நாற்புறமும் மூன்று முழ அளவு (4½ அடி) (சுற்றளவு உயரம்) அல்லது 1½ அடி வட்ட வடிவமாகவோ, நாற்கரமாகவோ செய்வது நலம்

गोमयालेपनं कृत्वा शालिपिष्टैर्विचित्रयेत् ।
नवेन युग्मवस्त्रेण दण्डमूलं प्रवेष्टयेत् ॥ २४१ ॥

கோமயா லேபனங்க்ருத்வா சாலிபிஷ்டைர் விசித்ரயேத்!
நவேண யுக்ம வஸ்த்ரேண தண்டமூலம் ப்ரவேஷ்டயேத்!!

தீபத்தண்டின் கீழ் பசுஞ்சாணத்தால் மெழுகி நெல் அரிசி மாவினால் அலங்காரமாக கோலம் போட்டு புத்தாடையால் தீப தண்டின் அடியில் கட்டி மேல் வஸ்த்ரம் அணிவிக்க வேண்டும்.

पालिकाद्यैरलंकृत्य पुण्याहं वाचयेद्बुधः ।
अस्त्रेण प्रोक्ष्य तद्दण्डं प्रणवेन तु पूजयेत् ॥ २४२ ॥

பாலிகாத்யை ரலங்க்ருத்ய புண்யாஹம் வாசயேத் புத:!
அஸ்த்ரேண ப்ரோக்ஷ்ய தத்தண்டம் ப்ரணவேனது பூஜயேத்!!

நெய்தீப அகல்களால் அலங்கரிக்கப்பட்டு புண்யாக நீர் அஸ்த்ரமந்தரத்துடன் தெளித்து அத்தீபதண்டத்தை ஓங்கார பிரணவ வடிவாய் நினைத்து பூசித்து

स्तम्भयानं यथा तद्वद्दीपं कुर्यान्मनोरमम् ।
कार्पासबीजैर्मतिमान्निच्छिद्रेणैव साघनम् ॥ २४३ ॥

ஸ்தம்பமாநம் யதாதத்வ த்தீபங்குர்யாந் மநோரமம்!
கார்பாஸ பீஜைர் மதிமாந் நிச்சித்ரேணைவ சாதநம்!!

தீபத்தண்டத்தின் உயரத்துக் கொப்ப உயர்ந்த அளவில் எண்ணிக்கையினால் பருத்தித் திரியினால் பருத்தித் துணியினால்

पोट्टलीकं ततो बध्वा घृतमात्रे निधाय च ।
अष्टप्रस्थं घृतेनैव तदर्धेनैव पूरयेत् ॥ २४४ ॥

பொட்டளீ கந்ததோ பத்வா க்ருத பாத்ரே நிதாயச!
அஷ்டப்ரஸ்தம் க்ருதே நைவ ததர்தேநைவ பூரயேத்!!

உள்ளே பொறி எள் வைத்து பொட்டலங்கட்டி நெய் பாத்திரத்தின் நடுவே நிமிர்ந்து நிற்குமாப் போல துணித்திரியை திரித்து எட்டு படி நெய்ஊற்றி அல்லது நாலுபடி நெய்யாலாவது கொப்பரையை நிரப்ப வேண்டும்.

सौवर्णं राजतं ताम्रं मृण्मयं वाऽथ पात्रकम् ।
देवाग्रे मण्डलं कृत्वा शालिपिष्टैर्विचित्रयेत् ॥ २४५ ॥

ஸௌவர்ணம் ரஜதம் தாம்ரம் ம்ருண்மயம் வாத பாத்ரகம்!
தேவாக்ரே மண்டலம் க்ருத்வா சாலி பிஷ்டைர் விசித்ரயேத்!!

தங்கம், வெள்ளி, தாமிரம் மண்ணாலான பாத்திரத்தில் முருகனுக்கு முன் அறுகோண மண்டலத்தினால் மாக்கோலமியற்றி அழகுற

शालिभिर्विकिरेत्तत्र दर्भैश्चैव परिस्तरेत् ।
तन्मध्ये विन्यसेत्पात्रं हृदयेन तु मन्त्रतः ॥ २४६ ॥

சாலி பிர்விகிரேத் தத்ர தர்பைஸ்சைவ பரிஸ்தரேத்!
தந்மத்யே விந்யஸேத் பாத்ரம் ஹ்ருதயேநது மந்த்ரத:!!

நெல்பரப்பி அதன் தர்பைகளை வடக்கு நுனியாக பரப்பி அதன்மேல் இருதய மந்திரத்தால் தீபக்கொப்பரை பாத்திரத்தை வைத்து

दीपयेत्प्राङ्मुखो मन्त्री स्कन्दमूलमनुस्मरन् ।
एँवं त्रिधा पञ्चधा वा शरावे पात्रमाचरेत् ॥ २४७ ॥

தீபயேத் ப்ராங்முகோ மந்த்ரீ ஸ்கந்த மூல மநுஸ்மரந்!
ஏவம் த்ரிதா பஞ்சதாவா சராவே பாத்ரே மாசரேத்!!

கிழக்கு முகமாக முருகனின் மூலத்தை மனத்தில் நிறுத்தி தீபத்தை ஏற்றி மூன்று ஐந்து அகல் ஏற்றவும்.

ब्रह्मसूक्तैश्च मन्त्रैर्वा गन्धपुष्पादिनार्चयेत् ।
धूपदीपं ततो दत्वा हृदयेन तु मन्त्रतः ॥ २४८ ॥

ப்ரம்மதூக்த்ரைஸ்ச மந்த்ரைர்வா கந்த புஷ்பாதிநார்ச்சயேத்!
தூபதீபம் ததோதத்வா ஹ்ருதயேநது மந்த்ரத:!!

பிரும்மசூக்த மந்திரத்தால் மணமிகு மலர்களால் அர்ச்சித்து இருதய மந்திரத்தால் தூபதீபங் காட்டுக.

दीपानारोप्य हस्तैर्वावाहयित्वा शिवद्विजैः ।
सर्वातोद्यसमायुक्तं कृत्वा ग्रामप्रदक्षिणम् ॥ २४९ ॥

தீபாநாரோப்ய ஹஸ்தைர்வா வாஹயித்வா சிவத்விஜை:!
சர்வாதோத்ய சமாயுக்தம் க்ருத்வாக்ராம ப்ரதக்ஷிணம்!!

தீபங்களை தட்டில் வைத்து பிராம்மணர்களை எடுத்துக் கொள்ளச் சொல்லி மங்கள வாத்யங்களோடு கிராம வலம் வரச் செய்ய வேண்டும்.

गृहस्थो वा ब्रह्मचारी वा दीपं सग्राह्य पाणिना ।
अघोरास्त्रेण मन्त्रेण दीपदण्डेऽधिरोपयेत् ॥ २५० ॥

க்ரஹஸ்தோ ப்ரம்ம சாரீவா தீபம் ஸங்க்ராஹ்ய பாணிநா!
அகோராஸ்த்ரேண மந்த்ரேண தீப தண்டே திரோபயேத்!!

சுற்றிவந்த பின் (அல்லது ஆலயம் வந்து) மணமானவர்களோ, மணமாகதவர்களோ அகோராஸ்த்ர மந்திரமுச்சரித்துக் கொண்டு தீபதண்டத்தில் ஏறி ஏற்றி விடவேண்டும்.

सर्वातोद्यसमायुक्तं जयशव्दसमन्वितम् ।
सर्वैर्हरहरेत्युवत्वा दीपदण्डेऽधिरोपयेत् ॥ २५१ ॥

ஸர்வாதோத்ய ஸமாயுக்தம் ஜயசப்த ஸமந்விதம்!
ஸர்வைர்ஹர ஹரேத்யுக்த்வா தீபதண்டேதி ரோபயேத்!!

எல்லா மங்கள வாத்யங்களும் முழங்க ஜயமங்கள முருகனின் நாமங்களை உரக்க மெய்சிலிர்க்க சிறப்பாக ஹர ஹரோ ஹர எனக் கூறிக்கொண்டே தீபதண்டத்தில் தீபமேற்ற வேண்டும்.

प्राङ्मुखोदङ्मुखो वाऽपि दीपं मन्त्रेण विन्यसेत् ।
प्रासादे गोपुरे शालपरिवारालयोर्ध्वके ॥ २५२ ॥

ப்ராங்முகோ உதங்முகோவாபி தீபம்மந்த்ரேண விந்யஸேத்!
ப்ராஸாதே கோபுரேசால பரிவாராலயோர்த்வகே!!

கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ தீபமுன்புறமிருக்கும் வண்ணம் தீபமந்திரம் சொல்லிக் கொண்டே கோயிலின் மேலும் பரிவாரக் கோயில் விமானங்களிலும் வைக்க வேண்டும்.

प्रासादाभ्यन्तरे सर्वे पाकस्थानेन तु मण्डपे ।
वापीकूपतटाकेषु सर्वत्रैव प्रदीपयेत् ॥ २५३ ॥

ப்ராஸாதாப்யந்த ரேஸர்வே பாகஸ்தாநேது மண்டபே!
வாபீகூபதடாகேஷு ஸர்வத்ரைவ ப்ரதீபயேத்!!

ஆலயத்திற்கு உள்ளே எங்கேயும் மடப்பள்ளி, மண்டபம், குளம், கிணறு, குட்டை, ஏரிகளிலும், கூட எல்லா இடங்களிலும் ஒளிமயமாக தீபமேற்றுக

स्नात्वा चोत्सवबेरन्तु समलंकृत्य भूषणै: ।
ग्रामप्रदक्षिणं कृत्वा सर्वातोद्यसमन्वितम् ॥ २५४ ॥

ஸ்நாத்வாசோத்ஸவ பேரந்து ஸமலம் க்ருத்ய பூஷணை:!
க்ராம ப்ரதக்ஷிணம் க்ருத்வா ஸர்வாதோத்ய ஸமந்விதம்!!

மீண்டும் உற்சவரை நீராட்டி அணிகலன்களால் அலங்கரித்து வீதியுலா வரச் செய்வது எவ்வாற்றானும் முயற்சியோடு செய்யத் தக்கது

आलयन्तु प्रविश्याथ मूलवेरं समर्चयेत् ।
स्नपनं कारयेत् तत्र सहस्रादिषु शक्तित: ॥ २५५ ॥

ஆலயந்து ப்ரவிஸ்யாத மூளபேரம் ஸமர்ச்சயேத்!
ஸ்நபனங்காரயேத்தத்ர ஸஹஸ்ராதிஷு சக்தி த:!!

பிறகு மூலாலயம் சேர்ப்பித்து மூல முருகனை பூஜிக்க வேண்டும். 1008 கும்பங்கள் நிறுவி அல்லது 108 அல்லது ஒன்றாவது நிறுவி அபிஷேகித்து

पृथुकान् दापयेद्विद्वान् नालिकेरफलान्वितान् ।
मरीचिजीरंकोपेतान् नालिकेरैश्च संयुतान् ॥ २५६ ॥

ப்ரதுகாந் தாபயேத்வித்வாந் நாளிகேரபலாந் விதாந்!
மரீசீஜீர கோபேதாந் நாளிகேரைஸ்ச ஸம்யுதவாந்!!

பொறித்த நல்ல முறைப்படி தயாரித்த அவல்களோடு பாகு சேர்த்து தேங்காய் (மிளகு, ஜீரகம்) (கொஞ்சம் சேர்த்து) மிகுதியாகச் சேர்த்து

दद्यात्पृथुकलाजांश्च गुलसारसमन्वितान् ।
प्रभूतहविषं दत्वा ताम्बूलमपि दापयेत् ॥ २५७ ॥

ததேத் ப்ரதுக லாஜாம்ஸ்ச குலஸார ஸமந்விதாந்!
ப்ரபூத ஹவிஷந்தத்வா தாம்பூலமபி தாபயேத்!!

அவ்வவலோடு சுமைமிகு அறுசுவை பக்குவமான அளவுமிகு அன்னப்படையல் செய்து தாம்பூலம் சமர்ப்பித்து

प्रतिसंवत्सरं ह्येवं कर्तव्यं फलकाङ्क्षिभि: ।
लाजान् पृथुकलाजांश्च पृथुकान् व्यञ्जनैर्युतान् ॥ २५८ ॥

ப்ரதிஸம் வத்ஸரம் ஹ்யேவம் கர்தவ்யம் பலகாம் க்ஷிபி:!
லாஜாநு ப்ரதுகலாஜாம்ஸ்ச ப்ரதுகாந் வ்யஞ்சநைர் யுதாந்!!

நலம் வேண்டுவோரால் ஆண்டுதோறும் இவ்வாறு செய்யற்பாலது நெற்பொறிகள் அவல் பொரிகளோடு அறுசுவை உணவோடும்

निवेदयेद्गुहस्यैवं पवित्र पापनाशनम् ।
यो भक्षयेत्ततो भक्त्या अग्निष्टोमफलं लभेत् ॥ २५९ ॥

நிவேதயேத் குஹஸ்யைகம் பவித்ரம் பாபநாசநம்!
யோபக்ஷயேத் ததோபக்த்யா அக்னிஷ்டோம பலம் லபேத்!!

நிவேதித்து பிறகு பருகுபவர்கள் அக்னிஷ்டோமம் எனும் பெரிய யாக பயனை பெறுவர்

एवं यः कुरुते मर्त्यः स मुक्तः सर्वपातकैः ।
सर्वान् कामानिह प्राप्य सोऽन्ते स्कन्दपुरं व्रजेत् ।
कृतिकादीपनं प्रोक्तं धनुर्मासार्चनं श्रृणु ॥ २६० ॥

ஏவம் ய: குருதே மர்த்யம் ஸமுக்தஸ் ஸர்வ பாதகை:!
சர்வாந் காமாநி ஹப்ராப்ய சோந்தே ஸ்கந்தபுரம் வ்ரஜேத்!!
கிருத்திகா தீபநம்ப்ரோக்தம்தனுர்மாசார் சநம். ஸ்ருணு!!!

இவ்வாறு எவர் செய்கிறாரோ அனைத்து பாபங்களிலிருந்தும் அவர் விடுபடுவர். எல்லா நலன்களோடும் இனிதே இங்கு வாழ்ந்து இறுதியில் உறுதியாக முருகனுலகம் முந்துவர் கார்த்திகை தீபம் இவ்வாறு கூறப்பட்டது மார்கழிப் பூஜையைக் கூறுகிறேன் கேளும்.

इति कार्तिकमासपूजाविधिः

இது கார்த்திகை மாஸ பூஜை முறையாகும்.

॥ धनुर्मासपूजा ॥

தநுர்மாஸ பூஜா

மார்கழி மாத பூஜை முறை

मण्डपं समलंकृत्य मुक्तादामैश्च वस्त्रकैः ।
गृहद्वारणि सर्वाणि एवमाद्यैरलंकरेत् ।
शुद्धतोयेन संस्नाप्य प्रियङ्ग्वन्नं निवेद्य च ॥ २६१ ॥

மண்டபம் ஸமலங்க்ருத்ய முக்தாதாமைஸ்ச வஸ்த்ரகை:!
க்ரஹத்வாராணி ஸர்வாணி ஏவமாத்யை ரலங்கரேத்!!
சுத்த தோயேன ஸம்ஸ்நாப்ய ப்ரியம்க்வன்னம் நிவேத்யச!!!

அழகான மண்டபத்தை மேலும் அழகாக முத்துமாலைகளாலும் வண்ணத் துணிகளாலும் அவ்வாறே வாயிற் தோரணங்களிலும் இவ்வாறெல்லாம் அலங்கரிக்க வேண்டும். தூயநீரால் நீராட்டி தினை சர்க்கரைப் பொங்கல் நிவேதிக்கவும்.

धनुर्मासस्य मर्त्यानां प्रत्यूषः काल उच्यते ।
तस्मात्समाधिरात्र्यन्ते पूजयेच्छंकरात्मजम् ॥ २६२ ॥

தனுர்மாஸஸ்ய மாத்யானாம் ப்ரத்யூஷ:கால உச்யதே!
தஸ்மாத் ஸமாதி ராத்ரயந்தே பூஜயேச்சங்காராத்மஜம்!!

எல்லா அலங்காரங்களுடன் எல்லா வாத்ய கோஷங்களுடனும் முடிந்த அனைத்து ஏற்பாடுகளுடன் தனுர்மாத சிறப்பு பூஜையான மாத பூஜையை முடித்து மீண்டும் அதே மாதத்தில் ஆண்டுதோறும் தினந்தோறும் நடைபெற்று வரும் உஷக்கால சிறப்பாகக் கூறப்படுகிறது.

सर्वालंकारसंयुक्तं सर्वातोद्यसमन्वितम् ।
एकवारं धनुर्मासे भक्त्या यः पूजयेद्गुहम् ॥ २६३ ॥

ஸர்வாலங்கார ஸம்யுக்தம் ஸர்வாதோத்ய ஸமன்விதம்!
ஏகவாரம் தனுர்மாஸே பக்த்யாய: பூஜயேத் குஹம்!!

ஆகையினால் இரவின் முடிவு யாமமாகிய நான்காவது யாமத்தின் இறுதியில் ஸ்ரீ முருகப் பெருமானை ஒரு முறை தனுர்மாதமான மார்கழியில் எவர் பூஜை செய்யும் பேறு பெறுகிறாரோ அவர்

वर्षद्वयञ्च पूजायाः फलं प्राप्नोत्यसंशयः ।
श्रृङ्गिबेरसहस्त्रार्धं व्यञ्जनैः सममुच्यते ॥ २६४ ॥

வர்ஷத்வயஞ்ச பூஜாயா: பலம் ப்ராப்நோத்ய ஸம்சய:!
ச்ருங்கிபேர ஸஹஸ்ராரத்தம் வ்யஞ்ஜனைஸ் ஸம முச்யதே!!

இரண்டாண்டு பூஜையின் பயனை நிச்சயமாகப் பெறுவர். எல்லாவகை உப உணவுகளுடன் கூட ஐநூறு

तत्समं दधि विप्रेन्द्र धनुर्मासस्य पूजने ।
अर्धरात्रात्परे तत्र जलसंग्रहणं मतम् ॥ २६५ ॥

தத்ஸமம் ததி விப்ரேந்த்ர தனுர்மாஸஸ்ய பூஜனே!
அர்த்த ராத்ராத் பரேதத்ர ஜல ஸங்க்ரஹணம் மதம்!!

அதற்குச் சமமான தயிரை மார்கழி மாத பூஜையில் பயன்படுத்த வேண்டும். பனிரண்டு மணிக்குப் பிறகு உஷக்காலப் பூஜைக்காக சேகரித்து வைக்கலாமெனக் கூறப்படுகிறது.

पुष्पसंग्रहणं विप्र पूर्वेद्युरह उच्यते ।
नीलोत्पलञ्च कमलं तुलसीबिल्वपत्रकम् ॥ २६६ ॥

புஷ்ப ஸங்க்ரஹணம் விப்ர பூர்வேத்யுரஹ உச்யதே!
நீலோத்பலஞ்ச கமலம் துளஸீ பில்வ பத்ரகம்!!

அதுபோல முன்னாளே விடியற்கால முதல் பூஜைக்கு நீலோத்பலம், தாமரை, துளசீ, வில்வம், (இவைகள் சேகரித்தல் நலம்)

एकाहोषितदोषाणि न दोषं तैः सुपूजयेत् ।
पूजाकालस्य पूर्वे तु सुस्नाताचमनो गुरुः ॥ २६७ ॥

ஏகா ஹோஷித தோஷாணி
நதோஷந்தைஸ்ஸுபூஜயேத்!
பூஜாகாலஸ்ய பூர்வேது சுஸ்நாதாசமநோ குரு:!!

மேற்கூறிய மலர்களுக்கு முதல்நாள் எடுத்த மலர் என்ற குற்றம் இல்லை. பூஜா காலத்திற்கு முன்னதாக ஆசார்யரானவர் சங்கல்ப ஸ்நானம், மானஸ ஸ்நானம் இரண்டையும் செய்துவிட்டு

पादौ प्रक्षाल्याचम्य भस्मधारणविग्रहः ।
द्वारं संपूज्य विधिना मन्त्रकायः शिवद्विजः ॥ २६८ ॥

பாதௌ ப்ரக்ஷால்யசாசம்ய பஸ்மதாரண
விக்ரஹம்!
த்வாரம் ஸம்பூஜ்ய விதிநா மந்த்ரகாயச்சிவத்விஜ:!!

ஆலயம் நுழைவாயிலில் இரு கால்களையும் நன்றாக அலம்பிக் கொண்டு மும்முறை தத்வாசமனம் செய்து கொண்டு முறைப்படி திருநீறு தரித்துக் கொண்டு பூதசுத்தி, மந்த்ரநியாசம் அகப்பூஜை விசேஷார்க்யம், செய்து கொண்டு முருகனைப் பூஜிக்க முருகனாகவே தானாகி துவாரபூஜையை முதலில் செய்து கொண்டு

विशेषार्घ्यं ततो कल्प्य रात्र्यन्तं पूजयेद्गुहम् ।
स्कन्दमूर्त्यङ्गमन्त्रैश्च स्कन्दसूक्तेन मन्त्रतः ॥ २६९ ॥

விசேஷார்க்யம் ததோ கல்ப்ய ராத்ர்யந்தே
பூஜயேத்குஹம்!
ஸ்கந்த மூர்த்யங்க மந்த்ரைஸ்ச ஸ்கந்த ஸூக்தேந
மந்த்ரத:!!

பிறகு விசேஷார்க்யம் செய்து கொண்டு இரவின் இறுதியில் முருகனை ஷடாக்ஷர மந்திரத்தாலும், பஞ்சபிரும்ம மந்திரங்களாலும்

ततः कुमारमातेति स्कन्दगायत्रिया यतः ।
श्रीरुद्रचमकाद्यैश्च पूजयेद्गन्धतोयकैः ॥ २७० ॥

தத: குமாரமாதேதி ஸ்கந்த காயத்ரியாயத:!
ஸ்ரீருத்ர சமகாத்யைஞ்ச பூஜயேத் கந்ததோயகை:!!

பிறகு மாதே குமார மென்ற யஜுர்வேத மந்திரத்தாலும், ஸ்கந்த காயத்ரி மந்திரத்தாலும் ஸ்ரீருத்ரம், சமகம், மந்திரங்களாலும் வாசனைமிகு நன்னீரால் முருகனை பூஜிக்க வேண்டும்

धौतवस्त्रैरलंकृत्य भूषयेद्भूषणार्हकैः ।
कर्पूरकुङ्कुमोपेतं रक्तगन्धं च लेपयेत् ॥ २७१ ॥

தௌத வஸ்த்ரைரலங்க்ருத்ய பூஷயேத்
பூஷணார்ஹகை:!
கற்பூர குங்குமோபேதம் ரக்த கந்தஞ்ச லேபயேத்!!

வெண்மையான ஆடைகளால் அணிவித்து அணிவிக்கத் தக்க ஆபரணங்களால் அலங்கரித்து பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, இவைகளோடு அரைத்து இழைத்த செஞ்சந்தனத்தை நன்கு பூச வேண்டும்.

नीलोत्पलारविन्दैश्च पूजयेत्तु विशेषत: ।
आसनावरणादीनि संपूज्य विधिना तत: ॥ २७२ ॥

நீலோத்பலாரவிந்தைச்ச பூஜயேத்து விசேஷத:!
ஆஸநாவரணாதீநி ஸம்பூஜ்ய விதிநா தத:!!

நீலோத்பலம் தாமரைகளால் சிறப்பாக பூசிக்கும்போது ஆஸனம், ஆவரணங்களோடு முறைப்படி பூஜிக்க வேண்டும்.

नवभारादिभारान्तमुत्तमादित्रयं त्रयम् ।
तण्डुलं स्यात् तदर्धेन यथा विभवविस्तरम् ॥ २७३ ॥

நவபாராதி பாராந்தம் முத்தமாதி த்ரயம் த்ரயம்!
தண்டுலம் ஸ்யாத்த தார்த்தேந யதாவிபவ விஸ்தரம்!!

ஒன்பது பாரம் முதல் மூன்று பாரம் வரை 9 உத்தமம், 6 மத்தியமம், 3 அதமம், எனக் கூறப்படுகிறது. அரிசியானால் அதில் பாதி அளவாகக் கூறப்படுகிறது. பொருளாதார அடிப்படையில் இவைகளை ஊகித்துக் கொள்ள வேண்டும்.

शुद्धान्नमेवं कर्तव्यं श्रृङ्गिबेरदधिप्लुतम् ।
कन्दमूलफलोपेतं गुलखण्डसमन्वितम् ॥ २७४ ॥

சுத்தாந்நமேவ கார்த்தவ்யம் ச்ருங்கிபேர ததிப்லுதம்!
கந்தமூல பலோபேதம் குலகண்ட ஸமந்விதம்!!

சுத்தான்னம் தயார் செய்ய வேண்டும். அத்துடன் இஞ்சி தயிர் சேர்த்து தயிர்சாதம் செய்ய வேண்டும். கிழங்கு பழம் வெல்லக்கட்டியுடன் நிவேதிக்க வேண்டும்.

नालिकेरफलैर्युक्तं मधुसूपसमन्वितम् ।
निवेदयेद्धृदा मन्त्री ताम्बूलमपि दापयेत् ॥ २७५ ॥

நாளிகேர பலைர்யுக்தம் மதுஸூப ஸமந்விதம்!
நிவேதயேத்ருதா மந்த்ரீ தாம்பூல மபிதாபயேத்!!

தேங்காய், தேன் பருப்புகளுடன் இருதய மந்திரத்தால் நிவேதித்து தாம்பூலமும் நிவேதிக்க வேண்டும்

नानाधूपैश्च दीपैश्च ततो नीराजनैरपि ।
वाद्यैर्गीतैश्च नृत्तैश्च जपै: स्तोत्रै: प्रदक्षिणै: ॥ २७६ ॥

நாநா தூபைச்ச தீபைச்ச ததோ நீராஞ்ஜநைரபி!
வாத்யைர் கீதைச்ச ந்ருத்யச்ச ஜபைச்தோத்ரை:
ப்ரதக்ஷிணை:!!

எல்லா விதமான தூப தீபங்களைக் காண்பித்தபின் பிறகு கற்பூர நெய் தீபாரதனைக் காண்பித்து சகலமங்கள வாத்யங்களுடனும், வாய்ப்பாட்டுக்களும், ஆடல் பாடல்களும், ஜபம் தோத்திரங்களும் பிரதக்ஷிணங்களும் செய்ய வேண்டும்

नमस्कारैश्च मतिमान् प्रीणयेदसुरान्तकम् ।
एवं य: कुरुते मर्त्य: सप्तजन्मद्विजो भवेत् ॥ २७७ ॥
सर्वान् कामानिह प्राप्य तदन्ते मुक्तिमाप्नुयात् ।
धनुर्मासार्चनं प्रोक्तमार्द्रापूजाविधिं श्रृणु ॥ २७८ ॥

நமஸ்காரைச்ச மதிமாந் ப்ரீணயேதஸுராந்தகம்!
ஏவம் ய: குருதே மாத்ய ஸ்ஸப்த ஜந்ம த்விஜோ
பவேத்!!
ஸர்வாந் காமாநிஹ ப்ராப்ய ததந்தே முக்தி
மாப்நுயாத்!
தனுர்மாஸார்சநம் ப்ரோக்தம் ஆர்த்ரா பூஜாவிதி
ச்ருணு:!!

எந்த மதிமிகு அர்ச்சகர் நமஸ்காரங்களாலும் ஸ்ரீ முருகப் பெருமானை மகிழ்விக்கிறாரோ அவர் ஏழு ஜன்மங்கள் அந்தணராக பிறந்து எல்லா விருப்பங்களை

இங்கு அனுபவித்து பிறகு முருகன் திருவடிப் பேறு பெறுவர். இவ்வாறு தனுர்மாஸ பூஜை கூறப்படுகிறது. திருவாதிரை சிறப்பு பூஜைப் பற்றி கேளுங்கள்.

इति धनुर्मासपूजाविधिः

இது மார்கழி மாத பூஜை முறையாகும்.

॥ आर्द्रापूजा ॥

ஆர்த்ரா பூஜா

திருவாதிரை நக்ஷத்திர பூஜை முறை

तस्मिन् मासे तथार्द्रायां घृतेन स्नापयेद् गुहम् ।
पर्वयुक्तमयुक्तं वा नक्षत्रं तु प्रधानकम् ॥ २७९ ॥

தஸ்மிந் மாஸேததார்த்ராயாம் க்ருதேநஸ்நாபயேத் குஹம் !
பர்வயுக்தம்வா நக்ஷத்ரந்து ப்ரதானகம் !!

அந்த மார்கழி மாதத்தில் அந்த சிறப்புமிகு ஆதிரை நாள் எனும் திருவாதிரை நன்னாளில் முருகப் பெருமானை நெய்யால் அபிஷேகிக்க வேண்டும். பௌர்ணமி இருந்தாலும் சிறப்பு இல்லாவிட்டாலும் திருவாதிரை நக்ஷத்திரம் தான் முக்கியமெனக் கருதப்படுகிறது.

खण्डिते सति नक्षत्रे द्वयोस्तावधिकं भवेत् ।
समर्थेनापरं ग्राह्यं पूर्वमङ्गलकारकम् ॥ २८० ॥

கண்டிதேஸதி நக்ஷத்ரே த்வயோஸ்நாவதிகம்பவேத் !
ஸமர்தேநாபரம் க்ராஹ்யம் பூர்வமங்கள காரகம் !!

நக்ஷத்திரம் இரண்டுபட்டு இரண்டு நாட்களில் பிரிந்து வருமாயின் இரண்டாவது நாள் வியாபகம் இரவில் நிகழாது என்பதாலும் முதல் நாளே சிறப்பாக ஏற்பது நன்று.

एकमासे द्विनक्षत्रे संप्राप्ते त्वपरं वरम् ।
पूर्वमुत्सवबेरञ्च ततः कौतुकबेरकम् ॥ २८१ ॥

ஏகமாசே த்விநக்ஷத்ரே ஸம்ப்ராப்தேத்வ பரம் வரம் !
பூர்வமுத்சவபேரஞ்ச தத: கௌதுக பேரகம் !!

ஒரே மாதத்தில் இரண்டு நக்ஷத்திரங்கள் வருமாயின் பின்னால் வருவதே கொள்ளத்தக்கது எனினும் முதலில் வரும் நக்ஷத்திரத்தில் முருகன் உற்சவ மூர்த்திக்கும் பின்னால் வரும் நக்ஷத்திரத்தில் மூல முருகன் பிம்பத்திற்கும் திருவாதிரை திருமஞ்சனத்தைச் செய்து சிறப்பிக்கலாம்.

पूर्वेद्युः कौतुकं बध्वा देवीभयं सह मन्त्रवित् ।
कदलीपूगपनसलिकुचाद्युद्भवैः फलैः ॥ २८२ ॥

பூர்வேத்யு: கௌதுகம் பத்வா தேவிபயம் ஸஹ மந்த்ரவித் !
கதளீபூகபநஸலிகுசாத்யுர்பவை: பலை: !!

முன்னாள் அதாவது மிருகசீர்ஷம் அன்று கங்கணக் காப்புகளை இரு தேவிகளுக்கும் முருகனுக்கும் கட்டுவித்து வாழை, பாக்கு, பலா, எலுமிச்சை முதலான பழங்களால்

मण्डपं समलंकृत्य मुक्तादामैश्च वस्त्रकैः ।
गृहद्वाराणि सर्वणि एवमाद्यैरलंकरेत् ॥ २८३ ॥

மண்டபம் ஸமலங்கிருத்ய முக்தாதாமைஸ்ச வஸ்த்ரகை: !
கிரஹத்வாராணி ஸர்வாணி ஏவமாத்யை ரலங்கரேத் !!

மண்டபத்தை முத்துமாலைகளாலும் வண்ணமயத் துணிகளாலும் அலங்கரித்து கோயிலின் வாயில்களை எல்லாம் கூட இவ்வாறே சிறப்பாக அலங்கரிக்கவும்.

शुद्धतोयेन संस्नाप्य प्रियङ्ग्वत्रं निवेद्य च ।
सर्वालंकारसंयुक्तं सर्वातोद्यसमन्वितम् ॥ २८४ ॥

சுத்ததோயேன ஸம்ஸ்னாப்ய ப்ரியங்க்வந்நம் நிவேத்யச !
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் ஸர்வாதோத்ய ஸமந்விதம் !!

எவ்வாற்றானும் முயற்சியோடு எல்லா விதத்திலும் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் முருகனின் உற்சவமூர்த்தி விக்ரஹத்தை அபிஷேகித்து அலங்கரித்த பின் தினைச்சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து

ग्रामप्रदक्षिण कुर्यात् प्रातरुत्सवबेरकम् ।
गवामाज्यं ततो विद्वान् नवं शुद्धमनिन्दितम् ॥ २८५ ॥

க்ராம ப்ரதக்ஷிணங்குர்யாத் ப்ராதருத்சவபேரகம் !
கவாமாஜ்யம் த தோவித்வாந் நவம் சுத்தமநிந்திதம் !!

திருவீதியுலாவை முற்பகலிலேயே செய்து பசுநெய் பரிசுத்தமானதை புதுமையானதை தள்ளப்படாததைத் தேர்ந்தெடுத்து

आनीय रात्रौ तत्त्वज्ञ: स्नापयेन्मूलबेरकम् ।
शिवत्रयं सार्धभारं भारं भारार्धभारकम् ॥ २८६ ॥

ஆநீய ராத்ரௌதத்வக்ஞ: ஸ்நாபயேத்மூலபேரகம் !
சிவத்ரயம் சார்த்தபாரம் பாரம் பாரார்த்தபாரகம் !!

கொண்டு வந்து விஷயமறிந்த அர்ச்சகர் மூலபேர முருகனுக்கு 3 மரக்கால் 12 லிட்டர் அல்லது 6 லிட்டர் அல்லது 3 லிட்டர் அளவுள்ள பசுநெய்யால் பூசி முழுதும் அபிஷேகிக்கவும்

द्वयभारस्त्रिभारञ्च षड्भारं चाष्टभारकम् ।
दशभारं स्मृतं ज्ञेयमुत्तमादित्रयं त्रयम् ॥ २८७ ॥

த்வயபாரஸ்த்ரிபாரஞ்ச ஷட்பாரஞ்சாஷ்டபாரகம் !
தசபாரம் ஸ்ம்ருதம் ஞேய முத்தமாதித்ரயம் த்ரயம் !!

(அதமத்தில் மூன்று நிலையாகவும் மத்யமத்தில் மூன்று நிலையாகவும் உத்தமத்தில் மூன்று நிலையாகவும்) பத்துபாரம் முதல் எட்டு ஆறு மூன்று இரண்டு பாரம் வரை நெய் அபிஷேகிக்கலாம்.

1பலம் (35 gm) - 8 பலம் ஒரு சேர் - 5 சேர் வீசை

35x 8 = 280x 5 = 1400gm = 1 வீசை x 8 = 11200

11200 x 8 = 89600/1000 - 1 பாரம் = 90 கிலோ

900 கிலோ முதல் 180 கிலோ வரை அளவு கூறப்பட்டுள்ளது.

देवाग्रे स्थण्डिलं कुर्यात् समद्रोणैश्च शालिभि: ।
तदर्धैस्तण्डुलैर्भूष्य तदर्धैश्च तिलैरपि ॥ २८८ ॥

தேவா க்ரேஸ்தண்டிலம் குர்யாத் சமத்ரோணைஸ்சசாலிபி: !
ததர்தைஸ்தண்டுலைர் பூஷ்ய ததர்தைஸ்ச திலைரபி !!

முருகனுக்கு முன்பு சிறுமேடை அமைத்து அதில் (50kg) ஒரு மூட்டை நெல்லும் 25 அரைமூட்டை அரிசியும் பரப்பி ¼ மூட்டை (12kg) எள்ளும் பரப்பி அதன் மேல்

परिस्तीर्य ततो दर्भैराज्यपात्राणि विन्यसेत् ।
पुण्याहप्रोक्षणं कृत्वा स्कन्दमन्त्रै: समर्चयेत् ॥ २८९ ॥

பரிஸ்தீர்ய ததோதர்பை ராஜ்ய பாத்ராணி விந்யஸேத் !
புண்யாஹப்ரோக்ஷணங்க்ருத்வாஸ்கந்த மந்த்ரைஸ்ஸமர்ச்சயேத் !!

நாணற்புற்களான தர்பைகள் பரப்பி நெய்பாத்திரங்களை வைத்து புண்யாகவாசன நீர்த் தெளித்து முருகனின் மூலமந்திங்களான ஆறெழுத்துக்களை ஓரெழுத்தும் சேர்த்து அர்ச்சிக்க.

धूपदीपं ततो दत्त्वा द्वारपूजां विधाय च ।
आधाराधेयपूर्वं च कृत्वा नित्यावसानके ॥ २९० ॥

தூபதீபந்ததோதத்வா த்வாரபூஜாம் விதாயச !
ஆதாராதேய பூர்வஞ்ச க்ருத்வாநித்யாவஸாநகே !!

தூபதீபங்காட்டி துவார பூசை செய்து பஞ்சாஸன பூஜை நியாஸங்கள் செய்து ஆவாஹித்து பஞ்சாவரண பூஜை வரை செய்வித்து

स्कन्दमूलेन मन्त्रेण षडङ्गाद्यङ्गमन्त्रत: ।
स्कन्दमूलेन मतिमान् कुमारमेव मन्त्रत: ॥ २९१ ॥

ஸ்கந்த மூலேந மந்த்ரேண ஷடங்காத்யங்க மந்த்ரத:!
ஸ்கந்த மூலேந மதிமாந் குமாரமேவ மந்த்ரத:!!

முருகன் மூலத்தாலும் ஷடங்க மந்திரங்களாலும் குமாரமேவ எனும் வேதமந்திரங்களாலும் ஆகமஞ்சரான ஆசார்யர்

घृतेन मूलमन्त्रेण चास्त्रेण परिमार्ज्य च ।
पिष्टामलकपिण्याकैर्घर्षयेद् घृतनुत्तये ॥ २९२ ॥

க்ருதேனமூல மந்த்ரேண சாஸ்த்ரேண பரிமார்ஜ்யச!
பிஷ்டாமலக பிண்ணார்கைகர்ஷயேத் க்ருதநுக்தயே!!

மூலமந்திரத்தோடும் அஸ்த்ர மந்த்ரத்தோடும் முருகனுக்கு நெய்யை அங்கங்களின் அன்புடன் அர்ப்பணித்து அரிசி மாவு, நெல்லி வற்றல், தூள், சீயக்காய்தூள், அறப்புத்தூள் முதலியவற்றால் நெய்ப்பசை நீங்க அங்கந்தமுவி அபிஷேகித்து

श्रीरुद्रचमकाभ्याञ्च स्कन्दसूक्तेन मन्त्रवित् ।
मन्दोष्णैर्गन्धतोयैश्च स्नाप्य वस्त्रेणमार्जयेत् ॥ २९३ ॥

ஸ்ரீருத்ர சமகாப்யாஞ்ச ஸ்கந்த ஸூக்தேந மந்த்ரவித்!
மந்தோஷ்ணைர்கந்த தோயைஸ்ச ஸ்நாப்ய வஸ்த்ரேண மார்ஜயேத்!!

ஸ்ரீருத்ரம், சமகம், எனும் சிறப்புமிகு யஜுர்வேத மந்திர கோஷங்களுடன் ஸ்கந்த ஸூக்த மந்திரத்துடன் சற்றே பொறுக்கும் சூட்டில் வெந்நீராலும் மணமிகு பன்னீராலும் முருகனை முழுக்காட்டித் தூய்மையான மெல்லிய துணியால் முருகனை முழுதும் துவட்டிவிட்டு

वस्त्राभरणमालदीन् गुरुर्दत्वा हृदाणुना ।
आसनावरणादीनि पूजयेन्मुनिपुङ्गव ॥ २९४ ॥

வஸ்த்ராபரண மாலாதீந் குருர்தத்வா ஹ்ருதாணுநா!
ஆஸநாவரணாதீநி பூஜயேந்முனி புங்கவ!!

ஆடை அணிகல மாலைகளை இதய பூர்வமாக இருதய மந்திரத்தோடு ஆஸனம் ஆவரணம் முறையாக பூஜிக்கத் தக்கது முனிவரே

नीलोत्पलोत्थै: पुष्पैश्च नैरन्तर्यं विभूषयेत् ।
स्नाप्य कौतुकबेरञ्च भूषयेद्भूषणार्हकै: ॥ २९५ ॥

நீலோத்பலோக்தை: புஷ்பைஸ்சநைரந்தர்யம் விபூஷயேத்!
ஸ்நாப்யகௌதுகபேரஞ்ச பூஷயேத் பூஷணார்ஹகை:!!

நீலோத்பல மலர்களான நீள்மாலையால் திருவடிதோய அணிவித்து உற்சவருக்கும் இவ்வாறே அபிஷேகித்து அணிகல ஆடை மலர்மாலைகளால் அலங்கரித்து

नैवेद्यं दापयेत्पश्चात् सर्वव्यञ्जनसंयुतम् ।
ताम्बूलञ्च ततो दत्वाकृष्णगन्धेन लेपयेत् ॥ २९६ ॥

நைவேத்யம் தாபயேத்பஸ்சாத் ஸர்வவ்யஞ்சந ஸம்யுதம்!
தாம்பூலஞ்ச ததோதத்வா க்ருஷ்ண கந்தேனலேபயேத்!!

நல்ல நிவேதனம் செய்து பக்குவ பக்க உணவுகளோடு பரிமாறி நிவேதித்து தாம்பூலம் சிறப்பாக சமர்ப்பித்து நறுமணமிகு நற்சந்தனமிட்டு

ग्रामप्रदक्षिणं नित्यं वीथिं कृत्वालयं विशेत् ।
आलयस्यग्रके वाऽपि सौम्ये वा जनतुष्टये ॥ २९७ ॥

க்ராம ப்ரதக்ஷிணம் நித்யம் வீதிம்கருத்வாலயம் விசேத்!
ஆலயஸ்யாக்ர கேவாபி ஸௌம்யே வாஜந துஷ்டயே!!

வீதியுலாவை வெகு விமரிசையாக முடித்து ஆலயம் வந்தவுடன் ஆலயத்துக்கு முன்புறமோ வடக்குப்புறமோ

डोलारोहं ततः कर्यात् बलिबेरं विशेषतः ।
डोलारोहं प्रकर्तव्यं प्रभाते चार्धरात्रके ॥ २९८ ॥

டோலாரோஹந்தத: குர்யாத் பலிபேரம் விசேஷத:!
டோலாரோஹம் ப்ரகர்தவ்யம் ப்ரபாதேசார்த்த ராத்ரகே!!

அமைக்கப்பட்டுள்ள அழகு ஊஞ்சலிலே காலையிலோ அல்லது நள்ளிரவிலோ வைத்து ஆட்டிவிட்டு

सुवर्णरौप्य लोहैर्वा दारुणात्वथ शिल्पिभिः ।
सर्वलक्षणसंयुक्तं स्थाप्य स्तम्भद्वयं तथा ॥ २९९ ॥

சுவர்ணரௌப்ய லோஹைர்வா தாருணாத்வத சில்பிபி:!
ஸர்வ லக்ஷண ஸம்யுக்தம் ஸ்தாப்ய ஸ்தம்ப த்வயம் ததா!!

தங்கம், வெள்ளி உலோகத்தினாலோ அல்லது உயர்ந்த மரங்களாலோ சிற்பிகளால் அமைக்கப்பட்ட ஸகல இலக்கணங்களுடன் கூடிய இரு தூண்களோடு

तयोरूर्ध्वे कलां योज्य डोलां तस्मिन् प्रसम्बयेत् ।
चतुर्हस्तसमोपेतामथवा द्विभुजान्विताम् ॥ ३०० ॥

தயோரூர்த்வே கலாம்யோஜ்ய டோளாம் தஸ்மிந் ப்ரலம்பயேத்!
சதுர்ஹஸ்த ஸமோபேதா மதவா த்விபுஜாந்வி தாம்!!

அல்லது நான்கு தூண்களோடு கூடிய கலாமயமான கொக்கிகளில் ஊஞ்சலைத் தொங்கவிட்டு அதில்

अधस्तात् फलकं योज्य सर्वालंकारसंयुताम् ।
डोलां संप्रोक्ष्य चास्त्रेण सर्वालंकारसंयुताम् ॥ ३०१ ॥

அதஸ்தாத் பலகாம்யோஜ்ய ஸர்வாலங்கார ஸம்யுதாம்!
டோளாம் ஸம்ப்ரோக்ஷ்ய சாஸ்த்ரேண ஸர்வாலங்கார ஸம்யுதாம்!!

அதன் கீழ் பலகையில் எல்லா அலங்காரத்துடன் கூடிய ஊஞ்சலில் அஸ்த்ர மந்திரத்தால் தெளித்து

फलकोर्ध्वे न्चसेद्देवं शक्तिद्वयसमन्वितम् ।
नैवेद्यं चैव पानीयं ताम्बूलमपि दापयेत् ॥ ३०२ ॥

பலகோர்த்வே ந்யசேத்தேவம் சக்தி த்வய ஸமந்விதம்!
நைவேத்யஞ்சைவ பாநீயம் தாம்பூலமபி தாபயேத்!!

இரு தேவியரோடும், முருகனை எழுந்தருளச் செய்து காலலம்பும் நீர்வார்த்து நிவேதனம் தாம்பூலம் சமர்ப்பித்து

धूपदीपौ ततो दत्वा दत्वा भस्मानि मन्त्रवित् ।
वाद्यगीतैश्चनृत्तैश्च स्तोत्रैः सतोषयेद्गुहम् ॥ ३०३ ॥

தூப தீபந்ததோ தத்வா தத்வா பஸ்மாநி மந்திரவித்!
வாத்திய கீதைஸ்ச நிர்தைஸ்ச ஸ்தோத்ரைஸ் தோஷயேத் குஹம்!!

தூப தீபங்காட்டி விபூதிக் காண்பித்து இனிமை மிகு வாத்யங்களோடு மகிமை மிகு ராகங்களால் (வாய்ப்பாட்டாலும்) முருகனை ஆடல் பாடல்களாலும், தோத்திரப் பாக்களாலும் மகிழ்வித்து

नीराजनं ततो दत्वा प्रविशेदालयं सुधीः ।
प्रभूतहविषं दत्वा ब्राह्मणानपि भोजयेत् ॥ ३०४ ॥

நீராஜநந்ததோ தத்வா ப்ரவிசேதாலயம் சுதீ: !
ப்ரபூத ஹவிஷந்தத்வா பிரா்ம்மணாநபி போஜயேத் !!

தீபாராதனைக்காண்பித்து ஆலயம் சேர்ப்பித்து சுவைமிகு அளவுமிகு அறுசுவை உணவுகளைப் படையலிட்டு நிவேதித்து அன்பர்களுக்கும் அந்தணர்களுக்கும் அர்ப்பணிக்க வேண்டும்

गुहस्नानार्थमम्भश्च गङ्गातोयसमं भवेत् ।
गुहपादोदकं पीत्वा सर्वयज्ञफलं भवेत् ॥ ३०५ ॥

குஹஸ்நாநார்த்த மம்பஸ்ச கங்காதோய
ஸமம்பவேத் !
குஹபாதோதகம் பீத்வா ஸர்வ யக்ஞபலம் பவேத் !!

கங்கை மைந்தனான கந்தன் காலடிப்பட்ட நீர் கங்கையினும் மேலான புண்ணியம் நிறைந்தது - திருவடி திருநீர் பருகுவோர் எல்லா மேலான வேள்விப் பயனையும் வேலவனருளால் பெறுவர்

एवं यः कुरुते मर्त्यः सर्वान् कामानवाप्नुयात् ।
आर्द्रापूजाविधिः प्रोक्ता पुष्यमासार्चनं श्रृणु ॥ ३०६ ॥

ஏவம் ய : குருதே மர்த்ய ஸ்ஸர்வாநு
காமாநவாப்நுயாத் !
ஆருத்ரா பூஜா விதி: ப்ரோக்தம் புஷ்யமாசார்சநம்:
ஸ்ருணு !!

எவரொவ்வருவரும் இவ்வாறு செய்விக்க துணை செய்கிறார்களோ, சேவிக்கிறார்களோ சேவிக்க சேவை செய்கிறார்களோ அவர்களனைவரும் விரும்பிய அரும்பிய அனைத்து நலனும் அடைவர். ஆதிரைப் பூசை அருளப்பட்டது பூசமாச பூசை கேளும் முனிவரே

इत्यार्द्रापूजाविधिः

இது ஆர்த்ரா பூஜை முறையாகும்.

॥ पुष्यमासपूजा ॥

புஷ்யமாஸ பூஜா (தைமாத பூஜை)

पुष्यमासे तु पुष्यर्क्षे कुर्यात् क्षौद्राभिषेचनम् ।
सर्वव्याधिविनाशं च विजयप्रदकारणम् ॥ ३०७ ॥

புஷ்ய மாஸேது புஷ்யர்க்ஷே குர்யாத் க்ஷௌத்ரா
பிஷேசநம் !
ஸர்வ வ்யாதி விநாசஞ்ச விஜயப்ரத காரணம் !!

தை மாதத்தில் சிறப்பாக பூச நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ முருகனுக்கு தேனபிஷேகம் செய்ய வேண்டும். இவ்வழிபாடு எல்லோருக்கும் எல்லா வியாதிகளையும் நீக்குவதோடு எவற்றிலும் வெற்றி வாய்ப்புக்கள் கிட்டும்

आर्द्राऋक्षविधानेन ऋक्षं निश्चित्य मन्त्रवित् ।
वस्त्रपूतं नवं शुद्धं कृमिदोषविवर्जितम् ॥ ३०८ ॥

ஆர்த்ரா க்ஷ விதாநேந க்ஷந்நிஸ்சித்ய மந்தரவித் !
வஸ்த்ர பூத நவம் சுத்தம் க்ரமி தோஷ விவர்ஜிதம் !!

திருவாதிரை வழிபாடு போலவே பூச நக்ஷத்திரத்தை தை மாதத்தில் உறுதி செய்த மதிமிகு மந்திர விற்பன்னர் நல்ல துணியினால் வடிகட்டித் தூய்மையான நுண்ணியிர்கள் குற்றம் நீக்கிய

क्षौद्रमादाय मतिमान् शुद्धपात्रे प्रपूरयेत् ।
अष्टप्रस्थादिविप्रेन्द्र यावन्मानं शिवान्तकम् ॥ ३०९ ॥

க்ஷௌத்ர மாதாய மதிமாந் சுத்தி பாத்ரே ப்ரபூரயேத் !
அஷ்ட ப்ரஸ்தாதி விப்ரேந்த் யாவந்மாநம்
சிவாந்தகம் !!

தேனை எடுத்து மதிமிகு அர்ச்சகர் சுத்தமான பாத்திரத்தில் நிரப்பி 8 படி முதல் 4 படி வரை சக்திக்கு ஏற்றவாறு

शिवधृद्ध्या नवं मानं कन्यसादित्रयं मतम् ।
देवाग्रे स्थण्डिलं कृत्वा क्षौद्रपात्राणि विन्यसेत् ॥ ३१० ॥

சிவ வ்ருத் யா நவம் மாநம் கந்யஸாதி த்ரயம் த்ரயம்!
தேவாக்ரே ஸ்தண்டி லங்க்ருத்வா க்ஷௌத்ர
பாத்ராணி விந்யஸேத்!!

ஒன்பது படி, ஆறுபடி, மூன்றுபடி, என்ற அளவில் முருகனுக்கு முன் சிறு மேடை செய்து தேன் பாத்திரங்களை வரிசையாக வைத்து

पुण्यहं वाचयित्वाथ प्रोक्षयेदस्त्रमन्त्रत: ।
स्कन्दसूक्तेन मन्त्रज्ञ: कुमारमेति मन्त्रत: ॥ ३११ ॥

புண்யாஹம். வாசயித்வாத ப்ரோக்ஷயே தஸ்த்திர
மந்த்திரத:!
ஸ்கந்த ஸூக்தேந மந்த்ரக்ஞ: குமார மேதி மந்த்ரத:!!

பிறகு புண்யாக வாசனம் செய்து அஸ்த்ர மந்திரத்தினால் தெளித்து புனிதமாக்கி ஸ்கந்த சூக்தம், மாதேகுமாரம், அயங்குமாரம், போன்ற வேதமந்திரங்களால் மந்திரமறிந்த அர்ச்சகரானவர்

मूलब्रह्मषडङ्गैश्च कुर्यात् क्षौद्राभिषेचनम् ।
वस्त्राभरणमालादीन् दापयेत् हृदाणुना ॥ ३१२ ॥

மூல பிரும்மாங்க ஷடங்கைஸ்ச்ச குர்யாத்
க்ஷௌத்ராபிஷேசனம்!
வஸ்த்ராபரண மாலா தீன் தாபயேத்து
ஹ்ருதாணுனா!!

ஆறெழுத்து முருகனின் மூலத்தாலும், பஞ்ச பிரும்ம ஷடங்கங்களாலும், முருகனுக்கு தைப் பூசத்தில் தேனபிஷேகம் செய்து இருதய மந்திரத்தால் ஆடை அணிகலன்களையும் மலர் மாலைகளால் அலங்கரிக்கவும்

नीलोत्पलैश्च पद्मैश्च नैरन्तर्यं विभूषयेत् ।
प्रभूतहविषं दत्वा ब्राह्मणानपि भोजयेत् ॥ ३१३ ॥

நீலோத்பலைஸ்ச பத்மைஸ்ச நைரந்தர்யம்
விபூஷயேத்!
ப்ரபூத ஹவிஷந்தத்வா ப்ராம்மணாந பி போஜயேத்!!

நீலோத்பல மலர்களாலும், தாமரை மலர்களாலும், சிறப்பாகஅலங்கரித்து பெரிய அளவில் சுவைமிகு அன்னம் எதிரே பரிமாறி நிவேதித்து எல்லா பக்தர்களையும் பிராம்மணர்களையும் சாப்பிடும்படி செய்க

एवं य: कुरुते मर्त्य: सर्वान् कामानवाप्नुयत् ।
पुष्यमासविधि: प्रोक्ता माघमासविधिं श्रृणु ॥ ३१४ ॥

ஏவம் ய: குருதே மர்த்ய: ஸர்வாந் காமாநவாப்நுயாத்!
புஷ்ய மாஸவிதி: ப்ரோக்தம் மாக பூஜா விதிம்
ச்ருணு!!

இவ்வாறு எவர் அவர் வாழ்நாளிலே முருகனுக்கு முறை வழுவாது பக்தியோடு செய்து வருபவர் நல்ல இனிய குரல் வளமும் செல்வ வளமும் பெறுவர். இவ்வாறு தை மாத சிறப்பு பூஜை கூறப்பட்டது. மாசி மாதப் பூஜை சிறப்பைப் பற்றிக் கேட்பீராக

इति पुष्यमासपूजाविधि:

இது தை மாத பூஜை முறையாகும்.

॥ माघमासपूजा ॥

மாகமாஸ பூஜா
(மாசி மாத பூஜை முறை)

माघमासे मखऋक्षे पूजयेद्धृतकम्बलम् ।
भूपतिर्जयदं सौम्यं प्राणिनां रोगनाशनम् ॥ ३१५ ॥

மாகமாஸே மகாருக்க்ஷே பூஜயேத் க்ருதகம்பளம்!
பூபதிர்ஜயதம் சௌம்யம் ப்ராணிநாம் ரோகநாசநம்!!

மாசி மாதத்தில் மகா நக்ஷத்திரத்தில் முருகப் பெருமானுக்கு நெய்யில் நினைத்த ஆட்டு உரோமங்களாலான கம்பளத்தை (உரோம குற்றம்

நீங்க நெய்யில் நினைத்து) அர்ப்பணித்து பூசிக்க வேண்டும். இதனால் அரசர் வெற்றியடைவர் - பிராணிகளின் பிணிகள் நீங்கும்

आर्द्राप्रोक्तविधानेन नक्षत्रं ग्राह्यमुत्तमम् ।
उत्तमं कपिलासर्पि: स्वर्णवर्णगवामपि ॥ ३१६ ॥

ஆர்த்ராக்ஷோக்த விதாநேந நக்ஷத்ரம் க்ராஹ்ய முத்தமம் !
உத்தமம் கபிலா ஸர்ப்பி ஸ்வர்ண வர்ண கவா மபி !!

பௌர்ணமியோடு கூடிய மகத்திலோ தனித்த மகத்திலோ நக்ஷத்திரப் பிரதானமெனில் நக்ஷத்திரம் என்று முழுமையாகவோ அல்லது இரவிலோ உள்ளதோ பௌர்ணமி முக்கியமெனக் கருதினால் மகாநக்ஷத்திரத்தோடு இணையா விட்டாலும் என்று பௌர்ணமி திதி அதிகம் உள்ளதோ அன்று பொன்னிறப் பசுவின் நெய்யையோ அல்லது செம்மையும், கருமையும் கலந்த பசுவின் நெய்யோ சிறந்தது என (கொள்ளவும்)

निरोमं नूतनं शुद्धं क्षीरं कीटादिवर्जितम् ।
तोयै: पात्राणि संपूर्य वारुणं बीजमुच्चरन् ॥ ३१७ ॥

நிரோமம் நூதனம் சுத்தம் க்ஷீரம் கீடாதி வர்ஜிதம் !
தோயை: பாத்ராணி ஸம்பூர்ய வாருணம் பீஜ முச்சரந் !!

உரோமமின்றி புதுமையானதும், சுத்தமாகவும், உள்ள புழு பூச்சியில்லாத பால் சிறந்ததாக எடுத்து அதிலிருந்து நெய் தயாரிக்கவும். நீரால் பாத்திரங்களில் நிரப்பி வருண மூலத்தை உச்சரித்துக் கொண்டு

निधाय पात्रं पात्रेषु पिण्डं कृत्वा तदाज्यकम् ।
कुङ्कुमागरुसंयुक्तं शुद्धपात्रे निधापयेत् ॥ ३१८ ॥

நிதாயபாத்ரம் பாத்ரேஷு பிண்டிங்க்ருத்வா ததாஜ்யகம் !
குங்குமாகரு ஸம்யுக்தம் சுத்த பாத்ரே நிதாபயேத் !!

சுத்தம் செய்த பாத்திரத்தை வைத்து பாத்திரங்களில் தயார் செய்யப்பட்ட நெய்யை நிரப்பி அதில் குங்குமப்பூ, அகரு இவைகளை சேர்த்து

देवाग्रे स्थण्डिलोर्ध्वे तु पुण्याहप्रोक्षणान्वितम् ।
घृतपात्रमि विन्यस्य ब्रह्ममूर्त्यङ्गमन्त्रकै: ॥ ३१९ ॥

தேவாக்ரே ஸ்தண்டிலோர்த்வேது புண்யாஹ ப்ரோக்ஷணாந்விதம் !
க்ருத பாத்ராணி விந்யஸ்ய ப்ரம்ம மூர்த்யங்க மந்த்ரகை: !!

முருகனுக்கு முன்பு சிறுமேடை மீது வைத்து புண்யாக புரோக்ஷணங்களை செய்து நெய்ப் பாத்திரங்களில் பிரும்மாங்க மந்திரங்களை பஞ்ச பிரும்ம ஷடங்க மந்திரங்களால்

पुष्पैरभ्यर्च्य मतिमान् धूपदीपौ हृदा ददेत् ।
कवचेनावकुण्ठ्यापि प्रातर्मध्याह्न एव वा ॥ ३२० ॥

புஷ்பை ரப்யர்ச்ய மதிமாந் தூபதீபௌ ஹ்ருதாததேத் !
கவசேநாவ குண்ட்யாபி ப்ராதர்மத்யான்ன ஏவ வா !!

மதிமிகு அர்ச்சகர் மலர்களால் அர்ச்சித்து தூப தீபங்களை இருதய மந்திரத்தால் கொடுத்து காட்டி கவச மந்திரத்தால் ஆள்காட்டி விரலால் அதன்மேல் சுற்றிக் காண்பித்து காலை சந்தி பூஜையிலோ, அல்லது உச்சிவேளைப் பூசையிலோ (நெய்க் கம்பளத்தை சாற்ற வேண்டும்)

विशेषेणार्घ्य सेनान्यमासनावरणै: सह ।
मूर्धादिपादपर्यन्तमालिप्य च स पीठकम् ॥ ३२१ ॥

விசேஷேணார்க்ய ஸேநான்ய மாஸநாவரணை: ஸஹ !
மூர்த்தாதி பாத பர்யந்த மாலிப்யசஸ பீடகம் !!

சிறப்பாக சிங்கார வேலனை ஆஸனம் ஆவரணங்களோடு பூசித்து முடி முதல் அடி வரை

நெய்யினால் அபிஷேகம் போல் தடவி அர்ப்பணித்து பீடத்திலும் நன்கு சாத்தி

गन्धैर्लिप्यापरं नीत्वा कम्बलेन च वेष्टयेत् ।
महाहविर्निवेद्याथ ताम्बूलमपि दापयेत् ॥ ३२२ ॥

கந்தைர் லிப்யாபரன் நீத்வா கம்பளேந சவேஷ்டயேத்!
மஹாஹவிர் நிவேத்யாத தாம்பூல மபி தாபயேத்!!

பிறகு அபிஷேக வரிசைப்படி எல்லாம் செய்து சந்தனத்தாலும் பூசி, சந்தனாபிஷேகம் ஆனதும் (நன்கு துடைத்து விட்டு) நெய்யில் நினைத்து பிழிந்து வைத்து கம்பளியை) நெய்க் கம்பளத்தால் சுற்றி சிறப்பு நிவேதனங்களை நிவேதித்து பிறகு மணமிகு தாம்பூலமும் தர வேண்டும்.

संध्यान्ते वा परेद्युर्वा कौतुकाद्यं विसृज्य च ।
विशेषस्नपनं कुर्यात् यथाविसविभवसविस्तरम् ॥ ३२३ ॥

சந்த்யாந்தே வாபரேத்யுர்வா கௌது காத்யம் விஸ்ருஜ்யச!
விசேஷஸ்ந பநங்குர்யாத் யதாவிதி ஸவிஸ்தரம்!!

முறைப்படி சிறப்பாக ஸ்நபன பூர்வமாக அபிஷேகம் செய்யும் முன்னாள் மாலையோ மறுநாள் காலையோ, கங்கணக் கட்டியிருப்பதை அவிழ்த்து விட வேண்டும்.

एवं यः कुरुते मर्त्यः सर्वरोगात् प्रमुच्यते ।
माघपूजाविधिः प्रोक्ता शिवरात्रिविधिं श्रृणु ॥ ३२४ ॥

ஏவம் ய: குருதே மர்த்யஸ்ஸர்வ ரோகாத் ப்ரமுச்யதே!
மாக பூஜா விதி: ப்ரோக்தம் சிவராத்ரி விதிம் ஸ்ருணு!!

இவ்வாறு முறையாக எவர் செய்து வருவாரோ அவர் எல்லா வியாதிகளிலிருந்தும் விடுபடுவர் எனக் கூறப்பட்டு வருகிறது. மாசி மாத பூஜை இவ்வாறு கூறப்பட்டது. இதே மாதத்தில் செய்யப்பட வேண்டிய சிவராத்திரி விதி கூறப்படுகிறது.

इति माघमासपूजाविधिः

இது மகாமாஸ பூஜை முறையாகும்.

॥ शिवरात्रिपूजा ॥

சிவராத்ரி பூஜா

तन्मासे कृष्णपक्षे तु निद्यते या चतुर्दशी ।
तद्रात्रिः शिवरात्रिः स्यात् सर्वपुण्यशुभावहा ॥ ३२५ ॥

தன்மாஸே க்ருஷ்ண பக்ஷேது வித்யதேயா சதுர்தசீ!
தத்ராத்ரிச் சிவராத்ரிஸ்யாத் ஸர்வ புண்ய சுபாவஹா!!

அம்மாசி மாத தேய்பிறை சதுர்தசியானது எல்லாப் புண்ணியங்களையும் தரவல்ல மஹா சிவராத்ரியான படியால்

रात्रौ यामद्वयादर्वाक् घटिकैकामहानिशी ।
तत्स्याच्चतुर्दशी यस्मात्तद्रात्रं शिवरात्रकम् ॥ ३२६ ॥

ராத்ரௌ யாமத்வயா தர்வாக் கடிகைகா மஹாநிசி!
தத்ஸ்யாச் சதுர்தசீ யஸ்மாத் தத்ராத்ரம் சிவராத்ரகம்!!

இரவில் இரண்டு யாமத்துக்கு மேலோ முழு இரவுமோ என்று சதுர்தசி உள்ளதோ அன்றே சிவராத்திரி எனக் கொள்ளப்படுகிறது

मुख्या त्रयोदशीमिश्रा पर्वमिश्राऽधमाधमा ।
मध्यमा शिवरात्रिः स्यादहोरात्रं चतुर्दशी ॥ ३२७ ॥

முக்யாத்ரயோதசீ மிச்ரா பார்வ மிச்ரா தமாதமா!
மத்யமா சிவராத்ரிஸ்யா தஹோராத் ரஞ்சதுர்தசீ!!

திரயோதசியோடு கூடிய சதுர்தசி சிறப்பென்றும் அமாவைாஸையோடு சேர்ந்த சதுர்தசி சிறப்பற்றது என்றும் நடுத்தர சிவராத்தியானது பகல், இரவு, இரண்டிலும் சதுர்தசி திதி வியாபித்தது என்றும் கூறப்படுகிறது.

तस्यां पूज्यो महादेव: ब्राह्मगोहितकांक्षिभि: ।

ईश्वरोवाच -

कौशिकेदं शतं सत्यं मत्पूजायाश्चतुर्गुणम् ॥ ३२८ ॥

தஸ்யாம் பூஜ்யோ மஹாதேவ: ப்ராம்ம கோஹித காங்க்ஷிபி:।

ஈச்வரோவாச । கௌசிகேதம் சதம் ஸத்யம் மது பூஜாயாஸ் சதுர்குணம் ॥

அவ்வளவு சிறப்பு மிகு சிவராத்திரியில் அந்தணர்கள், ஆவினங்கள் முதலான அனைத்து உயிரினங்களும் உய்வதற்காக செய்யப்படுவதே மகாதேவனான சிவ பூஜையாகும்.ஈஸ்வரன் கூறுகிறார்: கௌசிக முனிவரே! நூறு மடங்கு உண்மை என் பூஜையினால் கிடைக்கும் பலனைவிட நான்கு மடங்கு முருகனை சிவராத்ரி தினத்தில் பூஜிக்கக் கிடைக்கும் (என்றார்)

अप्येकदन्तसेनान्यो: पूजया तोषयाम्यहम् ।
तस्मात् सर्वप्रयत्नेन तद्रात्रौ पूजयेद्गुहम् ॥ ३२९ ॥

அப்யை கதந்தசே நாந்யோ: பூஜயாதோஷ யாம்யஹம் ।
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந தத்ராத்ரௌ பூஜயேத் குஹம் ॥

விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும் பூஜிப்பதனாலும் நானும் சந்தோஷப்படுகிறேன். எனவே முயற்சியோடு சிவராத்திரியில் முருகனைப் பூசிக்க (எனக் கூறினார்)

स्नात्वा नित्यविधिं कृत्वा कुर्याच्छुद्धोपवासकम् ।
देवेशं गन्धतैलेन पिष्टाद्यैरपि मन्त्रवित् ॥ ३३० ॥

ஸ்நாத்வா நித்ய விதிம்க்ருத்வா குர்யாச் சுத்தோப வாஸகம் ।
தேவேசம் கந்ததைலேந பிஷ்டாத்யைரபி மந்த்ரவித் ॥

நீராடி நித்ய கர்ம அனுஷ்டானங்களை முடித்து சுத்தமாக உணவில்லாமலும் யாருடன் தேவையில்லாமல் பேசாமலும் இரவில் விழிப்போடு இருந்து இறைவனுக்கே இறைவனான முருகப் பெருமானை சந்தனாதி தைலம், அரிசி மாவுப் பொடி போன்றவைகளால் மந்திரத்தோடு கூடிய மந்த்ரமயமான ஆசார்யர்

गव्यै: पञ्चामृतैश्चैव प्रतियामं विशेषत: ।
विल्वोदै: शुद्धतायैश्च गन्धोदै: शुद्धतोयकै: ॥ ३३१ ॥

கவ்யை: பஞ்சாம்ருதைச்சைவ ப்ரதியாமம் விசேஷத:।
பில்வோதைச் சுத்த தோயைச்ச கந்தோதைச் சுத்த தோயகை: ॥

பஞ்சகவ்யம் பஞ்சாமிருதம் வில்வ பத்திர நீர், சுத்த நீர், நறுமணஞ்சேர் நீர், சுத்த நீர் இவைகளால் ஒவ்வொரு யாமத்திலும் இடம்பெறும் நான்கு யாமப்பூசைகளிலும்

चन्दनागरुकर्पूरकुङ्कुमैश्च क्रमेण तु ।
मल्लिकोत्पलपुष्पैश्च जातिपुष्पैश्च बिल्वकै: ॥ ३३२ ॥

சந்தனாகரு கற்பூர குங்குமைஸ்ச க்ரமேணது ।
மல்லிகோத் பல புஷ்பைஸ்ச ஜாதி புஷ்பைஸ்ச பில்வகை: ॥

சந்தனம், அகரு, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, மல்லிகை, நீலோத்பலம், ரக்தோத்பலம், ஜாதிமுல்லை, வில்வம், தாமரை மலர்களாலும்

सुवर्णभूषणै रत्नै: प्रवालैर्मौक्तिकैरपि ।
पायसै: कृसरान्नैश्च यवान्नैश्च गुलान्नकै: ॥ ३३३ ॥

சுவர்ண பூஷணைரத்நை: ப்ரவாளைர் மௌத்திகை ரபி ।
பாயஸை: க்ருஸராந்நைஸ்ச ஜாதிபுஷ்பைஸ்ச பில்வகை: ॥

தங்க அணிகலன்களாலும் நவரத் தினங்களுள் பவழம், முத்து போன்றவைகளாலும் வெண்பொங்கல், பாயசான்னம், எள்ளன்னம், சுத்தான்னம், வில்வம், தாமரை, ஜாதிமுல்லை, நந்தியாவர்த்தம் முதலிய மலர் பத்திரங்களாலும்

व्यञ्जनाज्यपय: पूर्णै: प्रतियामं समाहितम् ।
रम्भाफलेक्षुदण्डैश्च ताम्बूलमपि दापयेत् ॥ ३३४ ॥

வ்யஞ்சநாஜ்ய பய: பூர்ணை: ப்ரதியாமம் ஸமாஹித:!
ரம்பாபலேக்ஷு தண்டைஸ்ச தாம்பூலம
பிதாபயேத்!!

உப உணவு பதார்த்தங்களோடு பால், பாயஸம் இவைகளோடு ரஸ்தாளி பழம், முழுக் கரும்புகளோடு மணமிகு தாம்பூலமும் சமர்ப்பிக்க வேண்டும்.

मूलेन स्कन्दसूक्तेन ब्रह्ममूर्त्यङ्गमन्त्रवित् ।
श्रीरुद्रं चमकेनैव प्रतियामं सुपूजयेत् ॥ ३३५ ॥

மூலேந ஸ்கந்த ஸூக்தேந ப்ரம்ம மூர்த்யங்க
மந்த்ரவித்!
ஸ்ரீ ருத்ரஞ்ச மகேநைவ ப்ரதியாமம் சுபூஜயேத்!!

முருகனின் மூலமந்திரமான ஆறெழுத்து மந்திரத்துடன் ஸ்கந்த சூக்தம் எனும் யஜுர் வேத மந்திரத்துடனும் பஞ்சபிரும்ம மந்திரங்களோடும் ஒவ்வொரு யாமமும் நன்கு பூஜை செய்ய வேண்டும்.

घृतवर्तिसुदीपांश्च दीपयेत्तोषयेद्गुहम् ।
जपै: स्तोत्रै: प्रदक्षिण्यैर्नमस्कारैर्महामुने ॥ ३३६ ॥

க்ருதேந வார்த்திஸு தீபாம்ச தீபயேத்தோஷயேத்
குஹம்!
ஜபைஸ்தோத்ரை: ப்ரதக்ஷிண்யைர்
நமஸ்காரைர்மஹாமுநே!!

மா முனிவரே! நெய் தீபமேற்றி நெய்தீபங்காட்டி, ஜபங்கள், தோத்திரங்கள், வலம் வருதல் நமஸ்காரங்கள் செய்தல் வழி. முருகனை முழு முதல்வனை முழுமனதோடு மகிழும் வண்ணம் செய்தல் செய்வித்தல் சிறப்பு.

रात्रिं जागरतो नीत्वा प्रात:स्नानादिकर्म च ।
कृत्वा देवं समभ्यर्च्य प्रभूतहविषं ददेत् ॥ ३३७ ॥

ராத்ரிஞ்சாக ரதோநீத்வா ப்ராதஸ்நாநாதிகர்மச!
க்ருத்வா தேவம் ஸமப்யர்ச்ய ப்ரபூத
ஹவிஷந்ததேத்!!

இரவை இனிய புனித இரவாகக் கண் விழித்து மறுநாள் காலை நீராடி நித்ய கடன்களை முடித்துக் கொண்டு முருகனை மீண்டும் அர்ச்சித்து சுவைமிகு நிறை உணவாம் நிவேதனம் நிவேதித்து (விநியோகிக்க)

ब्राह्मणान् शिवभक्तांश्च दीनानाथांश्च भोजयेत् ।
यथा शक्तिसुवर्णादि तेभ्यो दानं प्रयच्छताम् ॥ ३३८ ॥

ப்ராம்மணாந் சிவபக்தாம்ஸ்ச தீநாநாதாம்ஸ்ச
போஜயேத்!
யதாசக்தி சுவர்ணாதி தேப்யோதானம் ப்ரயச்சதாம்!!

அந்தணர்களையும், அறவோர்களையும், ஏழைகளையும், குருடர்களையும், முடிந்த அளவு அன்னமிட்டு அவர்களுக்கு முடிந்த அளவு தங்க தானமும் செய்யற்பாலதாக கூறப்படுகிறது.

एवं य: कुरुते मर्त्य: विमुक्त: सर्वपातकै: ।
अश्वमेधसहस्रस्य फलं प्राप्नोत्यसंशय: ।
शिवरात्र्यर्चनं प्रोक्तं श्रृणु फाल्गुनपूजनम् ॥ ३३९ ॥

ஏவம்ய: குருதே மர்த்ய: விமுக்தஸ்ஸர்வபாதகை:!
அஸ்வமேத சகஸ்ரஸ்ய பலம்
ப்ராப்நோத்யஸம்சய:!!
சிவராத்ரியார்ச்சனம் ப்ரோக்தம் ச்ருணு பால்குண
பூஜனம்!!!

இவ்வாறு எவரெவர் செய்கிறாரோ அவரவர் தனது முன்வினை தன்வினை தீவினைகளிலிருந்து விடுபடுவதோடு மட்டுமல்லாமல் உயர்ந்த யாகமெனக் கூறப்படும்

அஸ்வமேத யாகம் ஆயிரம் செய் பயனை அடைவார்கள் என்பது ஐயமறு உண்மையாகும்.

इति शिवरात्रिपूजाविधि:

இது சிவராத்திரி பூஜை முறையாகும்.

।। फाल्गुनमासपूजा ।।

பால்குண மாஸ பூஜா

பங்குனி மாத பூஜை முறை

फाल्गुने मासि विधिना पूजेदुत्तरफाल्गुने ।
बालानाञ्च पशूनाञ्च वर्धन्ते मुनिसत्तमा: ।
स्नात्वा गोप: पटाद्ववत्रं बध्वा दुग्ध्वा गवां पय: ।।३४०।।

பால்குனே மாசிவிதினா பூஜேதுத்தர பால்குனே !
பாலாநாஞ்ச பதூநாஞ்ச விருத்யந்தே மனுஸத்தமா:!!
ஸ்நாத்வா கோப: படாத்வக்த்ரம் பத்வா துக்த்வாக வாம்பய:!!!

பங்குனி மாத மாதபூஜை முறைப்படி பருவத்தோடு சேர்ந்தோ தனித்தோ வரும் உத்திர நக்ஷத்திரத்தில் செய்ய வேண்டும்.

சிறுவர்களுக்கும் (உயிர்க் கூட்டங் களுக்கும்) சிறப்பாக பசுமாடுகளுக்கும் நல்லவையனைத்தும் வளர்ச்சியடையும் (இப்பூசையால்) பசு வளர்க்கும் பரிபாலிக்கும் (கறவைக்குரிய பசுவை முறைப்படி கறக்கும் திறமையுடையவர்கள் நீராடி பசும்பாலை கறந்து (அளிக்க வேண்டும்)

देवागारेऽग्निना तप्त्वा दधि कृत्वा पिधानयुक् ।
घृतस्योक्तप्रमाणेपु यथालाभं प्रगृह्य च ।। ३४१ ।।

தேவாகா ரேக்நிநா தப்த்வா ததிக்ருத்வா பிதானயுக் !
க்ருதஸ்யோக்த ப்ரமாணேஷு யதாலாபம் ப்ரக்ருஹ்யச !!

முருகனாலயத்திலேயே நன்கு காய்ச்சி சற்று சூடுஇருக்கும் போது கொஞ்சம் உப்பு போடாத புளிக்காத மோரைச் சேர்த்து நன்கு மூடி வைத்திருந்து தயிராக்கி நெய்யாக ஆகக்கூடிய பாலாடை நீக்கி கடையாத தயிரை எடுத்துக் கொண்டு

देवाग्रे स्थण्डिले न्यस्त्वा पुण्याहप्रोक्षणं चरेत् ।
पुष्पैरभ्यर्च्य मूलेन व्रह्ममूर्त्यङ्गमन्त्रकै: ।। ३४२ ।।

தேவாக்ரேஸ்தண்டிலேந்யஸ்த்வா புண்யாகப்ரோக்ஷணஞ்சரேத் !
புஷ்பைரப்யர்ச்ய மூலேந ப்ரம்மமூர்த்யங்க மந்த்ரகை:!!

முருகனுக்கு முன்பு சிறுமேடையில் ஆசனத்தின் மேல் முறைப்படி தயாரிக்கப்பட்ட தயிரை வைத்து புண்யாக பஞ்சகவ்ய ப்ரோக்ஷணம் செய்து மூலமந்திரமான ஆறெழுத்து மந்திரத்தால் மலர்களால் அர்ச்சித்து பஞ்சபிரும்ம ஷடங்கமந்திரங்களாலும் பூசித்து

धूपदीपं ततो दत्वा मध्याह्ने पूजयेद्गुहम् ।
गव्यै: पञ्चामृतै: स्नात्वा स्कन्दमूलेन मन्त्रवित् ।। ३४३

தூபதீபந்த தோதத்வா மத்யாஹ்நே பூஜயேத்குஹம் !
கவ்யை: பஞ்சாம்ருதைஸ்நாத்வா ஸ்கந்த மூலேந மந்த்ரவித் !!

தூபங்காட்டி, தீபங்காட்டு, நிவேதித்து, பிரார்த்தித்து மதிய உச்சிப்பூசையில் முருகனுக்கு அபிஷேகிக்கும்போது பஞ்ச கவ்யம், பஞ்சாமிருத அபிஷேகத்தை முருகனின் மூலத்தாலும் மாலா மந்திரத்தாலும் மந்திரமறிந்த அர்ச்சகர்

तत: कुमारमातेति मन्त्रेण दधिपूजनम् ।
ततो दधिक्राविण्णेवाभिषेचयेत् ।। ३४४ ।।

தத: குமார மாதேதி மந்த்ரேண ததிபூஜனம் !
ததோ ததிக்ராவிண்ணேதி மந்த்ரேணைவாபிஷேசயேத் !!

பிறகு மாதே குமாரமென யஜுர்வேத மந்திரத்தால் தயிரை அபிமந்த்ரணம் செய்து ததிக்ராவிண்ணோ என்னும் மந்திரத்தால் முருகனுக்கு முழுதும் அபிஷேகிக்க வேண்டும்.

वस्त्रैर्गन्धैश्च पुष्पैश्च भूषणेर्भूषणार्हकैः ।
कर्णिकारभवैः पुष्पैर्नैरन्तर्यं विभूषयेत् ॥ ३४५ ॥

வஸ்த்ரைர் கந்தைஸ்ச புஷ்பைச்ச
பூஷணைர்பூஷணார்ஹகை:।
கர்ணிகாரபவை: புஷ்பைர்நைரந்தர்யம்
விபூஷயேத் ॥

அணிவிக்கத்தக்க ஆடை அணிகலன்களாலும் மணம்மிகு மலர்மாலைகளாலும் தாமரை மலர்களாலும் அலங்கரிக்கவும்.

प्रभूतहविषं दत्वा ब्राह्मणान् भोजयेत्ततः ।
एवं यः कुरुते मर्त्यः समृद्धः पशुमान् भवेत् ।
प्रोक्तं फाल्गुनपूजा च नवनैवेद्यमुच्यते ॥ ३४६ ॥

ப்ரபூத ஹவிஷந்தத்வா ப்ராம்மணாந் போஜயேத்தத:।
ஏவம்ய: குருதே மர்த்யஸ்ஸம்ருத: பசுமாந் பவேத் ॥
ப்ரோக்தம் பால்குண பூஜாச நவநை
வேத்யமுச்யதே ॥।

தாராளமான அளவில் சக்திக்குத்தக்க சுவைமிகு (பள்ளயம் பாவாடை) எனும் வழக்கில் உள்ள சொற்பொருள் வண்ணம் முருகனுக்கு முன்பு முறையாக படையல் செய்து (தயிர்சாதம்) நிவேதித்து அந்தணர்களுக்கு அன்னதானம் அளிக்க வேண்டும். இவ்வாறு எவர் தவறாமல் முறை வழுவாது முடிந்தவரை இயற்றி வருகிறாரோ அவர் நிறைய கரக்கும் பசுக்களை உடையவராவார்

इति फाल्गुनमासपूजाविधिः

இது பங்குனி மாத பூஜை முறையாகும்.

॥ नवनैवेद्यम् ॥

நவநைவேத்யம்

நவ நைவேத்யம் செய்யும் முறை

सर्वसस्याभिवृद्ध्यर्थं सर्वप्राणिसुखावहम् ।
प्रीणयेन्नवनैवेद्यविधिना पार्वतीसुतम् ।
आषाढकन्यकामासे मार्गशीर्षश्च माघकः ॥ ३४७ ॥

ஸர்வ ஸஸ்யாபிவ்ருத்யர்க்தம் ஸர்வ ப்ராணி
சுகாவஹம்।
ப்ரீணயேந்நவ நைவேத்யம் விதிநாபார்வதீசுதம் ॥
ஆஷாடகந்யகாமாஸே மார்க சீர்ஷஸ்ச மாகக:॥।

எல்லாப் பயிர்களும் ஏராளமாக, தாராளமாக, விளைவதற்கும், எல்லா உயிர்களும் சுகமாக வாழ்வதற்கும் ஒன்பது வகை நிவேதனங்களால் பார்வதி பாலனான முருகப் பெருமானுக்கு ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி ஆகிய 4 மாதங்கள்.

நீங்கலாக மீதி எட்டு மாதங்களும் வளர்பிறையில் ஒன்பது நிவேதனங்கள் செய்யத்தக்கது (தேய்பிறை நீக்கப்பட்டுள்ளது)

एते त्वशोभना वर्ज्याः शेषमासाः शुभाः स्मृताः ।
गर्हितं कृष्णपक्षं स्यात् शुक्लपक्षे समाचरेत् ॥ ३४८ ॥

ஏதேத்வ சோபநா வர்ஜ்யாஸ்ஸேஷ மாஸாஸ்
சுபாஸ்ம்ருதா:।
கர்ஹிதம் க்ருஷ்ணபக்ஷம்ஸ்யாத் சுக்ல
பக்ஷேஸமாரேத்॥

த்விதீயை, திருதீயை, பஞ்சமி, ஸப்தமி, திதிகளிலும் பூசம், மகம், அவிட்டம் முதலிய நக்ஷத்திரங்களிலும்

सप्तमी च द्वितीया च तृतीया पञ्चमी शुभा: ।
पूषा मखा च सावित्री श्रविष्ठा वसवस्तथा ॥ ३४९ ॥

ஸப்தமீச த்விதீயாச த்ருதீயா பஞ்சமீசுபா:!
பூஷாமகா சஸாவித்ரீ ச்ரவிஷ்டா வஸவஸ்ததா!!

விசாகம், மூலம் இவைகள் சுபமான நக்ஷத்திரங்கள் எனவும் ஏனையவை நீக்கத்தக்க தென்றும் (அறியப்படுகிறது)

विशाखा च वारुणं मूलं सौम्यं चैव प्रजापति: ।
शूभान्येतानि ऋक्षाणि वर्ज्यान्यन्यानि सुव्रत ॥ ३५० ॥

விசாகா வாருணம் மூலம் சௌம்யம்சைவ ப்ரஜாபதி:!
சுபாந்யேதாநிருக்ஷாணி வர்ஜ்யாந்யாநி சுவ்ருத!!

அவ்வாறே பங்குனி, சித்திரை, ஆடி, கார்த்திகை மாதங்களும் விலக்கப்பட்டுள்ளன. மற்றவைகள் சுபமெனவும் கொள்ள வேண்டும். அவைகள் நலமளிக்காததால் நீக்கப்பட்டது.

वर्जनीयास्तथा मीनमेषकर्कटवृश्चिक: ।
अन्या च शूभदा: प्रोक्तास्तेषां पापं विवर्जयेत् ॥ ३५१ ॥

வர்ஜநீயா ஸ்ததா மீன மேஷ கர்கட வ்ருச்சிகா:!
அந்யாச்ச சுபதா ப்ரோக்தா ஸ்தேஷாம் பாபம் விவர்ஜயேத்!!

வெள்ளிக் கிழமையும், திங்கள் கிழமையும், வாரங்களில் சிறந்த கிழமையாகக் கொள்ளப்படுகிறது. மேற்படி கிழமைகளிலும், மாதங்களிலும், நக்ஷத்திர திதிகளிலும், கூட திரேக்காண குண்டலிபடியும் ஹோரையின் படியும் தேர்ந்தெடுத்து மேலும் சுபமாகக் கருதப்படுகிறது.

शुक्रश्च सोमदेवेड्यवारा: श्रेष्ठतमा स्मृता: ।
द्रेक्काणदर्शनं हारा: शूभांशा शुभदं भवेत् ॥ ३५२ ॥

சுக்ரச்ச ஸோம தேவேட்ய வாரா ச்ரேஷ்ட தமாஸ்ம்ருதா:!
த்ரேக்காண தர்சநம் ஹோரா சுபாம் சாச்சுபதம் பவேத்!!

நல்ல நாளில் நல்ல வேளையில் நல்ல முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுத்து வளர்பிறையில் அர்ப்பணிக்க வேண்டும். எல்லா மங்கள வாத்யங்களோடும் குடை கொடிகள் சூழ

सुमुहूर्तं सुनिश्चित्य पूर्वे पाण्डरमपयेत् ।
मर्वातोद्यसमायुक्तं छत्रध्वजसमाकुलम् ॥ ३५३ ॥

சுமுஹூர்தம் ஸுநிச்சித்ய பூர்வே பாண்டர மர்பயேத்!
ஸர்வாதோத்ய ஸமாயுக்தம் சத்ரத்வஜ ஸமாகுலம்!!

தூப தீபங்களோடு ஆலய பரிபாலன சபையோர்களோடு சுமித்ர சண்டிகேஸ்வரர் கூட வர ஸ்ரீ முருகன், வள்ளி, தெய்வானை சமேதராக எல்லா பக்த ஜனங்களோடு கூட

धूपदीपसमायुक्तं पालकादिसमन्वितम् ।
सुमित्रसक्तिसहितं नानाभक्तजनैर्युतम् ॥ ३५४ ॥

தூப தீப ஸமாயுக்தம் பாலகாதி ஸமந்விதம்!
ஸுமித்ர சக்தி ஸஹிதம் நாநா பக்த ஜநைர்யுதம்!!

கிழக்காகவோ, வடக்காகவோ உள்ள நன்கு பயிர் விளையும் நிலத்தில் நுழைந்து தயிரன்னமோ, வெல்ல அன்னமோ திசைத் தேவர்களான எண்மருக்கும் பலியிட வேண்டும்.

पूर्वस्यामुतरस्यां वा सस्यक्षेत्रं प्रविश्य च ।
दध्यन्नं वा गुलान्नं वा दिग्देवानां बलिं क्षिपेत् ॥ ३५५ ॥

பூர்வஸ்யா முத்தரஸ்யாம்வா ஸஸ்யா க்ஷேத்ரம் ப்ரவிச்யச!
தத்யந்நம் வாகுளாந்நம் வா திக்தேவாநாம் பலிம் க்ஷிபேத்!!

நல்ல வெள்ளை நெல்லிலிருந்து கிடைத்த அரிசியை எடுத்து அஸ்த்ர மந்திரத்தால் அபிமந்திரித்து எடுத்துக் கொண்டு ஆலயத்திற்கு திரும்ப வந்து

शाल्येन पक्वकलमान् संगृह्यास्त्रेण मन्त्रत: ।
शूकभारान् समावाह्य प्रविशेदालयं तत: ॥ ३५६ ॥

சால்யேந பக்வகளமாந் ஸங்க்ரஹ்யாஸ்த்ரேண மந்த்ரத:!
சூக பாராந் ஸமாவாஹ்ய ப்ரவிசேதாலயந் தத:!!

நீராடி திருமுருகனுக்கு திருவாபரணங் களால் அலங்கரித்து அக்காலத்தில் கிடைக்கும் நீப புஷ்பங்கள் முதலியவைகளால் மாலை தொடுப்பித்து

स्नात्वा चोत्सवबेरन्तु भूषपेद्भूषणार्हकै: ।
तत्कालसंभवै: पुष्पैर्नीपपुष्पैर्विशेषत: ॥ ३५७ ॥

ஸ்நாத்வா ஸோத்ஸவபேரந்து பூஷயேத்பூஷணார்ஹகை:!
தத்கா ல ஸம்பவை: புஷ்பைர் நீப புஷ்பைர் விசேஷத:!!

எல்லா முயற்சிகளுடனும் குடை கொடியோடு கூட நெல் முட்டைகளோடு கூடவும்

सर्वातोद्यसमायुक्तं छत्रध्वजसमायुतम् ।
शूकभारसमायुक्तं व्रीहिभारसमन्वितम् ॥ ३५८ ॥

ஸர்வா தோத்ய ஸமாயுக்தம் சத்ரத்வஜ ஸமாயுதம்!
சூகபார ஸமாயுக்தம் வ்ரீஹிபார ஸமாயுதம்!!

எல்லா வித பழங்களுடனும் எல்லா வகை தான்யங்களுடனும், கரும்பு, காய்கறிகள், கிழங்கு வகைகளுடனும்

नानाविधफलैर्युक्तं नानाधान्यसमन्वितम् ।
इक्षुशाखार्द्रशाखाभिर्निशिशाखासमायुतम् ॥ ३५९ ॥-

நாநா வித பலைர்யுக்தம் நாநாதாந்ய ஸமந்விதம்!
இக்ஷு சாகார்த்ர சாகாபிர் நசிசாகா ஸமாயுதம்!!

பாக்குப் பழம், எள், மிளகு, உப்பு, தேங்காய், பலா, வெல்லங்களோடு கூட

क्रमुकैस्तिलशाखाश्च मरीचिलवणैर्युतम् ॥ ३६० ॥
नालिकेराम्रपनसगुलखण्डै: समन्वितम् ।

க்ரமுகைஸ்தில சாகாச்ச மரீசி லவணைர் யுதம்!
நாளிகேராம்ர பநஸ குளகண்டைஸ் ஸமந்விதம்!!

தயிர், நெய் கும்பங்களோடு பாசிப்பயிறு இவைகளை புதுப்பானையில் எல்லா மலர்களோடும் அந்தணர் முதலான அகில ஜனங்களும் சேவிக்கும்படி

दध्याज्यतैलकुम्भैश्च मुद्गभिन्नघटैर्नवै: ॥ ३६१ ॥
नानापुष्पसमायुक्तं विप्रादिजनसेवितम् ।

தத்யாஜ்ய தைல கும்பைச்ச முத்கபிந்த கடைர்நவை:!
நாநா புஷ்ப ஸமாயுக்தம் பிப்ராதி ஜந ஸேவிதம்!!

அறிஞரான அர்ச்சகர் திருமுருகன் உற்சவ மூர்த்தியை வீதிவலம் செய்வித்து ஆலயம் வந்து அவருடைய இடத்தில் ஸ்தாபித்து

उत्सवं स्वामिनं विद्वान् कुर्यात् ग्रामप्रदक्षिणम् ॥ ३६२ ॥
प्रविश्य भवनं तत्र स्वस्थाने स्थाप्य देवतान् ।

உத்ஸவ ஸ்வாமிநம் வித்வாந் குர்யாத் க்ராம ப்ரதக்ஷிணம்!
ப்ரவிச்ய பவநந்தத்ர ஸ்வஸ்தாநே ஸ்தாப்ய தேவதாம்!!

மண்டபத்தை சுத்தப்படுத்தி பசுஞ்சாணங் கொண்டு மெழுகி புண்யாக வாசன நீரால் தெளித்து அலங்கரித்து கொடி மேகட்டியாலும் அலங்கரிக்க வேண்டும்.

मण्डपं गोमयेनैव लेपयित्वा विभूषयेत् ॥ ३६३ ॥
पुण्याहतोयैस्संप्रोक्ष्य तरङ्गेणैव भूषयेत् ।

மண்டபம் கோமயேநைவ லேபயித்வா விபூஷயேத்!
புண்யாஹ தோயை ஸ்ஸம்ப்ரோக்ஷ்ய தரங்கேணைவ பூஷயேத்!!

அதன்மேலே வைத்து தனித்தனியே இவைகளையும் வைத்து முருகன் வேண்டுதல் அனுமதியோடு எல்லா மக்களுக்கும் அளிக்க வேண்டும்

तस्योर्ध्वे विन्यसेच्छूकभारानेतान् पृथक्पृथक् ।
देवेशानुज्ञया शूकान् जनेभ्यो दापयेत्सुधीः ॥ ३६४ ॥

தஸ்யோர்த்வே விந்யஸேச்சூக பாராநேதாந் ப்ரதக் ப்ரதக் !
தேவேசாநுஜ்ஞயா சூகாந் ஜநேப்யோ தாபயேத் சுதீ: !!

புது விதமான ஒன்பது வகை நெல்லனைத்தையும் (குறை சொல்லா வண்ணம்) சூரிய வெயிலில் உணர்த்தி நெல் மணிகளை உரல் உலக்கைகளால் (குத்தி நெல் மணிகளை அரிசியாக்கி)

नवशालियुतं त्वेकशालीभारमनिन्दितम् ।
आदित्यरश्मिभिस्तप्तान् धान्यान् मुसललूखलैः ॥३६५॥

நவசாலி யுதம்த்வேக சாலீபாரம நிந்திதம் !
ஆதித்ய ரச்மிபிஸ் தப்தாந் தாந்யாந்முஸல லூகலை:!!

சுத்தமான மண்டபத்தில் அரிசி மாவினால் கோலம் போட்டு அதன் மேல் நெல்லில் (அரிசி நவதான்யங்கள் மேல் எள், நெல் பொறியிட்டு) எட்டிதழ் தாமரை கீறி

देवस्य मण्डपे शुद्धे शालिपिष्टैरलंकृते ।
शालिभिस्थण्डिलं कृत्वा पद्ममष्टदलं लिखेत् ॥ ३६६ ॥

தேவஸ்ய மண்டப சுத்தே சாலி பிஷ்டைரலங்க்ருதே !
சாலி பிஸ்தண்டிலங் க்ருத்வா பத்ம மஷ்ட தளம் லிகேத் !!

அதன்மேல் தர்பைகளை வடக்கு நுனியாக பரப்பி அஸ்த்ர மந்திரத்தினால் நீர் தெளித்து இருதய மந்திரத்தினால் உரலை வைத்து உலக்கைகளையும் வைத்து

परिस्तीर्य ततो दर्भैः प्रोक्षयेदस्त्रमन्त्रतः ।
लूखलं मुसलं तत्र विन्यस्य हृदयाणुना ॥ ३६७ ॥

பரிஸ்தீர்ய ததோதர்பை: ப்ரோக்ஷயேதஸ்த்ர மந்த்ரத:!
லூகல முஸலந்தத்ர விந்யஸ்ய ஹ்ருதயாணுநா !!

புத்தாடையினால் சுற்றி முறைப்படி தத்வத்ரயங்களை அர்ச்சித்து நெல்லிட்டு இரு உலக்கைகளால் மாற்றி மாற்றி குத்தி

नववस्त्रेण संवेष्ट्य समभ्यर्च्य यथाविधि ।
प्रहृत्य मुसलेनैव बीजमुख्येन देशिकः ॥ ३६८ ॥

நவ வஸ்த்ரேண ஸம்வேஷ்ட்ய ஸமப்யர்ச்ய யதாவிதி!
ப்ரஹ்ருத்ய முஸலேநைவ பீஜமுக்யேந தேசிக:!!

நான்கு வர்ண நங்கைகளாலும் குத்திப் பிறகு முறங்களால் உமிகளை நீக்கி கல்கட்டிப் போன்றவற்றையும் நீக்கி

चतुर्वर्णोद्भवैस्स्त्रीभिः कुट्टयेत्तदनन्तरम् ।
तुषान् विपोह्य शूर्पैस्तु कणकम्बुं च वर्जयेत् ॥ ३६९ ॥

சதுர்வர்ணோத்ப வைஸ்த்ரீபி: குட்டயேத்த தநந்தரம் !
துஷாந்வி போஹ்ய சூர்பைச்ச கணகம்புஞ்ச வர்ஜயேத் !!

ஒரு பாரம் முதல் (எட்டு மணங்கு) x 5 வீசை (359 gr- 1 பலம்) 280, 300 gr (1 சேர்) (5சேர் ஒரு வீசை) ஒன்பது பாரம் வரை முறையே அதமம், மத்யமம், உத்தமம் எனக் கருதப்படுகிறது. அரிசியைக் கல், நொய், உமி, தவிடு நீக்கிய பின் நன்கு களைந்து தேங்காய், வெல்லத்தோடு

भारादिनवभारान्तं कन्यसादित्रयं त्रयम् ।
प्रक्षाल्य तण्डुलं शोध्य नालिकेरगुलान्वितम् ॥ ३७० ॥

பாராந்த நவ பாராந்தம் கந்யஸாதி த்ரயம் த்ரயம் !
ப்ரக்ஷால்ய தண்டுலம் சோத்ய நாளிகேர குளாந்விதம் !!

மிளகு, ஜீரகம், கரும்புதுண்டு, கலந்து முருகனுக்கு முன்பு புத்தாடை விரித்து அதன்மேல் பரப்பி மந்த்ர சுத்தி செய்யவும்

मरीचिजीरकोपेतमिक्षुखण्डसमन्वितम् ।
वस्त्राण्यास्तीर्य देवाग्रे शुद्धिं कृत्वा यथारूचि ॥ ३७१ ॥

மரீசீ ஜீரகோ பேத மிக்ஷுகண்ட ஸமந்விதம் !
வஸ்த்ராண் யாஸ்தீர்ய தேவாக்ரே சுத்திங்க்ருத்வா யதாருசி !!

அதன்மேல் வாழை இலைகளை வடக்கு அல்லது கிழக்கு நுனிகள் அமையுமாறு விரித்து புனித நீரால் அஸ்த்ர மந்த்ரத்தால் தெளித்து எல்லாவித உப உணவுகளையும் சர்க்கரைப் பொங்கலைப் படைத்து - மேற்கூறிய அரிசியையும் பரப்பி

रम्भापत्राणि तस्योर्ध्वे संस्तीर्य प्रोक्ष्य चास्त्रत: ।
तण्डूलं पूरयेत् तत्र गुलान्नं व्यञ्जनैर्युतम् ॥ ३७२ ॥

ரம்பா பத்ராணி தஸ்யோர்த்வே ஸம்ஸ்தீர்ய ப்ரோக்ஷ்ய சாஸ்த்ரத:!
தண்டுலம் பூரயேத்தத்ர குளாந்நம் வ்யஞ்ஜன நர்யுதம் !!

மேலும் கிழங்கு பழங்களோடு பொருளாதார அடிப்படையில் கூட்டியோ குறைத்தோ நடுத்தரமாகவோ வாங்கி அர்ப்பணித்து சங்க மங்கள துந்துபி வாத்யங்களோடு வேத மந்திரங்களும் முழங்க வேண்டும்

कन्दमूलफलोपेतं यथाविभवविस्तरम् ।
शङ्खदुन्दुभिनिर्घोषैर्वेदध्वनिसमायुतम् ॥ ३७३ ॥

கந்தமூல பலோபேதம் யதாவிபவ விஸ்தரம் !
சங்க துந்துபி நிர்கோஷைர் வேதத்வநி ஸமாயுதம் !!

இருதய மந்திரத்தினால் முருகனுக்கு முழுதும் அர்ப்பணிக்க வேண்டும். பிறகு முருகனுடைய பரிவார மூர்த்தங்களுக்கும் முடிவில் சுமித்ர சண்டிகேஸ்வரருக்கும் அர்ப்பணித்து

हृदयेन तु भन्त्रेण सुब्रह्मण्याय दापयेत् ।
परिवारामराणाञ्च दापयेत्तदनन्तरम् ॥ ३७४ ॥

ஹ்ருதயேநது மந்த்ரேண ஸுப்ரஹ்மண்யாய தாபயேத் !
பரிவாராம ராணாஞ்ச தாபயேத்தத நந்தரம் !!

பரிவார தேவதைகளுக்கு பலியிட்டு பலிபீடம் வரை பூசித்து புதுக் கொட்டைப்பாக்கோடு வெற்றிலையும் பிறகு நிவேதிக்க

परिवारबलिं दत्वा महापीठान्तमेव च ।
नवपूगफलैर्युक्तं ताम्बूलं दापयेतत: ॥ ३७५ ॥

பரிவார பலிம்தத்வா மஹாபீடாந்த மேவச !
நவ பூகபலைர்யுக்தந் தாம்பூலந்தாப யேத்தத:!!

எல்லா நிவேதனங்களை முடிவில் சுமித்ர சண்டிகேஸ்வரருக்கு கொடுக்க வேண்டும். அந்தணர்களுக்கும் அனைத்து பக்தர்களுக்கும் வெல்லம், தேங்காய், கரும்பு கலந்த அரிசியை வழங்க வேண்டும்.

निवेदितन्तु यत्सर्वं सुमित्राय प्रदापयेत् ।
विप्रादिसर्वभक्तेभ्यस्तण्डलं दापयेत्क्रमात् ॥ ३७६ ॥
ब्राह्मणान् भोजयेत्पश्चात् दीनानाथांश्च भोजयेत् ।
आत्मनो हितमाकांक्षान् य एवं विधिमाचरेत् ॥ ३७७ ॥

நிவேதிதந்து யத்சர்வம் சுமித்ராய ப்ரதாபயேத் !
விப்ராதிஸர்வ பக்தேப்ய ஸ்தண்டுலந்தாப யேத்க்ரமாத் !!
ப்ராம்மணாநு போஜயேத்பஸ்சாத் தீநாநாதாம்ஸ் சபோஜயேத் !
ஆத்மநோஹித மாகாங்க்ஷந் யஏவம் விதிமாசரேத் !!

முதலில் அந்தணர்களுக்கு அன்னமளித்துப் பிறகு அனைத்து அடியார்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும்,

வறியவர்களுக்கும், குருடர் முதலான வர்களுக்கும் அன்னமளிக்க வேண்டும். முறைப்படி இயற்றுமெவரும் தான் விரும்பியதைப் பெறுவர் உறுதி.

॥ इति श्रीकुमारतन्त्रे मासपूजाविधिर्नाम एकोनचत्वारिंशः पटलः ॥

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிகப்ரச்னே மாசபூஜாவிதி: நாம ஏகோந சத்வாரிம்சத் படல:

இவ்வாறு குமார தந்த்ரமெனும் கௌசிக ப்ரச்னத்தில் ஸ்ரீமத் லலிதாகமத்தின் உபாகமத்தில் மாச பூஜா விதி படலம் எனும் முப்பத்தொன்பதாவது படலம் முற்றிற்று.

॥ चत्वारिंशत्पदलः ॥

சத்வாரிம் சத்படல:

40 வது படலம்

अङ्कुरार्पणविधिः

அங்குரார்பண விதிபடல:

அங்குரார்ப்பணம் செய்யும் முறை

सर्वमङ्गलमाङ्गल्यं प्रवक्ष्याम्यं कुरार्पणम् ।
अनंकुरं नयेत्कर्म तत्कर्म निष्फलं भवेत् ॥ १ ॥

ஸர்வ மங்களமாங்கல்யம் ப்ரவக்ஷ்யாம்
யங்குரார்ப்பணம்!
அநங்குரந்நயேத் கர்ம தத்கர்ம்ம நிஷ்பலம்பவேத்!!

மங்களத்தையே செய்யும் மங்களகரமான முளைப்பாலிகையிடும் (கிரியையைப் பற்றி) சடங்கைப் பற்றி கூறுகிறேன். அங்குரார்ப் பணமின்றி என்ன நடைபெறுகிறதோ அந்த காரியம் பயனற்றதாகி விடும்.

तस्मान्मङ्गलकर्मादौ कारयेदङ्कुरार्पणम् ।
अयुगेऽह्निप्रकर्तव्य कर्मण: पूर्वतो निशि ॥ २ ॥

தஸ்மாந் மங்கள கர்ம்மாதௌ காரயே
தங்குரார்ப்பணம்!
ஆயுகேந்ஹி ப்ரகர்த்தவ்யம் கர்ம்மண: பூர்வதோ
நிசி!!

ஆகையினால் சுபகாரியங்களின் ஆரம்பத்தில் அங்குரார்ப்பணம் செய்விக்கப்பட வேண்டும். யாகாரம்பத்திற்கு முதல்நாள் இரவில் ஒற்றைப்படை இரவில் இரட்டைப்படை பகல் கணக்கில் (நாள் கணக்கில்) செய்விப்பது (செய்யத்தக்கது) நலம் (முறை)

पालिकाघटिकाश्चैव शरावञ्च त्रिधा भवेत् ।
ईशविष्णुविरिञ्चिश्च तेषामेवाधिपा: स्मृता: ॥ ३ ॥

பாலிகாகடிகாம் ச்சைவ சராவஞ்ச திருதாபவேத்!
ஈச விஷ்ணு விரிஞ்சாச்ச தேஷாமே
வாதிபாஸ்மிருதா:!!

பாலிகை, கடிகை, சராவம், என முளைப்பாலிகைகள் மூவகைப்படும் பாலிகைக்கு பரமனும் கடிகைக்கு திருமாலும் சராவத்திற்கு பிரமனும் அதிபர்களாக கூறப்படுகிறார்கள்.

सौवर्णं राजतं ताम्रं कांस्यं वा मृण्मयन्तु वा ।
शरावाणि च संग्राह्य पिष्टेनैव विमर्शयेत् ॥ ४ ॥

சௌவர்ணம் ரஜதந்தாம்ரம் காம்ஸ்யம் வாம்ருண்
மயந்துவா!
சராவாணிச சங்க்ராஹ்ய பிஷ்டே நைவ
விமர்சயேத்!!

தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை அல்லது மண்ணாலோ ஆன ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.

कालं भिन्नं च सुषिरं भेदच्छेदं जलीमुखम् ।
निर्दग्धञ्च पुराणञ्च वर्जयेत्तु प्रयत्नत: ॥ ५ ॥

காளம் பின்னஞ்ச சுஷிரம் பேதஞ்சே தஞ்ஜளா
முகம்!
நிர்தக்தஞ்ச புராணஞ்ச வர்ஜ்ஜயேத்து ப்ரயத்நத:!!

வளைந்தது, உடைந்தது, துவாரம் பெரிதாக உடையது ஒன்றுக்கொன்று வித்யாசமானது (மண்ணால்) சுடப்படாதது, பழமையில் பயன்படுத்தப்பட்டது இவைகளை முயற்சியோடு நீக்கிவிடுவது நன்று.

अश्वत्थं बिल्वपत्रैश्च तन्मध्ये बन्धयेद्दृढम् ।
पालिकाभ्यन्तरं दर्भैर्निच्छिद्रं कारयेद्बुध: ॥ ६॥

அச்வத்தம் பில்வ பத்ரைச்ச தந்மத்யே
பந்தயேத்த்ருடம்!
பாலிகாப்யந்த ரந்தர்பைர் நிச்சி த்ரங்காரயேத் புத:!!

அரசு இலை வில்வ இலைகளால் அவைகளின் நடுவில் உள்ள துவாரப்பகுதியில்

நன்றாக அமுக்கி வைக்கவேண்டும். பாலிகைகளின் உள்ளும் புறமும் தர்பைகளால் அசைவேற்படாமல் செய்விப்பது அறிவாளிகளாலே இயலும்.

गोशकृच्चूर्णमहितैर्मृद्भिः सर्वाणि पूर्य च ।
प्रत्येक च करे ग्राह्य वाहयित्वाथ भक्तकैः ॥ ७ ॥

கோசக்ருச்சூர்ண சஹிதைர் ம்ருத்பிஸ்ஸர்வாணி பூர்யச!
ப்ரத்யே கஞ்ச கரே க்ராஹ்ய வாஹயித்வாத பக்தகை :!!

காய்ந்த பசுஞ்சாண தூள்களோடு புனித புற்றுமண்ணால் எல்லா பாலிகைகளையும் நிரப்பி அவை ஓவ்வொன்றையும் கையிலெடுத்து பக்தர்களால் எடுத்துவர விடவும்.

सुमित्रं चास्त्रराजं च सर्वातोद्यसमायुतम् ।
ग्रामप्रदक्षिणं कृत्वा मृत्संग्रहणमाचरेत् ॥ ८ ॥

சுமித்ரஞ்சா ஸ்த்ரராஜஞ்ச ஸர்வாதோத்ய சமாயுதம்!
க்ராம ப்ரதக்ஷிணங்கிருத்வா ம்ருத் சங்கிருஹண மாசரேத்!!

முருகப் பெருமானின் சண்டிகேஸ்வரரான சுமித்ரசண்டருடனும் அஸ்த்ரதேவருடனும் ஸகலவாத்யங்களுடனும் பக்தர்களுடன் கிராமத்தை வலமாக வந்து நந்தவனமெனும் பூந்தோட்டத்தில் புனிதமண்ணை புவிமாதா வழிபாட்டோடு செய்யவேண்டும்.

उत्तमं पागुदीची स्यात् मध्यमं पश्चिमं स्मृतम् ।
अधमं दक्षिणं प्रोक्तं मृत्संग्रहणकर्मणि ॥ ९ ॥

உத்தமம் ப்ராகுதீசீ ஸ்யாது மத்யமம் பச்சிமம் ஸ்மிருதம்!
அத மந்தக்ஷிணம் ப்ரோக்த மிருத்ஸங் கிரஹண கர்மணி!!

கிழக்குத் திசைமிகமிகச் சிறந்ததாகவும் மிகச்சிறந்தது மேற்குத்திசையும் தெற்குத்திசை அவ்வளவு நல்லதல்ல என்றும் மிருத்சங்க்ரஹண காரியத்தில் குறிப்பிடப்படுகிறது.

पुष्पारामे च नद्यां वा तडागे विल्वमूलके ।
आलये चैव निश्चित्य गत्वा शुद्धभुवस्थलम् ॥ १० ॥

புஷ்பாராமேச நத்யாம்வா தடாகே பில்வ மூலகே!
ஆலயேசைவ நிச்சித்ய கத்வா சுத்த புவஸ்தலம்!!

மலர்கள் மலரும் நந்தவனத் தோட்டத்திலோ, நதிக்கரை நதியிலேயோ, குளத்திலோ, வில்மரத்தடியிலோ, எங்கு எடுப்பது என்பதை ஆலயத்திலேயே தீர்மானித்து சுத்தமான இடத்திற்குச் சென்று

अस्त्रेण प्रोक्ष्य तद्देशं प्रीणयेद्भुवि नायकम् ।
पुण्याहं वाचयेत्तत्र गायत्र्या प्रोक्ष्य देशिकः ॥ ११ ॥

அஸ்த்ரேண ப்ரோக்ஷ்ய தத்தேசம் ப்ரீணயேத் புவி நாயகம்!
புண்யாஹம் வாசயேத்தத்ர காயத்திரயா ப்ரோக்ஷ்ய தேசிக:!!

அஸ்த்ர மந்திரத்தால் அந்த இடத்தில் நீர் மேலே சென்று கிழே விழும் வண்ணம் தெளித்து (விநாயகர் வேண்டுதலோடு நல்லநாளை சொல்லி வைக்கும் இடத்தை புனிதமாக்கும் சடங்கை செய்து அங்கு காயத்ரிமந்திரத்தால் (வருணகாயத்ரியால்) முன்போல் ஆசார்யரால் தெளிக்கப்பட வேண்டும். பூமிநாயகன் பிரமதேவனை பூசித்து மகிழ்விக்க வேண்டும்.

भूपुरं तत्र संलिख्य भूबीजेनार्चयेत् भुवम् ।
ओं सुब्रह्मण्य सुद्धायै नम: वामोरौ २४

ஓம் சுப்ரஹ்மண்ய சுத்தாயை நம: வாமோரௌ இடது
தொடை

ओं कृत्तिकासुतकृपायै नम: दक्षिणजानुनि २५

ஓம் க்ருத்திகா சுத க்ருபாயை நம: தக்ஷிண ஜாநுநி
வலது மூட்டுக்கால்

ओं षष्ठाङ्गसत्त्वरायै नम: वामजानुनि २६

ஓம் ஷஷ்டாங்க ஸத்வராயை நம: வாமஜாநுநி இடது
மூட்டுக்கால்

ओं जगद्भुवे जगत्यै नम: दक्षिणजङ्घायाम् २७

ஓம் ஜகத்புவே ஜகத்யை நம: தக்ஷிண ஜங்காயாம்
வலது முழந்தாள்

ओं वचद्भुवे वरदायै नमः वामजङ्घायाम् २८

ஓம் வசத்புவேவரதாயை நம: வாம ஜங்காயாம் இடது முழந்தாள்

ओं स्कन्दविशाखिने कामदायै नमः दक्षिणपादे २९

ஓம் ஸ்கந்த விஸாகிநே காமதாயை நம: தக்ஷிண பாதே வலது கால்

ओं हव्यं यस्मात् हरिन्यै नमः वामपादे ३०

ஓம் ஹவ்யம் யஸ்மாது ஹரின்யைநம: வாமபாதே இடது கால்

ओं षण्मुखाय श्यामायै नमः व्यापकांजलिः

ஓம் ஷண்முகாய ஸ்யாமாயை நம: வ்யாபகாஞ்சலி : (சிரஸ் முதல் பாதம் வரை)

इति न्यासक्रमः

இதி ந்யாஸக்ரம:
இவ்வாறு நியாஸம் செய்ய வேண்டும்

इति श्रीकुमारतन्त्रे स्कन्दमलान्यासविधिर्नाम षट्चत्वारिंशत्पटलः

இதி ஸ்ரீ குமார தந்த்ரே ஸ்கந்த கலாந்யாஸ விதி நாம ஷட் சத்வாரிம் சத் படல :

இவ்வாறு ஸ்ரீ குமார தந்திரத்தில் ஸ்கந்த கலாந்யாஸ விதி என்னும் 46வது படலமாகும்.

।। सप्तचत्वारिंशत्पटल: ।।

ஸப்த சத்வாரிம் ஸத்படல:!!

47-வது படலம்

मातृकान्यासविधि:

மாத்ருகாந்யாசவிதி:

அவயவங்களில் எழுத்துக்களை வைப்பு முறை

श्रृणु कौशिक वक्ष्येऽहं सुब्रह्मण्यस्य मातृकाम् ।
भुक्तिमुक्तिप्रदं पुंसां सर्वोपद्रवनाशनम् ॥ १॥

ச்ருணு கௌசி கவக்ஷ்யேஹம் சுப்ரம்மண்யஸ்ய மாத்ருகாம்!
புக்தி முக்தி ப்ரதம்பும்ஸாம் ஸர்வோபத்ரவ நாசநம்!!

பரமேஸ்வரனாகிய நான் புருஷர்களுக்கு எல்லா இடையூறுகளைப் போக்கக் கூடியதாயும் இம்மை மறுமையாகிய இருபயன்களைத் தரக்கூடியதாயும் உள்ள சுப்பிரமண்யருடைய 51 ஐம்பத்தோரு எழுத்துக்களையும் கடவுளின் பெயர்களையும் கொண்ட அக்ஷரந்யாஸங்களைக் கூறப்போகின்றேன் ஓ கௌசிகமஹரிஷியே நீ கேட்பாயாக!

केशान्ते मुखवृत्ते च नेत्रयो: श्रोत्रनासिकयो: ।
कर्णयोरोष्ठयोर्दन्तपंक्तौ मूर्धिमुखेस्वरम् ॥ २ ॥

கேசாந்தே முகவ்ருத்தே நேத்ரயோ: ச்ரோத்ரநாஸிகயோ:!
கார்ண்டியோரோ ஷ்டயோர்தந்த பங்க்தௌ மூர்த்னி முகேஸ்வரம்!!

ஸ்வரம் எனப்படும் அகர முதல் அ: காரம் வரை கூறப்பட்டுள்ள 16 பதினாறு உயிர் எழுத்துக்களை தலை, நெற்றி, இரு கண்கள், இரு காதுகள், இரு மூக்கு துவாரங்களின் மேற்பாகம், கழுத்தின் இரு பாகங்கள், மேலுதடு, கீழுதடு, மேல் பல்வரிசை, கீழ்ப் பல்வரிசை, சிகை, வாய் ஆகிய 16 பதினாறு இடங்களில் வலக்கை விரல்களால் தொட வேண்டும்.

कवर्गं दक्षिणे हस्ते चवर्गं वामहस्तके ।
टवर्गं दक्षपादे च तवर्गं वामपादके ॥ ३॥

கவர்கம் தக்ஷிணே ஹஸ்தேசவர்கம் வாமஹஸ்தகே!
டவர்கம் தக்ஷபாதேச தவர்கம் வாமபாதகே!!

'க' என்ற எழுத்து முதல் 'ங' என்ற எழுத்து வரை கூறப்பட்டுள்ள ஐந்து எழுத்துக்களை வலக்கையின் அடிப்பகுதி, முழங்கை மணிக்கட்டு, உள்ளங்கை விரல்கள் ஆகிய ஐந்து இடங்களைத் தொடல் வேண்டும். அவ்வாறே 'ச' என்ற எழுத்து முதல் 'ஞ' என்ற எழுத்து வரை கூறப்பட்டுள்ள ஐந்து எழுத்துக்களை இடக்கையின் அடிப்பகுதி, முழங்கை மணிக்கட்டு, உள்ளங்கை விரல்கள் ஆகிய ஐந்து இடங்களைத் தொடல் வேண்டும். 'ட' என்ற எழுத்து முதல் 'ண' என்ற எழுத்து வரை கூறப்பட்டுள்ள ஐந்து எழுத்துக்களை வலது காலின் தொடையின் அடிப்பகுதி முழங்கால் கணுக்கால் வலது காலின் அடித்தளம் விரல்கள், 'த' என்ற எழுத்து முதல் 'ந' என்ற எழுத்து வரை கூறப்பட்டுள்ள ஐந்து எழுத்துக்களை இடது காலின் தொடையின் அடிப்பகுதி, முழங்கால், கணுக்கால், இடது காலின் அடித்தளம், விரல்கள் ஆகிய ஐந்து இடங்களைத் தொடல் வேண்டும்.

पफौ पार्श्वद्वये न्यस्य बकारं पृष्ठदेशके ।
भकारं नाभिदेशे तु मकारं कुक्षिदेशके ॥ ४ ॥

பபௌ பார்ச்வத்வயே ந்யஸ்ய பகாரம் ப்ருஷ்டதேசகே!
பகாரம் நாபி தேசேது மகாரம் குக்ஷிதேசகே!!

'ப' என்ற எழுத்து முதல் 'ம' என்ற எழுத்து வரை கூறப்பட்டுள்ள ஐந்து எழுத்துக்களை

வலது பாகம், இடது பாகம், ப்ருஷ்டம் எனப்படும் குதம், தொப்புள் அடிபாகம் ஆகிய ஐந்து இடங்களைத் தொடல் வேண்டும்.

यकारं हृदये न्यस्य रलौ दोर्मूलयोर्न्यसेत् ।
वकारं कण्ठपृष्ठे तु शषौ कक्षद्वये न्यसेत् ॥ ५ ॥

யகாரம் ஹ்ருதயே ந்யஸ்யரலௌ தோர்மூலயோர்ந்யஸேத் !
வகாரம் கண்டப்ருஷ்டேது சஷௌ கக்ஷத்வயோர் ந்யஸேத் !!

'ய' காரம் முதல் 'ஷ' காரம் வரை கூறப்பட்டுள்ள ஆறு எழுத்துக்களை ஹ்ருதயம் (மார்பின் கீழ் பகுதி) வலது தோள்பட்டை, இடது தோள்பட்டை, கழுத்தின் பின்புறம், இரு அக்குள் பிரதேசங்கள், ஆகிய ஆறு இடங்களைத் தொடல் வேண்டும்.

सहौ शिश्ने च गुह्ये च लकारं भुजयोर्न्यसेत् ।
क्षकारं व्यापकं शेषां सुब्रह्मण्यस्य मातृकाम् ॥ ६ ॥

ஸஹௌ சிச்னே குஹ்யேசளகாரம் புஜயோர் ந்யஸேத் !
க்ஷகாரம் வ்யாபகம் சேஷாம் சுப்ரஹ்மண்யஸ்ய மாத்ருகாம் !!

'ஸ', 'ஹ' என்ற இரண்டு அக்ஷரங்களை ஆண்குறியாகவும், மறைவிடமாகவும் (ஆஸனவாய்) ஆகவும் உள் இரண்டு இடங்களைத் தொடல் வேண்டும். 'ள' காரம் என்ற அக்ஷரத்தை தோள்களில் தொடல் வேண்டும். 'க்ஷ' காரம் என்ற எழுத்தை விடப்பட்டுள்ள எல்லா பாகங்களிலும் தொடல் வேண்டும். ஐம்பத்தொன்று அக்ஷரவடிவாக சுப்பிரமண்ய சுவாமியின் உருவம் விளங்குகின்றது.

तान्येतानि न चोक्तानि वर्णेश्वराननं श्रृणु ।
अमरेश्वरं आराध्यस्तत इन्द्रपुरोगमा: ॥ ७ ॥

தான்யேதானி நசோக்தானி வர்ணேஸ்வரானனம் ச்ருணு !
அமரேஸ்வரம் ஆராத்யஸ்தத இந்த்ரபுரோகமா: !!

இந்த உயிர் எழுத்துக்களோ அந்த மெய் எழுத்துக்களோ என்னால் கூறப்படப் போவன அல்ல. உயிர் எழுத்துக்கள் அடங்கிய முகத்தில் விளங்கும் உயிர் தேவதைகளைக் கூறுகின்றேன். ஓ கௌசிகமுனிவரே நீவீர் கேட்பீராக!

1 அகரத்திற்கு அமரேஸ்வரனும், 2 ஆகாரத்திற்கு ஆராத்யனும், 3 இகரத்திற்கு இந்திரனை முன்னிட்டு செல்லும் தேவர்களும்

ईशपुत्र उमापुत्र ऊर्ध्वरेतो मम प्रिय ।
ऋणोॠरणलृन्यश्च लृहन्तैकनायक: ॥ ८ ॥

ஈஸபுத்ர உமாபுத்ர ஊர்த்வரேதோ மம ப்ரிய: !
ருணோ ரூரணல்ருன்யஸ்ச ல்ருஹந்தைக நாயக: !!

ஈகாரத்திற்கு ஈஸபுத்திரனும், உகாரத்திற்கு உமா புத்திரனும், ஊகாரத்திற்கு ஊர்த்வரேதனும், (ரலம்யார பேதத்வாத்) ருகார, ரூகார, லுகார லூகாரமாகிய நான்கு எழுத்துக்களுக்கு சிவப்ரயனும், ஏகாரத்திற்கு ஏகநாகனும்

ऐश्वर्यप्रद ओजस्वी औपम्यरहित: पुमान् ।
ततोऽम्बुजासनक्षीणं तेषां स्यु: स्वरदेवता: ॥ ९ ॥

ஐஸ்வர்யப்ரதோ ஓஜஸ்வீ ஔபம்யரஹித: புமான் !
ததோம்பு ஜாஸநாக்ஷீணம் தேஷாம்ஸ்யு: ஸ்வரதேவ தா: !!

ஐகாரத்திற்கு ஐஸ்வர்யப்ரதனும் ஓகாரத்திற்கு ஓஜஸ்வியும் ஔகாரத்திற்கு ஔம்யரஹிதனும் அம் அ: என்ற இரண்டு எழுத்துகளுக்கு அம்பு ஜாஸனனும் அக்ஷீணனும் அந்த உயிர் எழுத்துக்களின் தேவதைகள் ஆவர். ககாரம் முதல் க்ஷகாரம் வரை கூறப்பட்டுள்ள 35 முப்பத்தைந்து எழுத்துக்களின் தேவதைகள் வருமாறு

कमण्डलुधरः खड्गपाणिर्गङ्गासुतस्ततः ।
घण्टाहस्तोङ्प्रियश्च चन्द्रशेखर ईरितः ॥ १० ॥

கமண்டலுதர: கட்கபாணிர் கங்கா சுதஸ்தத:!
கண்டாஹஸ்தோங் ப்ரியச சசந்த்ரசேகர ஈரித:!!

'க்' விற்கு கமண்டலுதரனும் 'க்' விற்கு கட்கபாணியும் 'க்'விற்கு கங்காசுதனும் 'க்' விற்கு கண்யாஹஸ்தனும் 'ங்' விற்கு 'ங்' ப்ரியனும், 'ச்' விற்கு சந்திரசேகரனும் கூறப்பட்டுள்ளனர்.

छन्दोमयश्चैव जगत्पतिश्च झषकेतुजित् ।
ञमूर्तिष्टङ्कहस्तश्च ठस्वरूपोऽथडम्बरः ॥ ११ ॥

சந்தோமயச்சைவ ஜகத்பதிச்ச ஜஷகேதுஜித் !
ஞமூர்த்தி ஷ்டங்கஹஸ்தச் ச டஸ்வரூபோத
டம்பர:!!

'ச' காரத்திற்கு சந்தோமயனும் ஜகாரத்திற்கு ஜகத்பதியும் ஜ காரத்திற்கு ஜ ஷகேதுஜிதும் ஞகாரத்திற்கு மூர்த்தியும் 'ட' காரத்திற்கு டங்கஹஸ்தனும் 'ட' காரத்திற்கு 'ட' ஸ்வருபனும் 'ட' காரத்திற்கு 'ட' ம்பரனும் கூறப்பட்டுள்ளனர்.

ढक्कप्रियोणगम्यश्च तत्त्वरूपस्थपिष्टकः ।
दण्डपाणिर्धनुष्पाणिर्नगरन्ध्रकरस्ततः ॥ १२ ॥

டக்கப்ரியோ ணகம்யச்ச தத்வருபஸ்தபிஷ்டக:!
தண்டபாணி ர்தனுர்பாணிர் நகரந்த்ர கரஸ்தத:!!

'ட' காரத்திற்கு 'ட' க்காப்ரியனும் 'ண' காரத்திற்கு 'ண' கம்யனும் 'த' கரத்திற்கு தத்துவருபனும் 'த' கரத்திற்கு 'த' பிஷ்டனும், 'த' காரத்திற்கு தண்டபாணியும் 'த' காரத்திற்கு தனுஷ்பாணியும் 'ந' காரத்திற்கு நகரந்த்ரகரனும் கூறப்பட்டுள்ளனர்.

तथैव पद्महस्तश्च फणिहस्तस्तथैव च ।
ततस्तु बहुलापुत्रो भवात्मज इतीरितः ॥ १३ ॥

ததைவ பத்மஹஸ்தச்ச பணிஹஸ்த ஸ்ததைவச !
ததஸ்து பகுளாபுத்ரோ பவாத்மஜ இதீரித:!!

'ப' காரத்திற்கு பத்மஹஸ்தனும் 'ப' காரத்திற்கு பணிஹஸ்தனும் பகாரத்திற்கு பஹுளாபுத்திரனும் ப காரத்திற்கு பவாத்மஜனும் கூறப்பட்டுள்ளனர்.

महासेनो यज्ञमूर्ति रमणीयस्तथैव च ।
लम्बोदरानुजश्चैव वचद्भूः शरसंभवः ॥ १४ ॥

மஹாஸேனோ யக்ஞமூர்த்திர் ரமணீய ஸ்ததைவ ச !
லம்போத ரானுஜச்சைவ வசத்பூ: சரஸம் பவ:!!

'ம' காரத்திற்கு மஹாஸேனனும் 'ய' காரத்திற்கு ய க்ஞ மூர்த்தியும் 'ர' கார்த்திற்கு ரமணீயனும் 'ல' காரத்திற்கு லம்போதரானுஜனும் வ காரத்திற்கு வசத்பூவும் ச காரத்திற்கு சரஸம்பவனும் கூறப்பட்டுள்ளனர்.

षण्मुखः सर्वलोकेशो हरात्मज इति स्मृतः ।
लक्ष्मीवांश्च क्षमाक्षेत्रः कादिक्षान्ताधिदेवताः ॥ १५ ॥

ஷண்முகஸ் ஸர்வலோகேசோ ஹராத்மஜ
இதிஸ்ம்ருத:!
லக்ஷ்மீ வாம்ஸ்ச க்ஷமாக்ஷேத்ர: காதிக்ஷாந்தாதிதேவ
தா:!!

'ஷ' காரத்திற்கு ஷண்முகனும் 'ஸ' காரத்திற்கு ஸர்வ லோகேசனும் 'ஹ' காரத்திற்கு 'ஹ' ராத்மஜனும் 'ள' காரத்திற்கு லக்ஷ்மீவானும் 'க்ஷ' காரத்திற்கு க்ஷமாக்ஷேத்ரனும் அதிதேவதைகளாகக் கூறப்பட்டுள்ளனர்.

अकारादिक्षकारान्तं न्यसेद्देहे स्वनामभिः ।
प्रणवादिनमोऽन्तैश्च ब्राह्मणक्षत्रियोऽपि वा ॥ १६ ॥

அகாராதிக்ஷ காராந்தம் ந்யஸேத்தே
ஹேஸ்வநாமபி:!
ப்ரணவாதி நமோந்தைச் சப்ராஹ்மணக்ஷத்ரி
யோபிவா!!

'ஓம்' என்ற எழுத்தை முதலிலும் 'நம:' என்பதை கடைசியிலும் இடையில் அகரம் முதல் க்ஷகரமீறான எழுத்துக்களை அதன் தேவதையுடனும் கூட்டி தனது சரீரத்தில் ந்யாஸம் செய்ய வேண்டும் அந்தணர்களும் அரசர்களும்

वैश्यो वाप्यथ शूद्रो वा सुब्रह्मण्याख्यमातृकाम् ।
जपकाले जपेद्यस्तु जयसिद्धिमवाप्नुयात् ॥ १७ ॥

வைஸ்யோ வாப்யத சூத்ரோ வாபி சுப்ரஹ்மண்யாக்ய மாத்ருகாம் /
ஜபகாலே ஜபேத்யஸ்து ஜயஸித்தி மவாப்னுயாத் //

வைஸ்யனும் சூத்திரனும் ஆகிய நான் குவர்ணத்தாருள் யார் ஒருவன் சுப்ரமண்யருடைய மாத்ருகாவர்ணங்களை தன் சரீரத்தில் ந்யாஸம் செய்து ஜபம் செய்கின்றானோ அவன் ஜயத்தை அடைகின்றான்.

पूजाकाले न्यसेदेतत्प्रतिष्ठाकाल एव च ।
गायत्रीजपकाले तु सुब्रह्मण्यस्य मातृकाम् ॥ १८ ॥

பூஜாகாலேந்யே ஸேத்ஏதத் ப்ரதிஷ்டா காலஏவச /
காயத்ரீஜபகாலேது சுப்ரஹ்மண்யஸ்ய மாத்ருகாம் //

வீட்டில் பூஜை செய்யும் பொழுதும், வீட்டில் தேவதாப்ரதிஷ்டை செய்யும் பொழுதும், காயத்ரீ ஜபம் செய்யும் பொழுதும், சுப்ரமண்யருடைய மாத்ருகாந்யாஸங் களைச் செய்ய வேண்டும்.

य: करोति मुखं तस्य सहस्रगुणितं फलम् ।
सप्तजन्म भवेद्विप्र: सोऽन्ते कौमारमाप्नुयात् ॥ १९ ॥

ய: கரோதி முகம் தஸ்யஸஹஸ்ரகுணிதமபலம் /
ஸப்தஜன் மபவேத்விப்ர: ஸோந்தே கௌமார மாப்னுயாத் //

எவன் ஒருவன் ஓங்காரத்துடன் அகாரம் முதலிய எழுத்துக்களையும் அதன் தேவதைகளையும் கூறி நமோந்தமாக தனது சரீரத்தில் ந்யாஸம் செய்கின்றானோ அவனது ஒருமுறை கூறியது ஆயிரம் முறை கூறிய பலனை அளிக்க வல்லது. பிராம்மணர் அல்லாதவர் மேற்கூறியவற்றை செய்து வருவாராயின் ஏழு பிறப்பு பிராம்மணர்களாய் பிறந்து முடிவில் குமரக் கடவுளுடன் இரண்டறக் கலந்து குஹசாயுஜ்யம் பெறுவர் என்று 47-வது படலமாகிய மாத்ருகாந்யாஸ படலத்தில் கூறப்பட்டுள்ளது.

इति श्रीकुमारतन्त्रे कौशिकप्रश्ने मातृकान्यासविधिर्नाम सप्तचत्वारिंशत्पटल:

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிகப்ரச்னே மாத்ருகாந்யாஸ விதிர் நாம ஸப்த சத்வாரிம் சத் படல: //

இவ்வாறு ஸ்ரீ குமார தந்த்ரத்தில் கௌசிக ப்ரச்னத்தில் மாத்ருகா ந்யாஸ விதி என்னும் 47-வது படலமாகும்.

॥ अष्टचत्वारिंशत्पटलः ॥

அஷ்டசத் வாரிம் ஸத் படலः!

48-வது படலம்

सुब्रह्मण्यकवचनिधिः

சுப்ரஹ்மண்ய கவச விதிः!

सुब्रह्मणयस्य कवचं वक्ष्येऽहं श्रृणु कौशिक ।
स्रर्वपापप्रशमनं सर्चोपद्रवनाशनम् ॥ १ ॥

சுப்ரஹ்மண்ய ஸ்யகவசம் வக்ஷ்யே ஹம்ச்ருணு கௌசிக!
ஸர்வபாப ப்ரசமனம் ஸர்வோபத்ர வநாசநம்!!

எல்லா பாபங்களையும் போக்குகின்றதாயும் எல்லா கஷ்டங்களையும் நீக்குகின்றதாயும் உள்ள சுப்பிரமண்யருடைய கவசத்தை பரமேஸ்வரனாகிய நான் கூறப்போகின்றேன் ஹே! கௌசிக முனிவரே நீவீர் கேட்பீராக!

ब्रह्मानुष्टपूछन्दः । सुब्रह्मण्यस्य देवता ।
षान्तदीर्घेण कल्पेन षडङ्गन्यासकल्पना ॥ २ ॥

ப்ரஹ்மா னுஷ்டுப் சந்த: சுப்ரஹ்மண்யஸ் யதேவதா!
பான்ந்த தீர்கேண கல்பேநஷ்டங்கந்யாஸ கல்பநா!!

सुब्रह्मण्यस्य कनचस्य
ब्रह्माऋषिः! अनुष्टप्छन्तः! सब्रह्मण्यो
देवता! सां हृदयायनमः!

सीं शिरसे स्वाहा! सूं शिरवायै वषट्!
सैं कवचाय हुं! सौं नेत्रत्रयाय वौषट् !
सः अस्त्राय फट् ! भू र्भुवस्सुवरोम् इति
दिग् बन्धः !

சுப்ரமண்யஸ்ய கவசஸ்ய ப்ரஹ்மா ரிஷி:!
அனுஷ்டுப் சந்த;! சுப்ரஹ்மண்யோ தேவதா!!
ஸாம் ஹ்ருதயாயநம:! ஸீம்சிரஸேஸ்வாஹா!
ஸூம் ஸிகாயை வஷட்! ஸைம் கவசாயஹூம்!!
ஸௌம் நேத்ர த்ரயாய வௌஷட்!, ஸ:அஸ்த்ராயபட்
பூர்ப்பு வஸ்ஸுவரோம் இதி திக் பந்த:!!

ध्यानम् -

//த்யானம்//

सिन्दूरारुणमिन्दुकान्ति वदनं केयूरहारादिभिः
दिव्यैराभरणैर्घिभीषिततनुः स्वर्गस्य सौख्यप्रदम् ।
अम्भोजाभयशक्तिकुक्कुटधरं रक्ताङ्गरागोज्वलं
सुब्रह्मण्यमुपास्महे प्रणमतां भीतिप्रणाशोद्यतम् ॥ ३ ॥

ஸிந்தூராருண மிந்து காந்தி வதனம் கேயூர ஹாராதிபி:!
திவ்யை ராபரணைர் விபூஷிததனு: ஸ்வர்கஸ்யஸௌக்யப்ரதம்!!
அம்போ ஜாபய ஸக்திகுக்குட தரம் ரக்தாங்கரா கோஜ்வலம்!
சுப்ரஹ்மண்ய முபாஸ் மஹேப்ரணமதாம் பீதிப்ரணா ஸோத்யதம்!!

செந்தூரம் போல் சிவந்த மேனியும் மதியன்ன அழகிய முகமும், கொண்டை தண்டை மாலையணிந்தவரும், தேவலோகத்தைச் சார்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட சரீரத்தை உடையவரும், ஸ்வர்கலோக வாஸிகளுக்கு சௌக்யத்தை அளிப்பவரும், செஞ்சுடர் காந்தி போன்றவரும், தாமரைப் பூ, அபயஹஸ்தம் சக்தி-ஆயுதம், கோழிக்கொடி, இவற்றை தரித்தவரும் வணங்கும் முருக பக்தர்களுடைய பயத்தைப் போக்குகின்றவருமான எங்கும் நிறைந்த பிரம்மண்யமான முருகக் கடவுளை வணங்குகின்றேன்.

सुब्रह्मण्योऽग्रत: पातु सेनानी: पातु पृष्ठत: ।
गुहो मां दक्षिणे पातु भूपति: पातु वामत: ॥ ४ ॥

சுப்ரஹ்மண்யோ க்ரத: பாதுஸேனானீ: பாதுப்ருஷ்டத:!
குஹோமாம் தக்ஷிணே பாது பூபதி: பாது வாமத:!!

எதிர்ப் பக்கம் சுப்பிரமணியர் காக்கட்டும், பின் பக்கம் சேனானீ காக்கட்டும், எனது தென்பக்கம் குஹன் காக்கட்டும், வடப்பக்கம் பூபதி காக்கட்டும்

शिर: पातु महासेन: स्कन्दो रक्षेल्ललाटकम् ।
नेत्रयोर्द्वादशाक्षश्च श्रोत्रं रक्षतु विश्वभू: ॥ ५ ॥

சிர: பாது மஹாஸேன: ஸ்கந்தோரக்ஷேல்லலாடகம்!
நேத்ரயோர்த் வாதஸாக்ஷச்ச ஸ்ரோத்ரம் ரக்ஷது விச்வபூ:!!

தலையை மஹாஸேனர் காக்கட்டும் நெற்றியை ஸ்கந்தர் காக்கட்டும், கண்களை த்வாதஸாக்ஷர் (பன்னிரண்டு கண்ணோன்) காக்கட்டும் காதுகளை விச்வபூ காக்கட்டும்

मुखं मे षण्मुख: पातु नासिकां मकरात्मज: ।
ओष्ठं वल्लीपति: पातु जिह्वां पातु षडक्षर: ॥ ६ ॥

முகம்மே ஷண்முக: பாது நாஸிகாம் மகராத் மஜ:!
ஓஷ்டம் வள்ளீ பதி: பாது ஜிஹ்வாம் பாது ஷடக்ஷர:!!

ஷண்முகர் முகத்தைக் காக்கட்டும், மூக்கினை மகராத்மஜன் காக்கட்டும், உதட்டினை வள்ளீ மணாளன் காக்கட்டும், நாக்கினை ஷடக்ஷரன் காக்கட்டும்

देवसेनापतिर्दन्तान् चिबुकं बहुलासुत: ।
कण्ठं तारकजित्पातु बाहुं द्वादशवाहुमान् ॥ ७ ॥

தேவஸேனா பதிர்தந்தான் சி புகம் பஹுளாசுத:!
கண்டம் தாரகஜித் பாதுபாஹும் த்வாதஸ பாகுமான்!!

பற்களை தேவஸேனாபதி காக்கட்டும், முகவாய் கட்டை பகுளாசுதன் காக்கட்டும், கழுத்தினை தாரகாசுரனை ஜெயித்தோன் காக்கட்டும். தோள்களை பன்னிரண்டு தோளான் (த்வாத சபாகுமான்) காக்கட்டும்

हस्तौ शक्तिधर: पातु वक्ष: पातु शरोद्भव: ।
हृदयं ब्रह्मभू: पातु कुक्षिं पात्वम्बिकासुत: ॥ ८ ॥

ஹஸ்தௌ சக்தி தர: பாது வக்ஷ: பாது சரோத்பவ:!
ஹ்ருதயம் ப்ரஹ்மபூ: பாது குக்ஷிம் பாது அம் பிகாசுத:!!

கைகளை சக்திதரன் காக்கட்டும் மார்பினை சரோத்பவன் (சரவண பவன்) காக்கட்டும், மார்பினை பிரஹ்மபூ காக்கட்டும், அடிவயிற்றினை அம்பிகாசுதன் காக்கட்டும்

नाभिं शंभुसुत: पातु कटिं पातु हरात्मज: ।
ऊरू पातु गजारूढो जानू द्वे जाह्नवीसुत: ॥ ९ ॥

நாபிம் ஸம்பசுத : பாதுகடிம் பாதுஹராத் மஜ:!
ஊரு பாதுகஜாருடோ ஜானுத்வே ஜாஹ்ன வீசுத:!!

சம்பு புத்திரன் தொப்புளைக் காக்கட்டும், இடுப்பினை ஹராத்மஜன் (சிவ புத்திரன்) காக்கட்டும், கஜாருடன் (யானை வாஹணன்) தொடைகளைக் காக்கட்டும், இரண்டு முழங்கால்களை கங்கை மைந்தன் காக்கட்டும்

जङ्घे विशाखो मे पातु पादयो: शिखिवाहन: ।
सर्वाण्यङ्गानि भूतेश: सप्तधातूंश्च षण्मुख: ॥ १० ॥

ஜங்கேவி சாகோமே பாது பாதயோ: சிகிவாஹன:!
சர்வாண் யங்கானி பூதேச: ஸப்ததாதூம் ச்சஷண்முக:!!

விசாக நக்ஷத்திரத்தின் தோன்றிய விசாகன் இரண்டு கணுக்கால்களைக் காக்கட்டும், மயில் வாஹனன்சிகி (வாஹனன்) இரண்டு கால்களைக் காக்கட்டும். பஞ்ச

பூதங்களுக்கும் பூதகணங் களுக்கும் தலைவனாகிய பூதேசன் எல்லா அவயவங்களையும் காக்கட்டும். ஷண்முகக் கடவுள்ஏழுவகை தாதுக்களைக் காக்கட்டும்

संध्याकाले निशीथिन्यां मध्याह्ने दुस्तरे जले ।
दुर्गमे च महारण्ये राजद्वारे सहायके ॥ ११ ॥

ஸந்த்யாகாலே நிசீதின் யாம் மத்யாஹ்னே துஸ்தரே ஜலே!
துர்கமேச மஹாரண்யே ராஜத்வாரே ஸஹாயகே !!

காலை, மாலையாகிய இரு சந்தி வேளையிலும் நடு இரவிலும் நண்பகலிலும் தாண்ட முடியாத தண்ணீரிலும் செல்ல முடியாத பெருங்காட்டிலும் அரண்மனை வேலையிலும் அரசனின் அரண்மனை வாயிலிலும்

तुमुले रणमध्ये च सर्पदुष्टमृगादिषु ।
चोरादिसाध्वसेऽभेद्ये ज्वरादिव्याधिपीडिते ॥ १२ ॥

துமுலே ரணமத்யேச சர்பதுஷ்டம் ருகாதிஷு!
சோராதி சாத்வஸே பேத்யே ஜ்வராதிவ்யாதி பீடிதே !!

அதி பயங்கரமான சப்தமுள்ள இடத்திலும் கொடுமையான யுத்தத்தின் நடுவிலும் பாம்புகள் உள்ள இடத்திலும் துஷ்டமிருகம் பக்ஷி பூச்சிகள் உள்ள இடங்களிலும் திருடர் முதலானோர் மத்தியிலும் பயங்கரமான இடத்திலும், பயத்திலும் மலைப்ரதேசத்திலும் வாதபித்த ச்லேஷ்மங் களால் உண்டான ஜ்வரம் முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்ட பொழுதினிலும்

दुष्टग्रहादिभीतौ च दुर्निमित्तादिभीषणे ।
अस्त्रशस्त्रनिघातेषु पातु मां क्रौञ्चरन्ध्रकृत् ॥ १३ ॥

துஷ்ட க்ரஹாதி பீதௌச துர்நிமித்தாதி பீஷணே!
அஸ்த்ர சஸ்த்ர நிகாதேஷு த்ராதுமாம் க்ரௌஞ்சரந்த்ர கருத் !!

கெட்ட கிரஹங்களால் பயம் ஏற்பட்ட பொழுதும் கெட்ட சகுனங்களால் பூகம்பாதிகளால் பயம் உண்டான பொழுதும் மந்திர ப்ரயோகத்தினால் ஏவப்பட்ட அஸ்திரங்களாலும், ஆயுதங்களாலும் இரும்புத் தடிகளாலும் துன்பம் ஏற்பட்ட பொழுதிலும் க்ரௌஞ்சமலையைத் துலைத்தவனாகிய குமரக் கடவுள் காப்பாற்றுவாராக

सुब्रह्मण्यस्यकवचमिष्टसिद्धिफलं भवेत् ।
तस्य तापत्रयं नास्ति सत्यं सत्यं वदांयहम् ॥ १४ ॥

சுப்ரஹ்மண்யஸ்ய கவசமிஷ்ட ஸித்திபலம் பவேத்!
தஸ்ய தாபத்ரயம் நாஸ்தி ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் !!

இந்த சுப்பிரமண்யருடைய கவசமானது நினைத்தவற்றை தரவல்லது. சுப்பிரமணியரது கவசம் ஓதுகின்றவனுக்கு முவ்வகைத் துன்பமில்லை மண், பெண் பொன் இவற்றால் துன்பம் ஏற்படாது. பரமேஸ்வரனாகிய நான் கூறுகின்றேன். இது முற்றிலும் உண்மையான வார்த்தையாகும்.

धर्मार्थी लभते धर्मानर्थार्थी चार्थमाप्नुनात् ।
कामार्थी लभते कामान् मोक्षार्थी मोक्षमाप्नुयात् ॥ १५ ॥

தர்மார்த்தீ லப்தே தர்மாநர்த்தார்த்தீ சார்த்த மாப்நுயாத்!
காமார்த்தீ லபதே காமாந் மோக்ஷார்த்தீ மோக்ஷ மாப்நுயாத் !!

அறத்தை விரும்புவோர்க்கு அறங்கள் கிடைக்கும். பொருளை விரும்புவோர்கள் பொருளை அடைவார்கள். இன்பத்தை விரும்புவோர்கள் இன்பங்களை அடைவார்கள். வீட்டு பேற்றினை விரும்புவோர்கள் மோக்ஷமாம் வீட்டை பெறுவர்.

यत्र यत्र जपेत् तत्र तत्र संनिहितो गुहः ।
पूजाप्रतिष्ठाकाले च जपकाले पठेदिदम् ॥ १६ ॥

யத்ரயத்ர ஜபேத் தத்ரதத்ர ஸன்னிஹி தோகுஹ:!
பூஜா ப்ரதிஷ்டாகாலேச ஜபகாலே படேதிதம்!!

எந்த எந்த இடங்களில் சுப்ரமண்ய கவசத்தை ஜபிக்கின்றார்களோ அந்த அந்த இடங்களில் கடவுளாம் குஹப் பெருமான் மிகவும் நெருங்கினவராகிறார். இந்த சுப்பிரமண்யருடைய கவசத்தை பூஜாகாலங்களிலும் ப்ரதிஷ்டா காலங்களிலும் (கும்பாபிஷேக காலங்களிலும்) ஜப காலங்களிலும் படிக்க வேண்டும்.

तेषामेव फलावाप्त्यै महापातकनाशनम् ।
यः पठेच्छृणुयाद्भक्त्या नित्यं देवस्य संन्निधौ ॥
सर्वान् कामानिह प्राप्य सोऽन्ते स्कन्दपुरं व्रजेत् ॥ १७ ॥

தேஷாமேவ பலாவாப்த்யை மஹா பாதகநா சநம்!
ய: படேச்ச்ருணு யாத் பக்த்யா நித்யம் தேவஸ்ய ஸன்னிதெள!!
ஸர்வான் காமானிஹப்ராப்ய ஸோந்தே ஸ்கந்தபுரம் வ்ரஜேத்!!

எவன் ஒருவன் சுப்பிரமணிய சுவாமியின் எதிரில் எப்பொழுதும் சுப்பிரமணிய கவசத்தைப் படிக்கின்றானோ அவர்களுக்கே மிகப் பெரிய பாவங்கள் நீங்கும். நற்பலன்கள் கிட்டும். இவ்வுலகில் எல்லாப் பொருள்களையும் பெற்று அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கு பயன்களைப் பெற்று முடிவில் ஸ்கந்த பெருமான் அமர்ந்துள்ள ஸ்கந்த புரத்தை அடைவான் என்று குமார தந்திர நூலில் ஸ்கந்தருடைய கவச முறை கூறுகின்ற பெயரில் 48 நாற்பத்தெட்டாவது படலம் அமைந்துள்ளது.

इति श्रीकुमारतन्त्रे कौशिकप्रश्ने
सुब्रह्मण्यकवचविधिर्नाम अष्टचत्वारिंशत्पटलः

இதி ஸ்ரீ குமார தந்த்ரே கெளசிக ப்ரச்னே
சுப்ரமண்ய கவச விதி:
நாம அஷ்ட சத்வாரிம் சத் படல:

இவ்வாறு ஸ்ரீ குமார தந்த்ரத்தில் கெளசிக ப்ரச்னத்தில் சுப்ரமண்ய கவச விதி என்னும் 48-வது படலமாகும்.

॥ एकोनपञ्चाशत्पटलः ॥

ஏகோன பஞ்சாசத் படல:

49-வது படலம்

प्रदक्षिणनमस्कारविधिः

ப்ரதக்ஷிண நமஸ்கார விதி:!!

ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்யும் முறை

प्रदक्षिणनमस्कारविधिं श्रृणु वदाम्यहम् ।
प्रदक्षिणत्रयं कृत्वा नमास्कारन्तु पञ्चकम् ॥ १ ॥

ப்ரதக்ஷிண நமஸ்கார விதிம்ச்ருணு வதாம்யஹம்!
ப்ரதக்ஷிணத்ரயம் க்ருத்வா நமஸ்காரந்து பஞ்சகம்!!

பரமேஸ்வரனாகிய நான் ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் இவற்றின் முறையைக் கூறப்போகின்றேன் கௌசிக முனிவரே நீவீர் கேட்பீராக!. மும்முறை வலம் வந்த பின்னரே ஐந்து முறை நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

पुनः प्रदक्षिणं कृत्वा पुनर्जन्म न विद्यते ।
यानि कानि च पापानि जान्मरन्तकृतानि च ॥ २ ॥

புன: ப்ரதக்ஷிணம் க்ருத்வா புனர்ஜன்ம நவித்யதே!
யானி கானி சபாபாநி ஜன்மாந்தர க்ருதானி ச!!

மறுபடியும் ப்ரதக்ஷிணம் செய்வதினாம் மறு பிறவி கிடையாது. முற்பிறப்பில் செய்த பாவங்கள் என்ன என்ன இருக்கின்றன.

तानि तानि प्रणश्यन्ति प्रदक्षिणपदे पदे ।
प्रभाते भुक्तिदम्प्रोक्तं मध्याह्ने भुक्तिमुक्तिदम् ॥ ३ ॥

தானி தானி ப்ரணஸ்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே!
ப்ரபாதே புக்தித: ப்ரோக்தம் மத்யாஹ்ணே புக்தி முக்திதம்!!

ஒவ்வொரு ப்ரதக்ஷிணத்தாலும் அந்த அந்த பாவங்கள் அழிகின்றன. காலையில் செய்யும் ப்ரதக்ஷிணம் இம்மைப் பயனைத் தருகின்றது மாலையில் செய்யும் ப்ரதக்ஷிணம் இம்மை மறுமையாம் இரு பயன்களையும் நல்குவதாகும்.

रात्रौ च मोक्षदं प्रोक्तं षण्मुखस्य प्रदक्षिणम् ।
आत्मप्रदक्षिणे विप्रा दक्षिणेनैव कारयेत् ॥ ४ ॥

ராத்ரௌச மோக்ஷதம் ப்ரோக்தம் ஷண்முகஸ்ய ப்ரதக்ஷிணம்!
ஆத்ம ப்ரதக்ஷிணே விப்ரா: தக்ஷிணேனைவ காரயேத்!!

இரவில் செய்யும் ப்ரதக்ஷிணம் வீடு பேற்றினை அளிக்கும். சக்தி வாய்ந்த ஷண்முகருடைய ப்ரதக்ஷிணமாகும். பிராமணர்கள் தன்னைத் தானே சுற்றும் பொழுது கூட வலமாகவே ப்ரதக்ஷிணம் செய்தல் வேண்டும்.

कुमारगजयोर्मध्ये नैव कार्यन्तु लङ्घनम् ।
परिवारालयं तत्र लङ्घयेन्नैव दोषभाक् ॥ ५ ॥

குமார கஜயோர் மத்யே நைவகார்யந்து லங்கனம்!
பரிவாராலயம் தத்ரலங்கயே ந்நைவதோஷபாக்!!

குமாரக் கடவுளுக்கு யானைக்கும் குறுக்காகப் போகக் கூடாது. குமாரக் கடவுளுக்கும் பரிவாரத்திற்கும் குறுக்காகச் சென்றால் பாபம் கிடையாது.

गजवालाग्रकं स्पृष्टा कुम्भमध्येऽवलोकयेत् ।
सर्वपापविनिर्मुक्तः स्कन्दलोके महीयते ॥ ६ ॥

கஜவாலாக்ரகம் ஸ்ப்ருஷ்ட்வா கும்பமத்யே அவலோகயேத்!
ஸர்வ பாபவினிர் முக்த: ஸ்கந்த லோகே மஹீயதே!!

முருகனின் சன்னதியில் உள்ள யானையின் வால் நுனியைத்தொட்டுக் கொண்டு யானையின் இரு மத்தகங்களின் நடுவில் முருகனைக் காணல் வேண்டும். யானியின் இரு

மத்தகங்களின் நடுவில் முருகனைக் காண்பதால் எல்லா பாவங்களில் இருந்தும் விடுபட்டவனாகின்றான். ஸ்கந்தருடைய உலகில் போற்றப்படுகின்றான்.

पद्भ्यां कराभ्यां शिरसा पञ्चाङ्गः स्यात् प्रमाणकम् ।
उरसा शिरसा दृग्भ्यां मनसा वचसा तथा ॥ ७ ॥

பத்ப்யாம் கராப்யாம் சிரஸா பஞ்சாங்க: ஸ்யாத் ப்ரமாணகம்!
உரஸா சிரஸா த்ருக்ப்யாம் மநஸா வசஸா ததா!!

இரண்டு கால்கள், இரண்டு கைகள், தலை ஆகிய ஐந்து அங்கங்களால் செய்யப்படும் நமஸ்காரம் பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். மார்பு, தலை, இரு கண்கள், மனஸ், வார்த்தை

पद्भ्यां कराभ्यां जानुभ्यां प्रणामोऽष्टाङ्ग ईरितः ।
वामपार्श्वे शिरो न्यस्त्वा सव्यपादे प्रलम्बितौ ॥ ८ ॥

பத்ப்யாம் கராப்யாம் ஜாநுப்யாம் ப்ரணாமோஷ்டாங்க ஈரித:!
வாம பார்ஸ்வே சிரோந்யஸ்த்வா ஸவ்யபாதே ப்ரலம்பிதௌ!!

கால்கள், கைகள், முழங்கால்கள், ஆகிய எண்வகை உறுப்புக்களால் செய்யப்படும் நமஸ்காரம் அஷ்டாங்க நமஸ்காரம் எனக் கூறப்படுகின்றது.

இடப்பக்கம் தலை வைத்துக் கொண்டு இடது கால் மீது வலக்காலைத் தொங்கப் போடல் வேண்டும்.

नमस्कारः प्रकर्तव्यः प्रागादिद्वारवेश्मसु ।
नित्यानुष्ठानकर्मान्ते प्रकर्तव्यं प्रदक्षिणम् ॥ ९ ॥

நமஸ்கார: ப்ரகர்தவ்ய: ப்ராகாதி த்வாரவேஸ்மசு!
நித்யானுஷ்டான கர்மாந்தே ப்ரகர்த்தவ்யம் ப்ரதக்ஷிணம்!!

கிழக்கு முதலான த்வாரத்திற்கு உள்ளிருக்கும் இடத்தில் நமஸ்காரம் செய்தல் வேண்டும். நித்யகர்மானுஷ்டானங்களை செய்து முடித்து உடனும் நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

उपोषितः शुचिः स्नात्वा यः करोति प्रदक्षिणम् ।
सहस्रं श्रद्धया धीमान् अश्वमेधफलं लभेत् ॥ १० ॥

உபோஷித : சுசி: ஸ்நாத்வாய: கரோதி ப்ரதக்ஷிணம்!
ஸஹஸ்ரம் ஸ்ரத்தயா தீமாந் அஸ்வமேதபலம் லபேத்!!

எவன் ஒருவன் ஸ்நானம் செய்துவிட்டு பரிசுத்தனாய் சாப்பிடாமல் ச்ரத்தையுடன் புத்தியுடன் ஆயிரம் முறை ப்ரதக்ஷிணம் செய்கின்றானோ அவன் அஸ்வமேதயாகம் செய்த பலனை அடைகின்றான்.

पुनः प्रतक्षिणं कुर्यात्सुमित्रेशं प्रदर्शयेत् ।
प्रदक्षिणान् स्वेन कृतान् वित्तादर्धफलं लभेत् ॥ ११ ॥

புன: ப்ரதக்ஷிணம் குர்யாத் சுமித்ரேசம் ப்ரதர்சயேத்!
ப்ரதக்ஷிணான் ஸ்வேநக்ருதான் வித்தாதர்த்த பலம் லபேத்!!

மறுபடியும் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். அதன்பின் முருகனுக்கு உரித்தாகிய சுமித்திர சண்டேசரைத் தர்சனம் செய்தல் வேண்டும். ப்ரதக்ஷிணங்களைத் தானாகவே செய்தால் பூர்ணபலன் (முழுமையான பலனைப் பெறுகின்றான்) பணம் வாங்கிக் கொண்டு செய்தாலோ, பணம் கொடுத்து ப்ரதக்ஷிணம் செய்வித்தாலோ முழு பலன் கிடைக்காது. பாதி பலன்தான் கிடைக்கும்.

अङ्गप्रदक्षिणात्वेन तुल्यं कोटिप्रदक्षिणम् ।
गुहाग्रे देवमभ्यर्च्य करसंस्पोटनादिभिः ॥ १२ ॥

அங்க ப்ரதக்ஷிணத்வேந துல்யம் கோடி ப்ரதக்ஷிணம்!
குஹாக்ரேதே:வம ப்யர்ச்ய கரஸம் ஸ்போடநாதிபி:!!

கோடீ ப்ரதக்ஷிணமானது அங்க ப்ரதக்ஷிணம் ஒன்றுக்கு சமமாகும். முருகனுக்கு

எதிரில் கடவுளை வணங்கிவிட்டு சுமித்திர சண்டரிடம் கைதட்டு சிட்டிக்கை போடுவதால்

उड्डीयन्ते शरीरस्थाः महापातककोटयः ।
पातकानि च सर्वाणि मोक्तुं कामयते च यः ॥
कुमारगजयोर्मध्ये दण्डवत्प्रणमेन्नरः ॥ १३ ॥

உட்டீயந்தே சரீரஸ்தா: மஹா பாதககோடய:!
பாதகானிச ஸர்வாணி மோக்தும் காமயதேச ய:!!
குமார கஜயோர் மத்யே தண்டவத் ப்ரணமேந்நர:!!

சரீரத்தில் இருக்கின்ற கோடிக்கணக்கான பஞ்ச மஹா பாதகங்கள் எல்லாம் பறந்து போகின்றன. எவன் ஒருவன் எல்லா பாவங்களில் இருந்து விடுபட நினைக்கின்றானோ அந்த மனிதன் குமரக் கடவுளுக்கும் யானைக்கும் நடுவே தண்டம் போல் விழுந்து வணங்குவானாகில் அவனது எல்லா பாவங்களும் அழிந்து போகின்றன. பாவம் நீங்கியதால் புண்யவானாகின்றான் என்று குமார தந்திர நூலில் 49 நாற்பத்தொன்பதாவது படலமாகிய பிரதக்ஷிண நமஸ்கார விதி படலத்தில கூறப்பட்டுள்ளது.

इति श्रीकुमारतन्त्रे प्रदक्षिणनमस्कारविधिर्नाम
एकोनपञ्चाशत्पटलः

இதி ஸ்ரீ குமார தந்த்ரே கௌசிக ப்ரசனே ப்ரதக்ஷிண
விதி: நாம ஏகோம பஞ்சாசத் படல:

இவ்வாறு ஸ்ரீகுமார தந்தரத்தில் கௌசிக ப்ரச்னத்தில்
ப்ரதக்ஷிண நமஸ்கார விதி என்னும்
49 - வது படலமாகும்.

॥ पञ्चाशत्पटल: ॥

பஞ்சாசத் படல:

50 வது படலம்

आचार्यलक्षणविधि:

ஆசார்ய லக்ஷண விதி:!

ஆசார்யனுடைய இலக்கணம் கூறும் முறை

आचार्यलक्षणं वक्ष्ये श्रृणु कौशिक सुव्रत ।
आर्यावर्तभृतो गोत्र: सूत्रं चैव समन्वितम् ॥ १ ॥

ஆசார்ய லக்ஷணம் வக்ஷ்யே ச்ருணு கௌசிக ஸுவ்ரத !
ஆர்யா வர்த்தபூதோகோத்ர : ஸுத்ரம் சைவ ஸமன்விதம் !!

நல்ல அனுஷ்டானமுள்ள கௌசிக முனிவரே ஆசார்யனுடைய இலக்கணம் பற்றி கூறுகின்றேன் நீர் கேட்பீராக !. ஆர்யா வர்த்தம் எனப்படும் பாரத தேசத்தின் தென் பகுதியில் வாழும் ஆதி சைவ பிராமணர்கள், எந்த கோத்ரர்களாயினும் ஆசார்யராக இருக்க தகுதி பெற்றவர்கள்.

आदिशैवकुलोद्भूत: शिवद्विज उदीरित: ।
परार्थपूजनं तेन कर्तव्यं मुनिपुङ्गव ॥ २ ॥

ஆதி சைவ குலோத்பூத: சிவத்விஜ உதீரித: !
பரார்த்த பூஜனம்தேந கர்தவ்யம் முனிபுங்கவ !!

முதலில் முழு முதற் கடவுளாம் முக்கண்ணனால் தனது ஆராதனைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட முப்பொழுதும் கடவுளின் திருமேனியைத் தொடும் பாக்கியம் பெற்ற குருக்கள், பட்டர், தீக்ஷிதர், முதலிய பெயரைத் தாங்கி கோவிலில் பூஜை செய்து வரும் ஆதி சைவ குலத்தைச் சார்ந்த பிராம்மணர்கள் உபநயனத்தால் த்விஜர் (இரு பிறப்பாளர்) எனப் பெயர் பெற்ற போதிலும் பின்னர் சிவதீக்ஷையால் இப்பிறப்பு நீங்கி வாகீஸ்வரி வாகீஸ்வரருடைய, குழந்தையாக இரண்டாவது பிறவியை பெறுவதால் சிவத்விஜர் எனப் பெயரினராய்க் கூறப்படுகின்றனர். இத்தகைய சிவ பிராம்மணர்களே உலகக்ஷேமத்திற்காக கோவில் களில் பூஜை செய்யத் தகுதி பெற்றவர்களாவர் என்பதை முனிச்ரேஷ்டராகிய கௌசிக முனிவரே நீவீர் கேட்பீராக

शिवागमपुराणज्ञो गुहपूजाविधानवित् ।
वेदवेदाङ्गतत्त्वज्ञो जपहोमविधानवित् ॥ ३ ॥

சிவாகமபுராணக்ஞோ குஹபூஜா விதாந வித் !
வேத வேதாங்க தத்வக்ஞோ ஜப ஹோம விதாந வித் !!

சிவனுடைய முகத்தில் தோன்றி பார்வதியால் கேட்கப்பட்டு காக்கும் கடவுளாம், மஹாவிஷ்ணுவால் அங்கீகரிக்கப்பட்ட காமிகாதி ஆகமங்களையும் வியாஸபகவானால் தோற்றுவிக்கப்பட்ட பதினெட்டு புராணங் களையும் அறிந்தவராயும் சுப்பிரமணியக் கடவுளின் பூஜை முறைகளை அறிந்தவராயும் ருக், யஜுர், சாமம், அதர்வணம் எனப்படும் நான் வேதங்களையும் அதன் அங்கங்களாகிய சிக்ஷை வியாக்ரணம் சந்தஸ், நருத்தம், ஜோதிஷம், கல்பம் என்ற ஆறு சாஸ்திரங்களை அறிந்தவராயும் ஜபம் செய்யும் முறை ஹோமம் செய்யும் முறை இவற்றை அறிந்தவராயும் இருத்தல் வேண்டும்.

देवाग्निगुरुभक्तिश्च मेधावी कुशल: शुचि: ।
सर्वावयवसंपूर्ण: समयाचारसंयुत: ॥ ४ ॥

தேவாக்னி குருபக்திச்ச மேதாவீகுசல: சுசி: !
சர்வாவயவ சம்பூர்ண: சமயாசார ஸம்யுத: !!

தெய்வத்தினிடமும், அக்னியிடமும், குருவிடமும் பக்தியுள்ளவனாய் நல்ல புத்திமானாய் ஆரோக்யமுள்ளவனாய் பரிசுத்தனாய் குறைவில்லா அங்கங்களைப் பெற்று நிறைந்தவனாய் இந்து சமயத்தில் ஆசார சீலனாய் இருத்தல் வேண்டும்.

कुलीन: सर्वशास्त्रज्ञ: सत्यवादी जितेन्द्रिय: ।
शिवशास्त्ररतश्चैव परशास्त्रपराङ्मुख: ॥ ५ ॥

குலீந: ஸர்வசாஸ்த்ரக்ஞ: ஸத்யவாதீ ஜிதேந்திரிய:!
சிவசாஸ்த்ர ரதச்சைவ பரசாஸ்த்ர பராங்முக:!!

நற்குலத்திற் தோன்றியவனாய் எல்லா கலைகளையும் கற்றவனாய் உண்மை பேசுகின்றவனாய் ஐம்புலன் அடக்க முடையவனாய் சிவாகமங்களில் ஈடுபாடு உடையவனாய் சிவாகமத்தைத் தவிர வேறு நூல்களிடம் மனத்தைச் செலுத்தாதவனாய் இருத்தல் வேண்டும்.

शिखया बद्धकेशी वा भस्मोद्धूलितविग्रह: ।
दम्भासूयादिरहित: समयाचारपालक: ॥ ६ ॥

சிகயா பத்த கேசீவா பஸ்மோத் தூளித விக்ரஹ:!
தம்பா சூயாதி ரஹித: சமயாசார பாலக:!!

குடுமியுள்ளவனாகவும், கட்டப்பட்ட கேசங்கள் உடையவனாகவும் அல்லது இரண்டில் ஒன்றை உடையவனாய், திருநீறு அணிந்த மேனியனாய், ஆடம்பர மற்றவனாயும், பொறாமை இல்லாதவனாயும், சமய ஒழுக்கங்களைப் பாதுகாப்பவனாயும் இருத்தல் வேண்டும்.

प्रत्युत्पन्नमन: शान्तस्तपस्वी प्रियदर्शन: ।
उपवीतञ्च रुद्राक्षमुष्णीषं चोत्तरीयकम् ॥ ७ ॥

ப்ரத்யுத் பன்னமன: சாந்தஸ்தபஸ்வீ ப்ரியதர்சன:!
உபவீதஞ்ச ருத்ராக்ஷ முஷ்ணீஷம் சோத்தரீய கம்!!

சலன மற்ற மனது உடையவனாய் தபஸ் சம்பன்னனாய் பார்பதற்கு எளியவனாய் இருத்தல் வேண்டும். இத்தகைய ஆதி சைவனுக்கு முப்புரி நூல், அக்கமணி மாலை, தலைப்பாகை மேல் துண்டு இவற்றுடன்

भस्मशैवादिशैवानां पञ्चमुद्रा प्रकीर्तिता: ।
एवमादिगुणोपेत: कारयेत्स्वामिपूजनम् ॥ ८ ॥

பஸ்மசைவாதி சைவானாம் பஞ்ச முத்ரா ப்ரகீர்த்திதா:!
ஏவமாதி குணோபேத: காரயேத் ஸ்வாமி பூஜநம்!!

விபூதிபை ஆகிய ஐந்து பொருள்கள் சைவர்களுக்கும் ஆதி சைவர்களுக்கும் ஐந்து அடையாளங்களாகக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய இலக்கணங்களோடு கூடியவர்களே ஆசார்யர் களாவர் இவர்களே கடவுள் பூஜை செய்யத் தகுதி பெற்றவராவர்.

नास्तिकोऽप्यशुभ: क्रुद्धो देवाग्निगुरुनिन्दक: ।
कुष्ठाङ्गी कुमुखी चैव परदाररतोऽशुचि: ॥ ९ ॥

நாஸ்தி கோப்ய சுப: க்ருத்தோ தேவாக்னி குருநிந்தக:!
குஷ்டாங்கீ குமுகீ சைவ பரதாரா ரதோ சுசி:!!

தெய்வ நம்பிக்கை இல்லாதவன் அழகற்றவன், கோபம் உள்ளவன், தெய்வத்தையும் அக்னியையும் (வேள்வியையும்) குருவையும் நித்தனை செய்து கொண்டு இருப்பவன், குறைந்த அங்கங்களை உடையவன், அவதூறு பேசுபவன், பிறர் மனைவியைப் புணர்கின்றவன், அசுத்தமானவன் ஆகிய இவர்கள் ஆசார்யராவதற்கு உரிய இலக்கணமற்றவர் ஆவர்.

कुसुषाक्षश्च विकटो मात्सर्यो मददम्भयुक् ।
मधुमांसरत: पापी चोरो रोगसमावृत: ॥ १० ॥

குசுமாக்ஷச்ச விகடோ மாத்ஸர்யோ மததம்பயுக்!
மதுமாம்ஸரத: பாபீசோரோரோக சமாவ்ருத:!!

பூவிழுந்த கண்ணுடையான், வேடிக்கையாகப் பேசுபவன், (குறும்பன்) பொறாமையுடையோன், திமிர் பிடித்தோன், ஆடம்பரத்தான் கள், குடிப்போன், புலால் உண்பவன், பாபச் செயலைச் செய்வோன், வியாதியுடையோன் ஆகிய இவர்கள் ஆசார்ய இலக்கணத்திற்குத் தகுதி அற்றவர் ஆவர்.

विकलाङ्गोऽतिरिक्ताङ्गश्श्यावदन्तः सुकुब्जकः ।
कुण्डको गोलकश्चैव समयाचारवर्जितः ॥ ११ ॥

விகலாங்கோஅ திரிக்தாங்கச் சயாவதந்த: சுகுப்ஜக:!
குண்டகோ கோலகச் சைவ சமயாசாரவர் ஜித:!!

முடவர்களாகவோ, அளவுக்கு மிஞ்சிய அங்கங்களைப் பெற்றவர்களாகவோ, உள்ளவர்கள் கருமையான (ஊதா நிறமுள்ள பற்களை உடையவர்கள் வக்கிர சரீர முள்ளவன், வேறொருவனுக்கு பிறந்தவன், விதவைக்குப் பிறந்தவன் சமயத்தையும் ஆசாரத்தையும் விட்டவன்

एवमादिगुणोपेतं वर्जयेत्स्वामिपूजने ।
कारयेद्यदिमोहेन कर्ता भर्ता विनश्यति ॥ १२ ॥

ஏவமாதி குணோபேதம் வர்ஜயேத் ஸ்வாமி பூஜநே!
காரயேத்யதி மோஹேந கர்தா பர்த்தா விநச்யதி!!

இது முதலான குணங்களுடன் கூடியவர்களை ஸ்வாமி பூஜைக்கு தகுதியற்றவர்கள் என்பதால் அவர்களை நீக்க வேண்டும். ஆசையின் காரணத்தால் அவர்களை நாம் பூஜைக்குச் சேர்த்துக் கொண்டால் அதனால் பூஜை செய்கின்றவனாகிய கர்தாவும், யஜமானனாகிய தலைவனும் நாசத்தை அடைவார்கள். எனவே பூஜைக்கு தகுதியற்றவர்கள் ஆசார்ய இலக்கணத்திற்கு உகந்தவர்கள் அல்லராவர்.

स्वयंभुलिङ्गे विच्छिन्ने गौरीहीनेऽपि पूजयेत् ।
आचार्यः पत्निहीनश्चेत् न दोषो मन्त्रविग्रहः ॥ १३ ॥

ஸ்வயம் பூலிங்கே விச்சின்னே கௌரீ ஹீநேபி பூஜயேத்!
ஆசார்ய: பத்னி ஹீனச்சேத் நதோஷோ மந்த்ர விக்ரஹ:!!

தானாகவே தோன்றிய லிங்கமானது பின்னமானாலும், கௌரீ அம்மன் இல்லையானாலும், (ஆவுடையார் இல்லாததாயினும்) பூஜைக்கு ஏற்றவையாகும். அதுபோலவே மந்திரங்களை அறிந்தவனும் ஆசார்யாபிஷேகத்தால் மந்திர சரீரத்தைப் பெற்றவனுமாகிய ஆசாரியன் மனைவி அற்றவனாயினும், பூஜைக்கு ஏற்றவன் அபத்னீகதோஷம் அவனுக்குக் கிடையாது.

उत्सवस्य तु मध्ये वा प्रतिष्ठादिनमध्यमे ।
सूत्तके प्रेतकार्ये च आयार्यस्य न विद्यते ॥ १४ ॥

உத்ஸவஸ் யதுமத்யேவா ப்ரதிஷ்டாதின மத்யமே!
சூதகே ப்ரேத கார்யேச ஆசார்யஸ்ய நவித்யதே!!

திருவிழாக்களின் நடுவிலோ, கும்பாபிஷேகங்களின் நடுவிலோ, ஆசார்யனுக்கு பிறப்பு சம்பந்தமான தீட்டோ, இறப்பு சம்பந்தமான தீட்டோ கிடையாது.

न लिप्यते मलैः सोऽपि पद्मपत्रमिवाम्भसा ।
शावकं कर्म कृत्वा तु स्नात्वा देवालयं विशेत् ॥ १५ ॥

நலிப்யதே மலை: சோபி பத்மபத்ர மிவாம் பஸா!
சாவகம்கர் மக்ருத்வாது, ஸ்நாத்வா தேவாலயம் விஸேத்!!

ஆசார்யனே பித்ருகார்யம் செய்ய வேண்டியவனாக இருப்பின் அவனும் இறப்பு சம்பந்தமான முதல்நாள் கர்மாவை செய்து விட்டு ஸ்நானம் செய்து நேராக கோவிலுக்குச் செல்லல் வேண்டும். அங்குள்ள தேவகாரியங்களை

அவனே செய்ய வேண்டும். அவன் தீட்டினால் பீடிக்கப் பட்டவனாகமாட்டான். தாமரை இலையில் தண்ணீரானது ஒட்டாமல் உள்ளதோ அதுபோல தீட்டு இவனைச் சேராது.

महोत्सवे समाप्तौ च शेषकर्म समाचरेत् ।
शिव: क्रुद्धो गुरुस्त्राता गुरु: क्रुद्धो गुहेन च ॥ १६ ॥

மஹோத்ஸவே ஸமாப்த்யைச சேஷ கர்ம
ஸமாசரேத் !
சிவ: க்ருத்தோ குருஸ்த்ராதா க்ரு: க்ருத்தோ
குஹேந ச !!

மஹோத்ஸவத்தை முடித்து திருவிழாக்கள் முடிந்த பின்னரே மற்றகர்மாக்களை (இரண்டாம் நாள்) அஸ்தி சஞ்சயனம் முதலான கர்மாங்களைச் செய்ய வேண்டும். சிவனுக்கு கோபம் உண்டானால் குரு காப்பாற்றுவார். குருவுக்கோ, முருகனுக்கோ கோபம் உண்டானால் யார் காப்பாற்றுவார்கள் ? எனவே தெய்வத்திற்கு கோபம் வராமல் இருக்க அவர்களது தெய்வ காரியத்தை முடித்தல் வேண்டும்.

गुरुस्तुष्टो गुहस्तुष्टस्तस्मात् संप्रीणयेद्गुरुम् ।
यावत्तोषणमाचार्यस्तावद्देवस्तु तोषणम् ॥ १७ ॥

குருஸ்துஷ்டோ குஹஸ்துஷ்டஸ் தஸ்மாத்ஸம்
ப்ரீணயேத் குரும் !
யாவத்தோஷண மாசார்யஸ்தாவத்தே வஸ்து
தோஷணம் !!

குருவுக்கு கோபம் வராமல் சந்தோஷப் படுத்துவதால் குஹக்கடவுள் சந்தோஷப் படுகின்றார். எனவே குருவாகிய ஆச்சார்யனை எந்த அளவிற்குத்ருப்தி படுத்துகின்றோமோ அந்த அளவிற்கு முருகக் கடவுள் திருப்தி அடைகின்றார் என குமார தந்திரம் என்கின்ற நூலில் ஆசார்ய லக்ஷணம் கூறும் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

इति श्रीकुमारतन्त्रे आचार्यलक्षणविधिर्नाम पञ्चाशत्पटल:

(இதி ஸ்ரீ குமார தந்த்ரே ஆச்சார்ய லக்ஷண விதி: நாம பஞ்சாசத் படல):

இவ்வாறு ஸ்ரீ குமார தந்த்ரத்தில் ஆச்சார்ய லக்ஷண விதி என்னும் 50-வது படலமாகும்.

॥ एकपञ्चाशत्पटलः ॥

ஏகபஞ்சாசத்படல:

ஐம்பத்தொன்றாவது படலம்!!

सायरक्षाविधिः

சாயரக்ஷா விதி:

மாலை பொழுது வழிபாட்டு முறை

सारक्षाविधिं वक्ष्ये श्रृणु कौशिक सुव्रत ।
सर्वलोकहितार्थाय सर्वप्राणिसुखावहम् ॥ १ ॥

ஸாயரக்ஷா விதிம் வக்ஷ்யே ச்ருணு கௌசிக சுவ்ரத !
ஸர்வலோக ஹிதார்த்தாய ஸர்வப்ராணி
சுகாவஹம் !!

எல்லா ஜனங்களுக்கும் நன்மைகள் தோன்றுவதற்கும் எல்லா ஜீவராசிகளும் நோயற்ற நல் வாழ்வைப் பெறுவதற்கும் மாலைப் பொழுதின் காப்பாய் விளங்கும் சாயரக்ஷயைப் பற்றி கூறப்போகின்றேன் நல்லவ்ருதானுஷ்ட்டானத்தை உடையவரான கௌசிக முனிவரே நீவீர் கேட்பீராக!

विशेषाद्बालरक्षार्थं सायरक्षां महामुने ।
जनानां नयनोच्छिष्टनिवृत्यर्थं प्रदोषके ॥ २ ॥

விசேஷாத் பாலரக்ஷார்த்தம் சாயரக்ஷாம்
மஹாமுனே !
ஜநாநாம் நயநோச்சிஷ்ட நிவ்ருத்த்யார்த்தம்
ப்ரதோஷகே !!

பெரிய முனிச்ரேஷ்டரே! இரவின் தொடக்கமான மாலைப் பொழுதில் மக்களுடையை கண்ணீரைத் துடைப்பதற்கும் பாலர்களாகிய குழந்தைகளைப் பேய் பிசாசு போன்ற துஷ்ட கிரஹங்கள் பிடிக்காமல் இருக்கவும் விசேஷமாக மாலை வழிபாடு கூறப்பட்டுள்ளது.

धूपदीपावसाने तुसायरक्षां समाचरेत् ।
सौवर्णं राजतं ताम्रं कास्यमेवास्य पात्रकम् ॥ ३ ॥

தூப தீபாவஸானேது ஸாயரக்ஷாம் ஸமாசரேத் !
ஸௌவர்ணம் ராஜதம் தாம்ரம் காம்ஸ்யமேவாஸ்ய
பாத்ரகம் !!

தூப தீபாராதனை முடிந்த பின்னர் சாய ரக்ஷை எனும் காரியத்தை நன்கு செய்தல் வேண்டும். தங்க மயமான பாத்திரம் வெள்ளி மயமான பாத்திரம், தாம்மிர மயமான பாத்திரம், வெண்கல மயமான பாத்திரம், முருகனுடைய வழிபாட்டிற்கு அமைத்தல் வேண்டும்.

विंशत्यङ्गुलविस्तारमोष्ठमेकांगुलं भवेत् ।
एकांगुलं समारभ्य रव्यंगुलसमावधि ॥ ४ ॥

விம்சத்யங்கு லவிஸ்தாரமோ ஷ்டமேகாங்குலம்
பவேத் !
ஏகாங்குலம் ஸமாரப்ய ரவ்யங்குல ஸமாவதி !!

இருபது அங்குலம் விஸ்தார முள்ளதாயும், முகம் ஒரு அங்குல முள்ளதாயும், உயரம் ஒரு அங்குலம் முதல் 12 பன்னிரண்டு அங்குலம் உள்ளதாயும் அமைத்தல் வேண்டும். தீபாராதனையின் தட்டின் அளவும் தீபம் ஏற்றும் குழியின் அளவும் உயரமும் கூறப்பட்டுள்ளது.

दीपाधारन्तु तन्मध्ये वृत्ताकारं प्रकल्पयेत् ।
नवदीपयुतं श्रेष्ठं पञ्चदीपन्तु मध्यमम् ॥ ५ ॥

தீபாதாரந்து தன்மத்யே விருத்தாகாரம் ப்ரகல்பயேத் !
நவதீபயுதம் ச்ரேஷ்டம் பஞ்ச தீபந்து மத்யமம் !!

தீபத்தைத் தாங்கும் பகுதியும், நடுப்பகுதியும், வட்டமாக அமைத்தல் வேண்டும். ஒன்பது தீபமுடையது முதன்மையானது ச்ரேஷ்டமானதாகும். ஐந்து தீபமுடையது நடுத்தரமானது இடைப் பட்டதாகும்.

कन्यसं त्वेकदीपन्तु युक्त्या युञ्जीत बुद्धिमान् ।
दीपाधारेषु सर्वेषु वर्तिं गोघृतसंयुतम् ॥ ६ ॥

கண்யஸம்த்வேக தீபந்து யுக்த்யாயுஞ்ஜீத புத்திமான்!
தீபாதாரேஷு ஸர்வேஷு வர்திம் கோக்ருதஸம் யுதம்!!

ஒற்றை தீபமுடையது கடைப்பட்டதான அதமமானதாகும்

हस्तांगुलसमुत्सेधं कर्पूरावर्तिरन्तकम् ।
सुब्रह्मण्यश्च लोकेशो नवदीपाधिदेवता: ॥ ७ ॥

ஹஸ்தாங்குல முத்ஸேதம் கார்பூராவர்த்தி ரந்தகம்!
சுப்ரஹ்மண்யச்ச லோகேஸோ நவதீபாதிதேவதா:!!

ஐந்தங்குலம் உயர உடையதாக கற்பூர தீபம் (கற்பூரக்கலை) இருத்தல் வேண்டும். ஒன்பது தீபங்களுக்கு உரிய தெய்வங்கள் 1 சுப்பிரமணியார், 2. இந்திரன், 3.அக்னி, 4. யமன், 5. நைருதி, 6. வருணன், 7. வாயு, 8. குபேரன், 9. ஈசானன் என ஒன்பதாகக் கூறப்பட்டுள்ளன.

महादिग्देवता स्कन्द: पञ्चदीपाधिदेवता: ।
एकदीपे गुहं प्रोक्तं चतुष्पात्राभितो न्यसेत् ॥ ८ ॥

மஹாதிக்தேவதா ஸ்கந்த: பஞ்சதீபாதி தேவதா:!
ஏகதீபே குஹம்ப்ரோக்தம் சதுஷ்பாத்ராபிதோந் யஸேத்!!

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளுக்கு உடைய தேவதைகளான இந்திரன், யமன், வருண,ன் குபேரன், ஆகிய நால்வரும் ஸ்கந்தக் கடவுளுமாக ஐவர் ஐந்து தீபங்களுக்கு உரிய அதி தேவதைகளாகும். ஒரு தீபத்திற்கு குஹன் மட்டும் கூறப்பட்டுள்ளார். தீபங்களுக்கு எதிராக முன் கூறிய பொன், வெள்ளி , தாம்பிரம் வெண்கலம் ஆகியவற்றால் ஆன நான்கு பாத்திரங்களை வைத்தல் வேண்டும்.

निम्बपत्रं सर्षपञ्च तत: कार्पासबीजकम् ।
लवणञ्च क्रमान्न्यस्य द्रव्यं प्रसृतिमात्रकम् ॥ ९ ॥

நிம்ப பத்ரம் ஸர்ஷ பஞ்சதத: கார்பாஸ பீஜகம்!
லவணஞ்சக்ரமாந் ந்யஸ்யத்ரவ்யம் ப்ரஸ்ருதி மாத்ரகம்!!

அந்த நான்கு பாத்திரங்களில் ஒவ்வொரு பாத்திரத்தில் ஒவ்வொரு திரவ்யம் கையளவு போடுதல் வேண்டும். முதல் பாத்திரத்தில் வேப்பிலை போட வேண்டும். இரண்டாவது பாத்திரத்தில் கடுகு போட வேண்டும். மூன்றாவது பாத்திரத்தில் உப்பு போடுதல் வேண்டும். இந்த நான்கு த்ரவ்யங்கள் சாய ரக்ஷைக்குஉரிய பாத்திரத்ரவ்யங்களாகும்.

एवं सर्वं समासाद्य मण्डपाभ्यन्तरं बुध: ।
स्कन्दायतनयोषिद्भिरथवा परिचारकै: ॥ १० ॥

ஏவம் ஸர்வம்ச மாஸாத்ய மண்டபாப்யந் தரேபுத:!
ஸ்கந்தாய தநயோஷித் பிரதவா பரிசாரகை:!!

புத்திமானாகிய ஆசார்யன் மண்டபத்தின் நடுவில் இவ்விதமாக எல்லாப் பொருள்களையும் நன்கு சேகரித்து முருக வழிபாட்டில் ஈடுபாடு உடைய பெண்களாலோ அல்லது பரிசாரகர் மூலமாக பாத்திரங்களில இடல் வேண்டும்.

तानि पात्राणि सर्वाणि वाहयित्वा विचारत: ।
समानीय गुहस्याग्रे न्यस्त्वा वर्तीन् प्रदीपयेत् ॥ ११ ॥

தானி பாத்ராணி ஸர்வாணி வாஹ யித்வா விசாரத:!
ஸமாநீய குஹஸ்யாக்ரே ந்யஸ்த்வா வர்த்தீன் ப்ரதீபயேத்!!

ஆராய்ந்து ஆசார்யன் அந்த த்ரவ்ய பாத்திரங்களைப் பரிசாரகர் மூலமாகவோ குஹவழிபாட்டுப் பெண்கள் மூலமாகவே எடுத்துக் கொண்டு வரச் செய்து குஹக் கடவுளுக்கு எதிராக வைத்து தீபத்தின் வத்திகளை ஏற்றல் வேண்டும்.

सायं रक्षा प्रकर्तव्या धूपदीपावसानके ।
गुहस्याचमनं दत्वाभ्यर्च्य तन्मूलमन्त्रतः ॥ १२ ॥

சாயம் ரக்ஷாப் ரகர்தவ்யா தூபதீபாவ ஸாநகே!
குஹஸ்யாச மனம் தத்வாப்யர்ச்ய தன்மூல
மந்த்ரத:!!

தூப தீபம் காட்டிய பிறகு சுப்பிரமண்யராகிய குஹப் பெருமானுக்கு ஆசமனம் முருகனது மூல மந்திரத்தால் கொடுத்து விட்டு பின்னர் அவருடைய மூலமந்திரங்களால் அர்ச்சித்தல் வேண்டும்.

अर्चयित्वा विधानेन वह्निबीजमनुस्मरन् ।
अस्त्रेणैव तु मन्त्रेण दिग्विरेचनमाचरेत् ॥ २३ ॥

அர்ச்சயித்வா விதாநேந வஹ்ணி பீஜமனுஸ்மரன்!
அஸ்த்ரேணைவது மந்த்ரேண திக்விரேசனம்
ஆசரேத்!!

முருகனை முறைப்படி பூஜை பண்ணிய பிறகு ரம் என்கின்ற அக்னி பீஜத்தை நினைத்துக் கொண்டு மேற்கூறிய வேப்பிலை, கடுகு, பருத்திவிதை உப்பு ஆகியத்ரவியங்களை அஸ்திர மந்திரங்களைக் கூறிக் கொண்டு திக்குகளில் இறைத்தலை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பேய், பிசாசு போன்ற துஷ்ட கிரஹங்கள் விலகிப் போய்விடுகின்றன.

मुकुलीं पद्ममुद्राञ्च दर्शयेद्देशिकेन तु ।
धूपदीपौ समौ दत्वा नृत्तं वाद्यं समाचरेत् ॥ २४ ॥

முகுலீம் பத்மமுத்ராஞ்ச தர்சயேத் தேசிகேநது!
தூப தீபௌ ஸமௌதத் வாந்ருத்தம் வாத்யம்
ஸமாசரேத்!!

முருகனுக்கு ஆசாரியன் மொட்டு போன்ற தாமரை (பத்மம்) முத்திரையைக் காட்டுதல் வேண்டும். தூப தீபங்களைச் சமமாகக் காட்டுதல் வேண்டும். அதன் பிறகுதான் நாட்டியம் ஆடச் செய்தல் வேண்டும். வாத்தியம் வாசிக்கச் செய்தல் வேண்டும்.

धूपं धूरसिमन्त्रेण दीपमुद्दीप्यमन्त्रतः ।
सायं रक्षां प्रदिपयथ धूपदीपं ततो न्यसेत् ॥ १५ ॥

தூபம் தூரஸி மந்த்ரேண தீப முத்தீப்ய மந்த்ரத:!
ஸாயம் ரக்ஷா ம்ப்ரதீப்யாத தூபதீபம் ததோந்
யஸேத்!!

தூரஸி தூர்வதூர் வந்தம் எனத் தொடங்கும் வேதரிக்கினால் முருகனுக்கு தூபத்தைக் காட்டல் வேண்டும். உத்தீப்யஸ்வ எனத் தொடங்கும் வேத மந்திரத்தினால் தீபத்தைக் காட்டல் வேண்டும். மாலைப் பொழுதில் காப்பின் பொருட்டு (எல்லோரையும் காப்பதற்காக) தீபம் ஏற்றி மறுபடியும் தூப தீபங்களை முன் கூறிய மந்திரங்களால் காட்டி சாய ரக்ஷாத்ரவியங்களை தீபத்திற்கு முன்பாக வைத்தல் வேண்டும்.

जगद्भुवादिमन्त्रेण सायं रक्षा प्रदापयेत् ।
त्रिवारं परया भक्त्या भ्रामयेत्स्कन्दमूर्धनि ॥ १६ ॥

ஜகத்புவாதி மந்த்ரேண ஸாயம் ரக்ஷாம் ப்ரதாபயேத்!
த்ரிவாரம் பரயா ப[illegible]*யா ப்ராமயேத் ஸ்கந்த மூர்தனி!!*

மேலான முருக பக்தியுடன் மேற்படி த்ரவியங்களை முருகனின் தலையைச் சுற்றி மூன்று முறை சுற்ற வேண்டும். ஜகத்புவம், வசத்புவம், விஸ்வபுவம், ருத்ரபுவம், ப்ரம்மபுவம், புவோத்புவம், என்றும் ஆறு மந்திரங்களால் சுற்றிப் போடுதலாகிய மாலைப் பொழுதின் காரியத்தைச் செய்துவிட்டு குழந்தைகளின் க்ஷேமத்திற்காக மும்முறை தீபாராதனை செய்ய வேண்டும்.

नृत्तवाद्यं समायुक्तं शङ्खध्वनिसमन्वितम् ।
भेरीमृदङ्गवाद्यैश्च स्तोत्रशब्दैः समन्वितम् ॥ १७ ॥

நருத்தவாத்யம் ஸமாயுக்தம் சங்க வாத்ய
ஸமன்விதம்!
பேரீம் ருதங்க வாத்யைச்ச ஸ்தோத்ர சப்தை:
ஸமன்விதம்!!

நாட்டியம், வாத்யம், இவற்றுடன் சங்க வாத்யம் கூடியதாய் பேரீ எனப்படும் முரசு

ம்ருதங்கம் போன்ற வாத்ய கோஷத்துடன் முருகனது துதிப் பாடல்கள் பாடுவதாகவும் இருக்கச் செய்தல் வேண்டும்.

द्रव्याण्यथ क्रमाद्विद्वानावर्त्यावर्त्य मूर्धनि ।
सायं रक्षां प्रदत्वैव दद्याच्छिष्यकरे ततः ॥ १८ ॥

த்ரவ்யான் யதக்ரமாத்வித்வா நாவர்த்யா வர்த்ய மூர்த்தினி!
ஸாயம் ரக்ஷாம் ப்ரதத்வை வதத்யாச்சிஷ்ய கரேதத:!!

சிவஞான சம்பன்னராகிய ஆசார்யன் முருகனது தலை மீது வேப்பிலை, கடுகு, பருத்தி, விதை, உப்பு, ஆகிய த்ரவியங்களை முருகனின் தலைமீது மும்முறை வீதம் சுற்றுதலாகிய மாலைப் பொழுதின் ரக்ஷையைச் செய்துவிட்டு அவற்றை சிஷ்யனுடைய கையில் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு பாத்திர திரவ்யத்தைத் தனித்தனியாகச் சுற்றுதல் வேண்டும்.

पात्रापात्रविधानेषु करं प्रक्षाल्य देशिकः ।
पश्चादाचमनं दत्वा प्रमवेन तु मन्त्रतः ॥ १९ ॥

பாத்ரா பாத்ரவிதாநேஷு கரம்ப்ரக்ஷால்ய தேஸிக:!
பச்சாதாச மனம் தத்வா ப்ரணவேநது மந்த்ரத:!!

த்ரவ்யங்களைப் பாத்திரத்துடன் சுற்றுதல், பாத்திரமில்லாமல் த்ரவியங்களை கைகளால் சுற்றுதல், ஆகிய செய்கையைச் செய்தபின் ஆசார்யன் கைகளை அலம்பிக் கொள்ளல் வேண்டும். பிறகு ஓம் என்ற மந்திரத்தினால் ஆசமனம் கொடுத்தல் வேண்டும்.

ततोऽस्य स्तवकं गृह्य कर्पूरादिसुगन्ध्युक् ।
गृहीत्वा मुद्रया शक्त्या भ्राम्य स्कन्दोपरि त्रिधा ॥ २० ॥

ததோ ஸ்யஸ்தபகம் க்ருஹ்ய கற்பூராதி சுகந்தியுக்!
க்ருஹீத்வா முத்ரயா சக்த்யா ப்ராம்ய ஸ்கந்தோ பரித்ரிதா!!

கற்பூரம் முதலிய சுகந்த திரவ்யங்களை கொடுத்தாக எடுத்துக் கொண்டு இந்த முருகனது தலைமீது மும்முறை சுற்றும் பொழுது சக்தி முத்திரை எனப்படும் யோனி முத்திரை காட்டல் வேண்டும். பின்னரே த்ரவியங்களை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

प्रक्षिपेद्दीपपात्रेषु कर्तव्यं स्कन्धमूर्धनि ।
अस्त्रेण विन्यसेदीषत् दक्षिणे धारयेत्ततः ॥ २१ ॥

ப்ரக்ஷிபேத்தீப பாத்ரேஷு கார்தவ்யம் ஸ்கந்த மூர்த்தினி!
அஸ்த்ரேணவின்ய- ஸேத்தீஷத் தக்ஷிணேதார யேத்தத:!!

அஸ்திர மந்திரங்களைக் கூறிக் கொண்டு அந்த த்ரவியங்களை தீப பாத்திரங்களிலும் போட வேண்டும். பின்னர் முருகனுடைய தோள் பட்டைகள் தலை இவற்றின் மீதும் போடல் வேண்டும். பிறகு கொஞ்சம் தக்ஷிணத்தில் தரித்தல் வேண்டும். (தெற்கே போடல் வேண்டும்)

पार्श्वयोर्हृदयेनैव विन्यसेद्भस्म मन्त्रवित् ।
बृन्दञ्च चामरं छत्रं दर्पणञ्च निदर्शयेत् ॥ २२ ॥

பார்ஸ்வயோர் ஹ்ருதயேநைவ வின்யஸேத் பஸ்ம மந்த்ரவித்!
ப்ருந்தஞ்ச சாமரம் சத்ரம் தர்பணஞ் சநிதர்சயேத்!!

மந்திரங்களை அறிந்த ஆசார்யன் ஹ்ருதய மந்திரத்தினால் இரு பக்கங்களிலும் விபூதியை வைத்தல் வேண்டும். ஆலவட்டம், சாமரம், குடை, கண்ணாடி போன்றவற்றை முருகனுக்குக் காட்டல் வேண்டும்.

तानि पात्राणि गणिका मूर्ध्नादिभिर्धृतानि हि ।
सर्वातोद्यसमायुक्तं पूर्वे वा चोत्तरेऽपि च ॥ २३ ॥

தாணி பாத்ராணி கணிகா மூர்த்நாதி பிர்த்ருதாநி ஹி!
ஸர்வ வாத்ய ஸமாயுக்தம் பூர்வே வா சோத்தரே பி வா!!

அந்த த்ரவிய பாத்திரங்களையும் ஆலவட்டம் முதலியவற்றையும் வேசி எனப்படும் தாசிகளின் தலைமீது வைத்து எல்லா வாத்தியங்களும் முழங்க, கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ செல்லல் வேண்டும்.

वर्तिद्रव्यं तत्र त्यक्त्वो पुन: पात्राणि संगृहेत् ।
सायरक्षां च देवाय दिनं प्रति दिनं प्रति ।
एवं य: कुरुते मर्त्यो राजा विजयमाप्नुयात् ॥ २४ ॥

வர்த்தி த்ரவ்யம் தத்ரத்யக்த்வா புன: பாத்ராணி ஸம்க்ரஹேத் |
ஸாய ரக்ஷாம் சதேவாய: தினம் ப்ரதி தினம் ப்ரதி ||
ஏவம் ய: குருதே மர்த்யோராஜா விஜய மாப்னுயாத் |||

விளக்குத் திரியையும் வேப்பிலை, கடுகு, கொட்டைப் பஞ்சு, உப்பு, ஆகிய த்ரவியங்களை கிழக்கு அல்லது வடக்கு திக்கில் எறிந்து விட்டு பாத்திரங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வந்து ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் இச்சடங்குகளைச் செய்தல் வேண்டும். எவன் ஒருவன் இவ்வாறு செய்கின்றானோ அவன் வெற்றி பெறுவான், அரசனுக்கு விஜயம், (வெற்றி கிட்டும்) உண்டாகும், என்று பெருமை வாய்ந்த லலிதா கமத்தின் வேதமாகிய குமார தந்திரத்தில் 51 ஐம்பத்தொன்றாவதாகிய ஸாயரக்ஷை விதி படலத்தில் கூறப்பட்டுள்ளது.

इति श्रीकुमारतन्त्रे सायरक्षाविधिरेकपञ्चाशत्पटल:

இதி ஸ்ரீ குமாரதந்த்ரே கௌசிகப்ரச்னே
ஸாயரக்ஷா விதி: நாம ஏகபஞ்சாசத்.படல:!!

இவ்வாறு ஸ்ரீ குமாரதந்த்ரத்தில் கௌசிகப்ரச்னத்தில்
ஸாயரக்ஷை பூஜை முறை என்னும்
51 - வது படலமாகும்.

॥ इति श्रीमल्ललितागमभेदे कुमारतन्त्रं संपूर्णम् ॥

शयनविधिपटल: कोशेपुत्यक्त: ।

இதி ஸ்ரீ மல்லலிதாகம பேதே குமாரதந்த்ரம்
ஸம்பூர்ணம்

இத்துடன் குமார தந்திரம் முடிவுற்றது.

॥ शुभम् ॥

சுபம்.